# இன்றைய மனித உறவுகள்

**மனிதக்குட்டிகள்**

மனிதன் முதன்முதலில் தோன்றிய ஆரம்ப நாட்களில் ஆண்கள், பெண்கள், சரியான உறவு முறைகள், சட்ட திட்டங்கள் இல்லாமல் யார் யாரோ, யார் யாருடனோ பல கலப்புப் புணர்ச்சிகளில் ஒருவேளை இன்னதென்று அறியாத நிலையிலோ, என்னவோ! காம உறவாடி அதன் பரிசாக பெண்களுக்குக் கர்ப்பம் ஏற்பட்டது. கர்ப்பிணிப் பருவம் முடிந்து மனிதக்குட்டிகள் பிறந்தன. நல்லவேளையாக அப்போது இன்றைய எய்ட்சும், கருத்தடைச் சாதனங்களும் இருந்திருக்கவில்லை. அப்படியிருந்திருந்தால் உலகத்தில் முக்கால் பாகத்திற்கும் அதிகமான மக்கள் நம்மையும் சேர்த்தே பிறந்திருக்க வாய்ப்பில்லாமல் போயிருக்கும்.

இவ்வாறாக மனிதக்குட்டிகள் இவ்வுலகில் எங்கும் பரவலாகப் பிறந்து அக்குட்டிகளும் குட்டிகள் போட்டு ஆயிரமாயிரம் லட்சோப லட்சம் மனிதக்குட்டிகள் உண்டாயின. மனித இனம் பல காலக்கட்டங்களையும், வாழ்க்கை முறைகளையும் தாண்டி இன்றைக்குக் கோடானுகோடி மனிதக்குட்டிகளும், குட்டிகள் வருவதற்குக் காரணமானப் பல வயது நிலையிலானப் பெரிசுகள், அதைத்தாண்டியக் கிழடுகள் என உலகம் முழுவதும் நிரம்பி வழிகிறது. மேலும் ஒவ்வொரு நொடியிலும் லட்சக்கணக்கான மனிதக்குட்டிகள் பூமியின் வெளிநடமாட்டத்திற்கு வந்துகொண்டிருக்கின்றன. இதில் இந்தியாவின் பங்கு பெரிய,

மகத்தான சாதனை மற்றும் சோதனை உண்டாக்கும் செயலாக நீண்ட காலமாக நிறைவேறி வருகிறது.

இனப்பெருக்கம் செய்யும் ஒவ்வொரு விலங்கினத்திலும் ஆண் இனம், பெண் இனம் எனத் தேவை இருப்பது இயற்கை உயிர்த் தத்துவத்திற்கு அவசியமாகிறது. வளர்ச்சி பெற்ற விலங்கினமான மனித இனத்திலும் ஆண், பெண் வகைகள் ஒன்றுக்கொன்று சிறிது வேறுபட்ட உடல், முகம், நிறம், அளவு தோற்றங்களுடன் உண்டாக்கப்பட்டு இன்றளவிலும் மனிதஇனம் இனப்பெருக்கத்தில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு நல்ல சேவையைச் செய்து செயலாற்றி வருகிறது.

இந்தவகை கண்மூடித்தனமான மனித இனப்பெருக்கத்தினால் நன்மையை விடத் தீமைகளே அதிகம் என்பது உலகறிந்தச் செய்தி. எப்படி இருப்பினும் இப்பூமியில் பிறந்து விட்டவர்கள் பாக்கியசாலிகள், கொடுத்து வைத்தவர்கள். திருட்டுக் கர்ப்பம், வேண்டாத கர்ப்பம், குறையுடைய கர்ப்பம் போன்றவைகளில் உண்டான மனித சிசுக்கள் பலகாலமாக இயற்கையாகவும், பெரும்பகுதி செயற்கையாகவும் அழிக்கப்பட்டு வருவது உலகறிந்த ஒன்று. பூமிக்கு வந்துசேர முடியாத கர்ப்பப்பருவத்திலேயே அழிக்கப்படும், அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும், அழிக்கப்படப் போகும் இம்மனிதப் பிஞ்சுகள் என்ன பாவம் செய்தனவோ? தெரியவில்லை. அப்படி என்ன இந்தப் பூமியில் இருக்கும் எண்ணற்ற மனித மிருகங்களை விடவா இந்தப் பிஞ்சுகள் மிகக் கொடுமையானவை? இருக்கவே முடியாது. அவைகளுக்கு அதிர்ஷ்டம் இல்லை என்றுதான் சொல்ல முடிகிறது. யார்யாரோ செய்தத் தவறுகளுக்கு,

திமிர்களுக்கு, பாவங்களுக்கு இந்தப் பிஞ்சுகள் பலிகடா ஆக்கப்படுகின்றன.

### கருவைக்கொலை செய்வதைவிட உருவாக்காமையே மேல்

ஒருவேளை உருவான எல்லாக் குழந்தைகளுமே இப்பூமியில் பிறந்திருந்தால் அனைவருக்கும் நிற்கக்கூட இடம் இல்லாமல் போயிருக்கும். அழிப்பதும் ஒரு வகையில் சரிதானோ! இதற்கெல்லாம் அவற்றை உருவாக்காமல் இருப்பதே நல்லது. நல்லவேளையாக விதவிதமான கருத்தடைச் சாதனங்களும், வழிமுறைகளும் இன்றைக்குக் கண்டுபிடிக்கப்பட்டு விட்டன. இந்தவகை மனித உலகத்தின் இறுதி முடிவுதான் என்னவென்று தெரியமாட்டேன் என்கிறது.

பூமிக்கு வந்துசேரும் மனிதக்குட்டிகள் உடல், மன ஊனமில்லாத முழு வளர்ச்சி பெற்றதாக இருக்கவேண்டியது மிகமிக அவசியம். ஆனால் துரதிஷ்டவசமாகச் சில குழந்தைகள் ஏதேனும் ஒருசில, பலக் குறைகளுடன் பிறந்து விடுகின்றன. இது ஒரு வகையென்றால் எந்தக் குறையுமில்லாமல் பிறந்து பல வருடம் வளர்ந்த குழந்தைகள் வாழும் காலங்களில் இயற்கையாகவோ அல்லது மனிதத்தவறுகளாலோ உடல், மனம் பல வேறுபட்ட அளவுகளில் பலருக்கு ஊனமாகிப் போவது பெருங்கொடுமை. சிலருக்கு இவ்வகை ஊனத்தோடு நில்லாமல் உயிர்கள் போய்விடுகின்றன. ஒரு வகையில் மிகக்கொடும் ஊனத்தோடு இப்பூமியில் எஞ்சியகாலம் முழுவதிற்கும் கடும் சித்திரவதை, அவஸ்தைப்பட்டு தினந் தோறும் ஒவ்வொரு நிமிடமும் துடிதுடித்துக் கடுந்துன்ப மடைந்து கொஞ்சம்கொஞ்சமாகச் சாவதற்குப்பதில் இப்படி மேலே போய்விடுவதே மேல் என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆகவே கிடைத்த உயிரை எல்ல வகையான விபத்துக்களிலிருந்தும் மிகக்கவனமாகக் காத்து வாழவேண்டியது மிகஅவசியம். உடல் வின்னமாவதற்கும், ஊனமாவதற்கும், உயிர் போவதற்கும் இயற்கையைவிட செயற்கையில்தான் அதிகக் காரணிகள் உள்ளன. சண்டை, அடிதடிகள், கூலிப்படைத் தாக்குதல், வாகன விபத்துக்கள், கவனக்குறைவுகள், மனக் குழப்பங்கள் போன்றவைகளால் உடல் வின்னங்கள், ஊனங்கள், தற்கொலை, கொலை, இறப்பு போன்றவைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

**ஊனமில்லாப் பிறப்பு**

இவற்றையெல்லாம் தாண்டி மனிதர்கள் நல்லவர்களாக, உடல், மனம் குறையில்லாதவர்களாக, அறிவுள்ளவர்களாக, அழகுள்ளவர்களாக, பலமுள்ளவர்களாக, செல்வமுள்ளவர் களாக வாழ்வதே சிறப்பானதாகும்.

அறிவு, அழகு, பலம், செல்வம் போன்றவைகள் இல்லாவிட்டால்கூட எப்படியும் இயல்பாக வாழ்ந்து விடலாம். அதேநேரத்தில் கண் தெரியாமல் இந்த உலகைப் பார்த்து ரசிக்க முடியாதவர்கள், கை, கால் இல்லாமலிருந்து நடக்க மற்றும் எந்த வேலையும் செய்ய முடியாதவர்கள், வாய் பேச முடியாததினால் மொழி, இசையை பேச, பாட முடியாதவர்கள், காது கேட்காததினால் இயற்கையின் அனைத்து ஒலிகளையும், மொழி, இசையின் அற்புதங்களையும் உணர முடியாதவர்கள் போன்றோரின் துயரை எண்ணிப்பார்க்க வேண்டும்.

இந்தப் பலவகை ஊனங்களில் சிலருக்கு அதிக ஊனங்கள் ஒன்றிணைந்து வழங்கப்பட்டு கொடுமைப் படுத்தப்பட்டிருக்கும் இயற்கையின் அநியாயத்தைச் சாட

வேண்டியிருக்கிறது. இந்த வகை வெளி ஊனங்களோடு உடலின் உள்பகுதியிலும் பல வகையான ஊனங்கள், குறைபாடுகள், நோய்கள் இருந்து மனிதர்களின் பாவத்தினால் சித்திரவதைச் செய்யப்படுகிறார்களோ! என்று நினைக்கத் தோன்றுகிறது.

## விலங்குகளில் ஊனம் மிகக்குறைவு

ஒரு ஒப்புமையில் பார்த்தால் விலங்குகளை விட மனிதர்களே மிக அதிக சதவீதத்தில் உடலின் உட்புற வெளிப்புற பலவிதப் பாதிப்புகளினால் இம்சிக்கப்படுவதாகத் தெரிகிறது. இதற்கெல்லாம் எல்லாக்காலங்களிலும் பொதுநலவாதிகள், விஞ்ஞானிகள், மருத்துவர்கள் ஏதேனும் முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். அதன் மூலம் பலவிதக் கருவிகள், வைத்தியங்கள், மருந்துகள், உபாயங்கள் போன்றவைகள் கண்டுபிடிக்கப்பட்டு முழுத்தீர்வு, ஓரளவு தீர்வு, அல்லது தீர்வே இல்லாத பலவித உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

## மனிதக்குணங்கள்

இப்படிப் பல சூழ்நிலைகளைக் கடந்து வாழும் மனிதர்களிடம் எண்ணற்ற குறைகள், பழக்கவழக்கங்கள் மலிந்து கிடக்கின்றன. தந்திரம், சூழ்ச்சி, அன்றாட வாழ்வில் சாகச வேலைகள் போன்றவற்றோடு, தானே அழகு, பலசாலி, அறிவாளி, வசதியானவன் என்ற தற்பெருமை, தான் சொல்லுவதே, செய்வதே சரி என்கிற திமிர் என்ற நிலையில் இருக்கிறார்கள். அகங்காரம், கடுஞ்சினம் போன்ற தன்மைகள் மனிதர்களின் அறியாமையினாலும், மூடத்தனங்களினாலும் இருந்து வருகின்றன.

இவைகளில் பலவும் பரம்பரை, குடும்ப, பிறவிக் குணங்களாகவும், சூழ்நிலைத் தேவையின் பொருட்டுத் தன்னை அறிந்தும், அறியாமலும் நிதானத்திலேயே நிலை தடுமாறுகிறதாகவும், அச்சூழ்நிலையில் இயன்ற அளவு தன்னை முதன்மை, முக்கியப்படுத்திக் கொள்ள முயற்சிப்பதாகவும் உள்ளன. பிறரைப் புரிந்து கொள்ளாததும் அதற்கு முயற்சிக்காததும் கூட காரணமாகிறது.

ஆழ்ந்த ஆய்வில் இவற்றிற்கெல்லாம் பல காரணங்களோடு உணவுப்பழக்கம், அப்போதைய இருப்பிடத்தின் நிலை, கடந்து வந்த காலங்களின் சுற்றுப்புறத் தன்மைகள் ஆகியவற்றைக் கையாண்ட, கையாள்கிற விதமும், ஏற்றுக் கொண்ட, ஏற்றுக் கொள்கிற விதத்தையும் காரணங்களாகக் கூறலாம். இங்கே பலவிதமான இனம்புரியாத, தெளிவில்லாத குழப்பமான அறிய முடியாத நிலையில் மனநிலைகள் இருந்து அவ்வப்போது மாறும் நிலையில் பல மனிதர்களுக்கு உள்ளன.


மனிதர்கள் எல்லோருக்கும் தெரிந்த ஒன்றை முக்கியமாக எண்ணிப் பார்த்தறிதல் வேண்டும். இப்பூமியில் இன்னும் எவ்வளவு மாதங்கள், வாரங்கள், நாட்கள் வாழப்போகிறோம் என்ற நிச்சயமில்லாத நிலையையும் அது மிகக் குறைவாகவே உள்ளதென்பதையும் உணர்ந்து பார்க்க வேண்டும். இருக்கும் வரையில் சிறப்பில்லாதவர்களாக இல்லாமல் சிறப்பானவர்களாக வாழ்ந்து முடிப்பதற்கு முயற்சித்துக் கொண்டே இருக்கவேண்டும். சிறப்பில்லாதவர்களாக ஆகுவதற்கு நாம் பிறந்திருக்கவே வேண்டியதில்லை.

சிறப்பானவர்களாக ஆவதற்கு என்னவெல்லாம் செய்யலாம் என்பதைப்பற்றி பார்ப்போம். இப்பகுதியில்

முன்னர் குறிப்பிடபட்டுள்ளதும் பின்னர் குறிப்பிடப்போவதுமாகிய தீய செயல்கள், குறைகள், பழக்கவழக்கங்கள், கொள்கைகள், எண்ணங்கள் ஆகியவற்றை இந்நொடியிலிருந்தே விட்டொழிக்க சபதமெடுத்து முயற்சி செய்து பாருங்கள். ஒருவேளை நீங்கள் அதில் வெற்றி பெறலாம்.

**வாழ்க்கைப்பருவம்**

மனித வாழ்க்கையில் அறியா விளையாட்டுக் குழந்தைப்பருவம் போய் வரும் இளமைப் பருவம் தான் மிக முக்கியமானது. இதுதான் மனிதனின் உண்மையான வாழும் பருவம் எனலாம்.



பெரும்பகுதி மனித வாழ்க்கையை இரண்டு பிரிவுகளில் பிரிந்துணர்ந்து பார்க்க முடியும். முதல்பாதி வளர்கின்ற பருவம். அதன் எல்லையிலிருந்து இரண்டாவது அழிகின்ற பருவம் தொடக்கம். ஒன்று கரு உண்டாகி, பிறந்ததிலிருந்து மொத்த ஆயுளின் சுமார் சரிபாதி காலம் வரைக்குமானது. இந்தப்பகுதிதான் பெரும்பாலனவர்களின் உயிர் வளரும் காலமாகியதோடு வாழும்பருவத்தின் நடுப்பகுதி எல்லைக்கல்லுமாகும். ஒரு எழுபது வயதில் இறக்கும் மனிதனுக்கு முப்பைத்தைந்து வயதுதான் மையநிலை. பாதிஆயுள் முடிந்த கால நிலையிலிருந்து இளமையோடு உயிர் மெல்லக் குறைய, அழியத் தொடங்கி அதாவது 'இறக்கத் தொடங்கி' ஒருநாள் எதெதன் காரணத்தினாலோ எப்படி எப்படியோ பட்டென்று ஒருநொடியில் காணாமல் போய்விடுகிறது.

இளமைப் பருவம்தான் மனிதன் தனக்காக வாழும் பருவமாக இருக்கமுடியும். குழந்தைப் பருவத்தில் பிறரால் அவன் வளர்க்கப்படுகிறான். இளமைப்பருவம் முடிந்த நிலையிலிருந்து முதுமைக்கு ஏணி ஏற ஆரம்பித்து விட்ட ஒருவன் தன் பெற்றோர், சகோதர, சகோதரிகளுக்காக, துணைக்காக, குழந்தைகளுக்காக, உறவினர்களுக்காக, பிறருக்காக, இந்தச் சமுதாயத்திற்காக வாழவேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. உடல் வீரியமும் மெல்லக் குறைய ஆரம்பித்ததோடு பல உடல்குறைகளும், நோய்களும் தொற்றிக்கொள்ள ஆரம்பிக்கின்றன.

**போன இளமை போனதுதான்**

எவ்வளவுதான் கோடி கோடியாகப் பணம் வைத்திருந்தாலும் பழைய இளமையும், உடல் பலம், வீரியம்

போன்ற எவற்றையும் திரும்ப தனதாக்கிக் கொள்ள முடியாது. இவைகள் குறையத் தொடங்கினாலே அவன் பிறருக்காகத்தான் மிச்சசொச்ச வாழ்க்கையை வாழ்ந்தாக வேண்டும். பொய்யாகப் போலித்தனமாக மிடுக்கேற்றிக் கொள்வதிலும் கார், பங்களா, செல்வம், பகட்டாடை, வேலையாட்கள், பணிப்பெண்கள் - ஆண்கள், வேசிகள், ஆண்வேசிகள் என வைத்துக்கொண்டாலும் எல்லாம் மாயைகளே, போலிப் பிரம்மைகளே.

இந்த மனித ஆயுளுள் பல குரங்குமனிதர்கள் போடும் ஆட்டம்தான் என்ன. கிடைத்ததையெல்லாம் அபகரித்துக் கொள்வது, அனுபவித்துக் கொள்வது, அடுத்தவனை வாழவிடாமல் இடையூறு செய்து சில சந்தர்ப்பங்களில் அழித்தே விடுவது எனக் கோரப்பேயின் தாண்டவமாடுகிறார்கள்.

### பலவித மனிதர்கள்

பலர் ஆக்ரோஷமாகச் செயல்படுவார்கள். இந்தவகை மனிதர்களில் ஆபத்தில்லாதவர்களோடு நல்லவர்களும் இருப்பார்கள். சிலர் அதிகம் பேசாமல், தேவையான சமயத்தில்கூட வாய் திறக்காமல் ஊமையைப் போல் இருப்பார்கள். நடைமுறை வாழ்க்கை அனுபவத்தில் இப்படிப்பட்ட பலர் மிக ஆபத்தானவர்களாக இருக்கிறார்கள் என்பது சரியாகத்தான் இருக்கிறது. அதனால்தான் 'ஊமை ஊரைக் கெடுக்கும்' என்ற பழமொழியை அறிவறிந்த நம் முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள் போலும்.

ஒவ்வொரு மனிதனையும் குறிப்பிட்ட இரண்டு நிலைகளில் அவனது தன்மையை பாகுபடுத்திப் பார்க்க முடியும். தோற்றம், செயல்பாடு, பழக்கவழக்கம், கொள்கை,

குணம் போன்றவற்றில் பலருக்கும் வெளித்தோற்றம் ஒருவிதமாகவும், வெளியில் அறிய முடியாத உள் தோற்றம் வேறு விதமாகவும் இருக்கிறது. அதாவது நல்லவரைப் போல் இருப்பவர் உண்மையில் கெட்டவராகவும், கெட்டவரைப் போல் வெளியில் தோற்றமளிப்பவர்கள் நல்லவராகவும்கூட இருப்பார்கள். இதற்குத்தான் முறையே 'பசுத்தோல் போர்த்திய புலி' மற்றும் புலித்தோல் போர்த்திய பசு' என்பார்கள் போலும். சிலர் உள்தோற்றம் வெளித்தோற்றம் என இரண்டு நிலைகளிலுமே ஒரே முறையில் அதாவது ஒன்று நல்லவர்களாகவோ அல்லது முழுக்க முழுக்க கெட்டவர்களாகவோ இருப்பார்கள். இதைத் தவிர்த்து நல்ல, கெட்ட இரண்டு தன்மைகளையும் வெவ்வேறு அளவுகளில் ஒன்றாகக் கொண்டுள்ள மனிதர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

### உறவில்லாமல் உயிரினம் இல்லை

எல்லாவகையான அனைத்து மனிதர்களிலும் எவருக்கேனும் துரதிஷ்டவசமாக நட்புக் கொண்டாட வேறு மனிதர்கள் இல்லாமலிருந்தாலும்கூட உறவுக்கு நிச்சயமாக மனிதர்கள் இருப்பார்கள்; இருந்தே ஆக வேண்டும். ஏனெனில் இரண்டு வெவ்வேறு ஆண், பெண் சேர்தலில்தான் இம்மனிதன் பிறந்திருக்க முடிகிறது. அதன் மூலம் தாய் தந்தையர் கிடைத்து விட்டார்கள். சில சமயங்களில் குழந்தையின் தந்தையை, பிறந்த குழந்தையுடன் பெற்ற தாய்க்கும் தெரியாமல் போய்விடும் அவலம் நிகழ்ந்து விடுகிறது. சில சமயம் தாய்க்கு மட்டும் அக்குழந்தையின் தந்தையைத் தெரிந்திருந்து அக்குழந்தைக்கும், மற்றவர்களுக்கும் தந்தை யார் எனத் தெரியாமல் போவதும்

உண்டு. இன்னமும் பல வகைகள் உண்டு. அவைகளை இங்கேயே விட்டு விடுவோம்.

ஆதியில் கண்ட இடங்களிலெல்லாம் எந்த ஒரு முறையுமில்லாமல் ஆண் பெண் சேர்தல் நடத்திக் கொண்டிருந்த மனிதன் பிறகு அவரவர்களுக்கென எதிர்பால் துணைகளை ஒதுக்கிக் கொள்ள ஆரம்பித்தார்கள். இங்கேதான் உறவு முறைக் கலாச்சாரம் ஆரம்பமாகியது. தன் மனைவி, மனைவிகள், தன் கணவர், கணவர்கள் எனப் பிரித்துப் பகுத்துத் தனித்தனியாக ஆண்கள், பெண்கள் சேர்ந்து வாழலாயினர். அவரவர்களுக்குப் பிறந்த குழந்தைகளை, பெற்றெடுத்தப் பெண்மணிகளும், அதற்குக் காரணமான ஆண்களும் போற்றி வளர்க்கலாயினர். உலகம் முழுக்க ஒவ்வொரு குடும்பத்திலும் நிறையக் குழந்தைகளும் பிறந்தன.

அக்குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகி பருவ வயது வந்தவுடன் எதிர்பால் துணை தேடுதல் படலம் இயற்கையின் கட்டாயமாகி, நடந்து துணைகள் சேர்ந்தன. இவ்வாறாக மனிதத்தொகை வளர்ந்துவந்த சூழ்நிலையில் வழக்கம்போலவே சில சிந்தனையாளர்கள், அறிஞர்கள் தோன்றி மனிதர்களுக்குள் ஆண், பெண் புணர்ச்சிக்கு இலக்கண கட்டுப்பாடுகள் கொடுத்து, விலங்குகளின் குணங்களிலிருந்து பழக்கவழக்கங்களிலிருந்து மீட்டு மாற்றி வந்தனர். இப்போதும் விலங்குகளின் இக்குணம் கொண்ட மனிதர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இவ்வாறாக ஒரு முறையுடன் ஆண், பெண் சேர்தலின் வாழ்க்கை ஆரம்பமாகி அதன் மூலம் பல உறவுகளின் முறைகள் உருவாக்கப்பட்டன அல்லது இயற்கையாகவே

உருவாயின. உலகத்தில் பல மொழிகள் உண்டாக்கப்பட்டு உறவு முறைக்கு அந்தந்த மொழிகளில் பெயர்கள் கொடுக்கப்பட்டன.

இவ்வகையில் வந்த மனித உறவுமுறைகளின் மூலமாக நிரந்தரமாகச் சில உறவுகள் ஏற்பட்டன. முதல் நிலையில் தாய், தந்தை, தாய் தந்தையருடன் பிறந்தவர்கள், அவர்களின் துணைகள் மற்றும் குழந்தைகள், சகோதர சகோதரிகள் என்றாயினர். இரண்டாம் நிலையில் வாழ்க்கைத் துணையாளர், அவரின் பெற்றோர் உடன் பிறப்புகள், உடன்பிறப்புகளின் துணையாளர்கள் அவர்களின் குழந்தைகள் என நெருங்கிய ஒரு உறவு வட்டம் வந்து கொண்டிருக்கிறது. இதைத்தவிர தூரத்து உறவுகள் எனப் பல உண்டு. இந்தத் தூரத்து உறவைப் பற்றி நாம் இங்கே கவலைப்பட்டுப் பேசப்போவதில்லை, அதற்கு அவ்வளவு அவசியமில்லை.

மேற்கூறிய உறவுகள் மூலம் தாத்தா - பாட்டி, அம்மா - அப்பா, கணவன் - மனைவி, பெரியம்மா - பெரியப்பா, சித்தப்பா - சித்தி, மாமா - அத்தை, மாமனார் - மாமியார், மருமகன் - மகள், மருமகள் - மகன், மைத்துனர்கள், மைத்தினிகள், கொழுந்தனார், நாத்தனார், சகலன், அண்ணி எனப் பல இருந்து வருகின்றன. இவைகளைத் தமிழ் மொழியில் கொடுக்கப்பட்டிருக்கின்ற வார்த்தைகளால் சொல்லப்பட்டிருப்பதைப் போல ஒவ்வொரு மொழியிலும் வெவ்வேறு விதமான வார்த்தைகளில் சொல்லப்பட்டிருக்குமே ஒழிய வேறு ஒன்றும் உலக அளவில் வித்தியாசமிருக்க முடியாது. சொந்தத்தில் திருமணம் செய்து கொள்ளும் முறை, வகையில்தான் மதங்களுக்கு மதம் சில வேறுபாடுகள் உள்ளன.

இவைகளில் கணவன் - மனைவி, மாமியார் - மருமகள் உறவுகள்தான் உலகம் முழுவதும் அதிகப் பிரச்சனைகளுக்குள்ளனதாகவும், சரியான உடன்பாடு இல்லாததாகவும் காணப்படுகின்றன. இந்த இரண்டு நிலைகளிலும் வெவ்வேறு குடும்பத்திலிருந்து, இடத்திலிருந்து, பழக்கவழக்கங்களிலிருந்து, மன நிலைகளிலிருந்து வந்த மனிதர்கள் ஒன்றாக இருக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

கணவன் - மனைவியாகிவிட்ட இரண்டு மனிதர்கள் உடல் ரீதியாக, உள்ள ரீதியாக விரும்பி இணைய வேண்டிய பொருந்த வேண்டிய அவசியத்தில் உள்ளவர்கள். இரண்டாவதாக மாமியார்-மருமகள் உறவுகளில் பிணக்கத்திற்கு சரியான புரிந்து கொள்ளல் இல்லாததோடு வேறு மன இயல் காரணங்களும் உண்டு. அவற்றைப் பிறகு பார்ப்போம்.

## கணவன் - மனைவி உறவுகள் :

இந்தக் கணவன் - மனைவி இடையேயான பிரச்சனைகளுக்கு ஆயிரமாயிரம் காரணங்களைக் கண்டுபிடிக்கலாம். கொஞ்சம் ஆழமாக ஆராய்ந்தால் பல திடுக்கிடும் தகவல்கள் கிடைக்கப் பெறுகின்றன. இவைகள் நாட்டுக்கு நாடு, மாநிலத்திற்கு மாநிலம், மதங்களுக்கு மதம் மாறுபட்டு இருக்கின்றன.

ஒரு நாட்டின் குறிப்பிட்ட ஒரு பகுதியில் வளர்ந்து வரும் மனிதர்கள் அங்குள்ள கலாச்சார பண்பாட்டையே மனதினில் உட்கொண்டு அதற்குப் பழக்கப்பட்டு, பழக்கப்படுத்தப்பட்டு வருகிறார்கள். குறிப்பாக இந்தியாவின் பண்பாடு, கலாச்சாரம், நாகரீகம், வெள்ளைக்கார, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளோடு பொருந்தாது. உணவு,

சமையல், உறவுமுறைகள், ஒழுக்கநெறிகள், ஆபரண அலங்காரம், உபயோகிக்கும் பொருட்கள் சுற்றுப்புறச் சூழ்நிலைகள் ஆகியவற்றோடு செல்வ நிலையிலும் இந்தியர்கள் வேறுபடுகிறார்கள்.

இந்தியா மிகப்பழமையான நாடு என்பதோடு ஒழுக்க நெறி மிகுந்த கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டது. இந்த ஒரு முக்கியமான காரணத்திற்காகவே உலக நாடுகளால் இந்தியா இன்னமும் போற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. பெண்களின் கற்பு, உறவுகளுக்குள் உள்ள நம்பகத்தன்மை, பெற்றோரை, வாழ்க்கைத் துணையை, சகோதர சகோதரிகளை, பெற்ற குழந்தைகளைப் போற்றும் தன்மை, பாதுகாக்கும் குணம் போன்றவைகள் மேல்நாட்டுக்காரர்களை ஆச்சரியப்பட வைக்கும் ஆயுதங்களாக ஆபரணங்களாக விளங்குகின்றன.

## இன்றைய நிலவரம்

ஆயினும் தற்போதைய இந்திய நிலை உண்மையில் ஒருசில பத்தாண்டுகளுக்கு முன்னர் இருந்தது போலக்கூட இப்போது இல்லை எனலாம். ஏற்கெனவே உள்ள கல்விமுறை, ஆடை, உணவு, நாகரீகத்தோடு வாழ்க்கை முறையையும் அமெரிக்க ஐரோப்பிய பாணிக்கு மெல்ல மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதே நிலை. மெல்ல என்றுகூடச் சொல்ல முடியாது, வேகமாகவே மாறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் சரி. ஒருவேளை மேல்நாட்டினரை இந்தியர்கள் மிஞ்சும் காலம் வந்து மேல் நாட்டினர் இப்போதுள்ள அவர்களது முறையில் வெறுப்படைந்து இந்தியாவின் பழங்கலாச்சாரத்திற்கு மொத்தமாக மாறினால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

முன்பெல்லாம் இந்தியப் பெண்கள் தம்முடைய ஒரே இறுதிவரையிலான வாழ்க்கைத் துணைவனுக்கு தங்களை புத்தம் புதுமலராய் பரிசளித்துக் கொண்டிருந்தார்கள். அதன் மூலம் ஆண் என்பவனையும் ஆணின் ஸ்பரிசத்தையும் தன் கணவன் மூலமே கண்டெடுத்தார்கள். இதற்கு முன் வேறு எந்த ஆணோடும் பழகியதில்லாததோடு தன் குடும்பத்து ஆண்களைத் தவிர வேற்று ஆண்களை பார்த்திருக்கவோ பேசியிருக்கவோ மாட்டார்கள். ஆணும் அப்புதிய தூய வரவினால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தான். அப்படியான ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் என நன்றாகப் புரிந்து கொண்டு விட்டுக்கொடுத்து வாழ்ந்து வந்தனர். வழக்கப்படி கூடுதல் வயதிருக்கும் ஆணை மூத்தவன் என்ற நிலையிலும், தன்னுடையத் தலைவன் மற்றும் முழு அன்பிற்குரியவன் என்ற பிரியத்திலும் மதிப்பு மரியாதைக் கொடுத்து நல்ல முடிவுகள் எடுப்பதை ஏற்றுக் கொண்டு அவனுடைய சரியான நடவடிக்கைகளை, செயல்களைப் பாராட்டி இல்லறத்தை நல்லறமாக ஆக்கி வந்தார்கள்.

அக்காலத்தில் இப்போதிருக்கும் அளவுக்கு நிச்சயமாக கணவன் - மனைவி உறவினில் விரிசல்கள் இல்லை. மனைவி மிக இளம் வயதிலேயே கணவனிடம் வந்து அவளின் வாழ்க்கையின் முக்கால் பாகத்தையும் விவரமறிந்த முழு பாகத்தையும் கணவனுடன் கழித்தாள். அவளுக்கு எல்லாமும் கணவனும் கணவன் வீட்டினரும்தான். ‘கணவனே கண்கண்ட தெய்வம்’ எனப் போற்றி வந்தாள். கணவன் தன் மனைவியை உயிருக்கு உயிராய் நேசித்து வந்தான். பெண் என்பவள் இன்னொரு ஆணுக்காகத்தான் என்ற கொள்கை உடன்பாட்டில் பெண்ணைப் பெற்றவர்கள்

திருமணம் முடிந்தபிறகு ஒதுங்கிக்கொள்வார்கள். பெண்ணின் குடும்பத்து உள் விவகாரங்களில் தலையிடாமல் இருந்துவந்து குடும்பங்களில் பிரச்சனையில்லாமல் காப்பாற்றி வந்தனர். அப்போது எங்கும் அமைதி, ஆனந்தம், சகிப்புத் தன்மை, புரிந்து கொள்ளுதல், விட்டுக் கொடுத்தல், ஒருவருக்கொருவர் உதவுதல் போன்றவை நிகழ்ந்தன.

இப்போதெல்லாம் நிலைமைகள் தலைகீழாய் மாறிவிட்டன. ஏகப்பட்ட நிகழ்வுகளில் கலாச்சார முரண்பாடுகள் காணப்படுகின்றன. பெண்ணின் திருமண வயது சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரி ஏற்றப்படுகிறது. இது ஒருவகையில் பொருளாதார மற்றும் சூழ்நிலைக் கட்டாயமே தவிர இயற்கையில் அப்படியில்லை என்றே தோன்றுகிறது. பெண் பருவம் அடைந்ததிலிருந்து அவள் இல்லற வாழ்க்கைக்குத் தயாராகி விட்டதாகத்தான் இயற்கை நியதியிலிருந்து அறிய முடிகிறது. உடல் மற்றும் மன ரீதியாக தயாராவதற்கு ஒரு சில ஆண்டுகள் போதுமானது என்பதே உண்மை. ஆனால் நடைமுறையில் தற்போது இந்தியப் பெண்ணின் சட்டப்படியான திருமண வயது பதினெட்டாகவும் திருமணத்திற்கு ஏற்ற வயது இருபத்தொன்றாகவும், ஆக்கப்பட்டுள்ளது. இதையும் தாண்டி முப்பது, நாற்பது வயதுகளில் கூட இந்தியப் பெண்கள் திருமணம் செய்து கொள்கிறார்கள், செய்து வைக்கப்படுகிறது.

### திருமணத்திற்கு முந்தைய நடவடிக்கைகள்

இதனால் இன்றைய கல்வி, பணிபுரிதல், தொழில் செய்தல் மற்றும் வேறு சூழ்நிலை போன்ற காரணங்களினால், திருமணத்திற்கு முன் பல ஆண்களோடு பழகும்

வாய்ப்புகளோடு சில பெண்கள் தங்கள் உடலையும், அந்தந்தக் காலச் சூழ்நிலையில் மனதையும் வேற்று ஆண்களுக்கு தற்காலிக அன்பளிப்புகள் செய்து எல்லாவற்றையும் கற்று புதுத்தன்மை போய் திருமணத்திற்கு முன்னரே திருமணமானப் பெண்களாக ஆகிவிடுகிறார்கள். ஏற்கெனவே ஒரு சில ஆண்களோடு எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டுவிட்டு பழசாகிப் போன அப்பெண்ணால் தன் நிரந்தரக் கணவனுக்குப் புதிதாய்க் கொடுக்க, அவனிடமிருந்து கற்றுக்கொள்ள, எடுத்துக்கொள்ள ஏதுமில்லாமல் போய்விடுகிறது.

இப்படிப் பெண்கள் இருப்பதினால் ஆண்களுக்கும் நிறையப் பெண்கள் கிடைத்து அவர்களும் கெட்டுத் திரிகிறார்கள். மேலும் வீரியமிகு இளம் வயதுகளில் இளைஞர்களுடன் அனுபவித்த சல்லாபங்கள், சாகசங்கள், சுகங்கள் பிற்கால திருமண வாழ்க்கையில் சற்று வயதானவரிடம் கிடைக்காமல் போகவே அங்கு அனைத்தும் குறைந்துபோகிறது. இப்படிப்பட்டப் பெண்களில் பலர் தங்கள் கணவருடன் எங்ஙனம் முழு உண்மை ஈடுபாட்டுடன் காதல் கொள்ள இயலும் என்பது சிந்தித்துப் பார்க்கவேண்டிய ஒன்று.

இப்போதெல்லாம் செய்திப் பத்திரிக்கைகள் திருமணத்திற்கு முன் உடலுறவு கொண்ட பெண்களைப் பற்றிய கணக்கெடுப்புகளை பெண்களிடம் நடத்தி அதிர்ச்சி தரும் செய்திகளை வெளியிடுகின்றன. திருமணத்திற்கு முன் பெண்கள் பலர், தங்களுடன் உடலுறவு வைத்துக் கொள்வதாக பலரைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உறவினர்கள், நண்பர்கள், அக்கம்பக்கத்திலிருப்பவர்கள் போகும் வழியில் சந்திப்பவர்கள், தன்னுடன் படிப்பவர்கள்

மற்றும் வேலை செய்பவர்கள், வேலைக்காரர்கள் போன்றோரோடு கூடப்பிறந்த சகோதரர்களும் பெற்றெடுத்தத் தந்தையுமே இருப்பது பேரதிர்ச்சியான விஷயம். இதில் பகுதிக்குப் பகுதி சதவீத வித்தியாசங்கள் இருக்கின்றன.

இந்தியக் கலாச்சாரமான கற்பு, கன்னித்தன்மை, ஒழுக்க நெறிகள், வாழ்க்கையில் ஒரே ஆண் போன்ற பண்பாட்டு சிறப்புகளைக் காற்றில் பறக்க விடலாயினர். இந்த சதவீதங்களில் பத்திலிருந்து தொண்ணூறு வரை இடத்திற்கு இடம் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இன்னும் உண்மையை ஒத்துக் கொள்ளாதவர்கள் எத்தனை சதவீதமோ. இதற்கெல்லாம் காலம் தாழ்த்தியத் திருமணங்களும் காரணமாக இருக்கலாமோ.

மேல்நாட்டுக்காரர்கள் பலருக்கு திருமணம் என்பது ஒரு தற்காலிக நட்பு மற்றும் பொழுதுபோக்கு மாதிரியானது. பிடிக்கும் வரை வாழ்வார்கள். பிடிக்காவிட்டால் உடனே பிரிந்து சென்று வேறு துணையைச் சேர்த்துக் கொள்வார்கள். அங்கே குழந்தைகளைப் பற்றியெல்லாம் பெற்றோர்கள் கவலைப்படுவதில்லை. அரசாங்கமே குழந்தைகளை வளர்க்கிற சூழ்நிலை அங்கேயுள்ளது. அதனால் அங்குள்ள மனிதர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். எந்த வயதிலும் திருமணம் செய்து கொள்ளுவார்கள். தள்ளாடிக் கிழமாகிச் சாகும் வரை எத்தனை முறை வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்.

அவர்களில் பெரும்பாலோருக்கு துணை என்பது சந்தோஷமாகப் பொழுது போக்குவதற்குப் பயன்படும் கருவியாகக் கருதப்படுகிறது. அங்கே உண்மையான உடன்பாடுகள், ஈடுபாடுகள், புரிந்து கொள்ளல்கள், விட்டுக்

கொடுத்தல்கள் இல்லை. எல்லோருமே தான்தான் பெரிய ஆள், தான் யாருக்கும் குறைந்தவர்கள் இல்லை என்கிற ரீதியில் செயல்படுகிறார்கள். இப்போது மேலை நாடுகளைப்போல் இந்தியாவிலும் திருமணம் செய்து கொள்ளாமலேயே சில ஆண்டுகள் குடும்பம் நடத்திப் பார்த்து பிடித்திருந்தால் திருமணம் இல்லையென்றால் வேறுமணம் என அநியாயம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

மனிதர்கள் நிச்சயமாக எல்லா நிலைகளிலுமே வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் உடையவர்களாகப் படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதே சரியாகும். பணிவு, அடக்கம், ஒழுக்கம், நேர்மை போன்ற குணங்களை மனிதன் விட்டொழித்ததால் மனிதனின் இயற்கை சமச்சீர் நிலை பாதிப்படைந்து மனிதர்களுக்குள் சண்டை சச்சரவுகள், அடிதடிகள், தகராறுகள், பொய்கள், ஏமாற்றுகள், உயிரிழப்புகள் போன்றவை மலியத் தொடங்கி விட்டன. குடும்பத்தில் நடைமுறையில் சந்தேகங்கள் வருவதற்கான வாய்ப்புகள் அதிகரித்து விட்டன.

### பெண்களின் கற்பு

இதைப் போன்ற காரணங்களினால் குடும்பப் பிரச்சனைகள் வரக்கூடாது என்ற தொலை நோக்குப் பார்வையினால்தான் எல்லாக் கண்டெடுப்புகளையும் செய்துவிட்ட நம் முன்னோர்கள் கணவன் மனைவியருக்குள் கணவன் கூடுதல் வயதாக இருக்க வேண்டுமென்றக் கட்டாயத்தை வைத்திருந்தனர். மேலும் பெண்களுக்கு கற்பு நெறியை அவசியமாக்கி ஒரு பெண் தன் கணவனிடம் மட்டுமே ஆண் சுகத்தைப் பெற வேண்டுமென்ற ஒழுக்க நெறியை வைத்திருந்தார்கள்.

ஆனால் இன்றைக்கு நிலைமை கட்டறுந்து தட்டுத் தடுமாறி தறிகெட்டுப் போய்விட்டது. ஆண்களும் பெண்களும் தத்தேறிகளாகத் தரங்கெட்டுப் பேயாட்டம் போடுகிறார்கள். திருமணத்திற்குப் பின்னரும் கள்ளக்காதல் உறவுகள் நடத்துகிறார்கள். எங்கே பார்த்தாலும் பெரும் பகுதி குடும்பங்களில் புரிந்து கொள்ளுதல் இல்லை. சண்டை சச்சரவுகள் மிகுதியாகி பெயருக்காக பல்லைக் கடித்துக் கொண்டு காலத்தைக் கழித்து வருகின்றனர். அங்கே பொய்கள் எல்லா மனித மனங்களிலும் கோவில் கொண்டு விட்டன. சிலர் விரிசல்கள், முற்றிய நிலையில் உறவை வெட்டிக் கொள்கிறார்கள். ரத்து செய்து கொள்கிறார்கள், இன்னும் பலவும் நடந்தேறி வருகின்றன.

கணவன் - மனைவி உறவுகளுக்கிடையில் வரும் சண்டைகளுக்கு வரதட்சணை என்னும் கொடுமையும் ஒரு காரணமாகும். இருப்பினும் பிரச்சனையாகும் பெரும்பாலான குடும்பங்களுக்கு இந்த வரதட்சணையை சாயம் பூசுவது ஒரு சமுதாய ஏமாற்று வேலையாகும். கணவன் விரோத மனநிலைக்குப் போவதற்கு, மனைவியிடம் எதிர்பார்த்த கற்பு நெறி, ஒழுக்க நெறி, பெண்ணுக்கு இலக்கணமான மென்மை, தூய்மை, தாய்மை, அன்பு, அடக்கம் போன்றவைகள் இல்லாதது ஆகும். அதுபோல மனைவி கணவனிடம் எதிர்பார்த்த, தன்னிடம் மட்டுமே அன்பு செலுத்தி ஒழுக்கமாக நடப்பது, ஆண்மையுடனிருப்பது வேண்டியதை விரும்பியதை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்பது, விரும்பிய இடத்திற்கு அழைத்துச் செல்லுதல் போன்றவைகள் கிடைக்காமை கணவன் மனைவி குடும்பப் பிரச்சனைகளுக்குக் காரணங்களாகச் சொல்லலாம்.

எதிர்கால இந்தியக் குடும்ப உறவில் பெரிய அளவில் விரிசல்கள் வராமல் இருப்பதற்கு இங்கே ஒன்றைச் சொல்ல முடியும். ஏற்பவர்கள் ஏற்றுக் கொள்ளுங்கள். யாருக்கும் இது கட்டாயமில்லை. பெண்கள் திருமணமாகும் வரை கற்புள்ளவராக இருங்கள். கணவனிடம் உங்களை வாடாத ஒரு புது மலராய் கொடுத்துப் பாருங்கள். அங்கே நிச்சயமாக ஒரு வித்தியாசத்தை நீங்களும் உங்கள் கணவரும் உணர்வீர்கள். வாழ்வில் ஒரு அழுத்தமான உணர்வுடன் உண்மையுடன் கூடிய புரிந்துகொள்ளுதல் உண்டாகி தினம்தினம் மகிழ்ச்சி பூத்துக் குலுங்கும். கணவனை மதிப்பதில், மரியாதையாக நடப்பதில், அவருடைய நல்லக் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதில் எந்தத் தவறுமில்லை. நிச்சயமாக அங்கே ஒரு பரிபூரணமான மகத்துவம் ஏற்படும்.

ஆண்கள் ஒழுக்க நெறியைக் கடைப்பிடித்து விபச்சாரம் ஒதுக்கி, சூது தள்ளி, போதையை வெறுத்து அல்லது எப்போதாவது மிகமிகக் குறைவாகவே கைக்கொண்டு, வேறு பெண்களைக் காமத்தோடு கண்ணுறாமல் மனைவியை மனதார நேசித்து அவளுக்கு பிடித்தவைகளை இயன்ற வரையில் செய்து வந்தால் இப்போதைக்கு கணவன் மனைவி பிரிவினைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

இவையெல்லாம் ஏற்கப்படாத நிலை தொடர்ந்தால் எதிர்கால இந்தியாவில் தெருவுக்குத் தெரு விவகாரத்து நீதிமன்றங்கள் ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும் வியப்பதற்கில்லை.

## மாமியார் - மருமகள் உறவுகள் :

அடுத்தப்படியாக மாமியார் – மருமகள் பிணக்குகளைப் பார்ப்போம். இந்திய கலாச்சாரப்படி அதிகபட்சமாக புதிய ஆண்களாகிய தங்கள் கணவர்களுடன் வாழும் இந்தியப் பெண்கள் தங்கள் கணவரைப் பெற்றெடுத்த பெற்றோாகளாகியப் மாமனார், மாமியார் மற்றும் கணவரின் உடன்பிறப்புகளோடு சேர்ந்து வாழும் நிலையிலிருக்கிறார்கள். கணவரின் உடன்பிறப்புகள் திருமணமாகிப் பிரிந்து சென்ற பிறகு அவரின் பெற்றோர்களை கணவரோடு தானும் சேர்ந்து பராமரித்து, பாதுகாத்து வரவேண்டுமென்பதுதான் இந்து மத தர்மம்.

### தாய்–மகன் பாசம்

இங்கேதான் பல குழப்படிகள் உருவாகின்றன. மகனைப் பெற்று வளர்த்து, பல ஆண்டுகள் மற்ற தன் குடும்பத்து நபர்களைவிட அவனுடனேயே, தந்தையை விடவும் மிக நெருக்கமான அன்பை மகனிடம் பறிமாறிக் கொண்டிருக்கிறாள் தாய் என்னும் மகனின் முதல் மற்றும் முக்கிய உறவு. மகன் அவனுடைய திருமணத்திற்கு முன்பு வரை எல்லாவற்றிற்கும் தன் தாயையே பெரிதும் நம்பியிருக்கிறான். சம்பாதித்த பணம், செல்வத்தை அவ்வப்போது அந்தந்தக் குறிப்பிட்ட காலத்தில் தன் தாயிடம் கொடுப்பதை மகன் வழக்கமாகக் கொண்டிருப்பான். இதனால் தாயும் நல்ல மகிழ்ச்சியோடு வாழ்ந்து வருவாள்.

எந்தக் காரியத்தையும் மகன் தன் தாயைக் கேட்டுத்தான் செயல்படுத்துவான். இதனால் தாய் மிகுந்த பெருமையோடு முக்கியத்துவம் பெற்று விளங்குவாள். வீட்டிலிருக்கும் சமயத்தில் அதிக நேரம் தன் தாயுடன்

பேசிக் கொண்டிருப்பதையும், கலந்து விவாதித்துக் கொண்டிருப்பதையும் வழக்கமாகக் கொண்டிருப்பான் மகன் என்கிற இந்தஆண்.

**மகனின் திருமணத்திற்கு பின்...**

இப்படியானச் சூழ்நிலைகளில் ஒருநாள் மகனுக்குத் திருமணம் என்னும் சம்பவம் நடந்தேறுகிறது. புதிய இளம்பெண்ணொருத்தி தன் மகனுடன் கூடவே இருக்கும் நிலை ஏற்படுகிறது. மகன் தாயுடன் பேசும் நேரம் மெல்ல மெல்லக் குறைந்து வருகிறது. மகனிடமிருந்த தாயின் முக்கியத்துவம், முதன்மையிடம் குறைந்து சற்று சரிந்துதான் போகிறது என்று சொல்ல வேண்டும். இது இயற்கையின் கட்டாயமாகித் தவிர்க்க முடியாத ஒன்றாகி விடுகிறது.

ஆண் எனப்பட்டவன் வீட்டிலிருக்கும் நேரத்தை தாய், மனைவி, குழந்தைகள் ஆகியவரோடு பகிர்ந்தளிக்கும் நிலை ஏற்படுகிறது. அப்பகிர்ந்தளிப்பில் ஏற்றத் தாழ்வுகள் அதிகமிருப்பின் அதுவும் அங்கே பிரச்சனைகளின் அடித்தளமாக ஆகக்கூடிய வாய்ப்புள்ளது. திருமண நாளிலிருந்து ஆண் எல்லா நடவடிக்கைகளுக்கும் தாயிடமிருந்து மெல்ல நகர ஆரம்பித்து மனைவியிடம் கடை சேர ஆரம்பிக்கிறான். சம்பாத்தியமும் தாயிடம் வந்து சேர்வது தடுக்கப்படுகிறது, தவிர்க்கப்படுகிறது, நிறுத்தப்படுகிறது.

தாய் தன் செலவுகளுக்கு மகனை, மருமகளை எதிர்பார்க்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறாள். பல உரிமைகளும் பறிக்கப்பட்டு விட்டதால் வயதான நிலையில் கூடுதலாக விரக்தி அடையத் தொடங்குகிறாள். இதற்கெல்லாம் பெற்ற மகனை அதிகம் கோபித்துக் கொள்ள

விரும்பாமல் வீட்டிற்கு வந்த புதுவரவாகிய மருமகள்தான் காரணம் என மாமியார் தன்னையும் அறியாமல் மருமகள் மீது விரோத மனப்பான்மையை சிறிது சிறிதாக வளர்க்க ஆரம்பித்து அது பூதாகரமாகி விடுகிறது.

எதிர்நிலையிலிருக்கும் மருமகளாகிய அந்த வீட்டிற்கு வெளியிலிருந்து வந்த பெண் வேறுபட்ட சூழ்நிலையில் பல எதிர்பார்ப்புகளோடு வாழ்ந்து வந்திருப்பாள். அவளுடைய பல எதிர்பார்ப்புகள், விருப்பங்கள் நடந்தேறாமல் போகும் நிலை பல சமயங்களில் ஏற்படுகிறது. அவள் பிறந்தகத்திலிருந்தபோது தன் பெற்றோர், சகோதர சகோதரிகள், தன் தாய், தந்தை வழி உறவினர்களிடம் நெருங்கிப் பழகி அன்பைப் பரிமாறிக்கொண்டு வந்திருப்பாள். தன் நெருங்கிய நட்பு வட்டத்திற்குள் பரிணமித்து மகிழ்ச்சி அடைந்திருப்பாள். சர்வ சுதந்திரத்துடன் வீட்டு வேலைகளும் குறைவாக இருந்து தன் வீட்டில் கிடைத்த பணத்தை தன் விருப்பத்திற்குச் செலவு செய்து கழித்த இனிமையான பள்ளி, கல்லூரி நாட்களைப் பார்த்திருப்பாள். நினைத்ததைப் பேசியிருப்பாள், செய்திருப்பாள். இவை எல்லாவற்றிற்கும் திடீரென ஒரு பெரிய முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது.

புதிய சூழ்நிலையில் புதிய மனிதர்களுடன் முக்கியமான இளமைக் காலத்தின் ஆரம்பப் பகுதியிலோ அல்லது இளமைக்காலத்தின் இடைப்பட்ட நிலையிலிருந்தோ எஞ்சிய காலம் முழுவதற்கும் வாழவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. திருமணத்திற்கு முன்பு வரையில் அவளுக்கானப் பல வேலைகளை, உதவிகளை பிறந்த வீட்டில் பலரும் செய்து வந்திருப்பார்கள். திருமணமானப் பிறகு தன்னையும் சேர்த்து, கணவன், மாமியார், மாமனார், கொழுந்தன், நாத்தனார் அதன்பின் ஆண்டுகள் ஆகஆக

குழந்தைகள் மற்றும் கணவன் குடும்பத்து உறவினர்கள் எனப் பலருக்கு ஊழியம் செய்து கவனித்து வரவேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆரம்பத்தில் சற்றுச் சிரமத்துடன் இருந்து போகப்போக சூழ்நிலைகளுக்கு அவளையுமறியாமலே பழகிக் கொள்கிறாள்.

### பெண்களுக்குள் அதிகார போட்டி

இதனிடையில் முக்கியமாக கணவனைப் பெற்று வளர்த்தவளின் இலைமறைக் காயான, இடைநிலையிலான அல்லது வெளிப்படையான பகையையும், பலவகைத் தாக்குதல்களையும் சமாளிக்க வேண்டியிருக்கிறது. இப்பெண்ணும் மாமியாரை தன்னைப்பெற்ற வயதான தன் தாயையொத்த பெண்தானே, மகனையும், உரிமைகளையும் இடையில் தன்னால் பெரும்பகுதி விலகி விட்டவள்தானே எனப்புரிந்து கொண்டு ஏதாவது பேசிக்கொள்ளட்டும் என இருப்பதில்லை. மாமியார் குறை சொல்லிப் பேசுவதைவிட பலமடங்கு அதிகரிப்பில் இப்பெண்ணும் பேச ஆரம்பித்து விடுகிறாள்.

மாமியாரும், மகனின் திருமணத்திற்குப்பிறகு அவனுக்கு அவனுடைய மனைவிதான் மிக முக்கியம், அவனை உள்ளத்திலும், உடலிலும் சுமக்கிறவள் அப்பெண்தானே, தன் குடும்ப வாரிசுகளை உருவாக்கு கிறவளாயிற்றே நாம்தான் சற்று விலகிப்போக வேண்டும் என்று புரிந்து கொண்டு செயல்படுவதில்லை. எப்போதும் ஏதாவது மருமகளிடம் குறை கண்டுபிடிப்பதிலேயே குறியாக இருப்பாள். தன் மகளை உயர்த்தி ஒப்பிட்டுப் பேசி மருமகளை மட்டம் தட்டிப் பார்ப்பாள்.

இவைகளினால் அங்கே முதலில் மனதில் மெல்லியதாக ஆரம்பித்த போர்க்களம் சமயத்தில் விசுவரூபமெடுத்து பெரும் சண்டையாகி வீதிவரை வந்து விடுகிறது. இவர்கள் இரண்டு பேருக்குமிடையில் மகனாகிய, மருமகளின் கணவன் மாட்டிக் கொண்டு படாத பாடுபடுவான். இப்பிரச்சனையை இன்னும் பல கோணங்களில் சொல்லலாம். பலவிதக் காரணங்களும், தவறுகளும், திருட்டுகளும், சந்தேகங்களும், பொய்களும் மாமியார் மருமகள் இடையே சண்டை சச்சரவுகளை, வெறுப்புகளை உண்டாக்கி வருகின்றன.

தன்னை விட மிகக் குறைந்த வயதுப் பெண் தன்னை அதிகாரம் செய்வதா, மதிக்காமல் நடப்பதா, இவளிடம் செலவுக்கு நாம் பணம் வாங்க வேண்டுமா என மாமியார் நினைப்பார். இந்த வயதான எல்லாம் முடிந்து போனக் கிழவி பேசாமல் வாயை மூடிக்கொண்டு தொல்லை கொடுக்காமல் ஒரு ஓரத்தில் உட்கார்ந்து தொலைக்க வேண்டியதுதானே என மருமகள் நினைப்பார்.

இதற்கெல்லாம் தீர்வாக ஒரு சிலவற்றைக் கூற முடியும். ஒரு பெண் திருமணமாகி கணவன் வீட்டிற்கு வந்து விட்டால் அங்குள்ள சூழ்நிலைகளை மனதார ஏற்றுக் கொள்ளுவதற்கு உட்பட வேண்டும். இனிமேல் அங்கே உள்ளவர்கள்தான் தனக்கு முக்கியமானவர்கள் தன்னோடு வரும் எஞ்சியக் காலத்தில் கூடவே வாழ்ந்து வரப் போகிறவர்கள், தவிர்க்க முடியாதவர்கள் என்பதைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். மனிதர்கள் பலவிதமாக இருப்பார்கள் என்பதையும் புரிந்து கொண்டு அவரவர்களுக்கு ஏற்ப அனுசரித்துப் போகப் பழகிக் கொண்டால் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.

## புரிதல் இல்லை

அதேபோல் இன்னொரு பெண் முன்னர் மருமகளாக இருந்து ஒரு இளம், நடுத்தர வயதுப் பெண்ணின் மன நிலைகளில் இருந்து அதைப் புரிந்து அதன் சிரமங்களை அனுபவித்துக் கடந்து வந்து இப்போது வயதாகி ஒரு பெண்ணுக்கு மாமியாராகியுள்ளார். அப்பெண்மணி தன் மகனை எந்தளவுக்கு மருமகளிடம் விட்டுக் கொடுக்க வேண்டுமோ அதைச் செய்யவேண்டும். மகனின் திருமணத்திற்குப் பிறகு தன்னுடைய வாழ்க்கை முறையை, பழக்கவழக்கங்களை சிறிது மாற்றிக் கொண்டு வருவதே சிறப்பானது. ஒரு மருமகள் எப்படியெல்லாம் இருக்க விரும்புவாள், அவளை எப்படிப் போற்றித் தட்டிக் கொடுத்து குடும்பத்திலும் தன் மீதும் மிகுந்த ஈடுபாட்டை உண்டாக்கலாம் என்பதை அறிந்து புரிந்து செயல்பட வேண்டும். இவையெல்லாமும் இன்னும் வேறு நல்ல சங்கதிகளும் நடந்து வந்தால் மாமியார் – மருமகள் இடையே சுமூகமான உறவு நிலவும்.

## மற்ற உறவுகளைப் பேணுதல்

இவைகளுக்கு அடுத்ததாக பல உறவுமுறைகளில் நல்ல உறவு மற்றும் பிணக்குகள் அவ்வப்போது ஏற்படும், மறைந்து போகும். சில சமயங்களில் பிணக்குகள் நிரந்தரமாகிப் பிரிவினைகள் வந்து விடும். இதற்குக் காரணமாகச் சொத்துப் பிரச்சினைகள், பாகப்பிரிவினைகள், ஆபத்து அவசரத்தில் உதவாதது, சரியாக மதிக்காதது போன்ற பலவும் இருக்கின்றன.

உறவுமுறைகளைப் பேணுகிற விஷயத்தில் இந்திய நகரங்களில் இருப்பதை விட கிராமங்களில் மிகச் சிறப்பாக

நடைபெற்று வருகிறது. இந்தியக் கிராமப் பகுதிகளில் ஒரு ஜாதி அடிப்படையில் பெரிய குழுவாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே நட்புகளைக் காட்டிலும் உறவுகளுக்குத்தான் வாய்ப்புகள் அதிகம் இருக்கிறது. பெரும்பகுதி உறவினர்கள் தங்கள் கிராமத்தில் அல்லது அருகில் உள்ள சுற்று வட்டாரக் கிராமங்களில், சிலர் பக்கத்து நகரங்களில் தொழில், வேலை நிமித்தம் வாழ்ந்து வருவார்கள். இவர்கள் அனைவரும் குடும்ப, ஊர், சமய நிகழ்ச்சிகள், பண்டிகைகள், திருவிழாக்கள் போன்ற சமயங்களில் ஒன்றிணைந்து கலந்து நல்லது கெட்டது அனைத்தையும் அளவளாவி மகிழ்ந்து வருவார்கள். அவ்வப்போது அவர்களுக்குள் தற்காலிக, நிரந்தர சாதாரணமானது முதல் பெரிய பிணக்குகளும் உண்டாகின்றன.

கிராமப்புறங்களில் உறவினர்கள் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வது, கருத்துப் பரிமாறிக் கொள்வது, தினசரி சிலபல தடவைகள் அல்லது அடிக்கடி சந்தித்துக் கொள்வது, ஒருவர் வீட்டிற்கு மற்றவர்கள் சென்று வருவது, சில நாட்கள் தங்குவது போன்றவைகளினால் உறவுமுறை இயற்கையாக நல்ல பலத்துடன் இருந்து வரும். கிராமப்புறங்களில் பெரும்பகுதி விவசாயத்தையே சார்ந்திருக்கும் நிலையில் விவசாய வேலைகளில், ஒருவருக்கொருவர் உதவுவதோடு அதற்கான உபகரணம், கால்நடைகள் போன்றவற்றைப் பரிமாறிக்கொள்வதிலும் மிகுந்த உடன்பாட்டோடு விளங்குகிறார்கள்.

கிராமப்புறங்களில் உறவினருக்குள் ஒருவரின் அதிக முன்னேற்றத்தை மற்றவர்கள் அதிகம் விரும்பாத உள் பொறாமை மனநிலையிலிருந்தாலும் அது உறவு நிலையைப்

பாதித்து விடுவதில்லை. கிராமப்புற உறவினர்களுக்குள் செல்வ நிலையில் உள்ள வேறுபாடுகள் அவர்களுக்குள் பெரும் தாக்கத்தை வேற்றுமையை ஏற்படுத்திவிட முடியாது.

நகரங்கள், பெரு நகரங்களில் உறவு முறைகளைப் பேணுவதில் பலவித நிலைகள் உள்ளன. இங்கே சுயநலம் தலை விரித்தாடுகிறது. தன் குடும்பம், பிள்ளைகள் மட்டும் நன்றாக வாழ வேண்டுமென்பதில் குறியாய் இருக்கிறார்கள். நகரங்களின் நரக அவசர வாழ்க்கையில் உறவுகளை அடிக்கடி சந்தித்துக் கொள்ள வாய்ப்புகளில்லை. அதற்கு முயற்சிப்பதுமில்லை. அதற்கு அப்படியொன்றும் விரும்புவதுமில்லை.

ஏதேனும் குடும்ப நிகழ்ச்சிகளில் அவசரமாக வந்து ஒருசில மணி நேரம் பெயருக்காக இருந்து விட்டுப் போவார்கள். அங்கே அவரவர் பெருமையைப் பறை சாற்றிக் கொள்வதிலும் தன் குடும்பச் சிறப்பைப் பேசுவதிலும் மட்டுமே ஆர்வம் காட்டுவார்கள்.

நகர மக்களில் அதிகம் பேர் உறவுகளை, உறவுமுறைகளை அவ்வளவாகக் கண்டு கொள்வதில்லை. பொய்யான பேச்சு, போலிச்சிரிப்பு, அவசரபிரிவு போன்றவைகளோடு உறவை நடத்தி வருகிறார்கள். உறவினரில் வசதியற்ற ஏழைகளைக் கண்டு கொள்வதில்லை. ஏழை உறவினர்கள் இருப்பது கௌரவக் குறைவாகக் கருதப்படுகிறது. உறவினர்களால் ஏதேனும் பணத் தொல்லைகள் வந்துவிடுமோ என்ற ஒரு பயத்துடன் உறவினர்களை அருவருப்பாக மனதில் எண்ணிக் கொள்பவர்களும் உண்டு.

உறவினர்களைக் கண்டு ஓட்டம் பிடிக்கும் நகரத்து மனிதர்களும் உண்டு. எங்கே ஏதேனும் பெரிய செலவு வைத்து விடுவானோ என வந்த உறவினரிடம் முன்னெச்சரிக்கையாகப் பஞ்சப்பாட்டுப் பாட ஆரம்பித்து விடுவார்கள். உறவினைக் கண்டு கொள்வதோ, பேசுவதோ பணத்துக்கு நஷ்டம் என்று எண்ணுபவர்கள் ஏராளம். ஆனால் அதே மனிதர்களில் சிலர் நிரந்தரமில்லாத சில தற்காலிக நட்புகளுக்குக்கூட பணத்தைத் தண்ணீராய் ஊதாரித்தனத் திற்குச் செலவழிப்பார்கள்.

**பலவகை நட்பு**

நட்பு என்று பேசும்போது பலவித நட்புகள் இருக்கின்றன. நட்புகளில் தற்காலிகம், ஒரு சில ஆண்டுகளுக்கான நட்பு, இறுதி வரையிலான நட்பு எனப் பிரித்துப் பார்க்க இயலும். அப்படியான மேலேயுள்ள இரண்டாம், மூன்றாம் நிலை நட்புகளில் சில நெருக்கமாகவும், சில சாதாரண முறையிலும் இருக்கும். இப்படி நெருக்கமான நட்புகள் சில சமயங்களில் உறவுகளை விட மிக உறுதியாகவும் உதவியாகவும் இருக்கும். அதையும் மறுப்பதற்கில்லை.

ஆனால் பல சூழ்நிலைகளில், சந்தர்ப்ப சமயங்களில், பல காரணங்களால் இடம் மாற்றிக் கொள்ளும் நட்பு வசதியானவர்களை, செல்வாக்கு உள்ளவர்களையே அதிகம் விரும்பும். உறவுகள் அப்படி செயல்பட முடியாது. அது விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் மாற்ற முடியாதது, நிலையானது.

நட்பைச் சீர்தூக்கி அவ்வப்போது சினிமாக்கள் வந்து அதன் நடைமுறைச் சிறப்பை வெளிக்கொண்டு வரும்

செயல்களைச் செய்து வருகின்றன. இது வரவேற்கத்தக்கதுதான். அதே மாதிரி உறவின் சிறப்பை, பெருமையைப் போற்றி திரைப்படங்கள் அதன் பரிமாணத்தில் அடிக்கடி வருவதில்லை. உறவுகளைக் குறைசொல்லியும், உறவுகளுக்குள் உள்ள பகை, சண்டை, அடிதடிகள், வழக்குகள், தாழ்நிலை சூழ்நிலைகள் போன்றவற்றைச் சற்று மிகைப்படுத்திக் காட்டி சமுதாயத்திலும் அதன் தாக்கம் ஏற்படுத்தப்படுமோ என்ற அச்சம் எழும் நிலையில் நிலவரம் இருக்கிறது.

### உறவுகளால் இலக்கியங்கள்

பண்டைய காலத்தில் உறவுகளுக்கு இருந்த முக்கியத்துவத்தினால் எல்லா மொழிகளிலும் புராணங்கள், இதிகாசங்கள், காப்பியங்கள், இலக்கிய நூல்கள் போன்றவைகள் படைக்கப்பட்டு அதில் உறவுகளுக்கே நல்ல முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தியில் இராமாயணம், மகாபாரதம் போன்ற சீர்மிகு புராண, இதிகாசங்களிலும் தமிழில் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களிலும் உறவுகளைப் பற்றித்தான் பேசப்படுகிறது.

அதேவேளையில் இன்றைய சினிமா, தொலைக்காட்சி, நூல்கள், கதைகள் செய்பவர்கள் உறவுமுறை என்ற ஒரு தலைப்பை எப்போதும் கொச்சைப்படுத்தி சமூகத் தீங்கு செய்து வருகிறார்கள். இன்றைய மனிதர்களும் சரியில்லைதான், இருப்பினும் பொதுஜனத் தொடர்புச் சாதனங்கள் இவர்களை சரி செய்து நல்ல வாழ்க்கை முறைக்குக் கொண்டு வருதல் வேண்டும். எப்படியெல்லாம் நல்ல உறவுமுறைகளைக் கொண்டாட வேண்டும் என்பதற்கு ஆக்கப்பூர்வமானப் பணிகளை அவர்களின் பாணியில் செய்து

வரலாம். இதனால் சமுதாய உறவுமுறைகளில் நல்ல மாற்றங்கள் ஏற்பட அருமையான வாய்ப்புண்டு.

இன்றைய மனிதர்கள் உறவுகளின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் உணர்ந்து கொண்டு அதற்கேற்ப நடந்து வரவேண்டும். குறை நிறைகளை பெரிதுபடுத்திப் பார்க்காமல் தன் மனநிலையை முதலில் சரிபடுத்திக் கொள்வது நல்லது. நல்உறவு கொண்டாட விரும்பும் அனைத்து மனிதர்களும் அதை எப்படிச் சிறப்பாகச் செய்யலாம் என்பதை ஆழ்ந்தறிந்து செய்ய வேண்டும்.

**விருப்பம், ஒற்றுமையுடன் உறவைப்பேணுவது சிறப்பு**

உடன்பிறப்புகளுக்குள் பிரிவினையை உண்டாக்கும் சொத்துப் பிரச்சனைகள், பாகப் பிரிவினைகளை சுமூகமாக, அமைதியாக விட்டுக் கொடுத்து நன்குணர்ந்து செய்து கொள்ளுங்கள். ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளுதல், ஆபத்துக் காலங்களில் உதவுதல், ஒருவர் முன்னேற்றத்தை அடுத்தவர் மனதார விரும்புதல், தன் குடும்பம் மட்டும் என்ற சிறிய வட்டத்திற்குள்ளான சுயநலத்தை நீக்குதல் ஆகியவை களைக் கருத்துணர்ந்து செயல்படுத்துங்கள்.

அடிக்கடி சந்தித்துப்பேச வாய்ப்பில்லாவிட்டாலும் சந்திக்கும் சமயங்களில் மனம்விட்டு உண்மையாகப் பேசி உறவை வளருங்கள். கடிதப் போக்குவரத்து, தொலைபேசி, கம்ப்யூட்டர் போன்ற சாதனங்களின் மூலம் அடிக்கடித் தொடர்பு கொண்டு வாருங்கள். உறவுகளைத் தொல்லையாகக் கருதாதீர்கள். தவறுகளைச் சுட்டிக் காட்டும்போது மறுமுனையில் உள்ள உறவினர் அதை உணர்ந்து ஏற்றுத் திருத்திக் கொள்வதே சரியான உறவு முறைக்கு வழியாகும். உதவி செய்யச் சூழ்நிலை மற்றும்

விருப்பம் இல்லை என்றால் வெளிப்படையாக் கூறிவிடுங்கள். உதவி கிடைக்கவில்லை என்பதற்காக அடுத்த உறவினர் வருத்தப்பட்டுக் கொள்ளாமல் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முயற்சியுங்கள். சிலபல சூழ்நிலைகளினால் எப்போதும் நினைத்த நேரத்தில் உதவிகள் கிடைத்து விடாது. அதற்காக உறவுகளை முறித்துக் கொள்ளக்கூடாது.

மனிதர்களில் உயர்வு நிலை அடைவதற்காகப் பெரும்பாடுபட்டு அயராது உரைத்து வருபவர்கள் இருக்கிறார்கள். அப்படியான செல்வ நிலையை அடைந்து விட்டபிறகு தாழ்நிலையில் உள்ள உறவுகளை அலட்சியம் செய்யாமல் ஓரளவுக்காவது கருதிப்பார்க்கும் எண்ணம் வைத்திருங்கள். செல்வத்தோடு செல்வம்தான் சேரும் என்பது நடைமுறை நியதியாகவும் அதுதான் பெருமை சேர்ப்பதாக இருந்தாலும்கூட உறவினர் என்று இருக்கும் நிலையில் அவரவர்களுக்கு வெவ்வேறு அளவுகளில் முக்கியத்துவம் இருந்தாலும், கொடுக்கப்பட்டாலும் முடிந்தவரை அனைத்து உறவுகளையும் அணைத்துச் செல்லுங்கள்.

# பிறரை வேற்றுமையாக எண்ணாதீர்கள்

## மற்றவர்களை எதிர் எண்ணத்தில் நினைக்கும் மனிதர்கள்

நம்மில் பலருக்கு தம்மைப்பற்றிச் சிந்திப்பதைவிட மற்றவர்களை குறிப்பாக அக்கம் பக்கத்தில் வசிப்பவர்கள், அருகினில் இருப்பவர்கள், நெருங்கிய உறவினர்கள், கண்ணில் அடிக்கடிபடும் மனிதர்கள் போன்றோரைப்பற்றி அதிகம் சிந்திக்கும் குணமுண்டு. இவர்களோடு, சாதாரண நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்குப் போய்விட்டவர்கள், உயர்ந்த நிலையிலிருந்து தாழ்ந்த நிலைக்குப் போய்விட்டவர்கள் என மற்றவர்களைப்பற்றி சிந்திப்பது, அவர்களைப்பற்றி பேசுவது, அவர்களுடைய செயல்களைக் கவனிப்பதுடன் அவர்களை பல விதத்தில் விமர்சனம் செய்வதுமாக இருக்கிறோம். இவைகளே பெரும்பாலான மக்களுக்கு வாழ்க்கை நியதியாகி விட்டது.

இம்மனிதர்கள் ஒன்றை நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும்; எதற்காக பிறரைப்பற்றிச் சதா ஒருவகைப் பாதிப்பு மனநிலையோடு பேசிக்கொண்டும் ஆராய்ந்து கொண்டுமிருக்கிறார்கள் என்பதைக் கருதிப் பார்க்க வேண்டும்.

இவர்களால் அவ்வாறு கருதப்படும் சாட்சாத் அதே மனிதர்கள், இவர்களுக்கு அருகில் இல்லாமலோ தெரியாமலோ வேறு இடங்களில், ஊர்களில், மாநிலத்தில், நாட்டில் இருந்தால், வாழ்ந்து கொண்டிருந்தால் என்ன செய்வார்கள். இவர்களுக்கு அவர்களை அப்போது

தெரியவும் தெரியாது, பேசவும் கருதவும் முடியாது. ஆனால் அதே மனிதர்கள் தெரிந்தவர்களாக, அருகில் இருப்பவர்களாக இருப்பதினால் மட்டும் என்ன பாவம் செய்து விட்டார்கள்? இதற்கெல்லாம் கோணலாகிப்போன மனநிலைக் காரணங்களாகச் சிலவற்றை இங்கே குறிப்பிட முடியும்.

மற்றவர்களுடைய உயர்வு, வெற்றிகளைப் பொறுத்துக் கொள்ள முடியாமை, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனநிலை இல்லாமை, போன்றவைகளைக் கூறலாம். மேலும் பிறருடைய திறமை, உழைப்பை அங்கீகரிக்கும் குணமில்லாதது, போன்றவைகளுமாகும். அதனுடன் பிறருடைய முன்னேற்றம், அறிவு, அழகு, ஏனைய சிறப்புக்களை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டு பாராட்டிப் புகழ்ந்து பேசும் எண்ணமில்லாதது போன்றவைகளும் அடங்கும்.

பலருக்கும் பிறரிடம் ஏதாகினும் குற்றம் கண்டுபிடிப்பது, அவர்களைக் குற்றமாகப் பேசுவது மிகவும் பிடித்திருக்கிறது. தெரிந்தவராக இருந்தாலும் பழகிக் கொண்டிருந்தாலும் கூட அவருக்குத் தாழ்வு வந்தால், தொல்லைகள் வந்தால் 'ஒருவகை இனம்புரியாத திருப்தி உண்டாகி' வெளியில் தெரிவிக்கப்படாத உள்மனது மகிழ்ச்சி அடையும் ஒரு கேவலமான நிலையிலிருப்பது எவ்வகையினில் நியாயம்.

தன்னை விட மற்றவர்கள் முன்னேறி மேலே போய் விடக்கூடாது என்ற தாழ்வு மனப்பான்மையும், பிறருடைய துன்பத்தை விரும்பும் உள்குணம் போன்றவை களும் இதற்கு முக்கிய காரணங்களாகும். மேலும் வேலை இல்லாதவர்கள் அதை செய்யத் தெரியாதவர்கள், சோம்பேறிக் குணத்துடன் உழைக்கும் ஆர்வமில்லாதவர்கள் ஆகியோர் பிறரைப் பற்றி

புரளி பேசுவதையே தொழிலாகக் கொண்டு இருப்பார்கள். இவ்வாறாக மனதில் கருதி, பேசி, அவர்களின் தீய மனதுக்கு ஆறுதலோடு சமாதானத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும் இவர்கள்தான் 'அடுத்த வீட்டுக்காரன் அழிந்து போக ஐந்து நாட்கள் கூட பட்டினி கிடப்பான்' என்று கூறப்படும் நாட்டு மொழிக்கு உவமையானவர்கள் மற்றும் பொருந்தக் கூடியவர்கள். இவர்கள் ஒன்றை மறந்து விட்டார்கள். பிறரைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கும் வீரிய அளவிற்குச் சமமாக தங்களுடைய முன்னேற்றத்தையும் அதற்குக் கவனம் செலுத்தும் தன்மையையும் இழந்து வருகிறார்கள் என்பதாகும்.

**மனிதனாகலாம், தெய்வமாகலாம்**

ஒரு மனிதன் தான் முன்னேறுவதைப்போல மற்றவர்களும் ஆகவேண்டும் என நினைக்கும்போது உயர்ந்த மனிதனாகிறான். இதுவே தன்னைப்போல் பிறரையும் நேசி என்பதற்கு பொருளாகிறது. இதைத்தாண்டி தன்னைச் சுற்றியுள்ளவர்கள் தன்னைவிட அதிக முன்னேற்றத்தை அடையும்பொழுது பொறாமை, வெறுப்பு ........... கொள்ளமல், அது அவருடைய திறமை, உழைப்புடன் மற்ற பல காரணங்களுக்காகவும் கிடைத்தது என்பதை ஏற்றுக்கொண்டு, அதை மனப்பூர்வமாக விரும்பி, மெய்த்தன்மையுடன் மனதில் வரவேற்று மகிழ்வுகொள்ளும் நிலையை அடையமுடியுமாயின், அந்நிலையில் ஒருவர் மனிதனுக்கு மேலாகி, ஞானி, தீர்க்கதரிசி, மகாத்மா என்பார்களே! அதுபோன்ற நிலையை அடைந்தவராகிறார்.

இது நீண்டகால தவ வலிமையில் கிடைக்கும் உயர்ந்த மனசக்தி நிலையை அடைந்ததற்கு சமமாகிறது. மனதிற்கு நல்ல பக்குவம், தகுந்த பயிற்சி கிடைத்தது, உலகம் முழுவதையும் உணர்ந்து, சரியான வாழ்வியல் தத்துவத்தை பரந்த மனதுடன் புரிந்துகொள்ளும் நிலை

மற்றும் அறிவின் முதிர்ச்சி நிலைகளை அடையும்போது இத்தன்மைகள், குணங்கள் தானாகவே வந்து சேருகின்றன.

இன்னும் தெளிவாகக் கூற வேண்டுமானால், உலகம் முழுக்க தனக்கு முகம் தெரியாத லட்சோபலட்சம் மனிதர்கள் முன்னேறுவதைவிட, தனக்கு முகம் தெரிந்த உறவினர், நண்பர், சுற்றுப்புறத்தினர் மேல்நிலையை அடைவதை இயற்கையாக விரும்பும் தன்மை சிறப்பிற்குறியது. முகம் தெரியாதவர்களால் தனியொரு மனிதனுக்கு எவ்வித தனிப்பட்ட தாக்கம், லாப நட்டம் இருக்கப்போவதில்லை. யாரோ எங்கேயோ எப்படியோ இருப்பது சம்மந்தமில்லாத வேறு இடத்தில் உள்ளவர்களுக்கு எதை ஏற்படுத்தப்போகிறது?

அதேவேளை தனக்கு முகம் தெரிந்தவர்களாக இருக்கும்பட்சத்தில், அவர்களால் பலருக்கு இல்லாவிடினும், சில சமயங்களில் சிலருக்காவது சில அவசர ஆபத்து சமயங்களில் சிலபல உதவிகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கலாம்; அல்லது கிடைக்காவிட்டாலும் கூடபரவாயில்லை. ஏனெனில் பொறாமைப்படுதல், தாழ்வு மனப்பான்மை அவற்றைக் கொள்பவர்களின் உடலுக்குதான் நரம்பு, மனம், இரத்தக்கொதிப்பு சம்மந்தப்பட்ட நோய்களுக்கான அடித்தளம் அமைத்து, எப்போதெல்லாம் மனம் இக்கீழ்நிலையை எட்டுகிறதோ, அப்போது அந்நோய்களுக்கான ஊக்கஉரம் கிடைத்து மேலும் வளர்வதற்கு வழி செய்யும். மாறாக முன்னேறிக் கொண்டிருப்பவர்களுக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தப் போவதில்லை. (முன்னேறுகிறவர்கள் மற்றவர்களின் எதிர்மன எண்ணத்தை உணர்வது, பொருட்படுத்துவது போன்றவற்றில் கவனம் செலுத்தவே கூடாது. சில சமயம் இதுகூட வளர்ச்சியை சிறிது பாதிக்கலாம்).

இதைப்புரிந்துகொள்ளாமல் மனிதர்களின் அணுகுமுறை எப்போதும் தவறுதலாக இருக்கின்றன. அதாவது தெரியாதவர்ளின் வளர்ச்சியை இயற்கையாக பொருட்படுத்தாத நிலையிலிருக்கும்போது,

தெரிந்தவர்ளின் வளர்ச்சியைத் தாங்கிக்கொள்ள, வரவேற்க, விரும்ப மனிதக்குரங்கு மனங்கள் மறுக்கின்றன. போட்டி, காழ்ப்புணர்ச்சி நிலைப்புடன், பெயருக்காக, வெளியில் காட்டிக்கொள்ளாத விருப்பமின்மையுடன் மற்றவர்களைப் பாராட்டும் பொய்த்தன்மையே இவ்வுலகில் நிலவுகிறது. வளர்ச்சியில் ஒரு நிலையைக்கடந்து, ஒப்பிட இயலாத பெரும்நிலையை அடைந்த பிறகுதான் மற்றவர்களைப்பற்றி பொறாமைப்படும் குணம், அச்சூழ்நிலையின் இயலாத காரணத்தினால், நம் மனிதர்களுக்கு ஓரளவுக்கு குறைய ஆரம்பிக்கிறது. ஆனால் மனிதர்கள் அப்போதைய தன்நிலையில் திருப்தி கொண்டு மற்றவர்களை நிலையை ஒப்பிட்டுக்கொண்டு பொறாமை இல்லாமல், தன்னால் இயன்ற மேல்நிலைக்கு முயற்சி செய்துகொண்டிருப்பதே, நோய்த்தன்மைகளை நீக்கி உடல், மனதுக்கு இயன்ற மேல்நிலைக்கு நன்மை செய்யும்.

## இதுவே பாவம்

எதிர்விளைவு கவனத்திற்கு உள்ளான மனிதர்கள் பலரும் செய்த ஒரே பாவம், இவர்கள் மேற்படி மட்டமான மனிதர்களுக்கு தெரிந்திருக்கக் கூடிய இடத்தில், சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டு வருவதுதான் எனலாம். அவர்கள் இவர்களுக்கு அருகில் இல்லாவிட்டாலும் கூட வேறு யாராவது அருகில் உள்ளவர்களைப் பற்றி எண்ணாமல் பேசாமல் விடமாட்டார்கள். இந்தக் கேவலப் புத்திகள் இம்மக்களை விட்டு என்றைக்கு ஒழியுமோ தெரியவில்லை! இதெல்லாம் நடந்தால்தான் மனித இனம் முழுமைப் பெற்றதாக ஆக முடியும். இதனால்தான் கிசுகிசுக்கள், புரளிகள், அக்கப்போர்கள் பெரும்பாலான மக்களால் மிகவும் விரும்பப்படுகின்றன. அதை தகவல் தொடர்பு சாதனங்கள் நன்கு பயன்படுத்தி வியாபாரத்தை சூடாகச் செய்து வருகின்றனர்.

இந்தவகைக் கலாச்சாரத்தில், கிராமங்கள் நகரங்களை விட பெருநகரங்கள் நிச்சயமாகப் பரவாயில்லை. ஏனெனில் பெருநகரங்களில் அடுத்தவர்களைப்பற்றிக் கொஞ்சம்கூட சிந்திக்க மாட்டார்கள். ஒரு வகையில் அது மனிதத்தன்மை இல்லையென்றாலும்கூட பிறரால் அதிகத் தொல்லைகள் வராமல் இயற்கையாகத் தடுக்கப்படுகிறது.கிராமம் மற்றும் சிறிய நகரங்களில், இவ்வகையிலான புரளி பேசுவதுதான் நம் மக்களுக்கு நல்ல பொழுதுபோக்கு அம்சமாக விளங்கி வருகிறது என்பது சத்தியமான உண்மை.

தெரிந்தும், தெரியாமலும், அறிந்தும், அறியாமலும் இத்தவறு செய்யும், தவறு என்றே தெரியாமல் இப்பழக்கத்தை வாழ்க்கை முறையாக்கிக் கொண்ட மேற்படி பொதுஜனம். இனிமேலாவது திருந்த வேண்டும். பிறரைப்பற்றியே எப்போதும் நினைப்பதை, பேசுவதை, விமர்சிப்பதை நிறுத்தி, நேரத்தை வீணாக்காமல் அவரவர் தனிமனித மற்றும் குடும்ப முன்னேற்றத்திற்கு முயற்சி செய்யவும். அவ்வாறு முயற்சி செய்து பொருள் ஈட்டுவதற்கு மூளையை மூலதனம் செய்து சமூகத்தில் போற்றக்கூடிய வகையில் முன்மாதிரியாக நடந்து எல்லாவகைகளிலும் சிறப்படையும் வாய்ப்பைப் பெற வேண்டும்.

பிறரைப்பற்றிப் பேசிப் பேசி மற்றவர்களைப் பெரிய மனிதர்களாக்குவதையே! தொழிலாகக் கொண்டிருக்காதீர்கள். மற்றவர்களைச் சட்டை செய்யாமல், உங்களைப்பற்றி சிறப்பாக நீங்களே மனதிற்குள் பேசி, வெளியில் அதற்கேற்ப நடந்து உங்களை பெரிய மனிதராக்கிக் கொள்ளுங்கள்; அதுதான் போற்றுதலுக்குரிய, அறிவார்ந்த சிறந்த வாழ்வு.

# சினிமா

## உயிருள்ளவைகளிடம் மகிழ்ச்சி தெரிகிறது

உயிரினங்கள் அனைத்திற்கும் மகிழ்ச்சி என்ற ஒன்று மிக அவசியமானதாகத்தான் இருக்க வேண்டும். தாவர, செடி, கொடி, மரங்களுக்கு அவைகள் செழிப்பாகப் பூத்துக் குலுங்க, போதுமான நீர், சூரிய ஒளி, அளவான காற்று, சரியான காலநிலை, உரமேறிய, உரமேற்றப்படும் தகுந்த மண்பூமி, இயற்கை ஒலிகள், சங்கீதம், மனிதன் மற்றும் விலங்குகளிடமிருந்து ஆபத்தின்மை போன்றவைகள் மகிழ்ச்சிக்கானக் காரணிகள் எனக் கருதிப்பார்க்கலாம்.

பல விலங்குகள் மகிழ்ச்சியடைவதை நாம் நேரிடையாகவே அறியக் கூடியதாக இருப்பதால் அனைத்து விலங்குகளும் அவ்வகையில் மகிழ்ச்சி அடையும் என்பது உறுதியாகிறது. அதனதன் முறைகளில் கொண்டாடிக் குதூகலிக்கும் கோட்பாடு இயற்கையானதே! என்பதை உணர முடிகிறது. வீட்டு விலங்குகளான நாய், பூனை, ஆடு, மாடு, கோழி, குதிரை எனப் பலவும் மகிழ்ச்சியான நேரங்களில் வித்தியாசமாக நடந்து கொள்வது, ஓடியாடிக் குதித்து விதவிதமான ஒலிகளை எழுப்புவது இன்னும் பலவிதமான சேட்டைகள் செய்வதுமாக இருப்பதைப் பார்த்திருப்போம். சில சமயங்களில் சில விலங்குகள் மனிதர்களோடு இதைப் பகிர்ந்து கொண்டு காலச்சக்கரத்தின் சுழற்சியில் வாழ்ந்து மகிழ்ந்து கொண்டு வருகின்றன.

## மனிதர்களின் மகிழ்ச்சியில் பரிணாமம்

அடுத்தபடியாகப் பூமியின் மன்னாதி மன்னர்களான மனிதர்களைக் காண்போம். தற்கால மனிதர்களைவிடப் பழங்கால மனிதர்களே, தனிமனித மகிழ்ச்சியை எவ்விதக் கட்டுப்பாடுமின்றி ஆடிப்பாடி, கூத்தாடி, கொண்டாடி, வெட்கமறியாச் சத்தங்களைக் கத்தி மகிழ்ந்து களித்திருக்கிறார்கள். அப்போது மனிதர்களுக்கு இப்போது மாதிரியான ஏற்றத் தாழ்வுகள் இல்லை, வகைவகையான கல்விக் கூடங்கள், விஞ்ஞானச் சாதனங்கள் இருந்திருக்கவில்லை.

ஆரம்பக்காலத்தில் பழம், காய்களை மட்டுமே உண்டு, மாமிசங்களைச் சுட்டுத் தின்று வந்த மனிதன், காலம் மாற இவனும் மாறத் தொடங்கினான். காமம், காதல், உணவு வேட்டை, வெற்றி, அன்பு இவைகளுக்காக இவைகளைப் பகிர்ந்துகொள்ள கிடைத்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ‘தையா தக்கா’ என்று குதித்து அங்குமிங்கும் ஓடி ஆடி விளையாடி இருக்கிறான். தெரிந்த மனித பாஷையில் கத்தி, ஓலமிட்டு, இயற்கையை ரசித்து, ஆனந்தமாய் வாழ்ந்து வந்த மனிதஇனம் அறிவு வளர்ச்சி ஏற்பட ஆரம்பித்த நாட்களிலிருந்து, மனிதனின் இயற்கைச் சுதந்திரம் போய் செயற்கையாக மகிழக் கற்றுக் கொண்டான்.

இருப்பினும் இன்றைக்கும் உலகின் சில பகுதிகளில் குறிப்பாக ஆப்பிரிக்க நாடுகிளின் காட்டுப்பகுதியில், இன்னமும் அவ்வளவாக முன்னேறாத மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் பழங்காலத்திய வாழ்க்கை முறையையொட்டிய மகிழ்ச்சி கூத்தாட்டங்கள், பண்டிகைகள் செய்து கொண்டாடி வாழ்ந்து வருவதை அறிய முடிகிறது.

படிப்படியாக வளர்ந்துவந்த மனிதர்கள் வேகமாகச் சிந்திக்க ஆரம்பித்தனர். அதன் பயனாக தலைசிறந்த இயற்கை விஞ்ஞானிகள், மேதைகள், தத்துவ, சமூக, மொழி ஞானிகளை இவ்வுலகிற்கு வழங்கலானார்கள். அவ்வாறாகப் புதிய கண்டுபிடிப்புகளாக மொழிகள், மருத்துவங்கள், கருவிகள், இயந்திரங்கள், சூட்சமச் சூத்திரங்கள், தத்துவங்கள், இசை போன்ற எண்ணற்ற புதுப்புது வரவுகள் வரத்தொடங்கின.

மனிதன் நாகரீகம் அடைய அடைய இசை, நடனம், நாட்டியம் என்னும் பொழுதுபோக்கு அம்சங்களை நுணுக்கமாக ஆராய்ந்தனர். சிறப்புகளை ஏற்று, ஒழுங்குமுறைப்படுத்தி அவைகளைப் பெருமைப்படச் செய்து, அவற்றின் விற்பன்னர்கள் முக்கியஸ்தர்களாகி, அறிவாளிகளாகக் கூடத் திகழ்ந்தனர்.

**சினிமா, தொலைக்காட்சி**

புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பான சினிமா என்னும் அதிசயம் உலகுக்கு அறிமுகமாகியதும் இசை, நடனம், நாட்டியம் எனும் முப்பெரும் கலைக்கருவூலங்கள் சினிமாவுக்கு மிகவும் இன்றியமையாததாகி விட்டன. அவை மென்மேலும் மெருகேறி ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசமில்லாமல், நாடு, மதம், மொழி என்ற பேதமில்லாமல், உலகெங்கும் பலரும் அனுபவித்து ரசிக்கும் நல்வாய்ப்புகிட்டலாயிற்று.

ஆரம்பத்தில் கருப்பு வெள்ளை ஊமைப்படமாகவும், அதைத் தொடர்ந்து பேசும் படமாகி, பிற்காலத்தில் பலவண்ண பல அளவுகளில் மனிதன் கற்பனைகூடச் செய்துபார்க்க முடியாத அளவிற்கு வளர்ந்து விட்டது.

கம்ப்யூட்டர்கள், எலக்ட்ரானிக் சாதனங்களின் உதவியினால் ஆச்சரியப்படத்தக்க அதிசயங்களை அள்ளித் தரலாயின.

அதன் பின்னர் வீட்டின் கழிவறை வரை சின்ன சினிமா என்னும் தொலைக்காட்சிப் பெட்டி மனித வாழ்க்கையின் முக்கிய அங்கமாகி சினிமாவை விடப் பல மடங்கு பரிணாமமாகி, சினிமாவையே சின்னாபின்னமாக்கும் அளவுக்கு உருப்பெற்று விட்டதை நாம் எல்லோரும் அறிவோம்.

ஆயினும் சினிமா என்னும் அதிசய வரவுக்கும் அதனின் சீரிய மிகப்பெரும் பரிமாணத்திற்கும் தொலைக்காட்சிப் பெட்டியை ஈடாக்க முடியாது. சினிமாவைத் தாய் என்றால் தொலைக்காட்சி குழந்தை மாதிரித்தான். அப்படிப்பட்ட சினிமாவும், சினிமாத் துறையும் இன்று கொஞ்சம் கொஞ்சமாக சீரழிந்து வருவதும், இலேசாகத் தலை நிமிர்ந்து அழுத்தமாக சுவாசித்து சிலிர்ப்பதுமாக, திரிசங்கு சொர்க்கத்தில் ஊசலாடிக் கொண்டிருப்பது முழு மகிழ்ச்சியையும் நிம்மதியையும் அத்துறையைச் சார்ந்தவர்களுக்கு ஏன் நமக்குமே கொடுக்கவில்லை என்பதுதான் உண்மை.

### சினிமா தயாரிப்பு செலவு

இதற்கான காரணங்கள் எவையாக இருக்கலாம் என ஆராய்ந்தறிந்தால் சில அப்பட்டமான உண்மைகள் புலப்படுகின்றன. எந்தத் தொழிலிலுமே செலவினங்களைக் குறைத்து வருவாய்க்கான ஆதாரங்களை அதிகரிக்க வேண்டும். அதுதான் யதார்த்தமான வாழ்க்கை நியதியாகும்.

அவ்வகையில் திரைப்படங்களைத் தயாரிக்கும் தொழிலைச் செய்பவர்கள் எப்பாடுபட்டாவது எந்த வேடம்

கட்டியாவது தயாரிப்புச் செலவுகளைக் குறைத்தாலன்றி பெரும்பாலான திரைப்படங்கள் தோல்வியையும், பெரும் பொருள் மற்றும் வாழ்க்கை நஷ்டத்தையும் கொடுத்து விடும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

எவ்வகைகளில் செலவுகளைக் குறைக்கலாம் என்பது அத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தெரியாத விஷயமன்று. சாமான்ய பொதுமக்களாகிய நம்மை விட அவர்களுக்கு அதிகம் தெரியும்தான் என்றபோதிலும் அந் நடவடிக்கைகளில் இறங்குவதற்கும் செயல்படுவதற்குமான தைரியத்தை, சூழ்நிலைகளை வழங்குவது யார் கைகளில் உள்ளது? மனித வாழ்க்கையின் தற்கால அழுத்தத்தைப் போக்கி, ஒப்பிடமுடியாத மனமகிழ்ச்சி தரும் திரைப்படங்களைக் கட்டாயம் பார்க்க வேண்டிய நாமாகிய பொதுஜனங்கள் கைகளில்தான் உள்ளது. இது எப்படி சாத்தியமெனில் ஒன்றும் சூட்சமமில்லை.

ஒரு திரைப்படத் தயாரிப்பிற்கு நடிகர், நடிகைகள், டைரக்டர், காமிராமேன், இசையமைப்பாளர், கதாசிரியர், பாடலாசிரியர், எடிட்டர், பாடகர்கள், பல்வேறு தொழில்நுட்பக் கலைஞர்கள் எனப் பெரிய பட்டாளமே தேவைப்படுகிறது. ஷூட்டிங் செலவு, போக்குவரத்து, வாடகை, உணவு, தங்குமிடச் செலவு, நடிகர் நடிகைகளுக்கு உடைகள் தயாரிப்பது, படச்சுருள், மற்றும் படமாக்கும் செலவு இன்னும் நூற்றுக்கணக்கான இனங்களில் லட்சம்லட்சமாக, கோடிகோடியாக செலவழித்து ஒருபடம் தயாரிக்கப்படுகிறது. இச்செலவுகளிலேயே மிக அதிகமானதாக இருக்கக்கூடியது கதாநாயகன் மற்றும் கதாநாயகியின் சம்பளங்களே! இந்த அதிகப்படியான செலவினத்தைத் தவிர்க்க முடியுமா? எனப்

பார்க்கவேண்டும்.

அவ்வாறு தவிர்க்கப்பட்டு குறைந்த செலவில் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு, அதன்மூலம் திரையரங்குக் கட்டணம் குறையுமா? அந்த வாய்ப்பினால் பெருந்திரளான மக்கள் திரைப்படம் பார்க்கும் பழக்கத்திற்கு உட்பட்டு, திரைப்படத் தொழில் தொய்வின்றி வீறுநடை போடுமா? என்றால் அது நிச்சயமாக முடியும் என்றே சொல்ல வேண்டும்.

## தனி மனிதர்களுக்கான முக்கியத்துவம்

பொதுமக்களாகிய நாம் சில உண்மைகளை முன்னரே தெரிந்திருந்தாலும் திரும்பவும் உணர்ந்து பார்க்க வேண்டும். நாம் வாழ்ந்து கொண்டிருப்பது இருபத்தோறாம் நூற்றாண்டு. நாம் யாருக்கும் அடிமைகளில்லை. திறமை மற்றும் நடைமுறை அறிவில் யாருக்கும் குறைந்தவர்களில்லை. குறிப்பிட்ட கதாநாயகன், கதாநாயகிக்கு மட்டுமே ஏன் முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும்? எனச் சிந்திக்க வேண்டும்.

நன்றாக உழைத்தாலும்கூட பற்றாக்குறையில் வாழும் சாமான்ய மக்களிடமிருந்து, வசூல் செய்யப்பட்ட லட்சம், கோடி ரூபாய்களின் பெரும்பகுதி குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டுமா கொடுக்கப்பட வேண்டும்? அவர்களின் ஆடம்பர படாடோபமான வாழ்விற்கு ஏன் தாரை வார்க்கப்பட வேண்டும்? ஏழை, எளிய, நடுத்தர மக்கள் அன்றாட வாழ்க்கைக்கே அல்லாடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் சற்றே சிந்திக்க வேண்டும்.

இந்த உலகத்தில் அந்த குறிப்பிட்ட கதாநாயக, நாயகிகளைத் தவிர வேறு யாருக்கும் நடிப்புத்திறமை,

உடல் அழகு, அறிவு இல்லையா? ஆயிரமாயிரம் பேர்கள் ‘இவர்களை விட சிறந்தவர்கள்’ நம்மைச் சுற்றிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்! என்பதை நம்புங்கள். அவர்களில் நீங்களும் கூட ஒருவராயிருக்கலாம்! விடாமுயற்சி, உழைப்பு, சூழ்நிலைகள், பணம், பக்கபின்பலம் போன்றவைகளுடன் கொஞ்சம் அதிர்ஷ்டமும் இருந்தால் எவரும் பெரும் நடிகராகலாம். இருப்பினும் சிலரை மட்டும் பெருந்தொகை பண்ணிக்கொண்டிருக்கும் பெரும் நடிகர்களாக்கி அவர்களுக்கு உங்களை நிரந்தர ‘ரசிகர்கள் என்னும் அடிமைகளாக்கும்’ கேடு நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

வாய்ப்புக் கிடைத்தால், தேவைப்படும், எளிதாகவே கிடைக்கும் அவசியமான தொடர்பயிற்சிகளின் மூலம், பலபேர் இப்போதிருப்பவர்களை விட மிகச் சிறப்பாக சோபிக்க இயலும். அதற்கு பொதுமக்களும் திரைப்படத் துறையும் தயாராக வேண்டும். திரைப்படத் தயாரிப்பும் ஒரு தொழில்தான். மற்ற தொழில்களில் எப்படி எவரும், எந்தப் புதியவரும் தொடர்ந்து நுழைய முடியுமோ அதே போல திரைப்படத் துறையிலும் திறமையுள்ள புதியவர்கள் வரவேற்கப்பட வேண்டும், வந்து கொண்டே இருக்க வேண்டும்.

பல பத்தாண்டுகளுக்கு, தனிப்பட்ட எவருக்கும் ‘**பட்டா**’ போட வேண்டிய அவசியமில்லை. அடிமைத்தனமான ரசிகர் மன்றங்கள் தேவையில்லை. அவர்கள் ஒன்றும் ‘கடவுளர்கள்’ இல்லை, கோயில் கட்டிக் கும்பிடுவதற்கு! அவர்களும் நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள்தான் என்பதை உணரும் நல்ல காலம் வர வேண்டும். முதலில் தன்னை, தன் குடும்பத்தினரை, சுற்றத்தினரை ரசிக்கும், காதலிக்கும் நிலை வரவேண்டும். அவைகளுக்காக அடக்கமாக

பெருமைப்படடுக்கொள்ளும் குணம் முதலில் வளர வேண்டும். எந்த நடிகரும் அவருடைய அனைத்து ரசிகர்களுக்கும் நிரந்தரமாக சோறு போட்டுவிட முடியாது. அவரவர்கள் உழைத்துத்தான் சாப்பிட வேண்டியிருக்கிறது.

ஆகவே குறிப்பிட்ட மனிதர்களையே துதிப்பாடிக் கொண்டிருக்காமல், அவர்களிடம் மட்டுமே பெரும் கல்லாவைக் கொட்டாமல், மிகக் குறைந்த சம்பளத்தில், மிக அருமையாக நடிக்கும் புதியவர்களை, தொடர்ச்சியாக நிறைய அளவில் ஏற்க வேண்டும். இன்றைக்கு உள்ள மாபெரும் தொழில்நுட்ப புரட்சியில் ஒருவர் சாதாரணமாக நடித்தாலே படுபயங்கரமாக மிகைப்படுத்தி காட்டிவிட முடியும்! அதுதான் இப்போதும் நடந்துகொண்டிருக்கிறது.

## திரைப்படங்களின் வெற்றிக்குக் காரணம்

புகழ்பெற்ற நடிகர்களாகக் கருதப்படுகிறவர்கள் நடித்த, பெரும் பொருட்செலவில் எடுத்தத் திரைப்படங்கள், அடிக்கடி தோல்வி அடைவதும் உண்டு. மிகக் குறைந்த பொருட்செலவில் முற்றிலும் புதியவர்களை வைத்து எடுக்கப்பட்ட பல திரைப்படங்கள் பெரும் வெற்றியடைவதும் நாம் காணக்கூடியதாகத்தான் இருக்கிறது. இதற்குக் காரணம் என்னவெனில், நல்ல திரைப்படத்திற்கு பரிச்சயமான நடிகர், நடிகைகளை விட சிறப்பான கதைகள், நல்ல இசை, பாடல் மற்றும் டைரக்டரும் இன்னபிற விஷயங்களேயாகும்.

மக்களாகிய நாம் ஒரு திரைப்படத்தில் நடிகரின் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்காமல், கதையை, நடிப்பைதான் பார்க்க வேண்டும். ஒரு நடிகனின் சாதாரண நடிப்பை பிரமாண்டமாக்குவதற்கு ‘ஏகப்பட்ட மனிதர்கள் இரத்த வியர்வை’ சிந்தும் நிலை இருக்கிறது. சரியான

'முகவரி, அங்கீகாரம், வருமானம் இல்லாவிட்டாலும்' கடுமையாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டிய தொழில் நுட்ப கலைஞர்கள், தொழிலாளர்கள் இரவுபகலாக செயல்படுகிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

**தன் மனிதமே முக்கியமானது**

ஆகவே, மற்ற தொழில் செய்பவர்களைப் போலவே நடிகர் நடிகைகளையும் கருதும் அறிவுடைமை வரவேண்டும். அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் ஆர்வம் காட்டுவது, அவர்களைப் பற்றிய கிசுகிசுக்களைத் தெரிந்து கொள்வதில் மிகுந்த ஈடுபாடு கொள்வதும் அறிவுடைமையாகாது. அவர்களையும், அவர்களுடைய போட்டோ படங்களையும் கூட ஒருவித 'பிரம்மையுடன் நோக்குவது' போன்ற மூடத்தனங்கள் அகல வேண்டும். எந்த ஒரு தனிமனிதனுக்கும் முதலில் அந்த 'தனிமனிதனே முக்கியமானவன்' என்பதை உணர வேண்டும்.

திரைப்படங்கள் சமூகத்தில் நியாயமான நல்ல மாற்றங்களுக்காகப் பயன்படவேண்டுமே தவிர, தீமைத் தரும் சமுதாயக்கேடு செய்யும் செயல்களில் இறங்கக் கூடாது.

**தீய பாத்திரங்களின் முதன்மைத்தனமும், சமூகப் பாதிப்புகளும்**

இன்றைக்கு பல படங்களில் கதாநாயக பாத்திரங்களில் 'ரவுடிகள், அடியாட்கள், தீயவர்கள், கேடிகளை முதன்மையாக்கி' சமுதாயத்தவறுகளுக்கு வழிகாட்டப்பட்டு வருகிறது. அவர்களின் 'டூப்ளிகேட் சாகசங்களை' இளம்பெண்கள் ரசித்து அப்படிப்பட்டவர்களைக் காதலராக்கும் சமூக கொடுமைகள் சமுதாயத்திலும்

பரவிவிட்டது. அந்த பேராபத்தை, முக்கியமாக பெண்ணின் பெற்றோருக்கு அளித்து, தங்களது பெண் எப்போது எந்த கேடிப்பயலோடு ஓடிவிடுவாளோ? என பெற்றோர்களும், சகோதர சகோதரிகளும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு வாழ்கிறார்கள். அதனால் 'பெண்பிள்ளைகளை கண்டாலே வெறுக்கும்' பெற்றோரைக்கூட உண்டு பண்ணும் திரைக்காவியங்கள்! நடந்தேறுவது மிகுந்த வருத்தமளிக்கும் செயலாகும்.

அதேபோல் யாரும் சினிமாவை, சினிமாக் கலைஞர்களை வாழ்க்கையின் எடுத்துக்காட்டு மாதிரிகளாக நினைத்துக் கொள்ளாதீர்கள். இன்றைய வேலை, மனச்சுமைக்கு வடிகாலாகத் தேவைப்படும் ஒரு பொழுதுபோக்கு அம்சமாக மட்டுமே, திரைப்படங்களைக் கருதும் கட்டாயம் ஏற்பட்டு, அடிக்கடி திரைப்படங்கள் பார்க்கும் பழக்கத்தைக் கூட ஏற்படுத்தலாம்; அதுவும் நல்லதே! கவலையை மறக்க, சிரித்து மகிழ, பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள திரைப்படங்கள் பார்ப்பது அவசியமாகிறது. எண்ணற்ற கலைஞர்களின் கடின உழைப்பில் ஒருசில புத்தகங்களின் வலிமைக்கு இணையாக ஒரு நல்ல திரைப்படம் தயாரிக்கப்படுகிறது என்றால் அது ஒரு ரகசிய உண்மையே! ஆகவே திரைப்படங்கள் நல்ல கதை, இசை, இயக்குதல் போன்றவைகளுக்காக போற்றப்பட வேண்டுமேயன்றி, 'மேக்கப் மாயையினால்' அழகாகத் தோன்றும் நடிகர் நடிகைகளுக்காக என்று மட்டும் வருங்காலத்தில் போற்றப்படக் கூடாது!

# சினிமாக்காரர்கள்

## பலரது வாய்ப்புகள் பறிபோகின்றன

பல நாடுகளில் சினிமாக்களின் ஆதிக்கம் எல்லைகளுக்கு அப்பாற்பட்டு நிற்கிறது. சினிமாக்காரர்களுக்கு அரசியல்வாதிகள் மற்றும் ஆளும் அரசியலார்களுடன் நெருங்கியத் தொடர்பு இருப்பதால் ஒருவருக்கொருவர் உதவிக்கொண்டு எதையும் சாதித்துக் கொள்கிறார்கள். சில சினிமா கதாநாயகர்கள், கதாநாயகிகள் மற்றும் வேறு முக்கியப்பிரிவினர்கள் நாட்டு ஆட்சியைப்பிடிக்கும் ஆசையுடன் அரசியல் முக்கியஸ்தர்களாகுவதற்காக களமிறங்கிச் செயல்படுகிறார்கள். இதற்கு முன் ஆண்ட, ஆண்டுவருகின்ற இவ்வகையினரைக்கண்டு தாங்களும் அவ்வண்ணமே ஆகிவிட விழைகிறார்கள். இதில் பெரும் தவறு ஏதும் இல்லாவிடினும், பல ஆண்டுகாலமாக அரசியல் செய்துவருபவர்கள் பலருக்கு இவர்களின் திடீர் வரவுகளால் வாய்ப்பு பறிபோகிறது. இதனால் அறிஞர்கள், சான்றோர்கள், சமூக சேவகர்கள் போன்றோரை அரசியலுக்கு முக்கிய நிலைகளுக்கு கொண்டுவரும் முயற்சிகள் தடைபடுகின்றன.

## இன்னமும் அறியாமையிலுள்ள மக்கள்

சினிமா நாயக, நாயகிகளை தங்களின் வாழ்க்கை முன்னோடிகளாகக் கருதுகிற அறியா மக்கள் கொண்ட பூமிப்பகுதியில் நாம் வாழவேண்டியிருப்பது காலத்தின்கொடுமை. தந்திரத்தில், தொழில்நுட்பத்தில் எடுக்கப்படும் சினிமாக்காட்சிகளை முழுவதுமாக உண்மையென நம்புகின்ற ஏமாளி மக்கள் அதிகமாக இறைந்துகிடக்கிறார்கள். இவர்களின் தெய்வங்களையே

சினிமாக்களில் பார்த்து அங்கு காண்பிக்கப்படும் முரண்பாடுடனான அவர்களின் தோற்றம், செயல்பாடுகளை உண்மையென நம்பி மனதிற்குள் நிறுத்திக்கொள்கிறார்கள். கடவுள்களையே சினிமாக்களின் மூலம் அறிந்துகொள்ளும், ஏற்றுக்கொள்ளும் ஆரோக்கியமற்ற நிலைகள் நீங்கவேண்டும்.

இக்காலங்களில் வில்லத்தனமுள்ள கரடுமுரடான கதாநாயகர்களை, கதாநாயகிகள் விரும்பும்படியான திரைப்படங்கள் வந்து, இங்குள்ள நிஜப்பெண்களும் அவ்வாறு வாழவேண்டுமாறு சினிமாக்காரர்கள் வழிகாட்டுகிறார்கள். நடிகர்கள், அரசியல் தலைவர்களின் சிக்கலான நேரங்களில் அவர்களுடைய **மனித உறுப்பினர்கள்** அவ்வப்போது தீப்பற்றி எரிந்து சாம்பலாகிறார்கள். அதன்மூலம் தங்கள் விசுவாசிப்பை வெளிப்படுத்த எத்தனித்துத் தொலைகிறார்கள், இந்தக் கேவலங்கள் நீங்குமா…

## சினிமா எடுக்கத் தெரியாதவர்கள்

மேற்கத்திய, ஆசிய மற்றும் இந்திய கலாச்சாரங்களை உள்ளடக்கிய சினிமாக்களுக்கான பல வித்தியாசமான புதிய கதைகருக்களை இவனும் கொண்டிருக்கிறான் என்பதாலும், நல்ல சினிமாக்களின் நல்ல ரசிகன் என்பதாலும் இவ்வினத்தில் சில பிரிவுகளைப்பற்றிய விமர்சனங்களைத் தருவதற்கு இந்நூலாசிரியர் உரிமை எடுத்துக்கொள்கிறார். நல்ல இயக்குநர்கள், சிறந்த கதாநாயக நடிகர், நடிகைகளின் திரைப்படங்களை அவ்வப்போது பார்ப்பது இவரின் பொழுதுபோக்கு. அவற்றோடுகூட சத்தியஜித்ரே செய்ததுபோல் ஒரு திரைப்படம் எப்படி இருக்கக்கூடாது என்பதை தெரிந்துகொள்வதற்காக சில திரைப்படங்களையும், வெளியூர்களுக்கு பயணித்திருக்கும்போது கிடைக்கும் இடைப்பட்ட ஓய்வு நேரத்தில் பார்ப்பது உண்டு.

நம்முடைய திரைப்படத்துறையினருள் மிகச்சிலரைத் தவிர ஏனைய பெரும்பாலானவர்களுக்கு '**பர்பெக்ஷன்**' என்ற வார்த்தைக்கு அர்த்தமே தெரிவதில்லை. சிலபல கனவுகள், ஆசைகளோடு கால்பணமோ, முக்கால்பணமோ எடுத்துக்கொண்டு பல ஊர்களில் இருந்து பணக்காரர்கள் பலர் சினிமா தயாரிக்கக் கிளம்பி வந்துவிடுகின்றனர். இதைப்பயன்படுத்திக்கொள்ளும் அரை வேக்காட்டுக் கூட்டம் ஏனோதானோவென்று அவசரஅவசரமாக பல சினிமாக்களை எடுத்துத்தள்ளுகிறது.

## திரும்ப திரும்ப அதே கதைகள்...

கதை என்பது பெருபாலும் ஒரே **கதைவிடுதல்தான்**. அநேக படங்களில் கதாநாயகி தன் நிலையைவிட மிகக்கீழ்நிலையில் உள்ள ஒருவனைக் காதலிப்பாள். பெற்றோரும் சகோதரர்களும் அதை எதிர்க்கவே, அவர்களை அவளும், காதலனும் விரோதியாகக் கருதுவார்கள். ஏழைக் கதாநாயகன் துன்புறுத்தப்படுவான். இறுதியில் இருவரும் ஒன்று சேர்ந்துவிடுவார்கள் அல்லது இருவரில் ஒருவரோ அல்லது இருவருமோ சாகடிக்கப்படுவார்கள். இந்தவகை கதை இல்லையெனில் பழிவாங்கும் கதை விடுவார்கள். இதன் இடைபாடுகளில் சிலபல சித்து வேலைகள், கர்ணகொடூர இசைகள், சம்மந்த சம்மந்தமில்லா தையதக்கா ஆடல்கள், டமார் டுமீல் துப்பாக்கி சப்தங்கள், சற்றும் நம்பமுடியாத சண்டைகள் என ஒரே கொண்டாட்டம்தான் போங்கள். பொதுமக்களை, குறிப்பாக அறியா விடலைப்பருவத்திலிருக்கும் பள்ளி கல்லூரி மாணவர்களை குறிவைத்து திரும்பத் திரும்ப இவற்றையே கொடுத்து, மேற்கொண்டு எதற்கும் காரணத்தைச் சிந்திக்கவிடாமல் இதையே சரியென எண்ணவைத்து அவர்களிடம் தொடர்ந்து திணிக்கப்பட்டு பாழடிக்கப்படுகிறார்கள்!

## மிக அதிக அளவில் தேவையற்றக் காட்சிகள்

இந்த மக்களை இன்னமும் வெளியே கொண்டுவர அல்லது வெளிவரவிட இந்தத் திரைப்படத்துறையின் முக்கிய கர்த்தாக்கள் விரும்பவில்லைபோலும்! இறுதிவரை எங்களை முட்டாள்களாகவே வைத்திருக்கவேண்டுமென நினைத்துவிட்டார்களோ என்னவோ! ஒரு யதார்த்தம், நியாயம், உண்மை, நம்பகத்தன்மை, இசையின் உன்னதம், மனிதாபிமானம், இயற்கைதன்மை போன்ற எதையும் முன்னிறுத்துவதில்லை. மாறாக அயோக்கியத்தனம், ரவுடியிசம், ஏமாற்று சண்டை காட்சிகள், யாருக்குமே வந்திடமுடியாத பொய், கனவுக் காட்சிப்பாடல்கள், இஞ்ச் இஞ்சாக உடலசைத்து எடுக்கப்பட்ட நடனங்கள் என எல்லாமே முரண்பாடுகள்.

ஒருவிடயம் உண்மையிலேயே புரியவில்லை, எதற்காக எல்லா காதாநாயக நாயகிகளும் நடனம் என்ற பெயரில் என்னென்னவோ மாதிரி குலுக்கல் ஆட்டம்போடவேண்டும்? யாரோ பாடுகிற பாடல்களுக்கு பொய்யாக வாயசைக்க வேண்டும்? ஒரு படத்திற்கு குறைந்தபட்சம் இத்தனைப்பாடல்கள் அவசியமென கணக்குவைத்துக்கொண்டு திரைப்படங்களின் கதைகளையே கொலை செய்துகொண்டிருக்கிறார்கள்.

சமீபத்தில் ஒரு திரைப்படம் வந்தது, கதை நன்றாக இருந்தது. நாயகன் நாயகி நடிப்பில் போட்டிபோட்டுக்கொண்டு ரசிக்க வைத்திருந்தனர். ஆனால் இடையிடையே வந்த ஒருசில பாடல்கள் அந்தப்படத்தின் உண்மையான கதை வீரியத்தை குறைத்துவிட்டதை ஏன் உணரவில்லை? தேவையில்லாதப் பாடல்கள் குறைக்கப்பட்டு நல்ல நடிப்புப்பகுதி கூடியிருந்தால் இப்படியானத் திரைப்படங்கள் உலகத்தரத்திற்கு, உலகபோட்டிகளுக்கு கருதிப்பார்க்க ஏதுவாகும்.

## தேவையற்ற இசை கூடுதல்கள்

சில திரைப்படங்களின் பாடல்காட்சிகளில் இதுதான் சமயம் என பலரும் எழுந்து தியேட்டர்களின் கழிவறைக்குப் போய்வருகின்றனர். மின்னணு இசைக்கருவிகளைக் வைத்துக்கொண்டு தமிழ் மொழிக்கென உரிய லாவகத்திற்குப் பொருந்தாமல் பொத்தான்களைத் தட்டிவிட்டு இசையென்ற பெயரில் முரட்டுத்தனமாக நடந்து கொள்கின்றனர். மிகச் சிலப்பாடல்களைத்தவிர வேகமான முரட்டுஇசையுடன் கூடிய பல பாடல்கள் நெடுநாட்களுக்கு தமிழில் ஜொலிப்பதில்லை. அப்படியே இருந்தாலும் ஒன்றிரண்டு மாதங்களுக்குதான் நிலைத்திருக்கும்.

இசையின் அருமையானத் தொகுப்பினால் சாகாவரம்கொண்ட அற்புதமானப் பாடல்கள் சற்று முன்காலப்பகுதிவரை அவ்வப்போது மனதை வருடித்தரும் வகையில் வந்தன. சமீபகாலங்களில் அப்படியானப் பாடல்களின் வரத்து குறைந்துகொண்டே வருகிறது. இம்மாதிரியானப் பாடல்கள் நிதானமான, நேர்த்தியான, அமைதியான, அற்புதமான இசைகளின் தொகுப்பினால், கவிதை வரிகளால்தான் பிறக்கின்றன. ஒருசில குப்பைப் படங்களை அவற்றின் துள்ளலானப் பாடல்கள் தூக்கிவிட்டிருக்கலாம், ஆனால் அதுவே கொள்கையாகி விடாது, தொழிலாகக் கொள்ளமுடியாது.

தேவையில்லாமல் பாடல்கள், ஆட்டங்களை சேர்க்க வேண்டாம் எனக்கேட்டுக்கொள்ளப்படுகிறது. கதை, இயக்கம், நடிப்பு ஆகியவை நன்றாக இருந்துவிட்டால் அனாவசியப்பாடல்கள், ஆட்டங்கள் தேவைப்படாது. ஒரு திரைப்படத்திற்கு இரண்டு மூன்று பாடல்கள் என்ற ஒருஅளவில் நிறுத்திக்கொள்வது மேன்மை. கதையில் சத்து இல்லாதவர்கள் இம்மாதிரிக் கோணங்கித்தனமாக இவற்றை அதிகப்படுத்துவார்கள். கதை நான்றாக இருந்தும் திரைப்படம் செய்யத்தெரியாமல் கோட்டைவிடுபவர்களும் இருக்கிறார்கள்.

## சினிமா பார்த்தால் அறிவு வளர வேண்டும்

இன்றைய மனிதர்களில் பெரும்பான்மையினர் ஒரு ஐம்பது ஆண்டுகளுக்கு முந்தையவர்கள் அல்லர். நாளைய மனிதர்களாகவும் இல்லை. எனவே காலத்திற்கு, அறிவு மேம்பாட்டிற்குத் தகுந்தாற்போல் திரைப்படங்கள் எடுப்பது சாலச்சிறந்தது. இன்னும் லட்சோப லட்சம் கதைகள் இப்பூமியில் நிறைந்திருக்கின்றன. அவற்றைத் தேடி எடுத்து திரைப்படம் செய்யுங்கள், செல்வம் சேர்ப்பதோடு, சேவையும் செய்யவேண்டும். இத்துறையைவிட, எதையும் வேகமாக விவேகமாகச் செய்வதற்கு வேறுத்துறைகள் இல்லை. எனவே வாய்ப்பினைப் பயன்படுத்த மன்றாடுகிறோம். வாழும் சிறிதுகாலத்தில் பணம் சேர்ப்பதோடு கொஞ்சம் நல்லகாரியங்களையும் செய்யலாமே.

## உழைப்பை வீணாக்காதீர்

எவ்வளவு பெரும் பொருட்செலவில் எத்தனைபேர் கஷ்டப்பட்டு, எத்தனை நாட்கள் உழைத்து, ஒரு திரைப்படம் தயாரிக்கிறீர்கள். அது பயனுடையதாக இருக்கவேண்டாமா? சினிமா எனும் மோகினி மோகத்தில், அரைகுறை அறிவுகொண்டப் பெருங்கூட்டம் அலைந்துகொண்டிருக்கிறது. இதில் உருப்படிகள் என்பது கொஞ்சம்தான்; மற்றவர்கள், பணத்தை, நேரத்தை வீணாக்காமல் மரியாதையாக ஒதுங்கிக்கொள்ளவேண்டும். எங்களுக்கு உலகத்தரம் வாய்ந்த திரைப்படங்கள் வேண்டும். நாம் மற்ற நாட்டு திரைப்படங்களைப் பார்த்து வாய்பிளந்து வியக்கும் காலங்கள் இனிவேண்டாம்; நம் திரைப்படங்களை உலக மக்கள் புகழும் நிலை வரவேண்டும்!

# மது

இது மானிட சாம்ராஜ்யத்திற்கு மயக்கம், கலக்கம், நடுக்கம் கொடுத்து சிறிது நேரத்திற்கு மாயைகளைப் பரிசளித்து பொய்களைத் தற்காலிக நிஜங்களாக்குகிறது. போதைக் கனவுகளை நினைவுகளாக அனுபவிக்கும் ஒரு வகை அதிசயமாக தொன்றுதொட்டு நீண்ட காலமாக மனிதர்களின் மறுபக்க நிழலாக அவர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கிறது இந்த மது என்னும் மாய, சாய, சாயமில்லாத திரவம்.

போதை என்பது மதிமயக்கும், சுய நினைவை, தன்னிலையைக் குறைக்கும், அழிக்கும் செயல்களைத் தந்து மனித சமுதாயத்திற்குத் தீங்கு செய்து கொண்டிருக்கிறது. அம்மாதிரி 'பேருதவி' செய்யும் தன்மைகளுடைய பல பொருட்கள் இயற்கையாக, செயற்கையாகத் தயாரிக்கப்பட்டு எப்போதும் எங்கேயும் பெற முடிகிற வாய்ப்புகளோடு சமூகத்தில் உலாவிக் கொண்டு இருக்கின்றன.

பத்தாண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் அரசல்புரசலாக இருந்த மதுப்பழக்கம் இன்று சர்வசாதாரண வாழ்க்கை அத்தியாவசியங்களுள் ஒன்றாகிவிட்டது. பூமத்திய ரேகைக்கு அருகில் அமைந்து வருடத்தின் மூன்றில் இரண்டு பகுதிகால அளவிற்கு அதிக வெப்பத்தை கொண்டிருக்கும் இந்நாட்டின் குடிமக்களுக்கு நிச்சயமாக தினசரி மது போதை என்பது தேவையில்லை என நாம் கூறலாம். இருப்பினும்

ஆண் குடிமக்களில் பெருந்தொகையினர் மதுவுக்கு அடிமையாகிக்கொண்டிருப்பதோடு ஒவ்வொரு நொடியிலும் இதன் கூட்டுத்தொகை கூடிக்கொண்டிருக்கிறது; பெண் குடிமக்களும் இப்போது போட்டிக்கு வந்துவிட்டனர்.

## அரசுகளின் முக்கியப்பங்கு

மனிதர்களை மது அடிமைகளாக்குவதில், அரசுகளே முன்னின்று முதன்மை வகிக்கின்றன. இதற்கான காரணங்களை ஆராய்ந்துப் பார்க்கையில், ஒவ்வொரு ஆட்சியாளரிடமும் வெவ்வேறு விதமான, குழப்பமான உள், வெளி குறிக்கோள்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஒருநாளைக்கு ஒரு நூறு ரூபாய் மட்டும் சம்பாதிக்கும் கூலித்தொழிலாளி ஒருவர் தினசரி சுமார் எழுபத்தைந்து ரூபாய் வரை இதற்காகச் செலவு செய்கிறார். இதனால் அவருடைய குடும்பம் அன்றாடம் சாப்பாட்டிற்கு அல்லாடி, குழந்தைகள் ஓரிரு கிழிந்த ஆடைகளுடன் வாழவேண்டியிருக்கிறது. இந்த கொடுமைகளுக் கெல்லாம் மாறிமாறி ஆட்சி செய்த அரசுகளே முக்கிய காரணம் எனலாம்.

இனிமேல் இப்பிரச்சினைக்கு எந்த தீர்வும் கண்டுவிட இயலாமல் போய்க்கொண்டிருக்கிறது. இன்னும் சில ஆண்டுகளில் அநேகமாக பெண்கள் முதற்கொண்டு அனைவரும், வெள்ளைக்கார ... காரிகள் போல், போதை வஸ்துக்களை குளிர்பானங்கள் அருந்துவது மாதிரி குடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தனிமனிதர்கள் சுயமாக உணர்ந்து திருந்தினாலன்றி, இதிலிருந்து தப்பிக்க வாய்ப்பில்லை. மனிதர்கள் சுயநிலையிலிருந்தால் சிந்தித்துவிடுவார்கள், அறிவுப்பூர்வமாக செயல்படுவார்கள்! என்பதாலோ என்னவோ, பட்டிதொட்டி முதல்

பட்டணம் வரை மிகப்பரவலாக எங்கேயும் மதுக்கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

வேண்டாம் வீண்செலவு, உடல் – மனம், குடும்பத்திற்குக் கேடு என நினைப்பவர்களைக்கூட, நொடியில் தன் பக்கம் மாற்றுகிற வகையில் திரும்பிய பக்கமெல்லாம் மதுக்கடைகள்! இப்படிப்பட்டவர்களே மாறும்நிலை நிலவுகிறபோது, சபலப்புத்தி உள்ளவர்களைப் பற்றி கேட்கவே வேண்டியதில்லை. இதையும் தாண்டி, மகா, மெகா குடிமகன்கள், தினசரி பல அளவுக்குடிகாரர்கள் போன்ற பலரகத்தினரும் உள்ளனர்.

தமிழ் மொழியில் மது, மாது, சூது என்று ‘து’ எழுத்து முடிவைக் கொண்ட முச்சொற்களும் அழிவுக்கான ஆதாரங்களாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு கருதப்பட்டு இம்மூன்றிலும் முதன்மையாக மது என்னும் சூழ்ச்சியைத் தந்து அதன் எதிர்விளைவின் பாதிப்பை முன்னிலைப் படுத்தியுள்ளார்கள் பண்டைத் தமிழர்கள்

## மதுவுக்கு இயற்கையின் பங்களிப்பு

போதைப்பொருள்களான கஞ்சா, அபின் போன்ற தாவரத்திலிருந்து கிடைக்கும் பொருட்களை இயற்கை எதற்காக உலகுக்கு வழங்கியிருக்க முடியும்? அதை யோசிக்கும்போது மதி மயங்கும் நிலையும் அவ்வப்போது மனிதனுக்கு மனித வாழ்விற்கு அவசியமோ? எனப் புரிந்தும் புரியாததும் மாதிரியான நிலை ஏற்படுகிறது.

எல்லா உணவுப்பொருட்கள், அதன் குணங்கள் மற்றும் நன்மை தீமைகளைப் பண்டைய மக்கள் கண்டுபிடித்து, உருவாக்கி, ஆராய்ந்து அறிந்து வைத்திருந்தார்கள். அதைப்போலவே மதி மயக்கும் பொருள்களையும்,

பொருள்களுக்காகவும் தேடித்தேடி அலைந்திருக்க வேண்டும் எனத்தான் தோன்றுகிறது. எந்தப் பொருளுமே அதுவாக மனிதனிடத்தில் நான் இதோ இங்கே இருக்கிறேன், இப்படிப்பட்ட குணம், தன்மை என்னிடம் இருக்கிறது, உபயோகித்துக் கொள் என்று சொல்லியிருக்கவில்லை என்பதை நாம் உணர முடிந்ததுதான்.

அவ்வாறான நிலைமைகளில் மனிதர்கள் இதற்காகவும் பல காலங்களில் தேடுதல், ஆராய்தல் வேட்டை நடத்தித்தான் கள், சாராயம், கஞ்சா, அபின், புகையிலை, கத்தைக் காம்பு போன்றவற்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். மேலும், பலவிதப் பெயர்களைக் கொண்டு அன்னிய மது வகைகள் என்ற பெயரில் இங்கேயே உண்மையாகவும், போலியாகவும் தயாரிக்கப்படுகிற சிலபல நிறங்களில் வந்தாலும் அதிகமாக அரக்குக் கலரில் விற்கப்படும் மதுபான வகைகள், கொடும் போதைகளான பிரவுன் சுகர், பெத்தடின், போதை மாத்திரை வகைகள், இவைகளின் எண்ணற்ற கிளைகள் என ஏகப்பட்ட வேறுவகைக் கண்டுபிடிப்புகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

### மது கட்டாயமில்லை

இவையெல்லாம் மனிதன் வாழ்வதற்கு மிகவும் இன்றியமையாத ஒன்றா எனில் நிச்சயமாக உறுதியாக இல்லை என பதில் தரமுடியும். இதற்கு ஆதாரமாக உலகில் இன்றும் என்றும் பெரும்பாலான மக்கள் அவர்களுடைய மொத்த வாழ்க்கையில் ஒருவேளை ஒருதுளி போதைப் பொருள் எடுத்துக் கொள்ளாமல் அற்புதமாக வாழ்ந்தும், வாழ்ந்து கொண்டும் வருகிறார்கள் என்பது நாமனைவரும் அறிந்ததே. குறிப்பாக உலகத்தில் சில குளிர்

நாடுகளைத்தவிர மற்ற நாடுகளில் பெரும்பாலானப் பெண்கள் போதை உட்கொள்வதாகத் தெரியவில்லை.

ஆயினும் உலகத்தின் எல்லா நாடுகளிலும் மனிதர்கள் இந்த போதைப் பொருட்களுக்கு உடன்பட்டு, அடிமைப்பட்டு, அவரவர்களுக்கு ஏற்ற அளவில், வகையில், இடைவெளியில், சூழ்நிலைக் கட்டாயத்திலும்கூட போதைப் பொருட்களை குடித்து, தின்று, விழுங்கி, சப்பி, நக்கி, புகையிழுத்து, அடக்கி, ஊசி மூலம் செலுத்தி திட, திரவ, வாயு என்னும் மூன்று நிலைகளின் மூலமாக உட்கொண்டு வருகிறார்கள்.

**போதை அடிமைகள்**

போதைப் பொருட்களினால் ஏற்படுகிறத் தீமைகளை ஒவ்வொரு மனிதனும் தெரிந்திருந்தாலும், சிலர் அதற்கு அடிமையாகி மீள முடியாமல் தத்தளித்துக் கொண்டிருப்பதைப் பரவலாக எங்கேயும் காண முடிகிறது.

அரசு மற்றும் சமூக சேவைத் தன்னார்வ நிறுவனங்கள் போதை அடிமைகளை மீட்பதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்டு செயல்பட்டு வந்தாலும் இதற்கு அடிமையாகிறவர்கள் எண்ணிக்கை நாள்தோறும் ஏறுமுகத்திலேதான் உள்ளது.

**காசைக்கொடுத்து கஷ்டம் – நஷ்டம் வாங்குதல்**

'குடி குடியைக் கெடுக்கும், குடிப்பழக்கம் குடும்பத்தைக் கெடுக்கும் எனவும், குடிப்பழக்கம் வீட்டிற்கும் நாட்டிற்கும் கேடு என்றும், குடிப்பழக்கம் உடல் நலத்திற்குக் கேடு எனவும் மதுப்பாட்டில்கள் உட்பட எல்லா இடங்களிலும்

எழுதப்பட்டிருந்தும் கூட நமது அசாத்திய 'குடி' மக்ககளுக்கு அது விளங்குவதாகத் தெரியவில்லை. அந்த வாசகங்களைப் பார்த்துக் கொண்டு, படித்துக் கொண்டு சில சமயங்களில் தங்களுக்குள் கிண்டலடித்து எள்ளி நகையாடி விமர்சனம் செய்துவிட்டு ஊற்றிக்கொள்ளும் உத்தமர்கள் கோடி இங்குண்டு. என்ன செய்வது, காசையும் கொடுத்து கஷ்டத்தையும் விலைக்கு வாங்குபவர்களை அவ்வளவு எளிதில் திருத்திவிட முடியுமா?

உண்மையில் மதுவின் விலைக்கும் அதன் உற்பத்திச் செலவிற்குமுள்ள இடைவெளி மிக அதிகமாகும். அநேகமாக உற்பத்திச் செலவு பத்து முதல் இருபது சதவீதத்திற்குள்ளாகவே இருக்கிறபடியால், மிகப்பெரும் லாபத்தை, உற்பத்தியாளர்கள், பெரிய, சிறிய வியாபாரிகள் எனப் பங்குபோட்டுக் கொள்கிறார்கள். இதில் போலி மதுவும் வேறு உண்டு.

மது, போதைப் பொருட்களின் தீமைகளைப் பற்றி எல்லோரும் எல்லாக் காலத்திலும் கூறிக்கொண்டும், கூறப்போகிறதுமாக இருக்கிறபடியால் நாம் அந்த சமாச்சாரத்தைச் சற்று நேரத்திற்கு நிறுத்திக் கொள்வோம். மதுவில் ஏதேனும் நன்மைகள் உண்மையில் இருக்கிறதா என்பதையும் அதைப் பலரும், சில மருத்துவ நிபுணர்களும் சரி என்று சொல்வதும் சரியா என்பதைப் பார்ப்போம்.

## முற்காலத்திலேயே இருபாலரிடமும் மதுபழக்கம்

பண்டைய காலத்தில் ஆண், பெண் இருபாலரிடம் அவ்வப்போது கள், மது உண்ணும் பழக்கமிருந்து வந்ததாக அறிய முடிகிறது. சில ஆண்டுகளுக்கு முன் தூர்தர்ஷன் தொலைக்காட்சியில் 'ஆந்த்ரபாலி' என்னும் சரித்திரத்

தொடரில் அரசு நர்த்தகியைத் தேர்வு செய்யும் பலம் ஒன்று வந்தது. அத்தேடல் படலவிழா நடந்தது. அப்போது பக்கத்து கிராமத்திலிருந்து தோழர், தோழியுடன் அதை வேடிக்கை பார்க்க வந்த அழகிய இளம்பெண்ணொருத்தி அந்நகரில் இருந்த அக்காலத்திய மதுக்கடையில் நண்பர்களுடன் முதல்முறையாக மது அருந்துகிறாள். அம்மது போதையினால் போட்ட அட்டகாசமான ஆட்டத்தின் விளைவாக அந்தப் பெண்ணும், மற்றவர்களும் சற்றும் எதிர்பார்க்காத சூழ்நிலையில் அப்பெண்ணின் எதிர்ப்பையும், உடன்பாட்டையும் மீறி அரசு நர்த்தகியாக ஆக்கப்பட்டாள். பின்னர் அச்சரித்திரக் கதையின் சம்பவங்கள் பல கோணங்களில் சென்றது.

## மதுவின் பலதரப்பட்ட இருப்பிடங்கள்

அதேபோல் இந்துமத வழிபாட்டு முறையில், சில இடங்களில் கடவுளர்க்கு, மதுவைப் படையலில் சேர்த்திருப்பது மதுவுக்குச் சிறிது நியாயம் இருப்பதுபோல் செய்யப்பட்டுள்ளது.

ஆங்கில ஊக்கமருந்துகளான ' டானிக்' மற்றும் சில மருந்துகளில் திரவ மதுவின் அடிப்படையான 'ஆல்கஹால் என்னும் சாராயம் சிறிய சதவீத அளவுகளில் சேர்க்கப்படுகின்றது என்பதையும் நாம் உற்றுநோக்க வேண்டியுள்ளது.

மேலும் சில மருத்துவர்கள், நிபுணர்கள், அனுபவஸ்தர்கள் திரவமதுவை மிகக் குறைந்த அளவில் நல்ல இடைவெளி, காலம் விட்டு அருந்துவது பல பயன்களைத் தரும் என்று முன்பு சொல்லியிருந்ததும்

உண்டு. அவ்வப்போதும் சொல்வதுண்டு. ஒருவேளை இக்கூற்று உண்மையாகக் கூட இருக்கலாம்.

மதுவை, நல்ல இடைவெளி நாட்கள் விட்டு, மிககுறைந்த அளவில் போதிய உணவுப் பொருட்களின் ஆதரவுடன் அருந்துபவர்களுக்கு உடல், மன வலிகள் போக்கப்பட்டு சற்று மகிழ்ச்சி தருவதாகத்தான் தெரிகிறது.

### மதுவின் செல்வாக்கு

மேலும் மதுவினுடைய முக்கியமான செயல்பாடு ஒன்றை இங்கே குறிப்பிட்டேயாக வேண்டும். பல மனிதர்களின் நடைமுறை வாழ்க்கைமுறையில் சாதாரண, நிதான சூழ்நிலையில் பேச முடியாத பேச்சுக்கள், வாதங்கள், விவாதங்கள் போன்றவற்றை மதுபோதையில் அதன் தாக்கத்தில், வீரியத்தில் செய்யப்படுகின்றன. தீர்க்க முடியாத, சிக்கலான, குழப்பமான விஷயங்களில்கூட தீர்வுகள், உடன்பாடுகள், முடிவுகள் ஏற்படுத்தும் சாமார்த்தியங்கள் இந்த மதுப் போதைக்கு உண்டு.

எல்லா நிலைகளிலும் ஏழை, பணக்காரன், கிராமம், நகரம், சிறியது முதல் பெரியது வரையிலான வியாபாரம், ஒப்பந்தம் இன்னும் பலவும் இம்மதுவின் வீரியத்தால் நடந்தேறிக்கொண்டு இருக்கின்றன என்பதை எவரும் மறுக்க இயலாது. எனவேதான் சிலரது உறவு மற்றும் நட்புகளுக்கு மது முக்கியப் பங்குவகித்து அவர்களுக்கிடையில் ஒருவிதப் புரிந்துகொள்ளுதலை நிகழ்த்தி, உண்டாக்கி இணைப்புச் செய்யும் பாலமாகச் செயல்பட்டு வருகிறது.

அதற்கு எதிர்மாறாகத் தீய செயல்கள் ஒட்டு மொத்தமும் மது மற்றும் போதைகளின் வலிமையில்,

ஆதரவில் நடந்து கொண்டிருக்கின்றன என்பது மிகப்பெரிய அப்பட்டமான உண்மையாகும்.

மதுவை உட்கொண்டவர்களுக்கு வெட்கம், பயம், கூச்சம் போய் அச்சூழ்நிலைகளுக்குத் தேவைப்படும் தற்காலிகத் தைரியம், நம்பிக்கை, உறுதி, சுறுசுறுப்பு உண்டாகி நன்மைகளும், தீமைகளும் தனித்தனியாகவும் சேர்ந்தும் உலகம் முழுவதும் நடந்து கொண்டிருக்கின்றன.

**மதுவின் தீய பக்கவிளைவுகள்**

அதிகமான மதுபோதையில் வெட்டிப் பேச்சுகள், வீண் தகராறுகள், அடிதடிகள், தெருவில், சாலைகளில் மற்றும் குப்பை, சாக்கடைகளில் புரளுதல், வாந்தி எடுத்துக்கொண்டு அங்கேயே அசிங்கமாகக் கிடந்தும் நாறுதல், சிறு வாய்ப்பேச்சு முற்றி கொலை வரை வளர்ந்து போகுதல் என இதன் கொடிய, கொடூர செயல்பாடுகளை அடுக்கிக் கொண்டே போகலாம். மேலும் குற்றங்களுக்கு உதவுதல், அதிக வீண் செலவு செய்து கடனாளியாகுதல், உடல் வீரியம் குறைந்து ஆண்மைக் குறைதல், குடும்ப உறவுகள் மற்ற நட்புகளுக்குள் சண்டையும் விரோதமும் உண்டாகுதல், பெண்மையைக் கண்டு பயந்து, எரிச்சலடைவது போன்ற 'தர்மங்களும்' வந்து சேரும்.

சிலர் போதிய வசதி இருப்பதால் தொடர்ந்து இம்மதுவைக் குடித்து வருகிறார்கள், சிலர் அதிகமாகத் தேவைப்படும் இம்மதுவுக்காக எப்படியும் பணம் வேண்டிய நிலையில் பொய், பித்தலாட்டம், ஏமாற்று மிகுந்து விபச்சாரம், தீய தொழில்கள், சூதாட்டம் போன்றவற்றில் ஈடுபடுவார்கள். எந்தத் தீய தொழிலையும் செய்யத் தயாராகி விடுவார்கள்.

மதுவின் மற்றொரு பரிணாமமாக அதனை உட்கொள்பவர்களை நாளடைவில் மேலும் மேலும் அதிகமாகப் பருகச்செய்து கண்பார்வையின் வீரியத்தைச் சீக்கிரமே குறைத்து புத்தியை மழுங்க வைத்துவிடுகிறது. சமூகத்தில் அம்மனிதனுக்கிருந்த மதிப்பு, மரியாதை, கௌரவம், அந்தஸ்து என எல்லாவற்றையும் நோய்கள் தொற்றச்செய்து அரித்து அழித்து விடும். அம்மனிதர்களுக்குத் தன்னம்பிக்கையும் குறைத்து விடும்.

சில காரியவாதிகளால், காரியத்தைச் செய்து தருபவர்களுக்கு லஞ்சமாக பணம், பொருளோடு இந்த மதுவும், இன்னொரு லஞ்சமான மாதுவும்தான் பல இடங்களிலும் பரிமாறப்படுகிறது என்பதைப் பலரும் பேசிக் கொண்டிருப்பதைக் கேள்விப்பட முடிகிறது.

## மிக விருப்பமுள்ளவர்கள் குறைவாகவே கொள்ளுங்கள்

மதுவினால் மிகக்குறைவான நன்மைகள், அதுவும் அளவுடன் முறையாகக் கையாண்டால் மட்டுமே கிடைக்கிறது. அநேக தீமைகளைக் கொடுத்தாலும் மதுவுக்கு அடிமையானவர்கள், அடிமையாகிக் கொண்டிருக்கிறவர்கள், மதுவை ஆரம்பிக்கிறவர்கள், ஆரம்பிக்கப்போகிறவர்கள், என்பவர்களில் பெரும்பாலோரில் பலரும் என்ன சொன்னாலும், எதைச் செய்தாலும் அதை விட்டு விட்டு வரப்போவதாகத் தெரியவில்லை. அரசுகளே மது உற்பத்தியையும், மது விற்பனையையும் சட்டப்படி அங்கீகரித்து குடிப்பதையும் முறைப்படி அனுமதித்துவிட்ட நிலையில் ‘குடி’மகன்களாகிய நம் குடிமகன்களும், சில

குடிமகள்களும்கூட மது அருந்துவதை இயன்ற அளவுக்கு மிகமிகக் குறைவாகவே நல்ல இடைவெளியில் பருகி வீட்டிற்கும், நாட்டிற்கும் கேடில்லாமல் அனுபவித்து ஆனந்தக் கூத்தாடுங்கள்.

மதுவை இதுவரைத் தொடாதவர்களும், அதைத் தொடும் நினைவு, கொள்கை, எண்ணமில்லாதவர்களும் அதைத் தொடவே வேண்டாம் என உங்கள் கை, கால்களைத் தொடாமலேயே வேண்டப்படுகிறது.

**மது மிகச் சிறிது வாழ்க! மிக அதிகம் ஒழிக!!**

# விபச்சாரம்

கண்களால் தவறானக் காம எண்ணத்தில் பார்த்தாலே கற்பு போய்விடுவதாக திருவள்ளுவர் கூறுகிறார். இந்தக் கருத்தில் பார்த்தால் இவ்வுலகில் எத்தனைப் பேருக்கு கற்பு மிஞ்சியிருக்குமோ தெரியாது. இந்த அளவுக்கு படுசுத்தமாக, கடுஞ்சுத்தமாக இன்றைய மனித வாழ்வை அசை போட்டுப் பார்க்க இயலாத நிலைக்கு நாமனைவரும் வந்தாகி விட்டது.

எனவே நடைமுறையில் உள்ள, மேற்படித் தலைப்பிற்கானக் காரண சமாச்சாரங்களைக் கொஞ்சம் ஊடுருவி என்னதான் இப்பூமியில் நடந்து கொண்டிருக்கிறது என்பதை அறிவோம். பலரோடு உடலுறவு கொள்ளும் ஆண்களும், பெண்களும், விபச்சாரர்கள், விபச்சாரிகள் எனப் பெருந்தொகையாளர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

## விபச்சார வகையினர்

இதில் பெண் விபச்சாரிகள் வறுமை மற்றும் ஏழ்மையின் காரணமாக பணத் தேவைக்காகவும், சிலர் அடங்காத உடல் காமப்பசிக்காகவும், பொழுது போக்கிற்காகவும், உல்லாச வாழ்க்கைக்குத் தேவைப்படும் அதிகப்பணத்திற்காகவும் விபச்சாரம் செய்கிறார்கள். சிலர் தினசரி சூழ்நிலையில் பிறரின் தூண்டுதலாலும் பல

ஆண்களோடு பலப் பிரிவினராகப் பலரோடு உடலுறவு கொள்ளும் பழக்கத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். விபச்சாரத் தொழிலில் ஏழைப் பெண்கள் முதல் நடுத்தர, பணக்கார குடும்பப் பெண்கள், திருமணமாகாதப் பெண்கள், நடிகைகள் வரை பலரும் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது.

இத்தொழில் உலகம் முழுவதும் நடப்பதும், ஆதிநாள் முதலே வழக்கத்திலும் இருப்பது எல்லோருக்கும் தெரிந்த சங்கதிதான். தாய்லாந்து நாட்டின் முக்கியத் தொழிலே விபச்சாரம் எனக் கூறப்படுகிறது. அதன் தலைநகர் பாங்காக்கிற்கு உலகம் முழுவதிலுமிருந்து தினசரி ஆயிரக்கணக்கான ஆண்கள் மேற்படி விஷயத்திற்காகவே வந்து போய் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட முடிகிறது.

பல நாடுகளில் விபச்சாரம் ஒரு தொழிலாகவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பது சிலருக்கு நெருடலான செய்தியாக இருக்கலாம். கனடா, ஜெர்மனி போன்ற நாடுகளில் தனிச் சீருடையே இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பல நாடுகளில் விபச்சாரிகள் சங்கம் வைத்திருப்பதும், பல கோரிக்கைகளுடன் நகரில் ஊர்வலம் போவதும் சர்வசாதாரணம். நம் இந்தியாவில் மும்பையின் சிவப்பு விளக்குப்பகுதி, கொல்கத்தாவின் சோனா லாட்ஜ் பகுதி போன்றவை இதற்கு மிகப் பிரசித்திப் பெற்ற இடங்களாக விளங்குகின்றன. மும்பையில் சிவப்பு விளக்குப் பகுதி என்றில்லாமல் மாலை சாய ஆரம்பித்தாலே நகரின் கூட்டமானப் பல இடங்களில் பெண்கள் பெருங்கட்டிடங்களின் தூணுக்குத் தூண் நின்று கொண்டு வாடிக்கையாளர்களை வரவேற்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

விபச்சாரத்திற்கு புரோக்கர்கள், தொலைபேசிகள், லாட்ஜுகள் நல்ல சேவை செய்து வருவதோடு, வீட்டு, குடும்ப, சாதாரண, நடுநிலை விபச்சாரத்திற்குப் பெண்கள் கிடைக்குமிடமாக இந்திய நகரங்களின் பேருந்து நிலையங்கள் பெரும்பணி ஆற்றி வருகின்றன. இங்கேதான் ஆள் தேர்வு, விலை நிர்ணயம் போன்றவைகள் செய்யப்படுகின்றனவாம். சுற்றியுள்ளக் கிராமப் பகுதியிலிருந்து சில ஏழைப்பெண்கள் பேருந்து மூலமாக நகரத்துக்கு, நகரப் பேருந்து நிலையத்துக்கு வந்தடைகிறார்கள். இங்கே சில பேருந்து நடத்துனர்கள், ஓட்டுனர்களின் கைவரிசை, உபயோகம் சொல்ல முடியாத அளவுக்கு இருக்கிறது.

விபச்சாரிகள்தான் என்றில்லாமல், பள்ளி கல்லூரி மாணவிகள், அலுவலக ஊழியர்கள், குடும்பப்பெண்கள் எனப் பலரை தினசரிச் சந்திக்கும் வாய்ப்பு அவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் மேல் அழுத்தமாக உரசி உரசி உணர்ச்சியைத் தூண்டிக் கொண்டிருக்கும் செயல், பேருந்தில் உள்ள இசை, பாடல்களுடன், நகைச்சுவையாகப் பேசுதல் போன்றப் பல பணிகளால் பெண்கள் பலரை இவர்கள் பணிய வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு அடுத்தடுத்த உபயோகிப்பாளாக ஆட்டோக்காரர்களும், அடியாட்களும் வருகிறார்கள். இவர்களில் பலருக்கு இது இலவசமாகவே கிடைத்து வருகிறது.

பணம் சம்பாதிக்கும் தொழில் முறை விபச்சாரிகளைத் தவிர பலவீட்டுச் சாப்பாடு தின்னும் பிச்சைக்காரப் புத்தியுடைய பல ஆண்சுகம் விரும்பும் பெண்காம

வெறியாளர்களும் இருக்கிறார்கள். பல சூழ்நிலைகளின் காரணமாகக் கணவரை நீண்ட நாட்கள் பிரிந்திருப்பவர்களில் சிலர், பிரிய வேண்டியிருப்பவர்களில் சிலர், தன்னை விட குறைந்த வயது இளைஞனுடன் உடலுறவை விரும்பும் பெண்கள் போன்றோர் முக்கியமானப் பிரிவினராகிறார்கள்.

கல்விக்கூடங்களில் சக மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிற்சாலைகளில் மேற்பார்வையாளர்கள், ஊழியர்கள், அலுவலகங்களில் சக ஊழியர்கள் எனப் பலவிதமாக ஆண்களுடன் நேரம் போக்க வேண்டியச் சூழ்நிலையில் பெண்கள் இருந்து வருகிறார்கள். இவ்விடங்களில் உள்ள சில ஆண்கள் அங்குள்ளப் பெண்களை அடையும் நோக்கத்திலேயே நரித்தந்திரத்துடன் செயல்பட்டு வருவார்கள்.

வீடுகளில் தங்களின் அருமையான மனைவிகளைச் செருப்பால் அடிக்கும் பல ஆண்கள் வேலை செய்யும் இடங்களிலுள்ள பெண்களுக்கு வார்த்தைகளில் மலர் அபிசேகம் செய்து மிக நல்லவராகக் காட்டிக் கொள்வார்கள். வலிய வந்து உதவிகளைச் செய்வது, நகைச்சுவையாகப் பேசி மயக்குவது போன்றவை இவர்களுக்குக் கை வந்த கலையாகி விட்டது. இங்கு மனைவியைப் போல் நிரந்தரமாகியத் தொல்லையாக எண்ணும் நிலையில்லை. தற்காலிக பலரகச் சிறிய செலவுகளில் கிடைக்கும் ருசிக்காக நாயாய் அலைந்து கொண்டிருப்பவர்களாக இருக்கிறார்கள்.

அருகிலுள்ள சுற்றுலாத்தலங்கள், புண்ணிய ஸ்தலங்கள், முக்கிய நகரங்களுக்குச் சென்று கள்ளக்காதல், உடலுறவு செய்துவருவது இப்போது பரவலாக நடந்து

வருகிறது. அங்குள்ள லாட்ஜ்கள்தான் இவர்களின் சிலமணிநேர அவசர அவசியத்திற்கு அரும்பணியாற்றி வருகின்றன. நகரப்பகுதிகளைக் காட்டிலும் கிராமப் பகுதிகளில் மறைவிடங்கள் அதிகமிருப்பதால் அங்கு காசு வாங்கிக் கொள்ளாத காமத் தீர்வுக்கு, பலருடனானத் தொடர்புக்கு அதிகமான வாய்ப்பு இருந்து வருகிறது. மேலும் நட்பு என்ற போர்வையில் பலர் செக்ஸ் செய்து கொண்டிருப்பது மகா வேதனையாகும்.

ஆணும் பெண்ணும் கட்டிப்பிடித்துக் கொஞ்சுவது வரை நட்பு என்று சினிமாக்களும், மேல்தட்டு மக்களும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பஞ்சையும் நெருப்பையும் பக்கத்தில் வைத்தாலே பற்றிக் கொள்ளும் என்பது போலத்தான் ஆணும், பெண்ணும் என பழைய கலாச்சாரம் சொன்னது. ஆனால் இங்கே கட்டிப்பிடித்து முத்தமிட்டுக் கொண்டால் சும்மா இருந்து விடமுடியுமா. மனிதனின் இயற்கைப் பசி அப்படியொன்றும் எளிதாக சும்மா விட்டுவிடாது. அடுத்தடுத்தக்கட்ட நடவடிக்கைகளுக்கு வலுவில் இழுத்துச் சென்று இறுதி நிலையை அடையாமல் விடாது, விடவும் முடியாது. இதுதான் பலருக்குமான பொது இயற்கைக் கோட்பாடு.

சில விபச்சாரங்கள் படுபயங்கரமான பரிமாணத்தில் இருக்கின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் என குழுவாக ஒரே அறையில் காமக்களியாட்டம் போட்டு விலங்குகளை விட குறிப்பாகத் தெரு நாய்களை விட மிகக்கேவலமாக நடந்தேறி வருகின்றன. இதன் உடன்பிறப்பாக ஒருபுறம் நீலப்படத் தொழில் நடந்து கொண்டிருக்கிறது. விபச்சாரத்தில் ஈடுபடும் பெண்களில்

பலர் கடத்தல், கொள்ளை, கொலை, பழிவாங்குதல், போதைப் பொருட்கள் விற்பனை, தீவிரவாதம் என கடுந்தீயத் தொழில் செய்பவர்களாக இருப்பார்கள்.

தொழில்முறை விபச்சாரிகள் உணர்ச்சியடையக் கூடாது என்றும், கர்ப்பம் உண்டாக்கிக் கொள்வதை தவிர்க்க வேண்டியதும் அடிப்படைப் பாடங்களாக சொல்லிக் கொடுக்கப்படுமாம். எனவே தொழில்முறை விபச்சாரிகள் பலரும் பொய்யாக உணர்வடைதாக காட்டிக் கொள்வார்களாம். கண்ணதாசன் சொன்னது போல் இரண்டு சதைப்பிண்டங்கள் சிறிது நேரம் மோதிக் கொள்வதற்கு இவ்வளவு பாடுபடுகிறார்கள்.

இன்றைய சமூக வாழ்வைப் பார்க்கும்போது பலருக்கு பொருத்தமில்லாத கணவரோ, மனைவியோ அமைந்துவிடும் நிலையில், வேறு அழகான, சிறப்பான ஆண், பெண்களைக் கண்டு அவர்கள் மேல் ஒருவித ஈர்ப்பு ஆசையுடன் ஏக்கப்பார்வை பார்த்து உணர்வுகளைத் தீர்த்துக் கொள்கிறார்கள்.

## சக்திமிகு லஞ்சம்

ஆண்களில் குறிப்பாக லாரி ஓட்டுநர்கள், கிளீனர்கள், பேருந்து ஊழியர்கள், ஆட்டோ டிரைவர்கள், பேருந்து நிலைய கடை நடத்துபவர்கள், அடியாட்கள் போன்றோருக்கு விபச்சாரிகளுடன் அதிகத் தொடர்பு இருப்பதாக பயன்படுவதாக அறிய முடிகிறது. பெரிய அதிகாரிகளுக்கு லஞ்சமாக முக்கிமாகப் பெண்கள்தான் கொடுக்கப்பட்டு வருவதாக சொல்லப்படுகிறது. அதிலும் வயதான அதிகாரிகளுக்கு இதில் மிகுந்த நாட்டமாம். இம்மனிதர்கள்

பெரும்பகுதியினர் போதையின் ஆதரவுடனேயே பெண்களுடன் சல்லாபிப்பதாகத் தெரிகிறது.

பெண்களில் சிலர் பயணம் செய்யும் போது கடைத்தெரு, சினிமா, திருவிழா, கோவில்களுக்குச் சென்று வரும்போது ஒரு சில மணி நேரத்திலேயே அங்கு வரும் தெரியாத மனிதர்கள், பணிபுரியும் ஊழியர்கள் என புதியவர்களோடுகூட தொடர்பு மற்றும் உறவு கொண்டு விடுவதாக அனுபவசாலிகள் சொல்கிறார்கள்.

நல்ல நிலையில் உள்ள பலவயதுப் பெண்கள் பணத்திற்காக திருட்டுத்தனமாக விபச்சாரத்திற்கு போவதாகச் சொல்லப்படுகிறது. இதில் குறைந்த நேரத்தில் நல்ல வருமானம் கிடைத்து அவர்களின் ஆடம்பரத்திற்கு செலவு செய்து கொள்கிறார்களாம். இப்படிப்பட்ட பெண்களில் திருமணமானவர்கள் தன் குடும்பத்தில் கணவனுடன் எப்படி உண்மையாக செயல்பட முடியும். அங்கே பொய்யான குடும்ப உணர்வுதான் மேலிட முடியும். பலபேருடன் தொடர்புள்ள பலருக்கு பால்வினை நோய்கள், எய்ட்ஸ் வருவதற்கு மிகப் பிரகாசமான வாய்ப்புகள் இருந்து அவைகள் பெறப்பட்டு பலருக்கு குடும்பத்தில் உள்ள நல்லவர்களுக்கும் கூட பரிசளிக்கப்படுகிறது.

இந்தியாவில் முன்பு வயதுக்கு வந்த சில பெண்களைத் தேவர்அடியாள் என கோயில்களில் விடும் வழக்கமும், பொட்டு கட்டுவது என்ற வழக்கமும் இருந்து வந்தது. அங்கே அப்போதிருந்த பெரிய மனிதர்களுக்கு பலபெண் சுகத்தை அடையும் வழியாக இவைகள் பயன்படுத்தப்பட்டது. சிலர் குடும்பத் தொழிலாகவே விபச்சாரத்தை செய்து வருகிறார்கள்.

டெல்லியில் ஒரு கிராமமே விபச்சாரம் செய்து வருவது ஒரு தொழிலாகவே அங்குள்ள உழைக்காத சோம்பேறி ஆடவர்களால் கருதப்பட்டு வருகிறது.

## வேண்டுகோள்

இன்றைக்கு இந்தியாவைப் பொருத்தவரை விபச்சாரம் ஒரு குற்றமாகும்; என்றாலும் எந்த ஒரு பகுதியும் விபச்சாரமில்லாமல் இருப்பதாகத் தெரியவில்லை. ஒன்று இதை தடுக்க முடிந்தால் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அநேகமாக இது இயலாத ஒன்றாகவேப்படுகிறது. நிச்சயமாக, முழுவதுமாக முடியாத பட்சத்தில் இத்தொழிலை முறைப்படுத்தி, ஒழுங்குபடுத்த ஏதேனும் செய்யலாமா என சம்பந்தப்பட்டவர்கள் சற்றுச் சிந்திக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# கட்டப்பஞ்சாயத்து

இந்தியக் கிராமங்களில் மிக நீண்டகாலமாக பலவிதமான பஞ்சாயத்து (ஆட்சி) முறைகள் நடைமுறையில் இருந்து வருகின்றன. இவை கிராம நிர்வாகத்தை நிலைப்படுத்தியதுடன் மக்களுக்குள் உள்ள பிரச்சினைகள், வழக்குகள் போன்றவற்றை தீர்த்து வருகின்றன. இதை நேரில் பார்த்து அனுபவிக்க வாய்ப்பில்லாத எண்ணற்ற மக்களுக்கு, நமது சினிமாக்களில் சற்று அதிகக் கூடுதல் அலங்காரங்களுடன் நிறைய பஞ்சாயத்துக் காட்சிகள் பஞ்சமில்லாமல் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

அவற்றில் வருவதுபோலவே ஒரு பொதுவான இடத்தில் ஊர் தலைவர், நாட்டாண்மைக்காரர், பெரியவர்கள், பஞ்சாயத்தார்கள் கூடி இருபக்க முறையிடல்கள் மற்றும் வாதங்களைக் கேட்டு, பின் அவர்களுக்குள் கூடி குதூகலித்து, போட்டடித்து ஒரு முடிவு எடுத்து தெரிவிப்பார்கள். இது உடனடியானத் தீர்விற்கு, ஒரு எளியவழியாக இருந்து வருகிறது.

இதே பாணியில், நகரங்களில் பஞ்சாயத்து பேசப்படுவது இப்போது நவீன முறை. கிராமநலனில் அக்கறை கொண்டவர்கள், நியாயவாதிகள், அம்மக்களை ஆரம்மத்திலிருந்தே அறிந்து அக்கிராமத்தைச் சேர்ந்த மனிதர்கள் அங்கு தீர்ப்பு, முடிவு சொல்கிறார்கள். ஆனால் நகரங்களில், அடியாட்கள், கட்டப்பஞ்சாயத்து அரசியல்வாதிகள் எனப்பலர் சேர்ந்துகொண்டு கட்டப்பஞ்சாயத்து முறை என்ற எழுதப்படாத முரட்டு சட்டத்தை தாங்களே உருவாக்கி 'செவ்வனே' செயல்படுத்தி வருகின்றனர்.

அரசு கட்டப்பஞ்சாயத்தை ஒழித்து தண்டணையுடன் கூடிய கடுமையானச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இருப்பினும் இது சிறிதுகூட ஒழிந்தபாடில்லை, ஒழியவும் ஒழியாது, ஒழிக்கவும் முடியாது, ஏனெனில் இதை நம்பி, வைத்துத்தானே நிறைய கீழ்நிலை அரசியல்வாதிகளின் காலம் மகிழ்ச்சியுடன் வசதியாகப் போய்க் கொண்டிருக்கிறது. இப்போது சில காவல் நிலையங்களிலும் கூட கட்டப்பஞ்சாயத்து நடந்து வருவதாக அறியக்கிடைக்கிறது.

இந்தக்கட்டப்பஞ்சாயத்து என்பதுதான் என்ன? பிரச்சினைகள் உள்ள அனைத்து தரப்பினரையும் அழைத்து பயமுறுத்தி ஒருசில தடவைகளுக்கு மேல் அலையவிடாமல் தீர்ப்பு சொல்லிவிடுவார்கள். பிரச்சினையுள்ளோர் சரியான நியாயத்திற்காகப் பலதடவை வருவதற்கு, அலைவதற்குத் தயாராக இருக்கிறபோதிலும், கட்டப்பஞ்சாயத்துக்காரர்கள் ஓரிரு முறைகளுக்கு மேல் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். வெட்டு ஒன்னு, துண்டு ரெண்டு என அதிரடியாய் அறிவித்து, அதற்கானக் கட்டணத்தொகையாக தீர்க்கப்பட்ட மதிப்பில் சுமார் கால்பங்கிலிருந்து அரைபங்கு வரை அபகரித்துக்கொள்வர். சம்மந்தப்பட்ட பார்ட்டிகள் வாய் திறக்கக்கூடாது, அது முடியாது; மீறி நடந்தால் அடி உதைதான்! இன்னும் இதில் எவ்வளவோ உள்ளன.

பிரச்சினைகளை கட்டப்பஞ்சாயத்துக்காரர்களிடம் மக்கள் கொண்டு போகாவிடினும், அவற்றை இவர்களே மோப்பம் பிடித்து, தாங்களாகவே ஆஜர் ஆகி பொறுப்பை எடுத்துக்கொள்வர். இதில் சாதகங்களைவிட பாதகங்கள் பல மடங்கு இருப்பினும், ஒருவகையில் பரவாயில்லை என்றுகூட எண்ணும்படியான சூழ்நிலை இக்காலத்தில் நிலவுவதுபோல் இருக்குமோ!

பிரச்சினைகளை கோர்ட்டுக்குக் கொண்டுபோனால் நாயாக, கழுதையாக அலைந்து, வழக்கறிஞர்களுக்கும் ஏனையோருக்கும்

அழுது செலவழித்து, தானும் (அனைத்திலும்) செலவழிந்துபோய் தீர்ப்பு என்ற ஒன்று வரும்போது சிலர் தீர்ந்து போயிருப்பர், சிலர் தீர்ந்து போய்க்கொண்டிருப்பர்.

இதை இதற்கு மேலே உள்ள அயிட்டத்தோடு ஒப்பிடுகையில் கிடைத்தவரையில் லாபம், இன்றோடு இத்தோடு இப்பிரச்சினை முடிந்ததே. என கட்டப்பஞ்சாயத்து தீர்ப்புகளில் உடனடி முடிவு தெரிந்து, எல்லாம் முடிந்துபோகிறது. இருப்பினும் இது ஒரு சிலேடையான ஒப்பிடல்தானேயொழிய யாரையும் கட்டப்பஞ்சாயத்துக்கு வழிகாட்ட வரவில்லை. கோர்ட்டுகளிலும் உடனடியான நியாயமான தீர்ப்புகள் எங்கு கிடைக்கிறதோ அது அதிசய பூமியாகும்.

மாண்புமிகு நீதிபதிகள், பெரும் பணத்திற்கு மட்டுமே கிடைக்கும், எதையும் சாதிக்கும் மிகச் சாதுர்யமான வழக்கறிஞர்களின் வாதத்திறமைகளை மட்டும் அதிகம் எடுத்துக்கொள்ளாமல் ஏழை, நடுத்தர மக்களுக்கு நீதி கிடைக்க தங்களுக்கு நியாயமாகப் பட்டதை அதிகமாகக் கருத்தில் கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டப்படுகிறது. சில அயோகியக் குற்றவாளிகள் மிகுந்த நடிப்புத்திமையுடன் நல்ல நியாயவாதியாக நடந்து ஏமாற்றுவதையும் காணமுடிகிறது. இருப்பினும் இந்த விதிவிலக்குகளை ஒதுக்கி நல்லவர்களுக்கு நல்ல தீர்ப்பு வழங்குங்கள்.

மாண்புமிகு நீதிபதிகள் முன்னர் சிறந்த வழக்கறிஞர்களாகப் பணியாற்றியபோது சாமான்ய மக்களுடன் ஓரளவு கலந்து பழகி அவர்களைப்பற்றிய விபரங்கள் நன்கு தெரிந்திருந்தாலும், தற்கால மனிதர்களிடம் உள்ள மாற்றங்களை பணியின் அவசியத்தினால் தூரத்திலிருந்து துல்லியமாக உணரமுடியுமா என்பது கேள்விக்குறியாகிறது. மற்றவர்கள் அவர்கள் விருப்ப, தேவைக்கு ஏற்ப பிற மனிதர்கள், கட்சிக்காரர்களைப்பற்றி சொல்வதை வைத்து வேற்று

மனிதர்களைப்பற்றி முடிவு எடுக்கும் கட்டாயத்தில் மாண்புமிகு நீதிபதிகள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிற மாதிரியான ஒரு நிலை உணரப்படுகிறது.

நீதித்துறையே ஒரு நாட்டின் ஜனநாயகம், மனித உரிமைகளை உறுதிப்படுத்தி, சுதந்திர சுவாசக்காற்றை வழங்கும் கோவில்களாகும். எனவே எதுவாயினும் நீதித்துறை மென்மேலும் வளர்ந்து, கட்டப்பஞ்சாயத்து என்னும் சமூகத்தீமை ஒழிய வேண்டுமென்பதில் சமூக நலனில் அக்கறை உள்ளோருக்கு மாற்று கருத்துக்கள் இருக்கா.

## கட்டப்பஞ்சாயத்து வளர்வதற்கான காரணங்கள், மனிதர்கள்

மக்களுக்குள் ஒற்றுமை, நீதி, நியாயம், ஒருவரையொருவர் புரிந்து கொள்ளுதல், அன்பு பாராட்டுதல் போன்றவைகள் இல்லாததோடு அடக்கமின்மை, திமிர், தற்பெருமை, பொறாமை போன்ற குணங்களும் மலிந்து விட்டன. இவைகளோடு உழைக்காமல் சம்பாதித்தல், சுயநலம் போன்ற தீய குணங்களும், அரசியல், வியாபாரம், தொழில் போன்றவற்றில் தவறானப் போட்டிகளும் கட்டப்பஞ்சாயத்து மற்றும் அடியாட்கள் உருவாவதற்கு, வளர்வதற்குக் காரணங்களாக உள்ளன.

தவறான முறையில் வளர்க்கப்பட்டு அதிகம் உழைக்காமல் எளிதாக அதிகம் சம்பாதிக்கும் தீய எண்ணமுள்ள மது, மாது, சூது பழக்கங்கள் உள்ள கூட்டணியினரே அடியாட்களாக அதிகம் உள்ளனர். இவர்களுக்குச் சில அரசியல் கட்சிகளும் வியாபார நிறுவனங்களும், வியாபாரிகள் மற்றும் சில லஞ்சஊழல் அதிகாரிகளும் கூட ஆதரவாக இருப்பதாகவும், பயன்படுத்துவதாகவும் சொல்லப்படுகிறது.

அடியாட்கள் பெரும்பாலும் தனியாக வட்டித்தொழில், விபச்சாரம், சூதாட்டக்கிளப்புகள் போன்றவைகளை நடத்தி வருவதாகப் பேசிக் கொள்கிறார்கள். இவர்கள் எதையும் செய்யத் துணிந்தவர்களாக செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு தொகையை நிர்ணயப்பேரம் செய்து கொள்பவர்களாக இருப்பார்களாம். சாதாரணத் தாக்குதல், வழிப்பறி, கொலை, கொள்ளை, கடத்தல், கை, கால், விரல், காது, மூக்கு துண்டாக்குதல், கத்தி, பிளேடு கீறல்கள் உள்காய அடி போன்ற உயர்ந்த பணிகளையும் மிரட்டல் வகையராக்களையும் செய்து வருகிறார்கள் என்று தெரிகிறது.

இந்த வகையினரே பெரும்பாலும் கட்டப்பஞ்சாயத்து என்னும் மிரட்டல், உருட்டல் பாணி விசாரணை செய்து தடாலடியான தீர்ப்பு வழங்கி வருகிறார்கள். தாங்களே தங்களை நியமித்துக் கொண்ட நீதிபதிகளாக அவர்களுடைய நீதிமன்றங்களை எங்கேயும் நடத்தும் அதிகாரத்துடன் மக்களை வாட்டி வதைக்கின்றனர். இவர்கள் சமூகத்தில் எங்கேயாவது ஏதாவது பிரச்சனை இருக்காதா, நடக்காதா என மோப்பம் விடடுத் திரிந்து கொண்டிருப்பார்கள். பிரச்சனைக்குரிய மனிதன் கிடைத்து விட்டாலோ, தெரிந்து விட்டாலோ இவர்களுக்கு ‘அல்வா’ சாப்பிட்டது போலத்தான்.

இவர்களின் படாடோபமான கார், பைக், ஹோட்டலில் தங்குவது, சாப்பிடுவது மற்ற இத்யாதிகளுக்குச் செலவு செய்வது, பகட்டு உடை அணிவது போன்ற செயல்களுக்கு பிரச்சனைக்குரிய மனிதர்களிடம் நல்ல காசு கறந்து விடுகிறார்கள். இவர்களுடைய மனைவிகளும் குழந்தைகளும் முழுப் பெருமை மற்றும்

சந்தோஷத்துடனேயே அந்தக் கர்மக் காசுகளை அனுபவித்து வாழ்ந்து வருகிறார்கள்.

இவ்வாறாக அடியாட்களாக இருந்து வருபவர்களில் அதே தொழிலைத் தொடர்ந்து செய்பவர்கள், எதிரிகளால் கொலை செய்யப்படுகிறவர்கள், இடையில் அத்தொழிலை விட்டு வேறு நியாயமான தொழில்களுக்கும், அரசியலுக்கும் போய் வேடம் மாற்றிக் கொள்பவர்கள் எனப் பல வகையினர் உண்டு. பிற்பாடு இவர்களே முக்கியஸ்தர்களாகவும் புண்ணியஸ்தர்களாகவும் மக்கள் மத்தியில் பிரபலாமாகப் போற்றப்பட்டு கடைசி வரை சந்தோஷமாகவே அவர்களும் அவர்களது குடும்பங்களின் வாரிசுகளும் வாழ்ந்து வருவது பெருகிவிட்டது.

இதனால் இந்தப் பூமியில் எது சரி, எது தவறு? என்று குழம்புகிற நிலையும் ஏற்படுகிறது. ஏனெனில் நல்லதே செய்து பயந்த வாழ்க்கை வாழும் மனிதர்களுக்கும் குடும்பத்தினர்களுக்கும் கொடியநோய் மற்றும் துன்பங்கள் வருகின்றன. அயோக்கியர்களுக்கும் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்களுக்கும் நிறைய நன்மைகள் நடப்பதுடன் மகிழ்ச்சியுடனுமே வாழ்கிறார்கள். இதில் கூடக் குறைவு என்ற கணக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

அவையெல்லாம் ஒரு பக்கமிருக்கட்டும். இத்தீமைகளை இச்சமுகத்தில் காலகாலத்திற்கும் தொடர்ந்து நடப்பதை அனுமதித்துக் கொண்டிருக்கத்தான் வேண்டுமா? அல்லது எப்பாடுபட்டாவது களைந்தெறிய வேண்டுமா? என்பதுதான் கேள்வி. இதற்கெல்லாம் இந்தச் சமுதாயம் ஏதாவது செய்துதான் ஆக வேண்டுமேயொழிய சும்மா இருந்துவிடக் கூடாது.

## முட்டாள்தனமான சினிமாக்கள்

சில பல சினிமாக்களிலும் அடியாட்களை மிகைப்படுத்திக் காட்டி சமூகத்திலும் அந்த மாதிரி மனிதர்களைத் தெரிந்தோ தெரியாமலோ உருவாக்கிக் கொண்டிருக்கும் தவறைச் செய்து கொண்டேயிருக்கிறார்கள். சினிமாவில் வேண்டுமானால் ஒரு நோஞ்சான் உடம்பு கொண்ட கதாநாயகன் பலசாலிகளாக முரட்டு உயர உடம்பில் உள்ள முப்பத்தெட்டு அடியாட்களை அவர்கள் எவ்வளவு பயங்கர ஆயுதங்கள், துப்பாக்கி மெஷின்கன், ஏ.கே நாற்பத்தேழு இன்னும் பீரங்கி, அணுகுண்டுகூட வைத்திருந்தாலும் நமது கதாநாயக பிதாமகர் எளிதாக ஜெயித்து விடுவார். அதை நாமும் வாயைப் பிளந்து பார்த்து வியந்து கைதட்டி, விசிலும் அடித்துப் பாராட்டிக் கொண்டாடுகிறோம்.

நிஜ வாழ்க்கையில் ஒன்றல்ல இரண்டு நல்ல மனிதர்கள் ஒரே ஒரு முரட்டு அடியாளை அதுவும் பயங்கர ஆயுதம் வைத்திருந்து எதுவும் செய்யத் துணிந்த ஒருவனை வெற்றி கொள்ள முடியுமா? சற்றே சிந்திப்போம். இந்த சினிமா முட்டாள்தனங்களெல்லாம் இந்த உலகம் உள்ள வரையிலும் மாறுமா என்பது சந்தேகமே.

பெருநகரங்களில் அடியாட்களின் தலைவனை 'தாதா' என்றொரு பெயரும் கொடுத்து பெரியதொரு அந்தஸ்து கொடுத்த மாதிரி ஆக்கி வைத்திருக்கிறார்கள். இந்தத் தீமைகளிலிருந்தெல்லாம் உடனே விடுபட முடியாது என்றாலும் சிறிது சிறிதாகவாவது மாற்றம் ஏற்பட ஏதாவது செய்தாக வேண்டிய கட்டாயச் சூழ்நிலையில் நாம் வாழ்ந்து

கொண்டிருக்கிறோம் என்பதை நாமனைவரும் உணர்ந்தாலன்றி முடிவே ஏற்படாது.

## கட்டப்பஞ்சாயத்தை விரட்டும் வழிமுறைகள்

இந்த வகைத் தீமையானக் கலாச்சாரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக ஒழித்துக்கட்ட இயலும், முயன்றால்! ஒவ்வொரு குடியிருப்புப் பகுதியிலும் அங்கு வாழும் மக்கள் ‘நலச் சங்கம்’ போன்ற அமைப்புகளை ஏற்படுத்தி அடியாட்கள் அவர்களின் பகுதிகளில் பகுதி மக்களின் குழுக்களை மீறி எதுவும் செய்யமுடியாதவாறு பார்த்துக் கொள்ளலாம். இதேபோல் வியாபார, தொழில் நடக்கும் பகுதிகளிலும் வியாபாரிகள், தொழிலாளர்கள் ஒரு ‘கூட்டு அமைப்பை’ சங்கம் மாதிரி வைத்து வெளியாட்கள், அடியாட்கள் எந்த ஒரு வியாபாரியையோ, தொழிலாளியையோ முதலாளியையோ அவர்தம் குடும்பத்தினரையோ மிரட்டுவதை, தாக்குவதைத் தவிர்க்கலாம். ஆபத்தில் ஒன்று சேர்ந்து ஒருவருக்கொருவர் உதவிக்கொண்டு சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கவும் தயங்கக்கூடாது. சிங்கம், காட்டெருமை கதையை நினைத்துப் பார்க்க வேண்டும்.

மேலும் நகரங்கள், பெருநகரப்பகுதிகள் இங்கெல்லாம் உள்ள அரசியல் சாராத முக்கியஸ்தர்கள், ஓய்வுபெற்ற பெரிய அதிகாரிகள், செல்வந்தர்கள், வியாபாரிகள், சமூக சேவகர்கள் போன்றோர் ஒன்று சேர்ந்து ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். அவர்களை பிரச்சனையோடு அணுகுவர்களுக்கு பிரச்சனையிலுள்ள அனைத்து தரப்பினரும் இந்த அமைப்பின் ஈடுபாட்டை முழு மனதுடன் ஏற்றுக் கொள்ளும்பட்சத்தில் நீதிமன்றங்கள் போலவே

மெஜாரிட்டி கருத்து அடிப்படையில் பாரபட்சமில்லாத நியாயமான தீர்ப்பைக் கட்டணமேதுமில்லாமல் இலவசமாக வழங்கிட முடியும்.

இதைச் செய்யும் சம்பந்தப்பட்டவர்கள் இதை உயர்ந்ததொரு சமூக சேவையாக எண்ணி மகிழ்ந்து பெருமைப்படவும் மற்றவர்களால் போற்றப்படவும் கூடும். தற்போதைய சட்டத்தில் இந்த மாதிரி அமைப்புகளின் இவ்வகைச் செயல்பாடுகளுக்கு முறையான அனுமதி இருக்கிறதா? என்பது தெளிவாகத் தெரியவில்லை. அப்படி இதுவரை இல்லையெனில் அரசும் அதை வழங்கி இப்பணியை ஆதரித்தால் அந்தந்தப் பகுதி மக்களின் உண்மைத் தன்மையை நன்கு அறிந்த முக்கியஸ்தர்கள் நல்ல நியாயமானத் தீர்ப்புகளை வழங்கி பிரச்சனைகளைக் குறைக்க உதவுவார்கள்.

இம்மாதிரி நடைபெற்றால் கிராமங்களில் நடைபெறும். கிராம, திண்ணை, மரத்தடி பஞ்சாயத்தைவிட நகரங்களில் படித்த, பண்புள்ள கனவான்களால் நடத்தப்படும் நிலையில் இது சிறப்புடையாதாகவே இருக்கும். இது முன்பு இருந்துவந்த நடைமுறைதான்.

அல்லது இவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டுமெனில் நிறைய நீதிபதிகள் கொண்ட நிறைய நீதிமன்றங்கள் நிறைய இடங்களில் திறந்து குடிமக்களுக்கு மிக விரைவான தீர்ப்புகள் வழங்கப்பட வேண்டும். பொதுமக்கள் சேவையாகக் குறைவான கட்டணத்துடன்கூட அரசு இதற்கு ஆவன செய்யலாம்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இயன்ற வரை பிரச்சனைகள் இல்லாமலும், ஏற்படுத்திக் கொள்ளாமலும், அதில் மாட்டிக் கொள்ளாமலும், ஒதுங்கிக் கொள்ளும் புத்திசாலித்தனத்துடன், பொதுமக்கள் நடந்துகொள்ள வேண்டும். இதன் மூலம் அடியாட்களுக்கு கட்டப் பஞ்சாயத்துக்காரர்களுக்கு வேலை இல்லாமல் போய் அவர்களின் உற்பத்தி குறைந்து, நின்று அக்கொடும் தீமைகள் சில காலத்தில் மறைந்து போய்விடும்.

அரசும், காவல்துறையும், இந்தக் கலாச்சாரத்தை முற்றிலும் ஒழித்து பொதுமக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டு அமைதியாக வாழ அனைத்து உதவிகளையும் வழங்கி, நடவடிக்கைகள் எடுப்பது நல்லது.

# பன்முக நிலை வர்த்தகம்
# ( மல்டிலெவல் மார்க்கெட்டிங் )

பொருட்களைக் கொடுத்து வேறு பொருட்களைப் பெறும் பண்டைய பண்டமாற்று முறைக்கு மாற்றாக பணம் என்ற ஒன்றை உருவாக்கி, அதைக் கொடுத்துப் பொருள்களைப் பெறும் வகையாக மாற்றியமைத்தனர் அன்றையச் சிந்தனையாளர்கள்.

பொருள் வாங்குவதற்கானப் பணத்தை சம்பாதிக்க நூறு, ஆயிரம் வழிகளை உருவாக்கி இன்னும் பல புதிய வழிமுறைகளைக் கண்டுபிடித்துக்கொண்டிருக்கின்றனர் மனிதர்கள். இவற்றில் சில நல்ல வழிகளுடன் அதிக தீயவழிகளே அடங்கும். நல்ல பொருட்களை உற்பத்தி செய்து பணத்திற்கு விற்பது, மற்றும் பல நல்ல தொழில்கள் செய்து பணம் சம்பாதிப்பது என நல்ல வழிகள் பலநூறு உண்டு. ஆனால் அதிக உடல், மூளை உழைப்பு இல்லாமல் மிகக் குறுகிய காலத்தில் குறுக்கு வழிகளில் எப்படியாகினும் இயன்ற அளவிற்கு அதிகப் பணம் சம்பாதிக்க மனிதர்கள் எண்ணியபோது பல தீயத் தொழில்கள் பழங்காலத்திலிருந்து இன்றுவரை வந்தவண்ணம் உள்ளன.

## கேவலத் தொழில்கள்

விபச்சாரம், நீலப்படம், கலப்படம், மாமாவேலை, கொலை, கொள்ளை, பலவகையான உடல் விண்ணங்கள் செய்தல், கடத்தல், ஏமாற்று, லஞ்ச-ஊழல், சூதாட்டம், கொடும் போதைவஸ்து போன்ற தீயவியாபாரம், உடல் உறுப்பு திருட்டுக்கள் போன்றவை என்னமாதிரியான தொழில்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். இவற்றுடன் இன்னும் கூடுதலாக எடை மோசடி, கூடுதல் விலை,

அநியாயக் கட்டணம், கல்வி வியாபாரம், (அரசு) ரகசியங்கள் விற்பனை, அவசியத்திற்கு மேல் பெருமை பகட்டுக்காகப் பெரும் கருவிகள் வாங்கி வைத்திருக்கும் தனியார் மருத்துவமனைகளில், அவற்றைப் பராமரித்து வரவேண்டி அங்கு வரும் எல்லா நோயாளிகளுக்கும் அனைத்துச் சோதனைகள் போன்ற அயோக்கியத் தொழில்களும் நடந்து வருகின்றன.

## தோற்றம்

இத்தொழில்களில் ஈடுபடுவோர் நாளுக்குநாள் உலகெங்கும் அதிகரித்துவருகின்றனர். ஒருவேளை உலகம் அழிவதற்கான ஆரம்ப ஆயத்தங்களின் வெளித்தோன்றல்களாக இவை இருக்குமோ என்ற ஐயம் எழுகிறது. கடந்த பல ஆண்டுகளாக மக்களை ஏமாற்றும் பல புதிய, தவறான, நிதிப்பெருக்கும் தொழில்கள் வந்தவண்ணம் உள்ளன. இதில் மல்டிலெவல் மார்க்கெட்டிங் என்றமுறையில் செய்யும் வியாபாரம் ஒன்று உள்ளது. இதை ஆரம்பத்தில் ஆரம்பித்தவர்கள் உண்மையில் ஆரம்பித்தக் காரணம், சொந்தத் தயாரிப்புப் பொருட்களை விரைவாக விற்பதற்காக அதன் தயாரிப்பாளர்கள் என்ற முறையில் கொண்டுவந்த ஒரு நியாயமான வியாபார முறையாகும்.

## தற்போதைய நிலை

ஆனால் துரதிருஷ்டவசமாக சில தீயவர்கள் இம்முறையில் மற்றவர்களின் பணத்தை தொடர்ந்து அபகரித்து, அபகரித்துக் கொண்டு இருப்பதன் மூலம் பெரும் செல்வம் சேர்க்கும் முறைக்காகப் பயன்படுத்த ஆரம்பித்துவிட்டனர். ஏதேனும், கவர்ச்சியான இலக்கங்களில் ஒரு பெரும் தொகையை நிர்ணயம் செய்துகொண்டு அதற்கு கிட்டத்தட்ட பாதி மதிப்பிற்கு ஏதேனும் பொருட்களைக் கொடுப்பார்கள். மீதப்பணத்தை இத்திட்டத்தில் இதற்கு முன்னர் சேர்ந்தவர்கள், அவர்கள் சேர்ந்த மூப்பு முன்னுரிமையைக் கணக்கில் கொண்டு பிரித்துக்கொள்வார்கள். இத்திட்டத்தில் சேர்ந்த வகையில், மூப்பு முன்னுரிமையில் மிக முன்னாள் உள்ளவர்களுக்கு மிக அதிகத்

தொகையும், அதன் வரிசைக்கிரமத்தில் கீழே உள்ளவர்களுக்கு முறையே தொகை குறைந்தும் மேலிருந்து கீழாக படிப்படியாக பல விகிதாசாரங்களில் தொகை பிரித்துக்கொள்ளப்படுகிறது.

இது உழைப்பால்வருகிற பணமோ அல்லது பெரும் தொழில், வியாபாரம் செய்து வரும் தொகையோ, லாபமோ அல்ல. மாறாக மற்றைய சகமனிதர்கள் துன்பப்பட்டு சம்பாதித்தப் பணத்தின் பகுதியாகும். பின்னால் தொடர்ச்சியாக இத்திட்டத்தில் சேர்ந்து கொண்டிருக்கும் இம்மனிதர்களின் பேராசைக் குணமே இத்தீயதொழில் அமோகமாகப் போய்கொண்டிருக்கக் காரணமாகிறது.

## ஏமாற்றுதலின் மொத்த உரூபம்

தொடர்ந்து ஆட்கள் சேரும்வரை முன்னால் சேர்ந்தவர்களுக்கு நல்ல அறுவடை நடந்துகொண்டே இருக்கும். சில காலத்திற்குப் பிறகு இத்திட்டத்தில் சேருவதற்கு ஆட்கள் மெல்லமெல்லக் குறைந்து ஒருகட்டத்தில் சேருவதற்கு ஆள் இல்லாதநிலை ஒருநாள் வரும். அந்தக் கடைசி நிலைக்கு முன் சேர்ந்த ஆயிரமாயிரம், லட்சோபலட்சம் மனிதர்களுக்கு அவர்களைத் தொடர்ந்து சேர ஆள் இல்லா காரணத்தால் ஏமாற்றம் ஏற்பட்டு பேராசை பெரும்நஷ்டம் ஆகிப்போகும்.

ஆனால் இறுதியாக ஏமாறுகிற நபர்களின் எண்ணிக்கை, ஏற்கனவே சேர்ந்து இருப்பவர்களைக்காட்டிலும் பலமடங்குக் கூடுதலாக இருக்கும். இவ்வாறு அடுத்தவர் பணத்தைக் கூறுபோட்டுப் பிரித்துக்கொள்ளும் இந்தப்பணத்திருட்டு விளையாட்டிற்கு சம்மந்தப்பட்ட அரசு அதிகாரத்திலுள்ள நபர்களுக்கு, அவர்களின் உதவிக்காகத் தொடர்ந்து காலநிர்ணய முறையில் கையூட்டு கொடுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. இதனால் சம்மந்தப்பட்ட அரசு அதிகாரத்திலுள்ளவர்கள் மேற்பட்டவர்களைக் கண்டும் காணாமல் இருக்கும் உதவியோடு இத்தொழில் பெரும் கொடிய நோயாக

நாளொருமேனி பொழுதொரு வண்ணமாக மிகப்பெரும் வேகத்தில் வளந்துவருவது மிக வேதனைக்குரியச் செய்தியாகும்.

இது சூதாட்டத்தைவிட மோசமான ஏமாற்றுத் தொழிலேயன்றி நியாயமானத் தொழிலாகாது. மக்களின் பேராசைக் குணமும், அடுத்தவர் பணத்தை அபகரித்துக்கொள்ளும் கொடூரப் புத்திகளுமே இதற்கு அடிப்படைக் காரணம் ஆகும். இம்மனித இனத்தைத் திருத்துவதென்பது அவ்வளவு எளிதன்று. எனவே அரசு, பொதுமக்கள் நலனில் அக்கறை எடுத்து, பின்னாளில் பெருங்கூட்டம் ஏமாறப்போவதைத் தடுக்கும் அவசியத்திற்காக, அவசியம் தக்க சட்டநடவடிக்கை எடுக்கவேணுமாய் வேண்டப்படுகிறது. உழைத்து படிப்படியாக முன்னேறும் குணம் குறைந்ததும், தங்களைவிட கூடிய செல்வம் கொண்டவர்கள் போல் மற்றவர்களும் அவ்வாறே வாழ நினைக்கும் தவறான எண்ணம் கூடியதாலும் இச்செயல்கள் கூடிக்கொண்டிருக்கின்றன. நல்வழியில் உழைத்துச் சம்பாதிக்கும் உயர்ந்த கொள்கை சிறுவயதிலிருந்தே வரவேண்டும். ஆனால் இன்று இது சாத்தியமானதாகத் தெரியவில்லை; ஏனெனில் பெரும்பாலானப் பெற்றோர்கள், மற்றவர்கள் தவறாக வாழ்ந்து, தவறான முன்னுதாரணங்களாகத் தெரிகின்றனர், திகழ்கின்றனர், ஒருநாள் எல்லாம் மாறவேண்டும்.

குறிப்பு: இரண்டாயிரமாவது ஆண்டில் சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு தென்னிந்தியாவில் மிகப்பிரபலமாக இயங்கிவந்த கம்ப்யூட்டர் துறையோடு சம்மந்தப்பட்ட மல்டிலெவல் மார்க்கெட்டிங் என்ற வகையில் திருட்டுத் தொழில் செய்துவந்தது ஒரு நிறுவனம். இதைப்பற்றி நூலாசிரியர் சென்னை உயர்நீதிமன்ற மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களுக்கு பொதுநல புகார் கடிதம் அனுப்பியிருந்தார். அதற்கு சென்னை உயர்நீதிமன்றம் மாநில காவல்துறை தலைவர் மூலமாக நடவடிக்கை எடுத்து மேற்படி நிறுவனத்தின் செயல்பாடுகளின் தொடர்ச்சி இல்லாமல் செய்யப்பட்டது.

# திறந்தவெளி கழிப்பு

## சுற்றுப்புற அவலங்கள்

எங்குபார்த்தாலும் குப்பைகள், சாக்கடைகள், சாணங்கள், மனிதக் கழிவுகள் மலிந்துகிடக்கும் நாடுகள் உலகில் பல உள்ளன. இங்கே எல்லாம் இயற்கை குப்பைகளைவிட செயற்கை குப்பைகளே அதிகம். உபயோகித்த பாலித்தீன் கப்புகள், பைகள் இல்லாத இடங்களே இல்லை எனலாம். மதுக்கடைகள், டீக்கடைகள் முழுக்க முழுக்க இந்த பாலித்தீன் பைகளை நம்பித்தான் இயங்குகின்றன.

சாலைகள், தெருக்கள், சந்துபொந்துகள் என எல்லா இடங்களிலும் கோணல் மானலான சாக்கடைகள், போகும்வழித் தெரியாமல் தடுமாறித் தத்தளித்துக்கொண்டிருக்கின்றன. இவைகள் மனிதர்களுக்கு மிகவும் நெருங்கிய நண்பர்களான ஈக்கள், கொசுக்கள், மற்ற விஷப்பூச்சிகள், வண்டுகள் ஆகியவை தங்களை மிக அதிகபட்ச அளவுகளில் தயாரித்துக்கொள்வதற்கு தாராள இடவசதி கொடுத்துவருகின்றன.

இதுபோக கால்நடைகள், நகர சாலைகள், குப்பைத்தொட்டிகள், சாக்கடைகளில் ஜீவனம் நடத்தி தங்கள் பங்கிற்கு சுற்றுப்புறக்கேட்டிற்கு உதவுகின்றன. இந்நாடுகளில் எவரும் அவசியமான எதைப்பற்றியும், எக்காலத்திலும் எண்ணிப்பார்ப்பதாக எண்ண இயலவில்லை. அவரவர்களுக்கு தேவைப்பட்டதை, சுயநல ருசி, சுகம், செல்வம் ஆகியவைகளை மட்டும் அனுபவித்து சந்தோசித்து சல்லாபிக்கிறார்கள்.

## மனிதக்கூட்டத்தின் காலைக்கடன்கள்

இவற்றைவிட, எல்லாவற்றையும்விட கொடுமையானது ஒன்று இங்கு நாள்தோறும் நடந்துகொண்டிருக்கிறது. அதுதான்

மனிதக்கூட்டங்களின் கக்கூஸ் போவது. இங்கு வாழும், நடமாடும் மக்களின் எண்ணிக்கைக்கும் **பயன்படுத்தத் தகுந்த** உபயோகத்தில் இருக்கும் கழிப்பிடங்களுக்கும் விகிதாச்சாரத்தில் சம்மந்தமே இல்லை. இந்த பூமியில் உண்மையிலேயே படுபயங்கரமான நரகம் என்ற ஒன்று உண்டு எனில் அது பொதுக்கழிப்பறைகளாகத்தான் இருக்கமுடியும். அதிலும் நகரப் பேருந்துநிலையங்கள், சினிமாக்கொட்டகைகள், முக்கியப்பகுதிகளில் பெயருக்கு இருந்துகொண்டு அவை **இந்நாட்டுப் பெருமைகளை** உலகுக்கு பறைசாற்றிக்கொண்டிருப்பது இந்த **உலக அதிசய கழிப்பறைகளாகும்**. அத்துடன் சில இடங்களில் திறந்தநிலையில் இருக்கும் அவற்றிற்கான மலம் சேர்க்கும் தொட்டிகள், எக்கச்சக்கமாக உடைந்து பிதுங்கி வெளியில் தள்ளிக்கொண்டிருப்பதையும், அதன் படுபயங்கரத் துர்நாற்றத்தையும் யார்தான் பொறுத்துக்கொள்ளமுடியும்.

இவற்றை அதிகாரத்தில் உள்ளவர்கள் ஏனோ உணருவது இல்லை. ஒருவேளை அப்படிப்பட்டவர்கள் பார்வையிடும் சமயங்களில் மற்ற இடங்களில் நடப்பதைப்போல இயன்ற அளவிற்கு சுத்தம் செய்து வைக்கப்பட்டு ஏமாற்றப்படுகிறார்களா! அல்லது கண்டும் காணாததுபோல் நடந்துகொள்கிறார்களா? என ஒன்றும் புரியவில்லை. ஏனெனில் பல அரசியல்வாதிகளுக்குத் தூய்மை என்பது நன்றாகத் தெரியுமே. அதனால்தான் கஞ்சிப்போட்ட, விளையுயர்ந்த வெள்ளை கதர் ஆடைகள், மடித்த வெள்ளைக் கைத்துண்டு, வெள்ளைச்செருப்புகள், இவைகளுடன் மெலுக்காக, பந்தாவாக வெள்ளைக்கார்களில் வந்திறங்கி அரசியல் செய்கிறார்கள்.

## எல்லாவற்றையும்விட கழிப்பறைகளே முதல் முக்கியம்

இந்நேரத்தில் ஒரு மிக முக்கியமான வேண்டுகோள் வைக்கப்படுகிறது. எது செய்யப்படாவிட்டாலும் பரவாயில்லை.

ஆனால், போதிய அளவிற்கு அதைவிடவும் எதிர்கால மக்கள் சேர்க்கையையும் கணக்கில்கொண்டு மிகக் கூடுதலான அளவில், நல்லக்கட்டுமானம், நிரந்தரப்பராமரிப்பு, தண்ணீர் மின்சார வசதிகளுடன் கூடிய கழிப்பறைகளை மட்டுமாவது நாடு முழுக்கக் கட்டித்தாருங்கள். இதற்குப் பிறகு மற்றத் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தால்கூட போதும் என்று பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது.

இல்லாவிடில் நமது ஆண்கள், பெண்கள் குழந்தைகளில் பலர் சாலைகள், தெருக்கள், ஆறு-குளப்பகுதிகள், ஒதுக்குப்புறம், ஒதுங்காபுறம், இரயில் தண்டவாள பகுதிகள் என எல்லா இடங்களிலும், இக்காலம்போல் எக்காலத்திலும் **வெளிப்படையாக வெளியே போய்கொண்டிருக்க** வேண்டியதாகிவிடும். ஆனால் இவ்வகையில் போய்க் கொண்டிருப்பவர்கள் வேறு எதைப்பற்றியும் கவலைப்படாமல் புகைப்பிடிப்பதுடன், பார்ப்பவன் பார்த்துவிட்டுப் போகட்டும் என பலவித சேஷ்டைகளையும் செய்து முக்கிக் கொண்டிருப்பர். இதையெல்லாம் இந்தியாவில் இன்னும் எத்தனை காலத்திற்கு அனுபவிப்பது என்று தெரியவில்லை. ஐயோ! பாவம் நாம்.

## பாவப்பட்ட பெண்கள்

இவர்களில் பெண்கள் பல இடங்களில், பலவிதமாக பொதுஇடங்களில் இயற்கை உபாயங்களை கழித்துக் கொண்டிருக்கிறார்கள். சிலர் அச்சமயத்தில், அப்பகுதிக்கு ஆண்கள் எவரேனும் வந்தால் துணியைக் கீழேவிட்டு எழுந்துகொண்டு அவர்கள் சென்றபிறகு, திரும்பவும் கழிக்க ஆரம்பிப்பார்கள். சிலர் திரும்பி நிற்பார்கள். இப்போது ஒரு புது பேஷன் வந்திருக்கிறது.

உட்கார்ந்த நிலையிலேயே உபாதையை கழித்துக் கொண்டிருப்பதற்கு, நிறுத்தி இடையூறு செய்துகொள்ளாமல், ஒருவேளை அதற்கு **இயலாத டென்சனில்**, தங்களின் கீழ்

உடைகளான புடவை மற்றும் நைட்டிகளை மேலே தூக்கி, கீழே தெரிந்தாலும் பரவாயில்லை என முகத்தை மூடிக்கொள்கின்றனர். அந்நேரங்களில் எவன் வேண்டுமானாலும் பார்த்துவிட்டுப்போகட்டும் எங்களுக்கு ஒன்றும் கவலையில்லை என இலவசக் காட்சிகளைக் காட்டுகின்றனர்.

இந்தக்கொடுமை ஒரு ருஷ்ய கலாச்சாரத் திரைப்படம் ஒன்றினை நினைவுக்கு கொண்டுவருகிறது. சிவந்த நிறமுடைய ருஷ்ய கிராமத்துப்பெண்கள் பலர் மிக உயரமாக, ஒய்யாரமாக, அழகான தோற்றத்தில் நீண்ட தொளதொளப்பான கௌவுன் அணிந்து மண்நிறைந்த பாலைவனப் பகுதியில் ஏதோ வேலைமுடிந்து வந்துகொண்டிருப்பார்கள். அப்போது அப்பகுதியில் திடீரென அடிக்கும் வேகமான சூறாவளி மணல்புயலினால், அங்குள்ள பாலைவன மணல் அதிகளவில் பறந்து அவர்கள் மீது அடிக்கத் துவங்கும். முகத்தில் மணல் அடிகளைத் தாங்கஇயலாமல் போகவே, அச்சமயத்தில் மிக அவசரமாகக் கீழேகுனிந்து தங்கள் ஆடையின் அடிப்பகுதியை பிடித்து மேலே தூக்கி தங்கள் தலை முகத்துடன் கூடிய மேல் பகுதியை மூடிக்கொள்வார்கள். மணல்காற்று அடிக்கும்வரை அங்கேயே நிற்பார்கள். கீழ்பகுதியில் மணலடித்து ஏற்படும் வலிகளைத் தாங்கிக்கொண்டு உடல் நெலிந்தனர். இதில் என்ன வேடிக்கையெனில், அப்பெண்களில் ஒருவரும் கீழ்புற உள்ளாடை அணியாமல் கீழ்பகுதி அம்மணமாய் இருந்தது. திரைப்படம் பார்த்த பலருக்குப் பலவிதமாக இருந்திருக்கும். நல்லவேளையாக அப்பெண்களுடன் ஆண்கள் எவரும் வருவதாகக் காட்டப்படவில்லை!!

இது அவர்களின் கிராமப்புற வாழ்க்கை முறையாக இருந்திருக்க வேண்டும். இருபது ஆண்டுகளுக்கு முன் வந்த திரைப்படம் என்பதால் இப்போது அங்கு நிலைமை மாறியிருக்கலாம். இருப்பினும் ருஷ்ய நாட்டின் அனுமதி அங்கீகாரத்துடன் இந்தியாவில் நடத்தப்பட்ட ருஷ்ய

கலாச்சார திரைப்பட விழாவில் காண்பிக்கப்பட்ட திரைப்படங்களில் இதுவும் ஒன்று என்பதால் அந்த நடைமுறை அங்கு உண்மையாக இருந்திருக்க வேண்டும்.

இதேபோல் துணியால் மூடிக்கொள்ளும் நம்முடைய கலாச்சாரமும் உண்மையாக இருக்கிறது. இங்கே இந்தவகை கலாச்சாரத்திற்கு முடிவுகட்டவேண்டிய அதிகாரம் முடிவு எடுப்பவர்கள் கைகளில், மனங்களில் உள்ளது. ஏழை குடியிருப்பு பகுதிகள், பொது இடங்கள் இங்கெல்லாம் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில், தொகுப்பு கழிவறைகளை நீண்டகாலம் உழைக்கும் வகையில் உடனடியாக உருவாக்குவதே உன்னத பணியாகும்.

# நகரங்களில் இயற்கை உபாதைகள்

உலகத்திலுள்ள நாடுகளின் வளர்ந்த மேன்நிலைத் தன்மைகளை எடுத்துக்காட்டுவதற்கு தொழிற்சாலைகள், உற்பத்தி, இயற்கை வளம், செல்வம், தனிநபர் வருமானம் என்பவைகளைக் கூறலாம். இவைகளை விட நகரங்கள், பெருநகரங்களிலுள்ள கழிப்பறை வசதி, குப்பைகள், சாக்கடைகளின் நிலைமையைக் கையாளும் தன்மை, பராமரிப்பு இவற்றைப் பொருத்துத்தான் மேன்நிலைமை தெரியும் என்று சிலேடையாகச் சொன்னால் அது நகைச்சுவை அன்று, மாறாக உண்மை நிலையோடு கூடிய அவசியமானது என்பதுதான் உண்மை.

## சேமிக்க இயலாத இயற்கைக் கழிவுகள்

விலங்குகளுக்கும், மனிதனுக்கும் எவ்வளவுக் கெவ்வளவு வாய் வழியாக வயிற்றுக்குள் போகிறதோ அவ்வளவுக்கவ்வளவு கழிவுகளாகி வேர்வைகளாக தோலின் மூலமாகவும், பெரும்பாலும் கீழே உள்ளே இரு துவாரங்கள் வழியாகவும் வெளியாக வேண்டும். திட, திரவ கழிவுகள் எனத் தனித்தனியாகக் கட்டாயம் வெளியே வந்தே ஆக வேண்டும். இல்லையெனில் ஆபத்துதான்.

அந்தந்த நேரத்தில் அவைகள் வெளியாகவில்லை என்றால் அப்புறம் பல நோய்களுக்கும் அதுதான் பவுண்டேசன் மற்றும் கிரியேசன். சிலர் சூழ்நிலைக் காரணமாகவும், தவறானப் பழக்க வழக்கங்களினாலும்

திடக்கழிவை நாள்கணக்கில் உடலில் இருந்து வெளியில் விடாமல் வயிற்றுக்குள்ளேயே சேமித்து வைப்பது ஆபத்தைத் தரும். திரவக் கழிவான சிறுநீரை குறிப்பிட்ட நேரத்திற்கும் மேல் மணிக்கணக்கில் மூத்திரப்பையை நிரப்பி அதற்கு மிதமிஞ்சிய பளுவைக் கொடுப்பதும் தவறு. இது தங்களைத் தாங்களே கொஞ்சம் கொஞ்சமாகப் படுகுழியில் தள்ளும் காரியத்தைச் செய்து வருவது போன்றதாகும்.

எந்த மனிதனும் உழைக்கிறவனோ அல்லது சோம்பேறியோ எதைச் செய்கிறானோ, இல்லையோ மலத்தை தினசரி ஓரிருமுறை வெளியாக்கி விடவேண்டும். இதுகூட முடியவில்லையென்றால் அவன் தண்டம்தான். உணவுகளின் வகை, தன்மை, அளவு, தேவை, உழைப்பு, பழக்கம் இவைகளைப் பொறுத்துத்தான் மேற்படி சங்கதிகள் வெளிவருவதில் உள்ள வேகமும் சோகமும் அடங்கியிருக்கிறது. ஆகவே மனிதன் சாகும் வரை அது எளிதில் வரும்படியாக அவரவர்களுக்கு ஏற்புடைய உணவு வகைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். வயதாக ஆக குறிப்பாக இரவு உணவைக் குறைத்தோ, நிறுத்தியோகூட சிரமமுள்ளவர்கள் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம்.

## வெளியிடக் கழிப்பு

மற்ற அநேக மிருகங்கள் நான்கு கால்களில் வாழ்ந்து வாய் வழியாய்ச் சென்றதை பின்புறக் கழிவுப்பாதை வழியாக படுக்கைக்கோட்டு வசத்தில் செரிமான நிர்வாகம் செய்து கழிவுகளைப் பூமிக்கு அனுப்புகின்றன. ஆனால் முக்கியமாக இரண்டுகால் பிராணியாகிய மனிதன் மேலிருந்து கீழாக புவியீர்ப்பு விசையால் இழுக்கப்பட்டும் சிலர் அவதிப்பட்டே

பூமிக்கு அனுப்புகிறார்கள். இதெல்லாம் ஒருபுறமிருந்து தொலைக்கட்டும்.

காட்டு விலங்குகளோ, வீட்டு விலங்குகளோ பல இடங்களில் பிறருக்குத் தொந்தரவு இல்லாமல் மனிதர்கள் போல அந்தளவுக்கு நாற்றமுமில்லாமல் மிகக் கவனத்துடன் புத்திசாலித்தனத்துடன்கூட இயற்கைக் கடன்களை, உபாதைகளை நிறைவேற்றிக் கொள்கின்றன. ஆனால் மனிதர்களில் சிலர் மிருகங்களை விடக் கேவலமாக இயற்கை உபாதைகளை முடித்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்திலும், துயரத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது.

கிராமங்களில் அங்குள்ள ஆடவரும், பெண்டிர் சற்று சிரமத்துடனும் எப்படியோ பரந்து விரிந்து கிடக்கும் வயல், வாய்க்கால், தோப்புத்துரவு, தரிசு, கொல்லை எனப் பல பகுதிகளையும் இதற்குக் காலங்காலமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். அவர்களுக்கு இது ஒரு பெரியப் பிரச்சினை என்பதில்லாமல் வாழ்ந்து வருகிறார்கள் எனலாம்.

ஆனால் நகரங்களிலும், தினசரி மக்கட் பெருக்கம் உள்ள பெரு நகரங்களிலும், அங்குள்ள ஏழை, கீழ்த்தர, நடுத்தர மக்கள் மற்றும் ஆயிரம் லட்சக்கணக்கில் சாலைகளில் நடமாடும் கூட்டத்திற்கும் இது ஒரு மிகப் பெரிய பிரச்சனையாகும். இதைப் பலரும் இது நாள் வரையில் சரியாக உணர்ந்து கொண்டதாகவே தெரியவில்லை என்பதுதான் சத்தியமாக உண்மை.

## பெயருக்காக பொதுக்கழிப்பறைகள்.

அவ்வப்போது ஆங்காங்கே பெயரளவில் கட்டப்படும் ஒரு சில அறைகள் கொண்ட கழிப்பறைகள் ‘யானைப் பசிக்குச் சோளப்பொரி’ என்னும் நிலையிலிருப்பதால் யானைக்கும் சோளப்பொரிக்கும் உள்ள வித்தியாசத்தைப் போல இருக்கிறது. இங்கே தேவைக்கும் கிடைத்தலுக்கும் உள்ள வித்தியாசம் பெரிதாக அமைந்து விடுவதால் ஒரு சில நாட்களிலேயே பல நியாயமான காரணங்களால் அந்தக் கழிப்பறைகள் வீணாகி சீரழிந்து செயலற்றுப் போய் விடுகின்றன.

மக்கள் அதிகம் நடமாடும் பொது இடங்களான நகர, பெருநகரப் பேருந்து நிலையங்கள், கடைத் தெருப்பகுதிகள், ரயில் நிலையங்கள் போன்ற பகுதிகளில் காலை முதற்கொண்டு நாளின் எல்லா நேரங்களிலும் இயற்கையின் படுஅவஸ்தைகளோடு மனிதர்கள் துன்பப்படுகிறார்கள். அவர்கள் வரிசையில், போட்டியில் வளைந்து, நெளிந்து வாடும் மனநிலையும், உடலின் வேதனையும் பெரும் துன்பத்தை ஏற்படுகிறது. சிலர் எந்த நேரத்திலும் நிற்கும் இடத்திலேயோ, நடக்கும் நேரத்திலோ வெளியில் போய்விடுமோ என்ற நிலையில் துவளுகிறார்கள். அதைச் சிரமத்துடன் கட்டுப்படுத்தி பலர் எப்படியோ அந்த மரண அவஸ்தையில் ஜெயித்து ஒரு சிலர் தோற்று இப்படியாக நடக்கும் மனிதர்களின் வாழ்க்கைச் சக்கரம் ஒவ்வொரு நாளும் ஒருவித கொடுமை மற்றும் பாவத்துடன் ஓடிக் கொண்டேயிருக்கிறது.

இதே நிலைமை சாலைகளில் நடந்து போவோருக்கும் பேருந்துகளில் பயணம் செய்வோருக்கும் மற்ற குடிமக்களுக்கும் ஏற்படுகிறது என்பதும் அனுபவ உண்மை. இதைப் பலரும் பல சமயங்களில் அனுபவித்து நொந்து செத்த துன்பங்கள் தொடர்ந்து கொண்டிருப்பதும் அவ்வாறே காலச் சக்கரம் போய்க் கொண்டிருக்கிறது என்பதும் மகாவேதனை.

நகர, பெருநகரப் பகுதிகளில் ஏழை குடியிருப்புப் பகுதிகளில் பெரும்பாலும் போதிய கழிப்பிட வசதியே இல்லை. மேற்படி சூழ்நிலையில் அக்கம்பக்கத்தில் உள்ள திறந்த வெளியிடங்கள், சாலைகளின் ஓரங்கள், மரங்களின் மறைவான பாதுகாப்புப் பகுதி, முக்கியமாக ரயில் தண்டவாளங்களின் இருபுறங்களும் கழிப்பிடங்களாக இவைகள்தான் அதற்குரிய சட்டப்படியான இடங்கள் என்று பல காலமாகப் பயன்படுத்தி வருகிறார்கள்.

இயற்கை கடமைகளை முடித்துக் கொண்டிருப்போர் சிலர் அவ்வழியே வருவோர் போவோர் எவரைப்பற்றியும் சற்றும் பொருட்படுத்தாமல் வெட்கப்படாமல் அவர்கள் பணியைச் செவ்வனே செய்து கொண்டிருப்பார்கள். இதில் ஆண் பெண் பேதமெல்லாம் இல்லை. இவ்வாறு கழிவு செய்யும் பெண்களுக்கு, முற்காலத்தை விட தற்காலத்தில் அபரிமிதமான மக்கள் பெருக்கத்தினாலும் சூழ்நிலைக் கொடுமையாலும் வெட்கமென்பதே இல்லாமல் போய்விட்டதோ? என்று கலக்கம் தரும் அளவுக்கு நிலைமை போய்க் கொண்டிருக்கிறது. பலரும் இதைப்பற்றி உணர்ந்தவராக, குறையாக நினைப்பவராக, புரிந்தவராக இல்லையே என்பது மனதிற்கு மிகவும் நெருடல் தருகிறது.

## தேவையற்றவைகளுக்கு மட்டும் பெரும் ஆடம்பரம்

இந்தத் துன்பங்களுக்கெல்லாம் ஒரு முடிவு கட்டியே ஆக வேண்டும். மனிதன் தினசரியோ வாரமொருமுறையோ குளிப்பதற்குக் குளியலறைகள் இல்லாவிட்டால் கூட பரவாயில்லை. பொது இடங்களில் அவை இல்லை என்றால் ஒன்றும் குடி முழுகிப் போய் விடாது. ஆனால் நிச்சயமாக, சத்தியமாக ஏழைகள் வாழும் அனைத்துப் பகுதிகள் மற்றும் நகர, பெருநகரத்தின் முக்கியப்பகுதிகள் அனைத்திலும் எது இல்லையோ இருக்கிறதோ அதைப்பற்றிக் கவலையில்லை, ஒன்றே ஒன்று போதுமான அளவில் இன்னும் சொல்லப்போனால் அதிக அளவில் அதாவது இந்தக் கழிப்பறைகள் நீண்ட நாள் உபயோகத்தில் வரும்படியாக அனைத்து வசதிகளுடனும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இந்தப் பூமியில் எததெற்கோ யார்யாரோ என்னென்னவோ வகைகளில் படுபயங்கர பரிமாணத்தில் சிறிதும் தேவையற்ற வீண் ஆடம்பரச் செலவுகளைச் செய்து வருகிறார்கள். ஆனால் மனிதனைப்பற்றி மனிதன் உண்மையாகவே சிந்திப்பதாக நினைத்துக் கொள்ள இயலவில்லை. தினசரி கூத்துகள், கும்மாளங்கள் மற்றும் அக்கப்போர்களுக்கு, போட்டா போட்டிகளுக்கு எவ்விடத்திலும் குறைவில்லை.

ஆனால் மனிதனின் உணவு அதனின் ஒரு பகுதியாகிய தண்ணீருக்கு அடுத்தப்படியாகத் தேவைப்படும் இயற்கையின் கட்டாயமான நம்பர் ஒன்று, இரண்டுக்கான, ஓரளவு நாகரீக இடங்களுக்குத்தான் பஞ்சமாயிருக்கிறது. மனிதனின் இரண்டாவது மூன்றாவது அடிப்படைத்

தேவைகளான உடை, இருப்பிடத்தைப் பற்றிக்கூட பின்னர் கவலைப்பட்டுக் கொள்ளலாம். மக்களுக்கு உணவு, உடை, இருப்பிட வளங்களுக்கான வியாபாரச் சேவைக்குக் கடும்போட்டி ஏற்கனவே நிலவுகிறது. தினசரி புதுப்புது மனிதர்கள் இந்த வியாபாரப் போட்டியில் கலந்து மக்களுக்கு அயராது ‘சேவை’ செய்து கொண்டிருப்பதால் மேற்படி விஷயங்களைப் பற்றி யோசிக்கக் கூட வேண்டியதில்லை.

## சேவையுடன் ஒரு வியாபாரம்

ஆனால் இந்தக் கழிப்பறை சேவைக்கு மட்டும் அரசின் உள்ளாட்சித் துறைக்குக் கீழ் வரும் முனிசிபாலிட்டி, கார்ப்பரேசன் என்ற அமைப்புகள்தான் செய்யவேண்டும் என்றாகி விட்டது. இந்த உயரிய மனித சேவையிலும் அரசு நிர்வாகத்துடன் தனியாரும் இலவச சமூக சேவையாகவோ அல்லது சிறிய, நடுத்தர கட்டணத் தொகையுடன் கூடிய சேவையுடன் இணைந்த ஒரு வியாபாரம் போன்றோ செய்யலாமே. இதன் மூலம் இந்த நாட்டின் மாபெரும் கௌரவ, மானப் பிரச்சினை விரைவாகத் தீர்க்கப்படலாம்.

தற்போது நகர, பெருநகரங்களின் பேருந்து நிலையங்களில் உள்ள பெரும்பாலான இலவச மற்றும் கட்டணக் கழிப்பறைகளின் அவல நிலைகளை வார்த்தைகளால் சொல்லி விவரிக்க முடியாது. மிக மோசமாக உடைந்து, தெறித்து பயங்கர அழுக்குக் கறையேறிய தரைகள், சுவர், கதவுகள், கழிப்புப் பீங்கான், கால் வைக்குமிடம் மற்றும் கசமுசா என்ற நிலையில் மின் இணைப்பு வசதியும் கொண்டதாக இருக்கின்றன.

மிகக் கொஞ்சமாகவோ அல்லது தண்ணீரே வராத தண்ணீர்க் குழாய்களுடனோதான் அவை இருக்கின்றன என்பதை ஒருமுறை போய் வந்த எவரும், இப்போது போய் பார்க்கும் எவரும் ஒத்துக் கொள்வார்கள்.

இந்தக் கழிப்பறைகள்தான் பூமியின் மேற்பரப்பிலே உள்ள முதல் வகையான நரகம் என்றால் அது மிகைப்படுத்தி சொல்லுவதாகாது. இங்கே போய் வருபவர்கள் அநேகருக்கு கால் இடுக்கில், தொடையில், புட்டங்களில் மோசமான தோல் நோய் வருவதற்குப் பிரகாசமான வாய்ப்பு இருந்து வருகிறது. நோய் தொற்றி சதா சொரிந்து வீணை மீட்டிக் கொண்டிருப்போரையும் அவர்கள் மூலமாக வீட்டுக் கழிவறையை உபயோகிக்கும் குடும்பத்தினருக்கும் ஏனையோருக்கும் தோல் தொற்று நோய்கள் இலவசமாகவே கிடைக்கின்றன. அனைவரும் அங்கே எளிதாகப் பெற்று சொரிந்து சொரிந்து புண்ணாகும் சோகம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

ஆகவே, ஏழைக் குடியிருப்புப் பகுதிகள், பேருந்து நிலையங்கள் போன்ற மக்கள் அதிகம் வாழும், கூடும், வந்து போகும் பொது இடங்களில் இப்போது பெயரளவுக்கு இருப்பது போல் அல்லாமல் மிக அதிக அளவில் கழிப்பறைகள் ஏற்படுத்த வேண்டும். அவற்றை இலவசமாக அல்லது இரண்டு மூன்று நிலை கட்டணத்துடன் பலதரப்பட்ட மனிதர்கள் பயன்படுத்தும் வேறுபட்ட வசதிகள், அந்தஸ்துடன் அமைத்தால் இந்த சமுதாயம் பெரும் புண்ணியம் பெறும்.

இதை அரசு நிர்வாகத்துடன் தனியாரும், தொழில் நிறுவனங்களும், கூட்டுறவு முறையில் பொது மக்களும் கூட நிர்மாணம் செய்து ஒரு வியாபாரமாகக் கூடச் செய்ய

முடியும். உதாரணமாக நல்ல கட்டுமான அமைப்புடன் நீண்ட இருபக்கமும் மூன்று நான்கு அடுக்குகள் கொண்ட பலமாடிக் கழிவறைகளை உருவாக்கலாம் ஒரு வரிசைக்குச் சுமார் இருபத்தைந்து முதல் ஐம்பது அறைகள் வீதம் ஒரு கட்டிடத்தில் நூறு முதல் நானூறு அறைகளை ஏற்படுத்தலாம். அதில் அதிக கட்டணத்திற்குரிய நட்சத்திர அந்தஸ்து பகுதிகளைக் கூட ஒதுக்கி மக்களுக்கு வழங்கலாம்.

## கழிப்பறை உபயோகம்

மக்கள் வெளியிடங்களை இயற்கை உபாதைகளுக்கு உபயோகிப்பதை சரியான சட்ட அமல் மற்றும் காவல்துறை நடவடிக்கை மூலம் மிகவும் கண்டிப்புடன் தடுத்து நிறுத்த வேண்டும். கழிப்பறைகளையே கட்டாயம் உபயோகிக்க வேண்டும் என பழக்கப்படுத்தினால் நமது நாட்டின் வாழ்க்கை முறை, சுற்றுச்சூழல், கௌரவம், அந்தஸ்து, பழக்க வழக்கங்கள் மேன்மை பெறும். இதனால் பரவும் நோய் வகைகள் தடுக்கப்பட்டு இவைகளினால் நல்ல பல மாற்றங்கள் ஏற்பட்டு நமது நாடு உலகத்தின் தலை சிறந்த நாடுகளுள் ஒன்றாக ஆகிவிடும். அந்நாள் விரைவிலேயே வர நாமனைவரும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.

இந்தியாவில் வெளிப்புறங்களில் மனிதன் கழிவு போவதை கிண்டலடித்து ஜோக் ஒன்று சொல்வார்கள். அதாவது அமெரிக்கர் ஒருவர் இந்தியா வந்து சுற்றிப்பார்த்து விட்டு போகும்போது தன் இந்திய நண்பரிடம் ஒன்றைச் சொன்னாராம். உங்கள் நாட்டில் மனிதர்களும்

விலங்குகளைப் போலத்தான் இயற்கை உபாதைகளை நிறைவேற்றிக் கொள்கிறார்களா என நக்கலாகக் கேட்டு அவமானப்படுத்தினாராம்.

அதை மனதில் கொண்ட இந்திய நண்பர் எப்படியும் இவரை பழிக்குப் பழி வாங்கி விட வேண்டுமென்ற எண்ணத்தில் அமெரிக்கா சென்றார். அந்த அமெரிக்கருடன் காரில் சென்று கொண்டிருக்கையில் ஒரேயொருவர் மட்டும் அங்கேயும் வெளிப்பகுதியில் மலம் கழித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார். மகிழ்ச்சியடைந்த இந்தியர் இதுதான் சமயம் இந்த அமெரிக்கரை அவமானப் படுத்துவதற்கு என்று நினைத்து இதை அமெரிக்கரிடம் மிகவும் கேவலமாக உங்கள் நாடடிலும் இப்படித்தானா என்றவுடன், ஆச்சரியமும் கோபமும், அவமானமும் அடைந்தார் அமெரிக்கர்.

அந்த மனிதரை மிகக் கோபமாக, சத்தமாக, அதட்டலுடன் கூப்பிட்டதும் ஓடி வந்த அந்த மனிதரிடம் நீ யார் என அமெரிக்கர் கேட்க நான் ஒரு இந்தியன் என்றதும் இந்திய நண்பர் வெட்கித் தலைகுனிந்தாராம். உண்மையில் அந்த இந்திய நண்பராக, ஒரு பெரும் தலைவரின் பெயரைப் பயன்படுத்துவது உண்டு. இறந்து போய்விட்ட அவரை அவமானப்படுத்தக்கூடாது என்று தவிர்க்கப்பட்டுள்ளது. இது யாரையும் புண்படுத்துவதற்காகச் சொல்லப்படவில்லை. நகைச்சுவையாகவே மட்டும் எடுத்துக் கொள்ளவும்.

நகைச்சுவைக்காகக் கூட இம்மாதிரி சூழ்நிலைகள் நம் நாட்டில் இனிமேல் இருக்கக்கூடாது என்பதே நம் அனைவரின் விருப்பமாகவும், எண்ணமாகவும் இருக்க வேண்டும்.

# சாலை கோவில்கள்

மத நம்பிக்கையும், தெய்வ நம்பிக்கையும் தனிமனித சுதந்திரம் விருப்பத்தைப் பொறுத்தது. இதில் எவரும் எவ்வகையிலும் தலையீடு செய்யக் கூடாது. ஒரு சிலரின் தன்னம்பிக்கையுடன் கூடிய மனத்தளவிளான தெய்வ நம்பிக்கையைத் தவிர, பெரும்பாலனவர்கள் வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று தெய்வங்களை காலங்காலமாக வழிபட்டு வருகின்றனர்.

தெய்வ வழிபாடுகளைக் குறை கூறி விமர்சனம் செய்பவர்களும் இருக்கிறார்கள். இதை நாம் ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டியதில்லை. தெய்வ வழிபாடு ஒரு ஆழ்ந்த தியானம் செய்வதற்குச் சமமானதாகும். இது பலரும் அவ்வளவாக அறியும் நிலையிலில்லாமல் இயற்கையாகவே அமைந்துவிடுகிறது எனக் கூட கூறலாம். நிச்சயமாக மனதை ஒருநிலைப்படுத்தும் எந்த வகையிலான தியானத்திற்கும் உடல் நிலையிலும், மன நிலையிலும் பலன் ஏற்படும் அதிசய வாய்ப்புண்டு.

முறையான கால சுழற்சியில் நிரந்தரமாக குறிப்பிட்ட நேரத்தில் அது உண்மையாக, ஆத்மார்த்தமாக தெய்வ வழிபாடுகளின் மூலம் இயற்கையாக நிகழும்போது உடலுக்குள் ஓர் பேரானந்தம் நிகழத்தான் செய்யும். இதை சிலரே மெய்யாக உணர முடியும். ஆனால் பலரும் பலன் பெறுவார்கள். பொய்யாக, போலித்தனமாக, போதை மயக்கத்தில், உடல் தளர்ச்சியில், அசதியில் தெய்வ

வழிபாடு செய்பவர்களுக்கு அது அவ்வளவாகக் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை.

## ஆரம்ப வழிபாட்டுத் தலங்கள்

அப்படியான தெய்வ வழிபாடுகளைச் செய்வதற்கு மனிதன் தொன்றுதொட்டு குறிப்பிட்ட இடங்கள் என்று இல்லாமல் பல இடங்களிலும் வழிபாட்டுத்தலங்களை நிறுவியிருக்கிறான். வழிபாட்டுத்தளங்களை நிறுவுவதில் அக்கால மன்னர்கள், செல்வந்தர்கள், மதத் தலைவர்கள் ஆகியோரின் பங்கு குறிப்பிடத்தக்கது.

பெரிய பெரிய வழிபாட்டுத் தலங்களை மிகுந்த கலை நயத்துடன் மலை, குன்றுகளின் முகடுகளிலும், உட்புறத்திலும், குகைகளிலும் மற்றும் ஆறுகளின் ஓரங்கள் சில இடங்களில் மனிதன் மிக சிரமப்பட்டே சென்று வழிபட்டு வரவேண்டுமென்று கடுமையானக் காட்டுப்பகுதிகள், கடுங்குளிர்ப் பகுதிகள் என பல்வேறு வகையான இடங்களிலும் அமைத்திருக்கிறார்கள். மிக நேர்த்தியாக இடத்தேர்வு செய்து மிகமிகச் சிரமப்பட்டு உறுதியான ஈடுபாட்டுடன் அதிசயங்களையும், ரகசியங்களையும், அக்காலக் கட்டிடத் தொழில் நுட்பங்களையும் கலக்கி புரியாத கலவை செய்து என்றும் புதினங்கள் என்னும் ஆலயங்கள், மசூதிகள், சர்ச்சுகள், புத்தமத, சீக்கிய மத இன்னும் அனைத்து மதக் கோவில்களும் அமைக்கப்பட்டுள்ளன.

குறுநில மன்னர்கள், ஜமீன்தார்கள், மைனர்கள், பெரிய, சிறிய செல்வந்தர்கள் போன்றோரும் குடியிருப்புப் பகுதி மக்கள் ஒன்றிணைந்தும், தொடர்ந்து பல வழிபாட்டுத் தலங்களை பல பகுதிகளிலும் உருவாக்கி வந்தார்கள்.

அக்காலக் கட்டங்களில் சாலைகளில் மனித நடமாட்டம், போக்குவரத்து மிகமிகக் குறைவாக இருந்ததாலும், பல இடங்கள் மனிதன் எளிதில் செல்ல முடியாத அடர்ந்த காடுகளாக இருந்தாலும், மாலையிலிருந்து காலை வரை வெளியில் செல்ல முடியாத இருட்டுப் பயம் இருந்து வந்தது. எனவே, குடியிருப்புப் பகுதிகளுக்கு அருகிலேயே உள்ள சாலைகளின் ஓரத்திலும், முச்சந்தியிலும் வழிபாட்டுத்தலங்களை அமைப்பதை வழக்கமாக்கி கொண்டிருந்தனர். இது அப்போதைய மனித வாழ்க்கைக்கு அவசியமானதாக இருந்திருக்க வேண்டும்.

பின்னாளில், தொடர்ந்து ஏற்பட்ட மக்கட் பெருக்கம், வாகனப் பெருக்கம், காடுகள் அழிந்து வீடுகள், தொழிற்கூடங்கள், கல்விக் கூடங்கள், அலுவலகங்கள் எனப் பலவற்றாலும் வளர்ச்சி அடைந்து பரந்து விரிந்து விட்டது. ஏற்கெனவே இருந்த அதே அளவு சாலைகளிலேயே இவ்வளவு வளர்ச்சியின் மாபெரும் வேகத்தைக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. இதில் துரதிஷ்டவசமாக சில சிறு கோயில்கள் சாலைகளில் தனியாக நீட்டிக் கொண்டிருப்பதும், சில இடங்களில் சாலையின் வசதியான தொடர்ச்சியான தொலைபார்வை வாய்ப்பை தடை செய்வதும் சற்று சிரமமாகத் தான் உள்ளது.

முக்கியமாக வாகனப் போக்குவரத்து, மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடக்குறைவான முச்சந்தி பகுதிகளில் மிக முக்கியமான இடத்தில் சிறு கோவில்கள் அமைக்கப்பட்டு போக்குவரத்துக்கு சிக்கலாகி விடுகிறது. மத வழிபாட்டுத் தலங்களே தற்கால மனித நேய போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருப்பதென்பது மனதில் சற்று நெருடலாகவே இருக்கிறது.

தெய்வங்களும், தெய்வ வழிபாட்டுத்தலங்களும் மனிதனுக்காகவும், மனிதனின் நல்ல வாழ்க்கைக்கும்தான் எனலாம். அப்படியான சூழ்நிலையில் இவ்வகையான இடர்பாடுகளை சரிசெய்து கொள்வதற்கு அத்தெய்வங்கள் நிச்சயமாக மனிதனுக்குப் பக்கபலமாக இருக்கலாமே தவிர அத்தெய்வங்கள் வருத்தமடைய மாட்டார்கள். இதற்கு அனைத்து மக்கள் மத்தியிலும் காலத்திற்கேற்ற நல்ல விழிப்புணர்வும், புரிந்து ஏற்றுக்கொள்ளும் சிறந்த மனநிலையும் வரவேண்டும்.

இப்போதைய சூழ்நிலையில் சாலைகளில் இடைஞ்சலாக இருக்கும் மத வழிபாட்டுத் தலங்களை அப்பகுதி மக்களே ஒன்றுசேர்ந்து இடமாற்றம் செய்யலாம். போக்குவரத்துக்கு இடையூறாகஉள்ள வழிபாட்டுத் தலங்களை அப்பகுதியில் அருகிலேயே உள்ள இடைஞ்சல் இல்லாத பொது இடத்தில் அரசின் அனுமதி பெற்றோ அல்லது இடம் வாங்கியோ தர்ம சிந்தனையாளர்களிடம் இடத்தை நன்கொடையாகப் பெற்றோ இட மாற்றம் செய்து கொள்ளலாம். அந்த வழிபாட்டுத் தலத்திற்கும், அந்த தெய்வத்திற்கும் புதுப் பொலிவு கூட்டி, முடிந்த வரை பழைய வழிபாட்டுத் தலத்தின் அப்பட்டமான அதே மாதிரியில் அமைத்து விடலாம்.

பழைய தலத்தின் அனைத்து குறிப்புகள், விபரங்கள், இடமாற்றியதற்கான காரணம், காலம், ஈடுபட்ட நபர்கள் ஆகியவற்றை புதிய வழிபாட்டுத் தலத்தில் கல்வெட்டுகளில் குறிப்பிடலாம். பழையதும், புதியதுமான இரட்டை ஆலயங்களுக்கும் சிறப்பு சேர்த்து மக்களுக்கு ஒரே இடத்தில் வழிபட வாய்ப்பு ஏற்படுத்துவதுடன் அப்பகுதி மக்களையும்

ஒருங்கிணைத்து செயல்பட வைக்கும் ஒரு நல்ல வாய்ப்பு கிட்டும். வழிபாடுகளையும், திருவிழாக்களையும் இன்னும் சிறப்பாக சாலைப் போக்குவரத்துத் தொந்தரவுகள் இல்லாமல் கொண்டாடி மகிழலாம்.

இவ்வகையில் சாலைகளில் தற்கால போக்குவரத்திற்கு இடையூறாகக் கருதப்படும் வழிபாட்டுத் தலங்களை இடம் மாற்றம் செய்வதில் அரசு, அரசுத் துறை மற்றும் தனியார் நிறுவனங்கள் ஈடுபடுவதை விட அப்பகுதி பொதுமக்களே செய்வதுதான் நல்லது. அதற்கு அவர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை அரசேகூட கூறலாம்.

இனிமேல் சாலையோரத்தில், மத்தியில் வீற்றிருக்கும் தெய்வங்களையும், வழிபாட்டுத் தலங்களையும் அவைகளை மனதார வழிபடும் மக்களுக்கு எதிரியாக இடையூறாக எண்ணும் நிலைமாற வேண்டும். அவைகள் நமக்காகவே நமது மகிழ்ச்சிக்கும் சௌகரியத்திற்குமானதே என்னும் நிலையில் தங்களின் பழைய இடங்களை மாற்றிக் கொள்ள அத்தெய்வங்கள் சற்றும் தயங்க மாட்டார்கள், மாறாக உதவிதான் செய்வார்கள். ஆனால் மனிதன் நினைக்க வேண்டும், செயல்படுத்த வேண்டும்.

இன்றைக்கும் பல புதிய வழிபாட்டுத் தலங்களை அவரவர்க்கு இஷ்டப்பட்ட, கிடைத்த, இருக்கிற இலவச இடங்களில்தான் நிறுவிக் கொள்கிறார்கள். தெய்வங்கள், சாலையில் இடைஞ்சலாக அவர்களுடைய கூடங்களை வைக்கச் சொன்னதில்லை; சொல்லவும் சொல்லாது. எல்லாம் இந்த மனிதன் செய்கிற, செய்து கொண்டிருக்கிற

தொல்லைகள். இதற்கு மேல் தெய்வங்களை குறை கூறாதீர்கள்; மனமிருந்தால் மாற்றமுண்டு.

சுயநல மனிதர்கள் சிலர் இடைக்காலத்திலிருந்து இன்று வரையில் தொடர்ந்து இஷ்டப்பட்ட இடங்களில் குறிப்பாக சாலையின் பகுதிகளான சாலை ஓரங்கள், சாலை முனைகள், முச்சந்திகள், சாலை சந்திப்புகளில் இலவசமாக இடம் கிடைக்கிறது, இருக்கிறது. கேட்க ஆள் இல்லாத அரசின் அனாதை சொத்து என பல இடங்களில் உள் சூழ்ச்சியுடன் வழிபாட்டுத்தலங்களை அமைத்து வருகிறார்கள்.

ஆக்கிரமிப்புக்காகவோ அல்லது வேறு வியாபாரம், அரசியல், தீய தொழில் செய்வதற்காகவோ ஒரு சில மனிதர்களால் முக்கியமாக அவர்களின் சுய நலன்களுக்காக சிறுசிறு வழிபாட்டுத்தலங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதை அரசு நிர்வாகமும் சட்டப்படியாக தடுக்கவோ, அகற்றவோ முடியாமல் வாளா இருக்கிறது.

இனிமேலும் இது போன்றோரை அனுமதிக்காமல் நிறுத்துவதற்கும், அதை மீறுபவர்களுக்குத் தண்டனையும் வழங்க தகுந்த சட்டத்திட்டங்கள் கொண்டு வரலாம். பொதுமக்களும் நன்கு புரிந்து கொண்டு நமக்கு இன்றைய தேவைக்குப் போதாமல் இருக்கும் அகலம் குறைந்த சாலைகளை துவேஷம் செய்ய, இடைஞ்சல் செய்ய, ஆக்கிரமிப்புச் செய்ய அனுமதிக்கக் கூடாது என்பது இப்போதைய வேண்டுகோளாகும்.

# இடப்பற்றாக்குறை கடைகள்

‘திரைகடலோடியும் திரவியம் தேடு’ என்பது முதுமொழி. ஆரம்ப காலத்தில் உள்நாட்டு வாணிபத்தோடு திருப்தியடையாத பண்டைய இந்தியர்கள் குறிப்பாகத் தமிழர்கள் கடல்வழி மார்க்கமாக அண்டை நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்யலாயினர். அறிவியல் வளர்ச்சி பெறாத, விமானமும் கண்டுபிடிக்கப்படாத அந்த நாட்களில் கடல் பயணம் மிகமிகக் கடினமானதாக இருந்தது. இருந்தாலும்கூட பண்டைய தமிழர்கள் உயிரையும் பொருட்படுத்தாது ரோமாபுரி, பாரசீகம் போன்ற நாடுகளுக்கு பாய்மர படகுக் கப்பல்களில் சென்று உயிரைப் பணயம் வைத்து பண்டமாற்று மூலமாக வாணிபம் செய்து வந்தனர்.

முக்கியமாக இங்கு கிடைத்த விளை பொருட்களான வாசனைத் திரவியங்கள், சந்தனம், மஞ்சள் மற்றும் மயிலிறகு, யானைத் தந்தம் அதன் பிறகு பட்டுத் துணிகளை அங்கு கொண்டு சென்று அங்கிருந்து கண்ணாடி, பீங்கான், சிறு இரும்பு இயந்திரம் மற்றும் கட்டுமான சாமான்கள், போர் கருவிகள் போன்ற பொருட்களை பண்டமாற்று மூலம் பெற்றுக் கொண்டு வந்தனர். அவர்களின் கடல் வழிப் பயணத்திற்குப் பயன்பட்ட, இன்று கடலுக்குள் உள்ள சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள ‘காவேரிப் பூம்பட்டினம்’ முக்கியத் துறைமுகத் தளமாக இருந்து வந்தது.

## வாணிபப்போக்கு

அவ்வாறு ஆரம்பித்த பண்டமாற்று வாணிபம் படிப்படியாக உருமாற்றம் பெற்று நாணயங்கள் உருவாக்கப்பட்டு அவைப் புழக்கத்தில் வந்தன. உள்நாட்டு வியாபாரமும் ஒரு அர்த்தமுள்ள நிலையை, முறையை அடைந்தது. ஆரம்ப காலத்தில் நாணயத்திற்குத் தங்கம் மற்றும் வெள்ளி உலோகங்களை பயன்படுத்தி வந்தனர். அந்தக்கால வியாபாரங்களில் நல்ல நாணயமும் நேர்மையும் சத்தியமும் இருந்ததாக அறிய முடிகிறது. குறிப்பிட்ட பிரிவு மக்களே வாணிபத்தொழில் செய்து வந்துள்ளனர். பின்னாளில் படிப்படியாக பலரும் பல மதங்கள், ஜாதிப் பிரிவுகளைச் சார்ந்தவர்களும் வாணிபத்தொழிலில் ஈடுபடலாயினர். இதனால் கடும் போட்டி நிலவவே வாணிபர்கள் பல யுக்திகளைக் கையாளத் தொடங்கினர்.

அன்றிலிருந்து தொடங்கியதுதான் வியாபாரத்தில் இன்றைக்குமுள்ள கடுமையான விளம்பரப்போட்டி, கலப்படம், எடை ஏமாற்று, விலை நிர்ணயங்களில் சூழ்ச்சி, பதுக்கல் போன்ற தீமைகள். அதோடு வாணிபம் செய்வதற்குப் பொருத்தமான இடங்களை தேர்வு செய்தபோது நகரப் பகுதிகளில் முக்கியமான சாலைகளே குறிப்பிடத்தக்கப் பங்கு வகித்தன. முக்கிய சாலைகளின் இருபுறங்களிலும் போட்டிபோட்டுக் கொண்டு வியாபாரிகள் ஆக்கிரமிக்கத் துவங்கினர். சிலர் சொந்தமாகவும் பலர் வாடகைக்கும் வியாபார நிறுவனங்களை எடுத்துக் கொண்டனர்.

காலப்போக்கின் மாறுதல்களினால் அதிகம்பேர் வியாபாரிகளான கட்டாயத்திலும் கடைகளின்

விலையேற்றங்களினாலும், குடும்ப உறுப்பினர்களின் பாகப்பிரிவினைகளினாலும், கட்டிட உரிமையாளர்களின் பேராசையினாலும் பெரிய வியாபார நிறுவனங்கள் கூறு போடப்பட்டு சிறுசிறு துண்டுகளாயின. வாணிபப் போட்டியினாலும் முக்கிய இடங்களில் இடப் பற்றாக்குறையினாலும், வாடகை அதிகரிப்பினாலும் சிறிய இடங்களிலேயே வாணிபம் செய்யும் கடைகளாகப் பெற்றுத் தொழில் செய்து வரலாயினர்.

பிற்காலத்தில் அதுவே கலாச்சார வழக்கமாகி இட உரிமையாளர்கள் மிகச் சிறிய கடைகளை அதிக எண்ணிக்கையில் வியாபாரிகளுக்குக் கட்டிக் கொடுத்துக் நிறைய பணம் பண்ணலாயினர். சொந்தமாக கட்டிக் கொண்டோ அல்லது பெரும் வாடகை கொடுத்தோ பெரிய வியாபார நிறுவனங்கள் அமைக்கும் சூழ்நிலை உருவாயிற்று.

அவ்வாறு சிறிய வியாபாரக் கடைகளில் சிறிதாக ஆரம்பித்த வாணிபம் நாளடைவில் பொருள் திணிப்பின் நெருக்கத்தினால் முக்கியப் பகுதிகளில் இடத்தை விரிவுப்படுத்திக்கொள்ள வாய்ப்பு இல்லாமல் போனது. இருக்கும் இடத்திலேயே விரிவுபடுத்தப்பட்ட வளர்ந்துவிட்ட வியாபாரத்தை செய்ய வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் உள்ளனர் வியாபாரிகள். கடைகளுக்கு வெளியே சாலைகளை ஆக்கிரமித்து பொருட்களை வைத்துப் பரப்பி போட்டியுடனான வியாபாரம் நடந்தேறி வருகிறது. இதில் கடை ஊழியர்கள் சாலை பகுதியில் ஆக்கிரமித்துள்ள கடையில் முகப்பில் நின்று கொண்டு வாடிக்கையாளர்களை அழைப்பதும் அதற்கு முயற்சி செய்வது, கடை ஒலி

பெருக்கிகள் மற்றும் மனிதர்களின் தொடர்ந்த விளம்பரக் கத்தல்கள் பொதுமக்களையும், போக்குவரத்தையும் பாடாய்படுத்தி வருகிறது.

ஏற்கெனவே போக்குவரத்து பளு சாலைகளின் கொள்ளளவைவிட சுமார் பத்து மடங்கு இருபது மடங்கு அதிகரித்து பற்றாக்குறை சாலைகளில் மக்கள் படும் துயர் போதாதென்று இவ்வகை கடைகளின் பாதி வியாபாரம் சாலைகளில்தான் நடக்கிறது. மேலும் நடைபாதை கடைகள் முற்றிலுமாக நடைபாதையை ஆக்கிரமித்துவிட்டதோடு அதையும் தாண்டி சென்று எதிர்காலத்தில் பெரிய கடைகளில் வியாபாரமே நடக்குமா என்கிற அளவில் அத்தனை பொருட்களும் பிளாட்பாரத்தை ஆக்கிரமித்து விட்டன.

இந்நாட்களில் தெருவோர உணவுக் கடைகளில்தான் ஏழை முதல் பணக்காரர் வரை உணவு உண்ணும் கூட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. அங்கே சுவையான உணவுகள் வழங்கப்படுவதாககூட இருக்கலாம். ஆனால் அவைகள் தயாரிக்கப்படும் இடங்களான சாலைகளில் முக்கிய போக்குவரத்து நெரிசல் மிகுந்தப் பகுதிகளின் தூசி, கண்ணுக்குத் தெரிந்த, தெரியாத குப்பைகள் பறப்பது, பல வகையான வாகன கரிப்புகை, விஷப்புகைகள் மிகவும் ஆபத்தானவை. அவ்வுணவுகளை தயாரிக்கும்போதும் சாப்பிடும்போதும் ஒட்டி உறவாடி உணவையும், சாப்பிடுபவரையும் பதம் பார்த்து வருகின்றன என்றால் அது மிகையாகாது. நமக்கு உடனேயே எந்த உடல் பாதிப்பும் வரவில்லை என்றால் ஆபத்து இல்லையென்று அர்த்தம் கொள்ளலாகாது. பல நோய்களும், உடற்கோளாறுகளும் மெல்லமாக வளர்ந்த பிறகே சில

தினங்கள், வாரங்கள் கழித்துத்தான் தொல்லை தரும். அப்போது அதற்கான காரணங்கள் எவைகள் என்று அறியாமல் வைத்தியம் செய்து கொள்கிறோம்.

எப்போதும், எங்கேயும் உணவு, சுடுபானங்கள் தயாரிக்கப்படும் இடங்களான சமையலறை, அடுப்பு மேடைகள், தூசு, குப்பை நெருங்க முடியாத பாதுகாப்பான உட்புறங்களிலேயே இருக்க வேண்டும். அதுதான் சுகாதாரமானது. மக்கள் இம்மாதிரி உணவு தயாரிக்கப்படும் கடைகளில் உணவு உண்ணுவதுதான் புத்திசாலித்தனமாகும்.

வியாபார நிறுவனங்களையும், பிளாட்பாரக் கடைகளையும் அமைப்பதற்கு நகரப்பகுதிகளில் அரசே அதற்கென தனித்தனி இடங்கள் ஒதுக்கித் தரலாம். அவைகளை முக்கிய முழு வாணிப மைய இடமாக்கி பொது மக்களின் அதிகப்படியான நடமாட்டத்தை முக்கிய சாலைகளிலிருந்து அப்பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யும் திட்டங்கள் வரவேண்டும். அங்கே குறைந்த வாடகையில் இடவசதி அதிகமுள்ள பெரிய கடைகள் வழங்கவேண்டும்.

வியாபாரம் என்பது கடைக்குள்ளேதான் நடக்க வேண்டும். கடைகளில் நல்ல காற்றோட்டத்துடன் இட வசதியும் இருந்தால்தான் கடை ஊழியர்கள் சோர்வு, எரிச்சல் இல்லாமல் அசதியும், அயற்சியும் இன்றி பிற்கால நோயுமில்லாமல் ஆர்வத்துடன், மகிழ்ச்சியுடன் பணிபுரியும் நிலையிலிருப்பார்கள். வாடிக்கையாளர்களும், பொது மக்களும் பொருட்களை புழுக்கமில்லா, நெருக்கமில்லா சவுகரியமான சூழலில் திருப்தியுடன் தேர்வு செய்து, வாங்கிச் செல்வார்கள். அம்மாதிரி கடைகளில் மட்டுமே பொருட்கள் வாங்குவதை விரும்பி ஏற்பார்கள். ஒவ்வொரு கடையிலும்

வியாபாரிகள், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் பயன்படுத்துவதற்குக் கட்டாயம் கழிவு அறைகள் கட்டப்படுதல் அவசியம்.

இவைகள் நடந்தேறினால் சுயநலத்துடன், பேராசையுடன் பொது நலனில் அக்கறையுமில்லாமல் சிறிய சிறிய 'பெட்டி' கடைகளைக் கொண்ட கடைகளைக் கட்டமாட்டார்கள். அதற்கு அநியாய, முன்பணம், வாடகை வாங்கி கொட்டமடித்துக் கொண்டிருக்கும் கட்டிட உரிமையாளர்கள் பகுத்தறிவு பாடம் பெறுவார்கள். இக்கட்டிடங்களில் இயங்கி வந்த இடநெருக்கடிக் கடைகள் அரசின் பொது வாணிப வளாகத்திற்கு மாற்றப்படும் சூழ்நிலையில் பல சிறிய கடைகளுக்கு டிமாண்ட் இல்லாத நிலை ஏற்பட்டுவிடும்.

அப்போது தனியார் கடை கட்டிட உரிமையாளர்கள் சேர்ந்த நிலையிலிருக்கும் சிறுசிறு இரண்டு மூன்று தனிக்கடைகளை அனைத்து வசதிகளுடனான காற்றோட்டமுள்ள ஒரே கடையாக்கி விட வாய்ப்புள்ளது. அவற்றை குறைவான முன்பணம், வாடகைக்கு சம்மதித்து வியாபாரிகளுக்கு நஷ்டம் இல்லாத தொழில் நடத்துவதற்கு ஏதுவாகக் கொடுத்து உதவி செய்ய முன்வருவார்கள்.

நல்ல இயற்கை காற்றோட்டம், வெளிச்சம், கழிப்பறை வசதி உள்ள கடைகளிலேயே ஊழியர்கள் பணி செய்ய விரும்ப வேண்டும். உடன்பட வேண்டும். வாணிபர்களும் இதைப் புரிந்து செயல்பட வேண்டும். அப்போதுதான் தொய்வில்லா, சிறப்பான, கவர்ச்சியான, சுறுசுறுப்பான வியாபாரத்திற்குத் தேவைப்படும் உடல் மற்றும் மனநிலை ஊழியர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் கிடைக்கும்.

# வேண்டவே வேண்டாம் தெரு நாய்கள்

வீட்டு விலங்குகளிலேயே மனிதனோடு மிக நெருங்கிப்பழகுவது, விளையாடுவது, உதவுவது, நன்றியுடனிருப்பது நாய் என்னும் அறிவு மிகுந்த ஒரு அபூர்வப்படைப்புதான். அதனைத் தேவைப்படுபவர்களும், வளர்க்க வசதியுள்ளவர்களும் மட்டுமே வீட்டினுள் வைத்து வளர்க்க வேண்டும். அவரவர்களுக்குத் தகுந்த கட்டுப்படியான ரகங்களில் வளர்த்துக் கொள்ளட்டும். குறுக்கு பாலினச்சேர்க்கைகள் மூலமாக அவ்வப்போது பலப்பல புது ரகங்களில் வந்துகொண்டிருப்பதையும் கொஞ்சி மகிழட்டும், ஒன்றும் பிரச்சனையில்லை. நாய்களுக்குக் கொடுக்கும் மரியாதை, அன்பு, பாசம், உணவு இன்னும் என்னென்னவோ, அவைகளை மனிதனுக்குக் கொடுக்காவிட்டாலும், கொடுக்கும் எண்ணம் இல்லா விட்டாலும் பரவாயில்லை. சிலருக்கு அவர்கள் பாணியில் அது தேவையுமில்லை. ஆனால் எவரும் எக்காரணம் கொண்டும் தயவுசெய்து தெருவில் விட்டு நாய்களை வளர்க்காதீர்கள்.

## தீயவர்களுடன் தெருநாய்கள் மற்றும் தொல்லைகள்

தெருநாய்களை வளர்ப்பவர்களில் சாமான்ய சாதரணமான மனிதர்களோடு, தீய செயல்களான விபச்சாரம், கள்ளக்கடத்தல், போதைப் பொருட்கள் விற்பனை, அடியாட்கள் சப்ளை போன்றவற்றை அப்பகுதிக்

கீழ்நிலையில் செய்பவர்களும் அடங்குவர். வரும் புதியவர்களை ஏரியா எல்லையிலேயே விரட்டி விடுவதற்கு, முதல் நிலை பயமுறுத்தலுக்கு, குரைத்தலின் வகைகள் மூலம் புதியவர்கள், பழையவர்களை இனம் காண, முன்னறிவிப்பாகத் தெரியப்படுத்த என பல உபயோகங்களுக்கு சிலர் பயன்படுத்துவதாகக் கூறப்படுகிறது.

தெருநாய்களை வளர்ப்பது ஒரு 'கொடுஞ்செயல்' ஆகும். நாகப்பாம்பு தீண்டினால் கூட இன்றைக்கு ஒருவேளை வைத்தியத்தில் குணப்படுத்திவிட முடியும். ஆனால் நாய்கடித்தால் தொப்புளைச் சுற்றி ஏகப்பட்ட மருந்தூசிகள் குத்த வேண்டும். மேலும் பல இடங்களில் பலவிதமான வைத்தியங்கள் செய்யப்படுகின்றன. இதில் உயிர் வதைக்கும், போக்கும் முட்டாள்தனங்களும், மூட நம்பிக்கைகளும் கூட உண்டு. கடுமையான உணவுக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். வைத்தியம் செய்யாவிட்டாலோ அல்லது வைத்தியம் தவறாகி விட்டாலோ பின்னர் மனிதன் நாயாக வேண்டியதுதான். அம்மாதிரி பாதிப்பினால் மனிதன் அசல் நாயாகவே நாலுகாலில் நின்று, வெறிநாயாக ஓயாமல் பயங்கரமாகக் குரைத்துச் சீரழிந்து போய், அம்மனிதநாய் சாகும்வரை சுற்றத்தினரையும் மற்றவர்களையும் கொடுமைப்படுத்திய சம்பவங்கள் அவ்வப்போது நடப்பதுண்டு.

நாய்கடித்துவிட்டால் கடிப்பட்டவருக்கு வைத்தியம் செய்வதோடு, கடித்த நாயை அது கட்டப்பட்டு இருந்தால் சதா அதைக் கவனித்துக் கொண்டும், அல்லது கட்டப்படவில்லை எனில் அதன் பின்னாலேயே சுற்றித் திரிந்து கவனித்துக் கொண்டும், மனிதன் குணமாகும் வரை

கவனித்து வர வேண்டுமாம். அந்நாய்க்கு வெறிப்பிடித்து இருந்தால் அதற்குத் தகுந்த மாதிரி கடிப்பட்டவருக்கு வைத்தியம் செய்ய வேண்டியதிருக்கும்.

இதெல்லாம் என்ன கொடுமை? எதற்காக இந்தத் தெருநாய்களை வளர்க்கிறார்கள்?. தெருநாய்கள் வளர்ப்பதில் அதிகமானோர் ஏழைகளும், கீழ்நிலை நடுத்தர மக்களுமே ஆவார்கள். ஏழை, நடுத்தர மக்கள் பகுதியில் சிறிய அளவில் திருடுபவர்கள் பெரும்பாலும் அங்கேயேதான் இருப்பார்கள். பொதுவாகவே திருட்டுத் தொழில் செய்யும் அரக்கர்களுக்கு நாய் ஒரு பொருட்டேயில்லை. அவர்கள் எதற்கும் துணிந்தவர்கள்.

## நாய் வளர்ப்புச் செலவு

ஒரு நாய் வளர்ப்பதற்குக் கிட்டத்தட்ட ஒரு முழுஆளின் சாப்பாடு தேவைப்படும். அதாவது ஒரு ஆளை வளர்ப்பதற்குச் சமமான உணவு செலவு செய்தாக வேண்டும். இதைப் பல வருடங்களுக்கு அந்த நாயின் ஆயுளுக்கு கணக்குப் போட்டால், வாழ்க்கையின் முழு நிலையை, திருப்தியையும் அடையாமல் கஷ்டப்படும் இம்மக்கள், நாய்களை வளர்ப்பதற்குப் பதிலாக அப்படியொன்றைப் பார்த்தவுடன் கொன்று போட்டுவிடுவார்கள்.

‘தனக்கே தகராறாம் தங்கைக்குப் பதினாறாம்’ என்கிற கிண்டலானப் பழமொழி ஒன்று உண்டு. அதுபோலத் தங்கள் குடும்பத்து நபர்களின் சாப்பாட்டுக்கே போதுமான வருமானம் இல்லாமல் தினசரி ‘தகிடதிமி’ தாளம் போட வேண்டியிருக்கும்போது, இந்த மாதிரி சொறிநாய்களை

வளர்த்து, அந்த நாய்களுக்கும் சரியான சாப்பாடு போடாமல், தெரு மலங்களை செத்த பிராணிகளை தின்னவிட்டு தெருவில் போவோர் வருவோரைக் கதிகலங்க வைத்து அலங்கமலங்க அடிக்கிறார்கள்.

## நாய்ப்பகுதி பயம்

பொதுவாக தெரு மற்றும் சாலையில் நாய்கள் நின்றால் அவ்வழியே நடந்து செல்பவர்கள், சைக்கிள், இருசக்கர மோட்டார் வாகனங்களில் செல்லும் புதியவர் களுடன் ஏற்கெனவே சென்று வருபவர்களும் கூட சிறிது பதற்றமடைந்து ஒருவேளை நாய் கடித்துவிடுமோ என்ற ஒரு வகை பீதிகலந்த பயமனதுடனேயே அந்நாய் பகுதியைக் கடக்கிறார்கள். பொதுமக்களில் பெரும்பான்மையினர் இம்மாதிரிச் சூழ்நிலைகளை நிறையவே அனுபவித்து தொடர்ந்தும் அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். இந்தக் கொடுமை யெல்லாம் என்றைக்கு ஒழியும் கடவுளே! என வருந்தும் மனிதாபிகள் நம்மிடையே பலருண்டு.

இந்த மாதிரி நோஞ்சான், சொறி, மட, வெறி, சாக்கடை நாய்களை வளர்க்கும் ஒரு பிரிவு மக்கள் 'நாய்க்காவல்' தேவைப்படும் நிலையில் உள்ளவர்கள் கூட இல்லை. திருடப்படும் அளவுக்கு அவர்களிடம் சொத்து செல்வம் இல்லை. இருப்பினும் அறியாமையினால்தான் இதெல்லாம் நடக்கிறது. இதெல்லாம் ஒருவித வெட்டிவேலை என்றே எண்ணத்தோன்றுகிறது. அவர்களுக்கென்ன அவர்கள்பாட்டுக்குப் பொழுதுபோக்கிற்காக, அதனுடன் ஒரு வகையான விளையாட்டு, அன்பு பாராட்டுவதற்கு என, இதற்கெல்லாம் இங்கே 'மனிதப்பற்றாக்குறை' இருப்பது போல

இவைகளை வளர்த்து விடுகிறார்கள். துரதிஷ்டவசமாக ஒருவன் கடிபட்டு விட்டால் அவன்பாடு திண்டாட்டம்தான். இதெற்கெல்லாம் சரியான சட்டமும்இல்லை. நகரப் பகுதிகளில் முன்பெல்லாம் நாய் வளர்ப்பதற்கு 'லைசென்ஸ்' வாங்க வேண்டியிருந்தது. இப்போது அந்த மாதிரி ஒன்று இருப்பதாகவே தெரியவில்லை.

## நாய்கள் மனிதர்களைக் கடிக்கலாம்!

முன்பெல்லாம் உள்ளாட்சி நிர்வாகத்தினர் அவ்வப்போது தெருநாய்களைப் பிடித்து அழித்து நற்காரியங்கள் செய்து வந்தனர். இப்போது அது நிறுத்தப்பட்டு விட்டதாகவே தெரிகிறது. இதற்கு 'பிராணிகள் வதைத்தடுப்புச் சட்டமும்' காரணம் என்று கூறுகிறார்கள். மனிதன் வாழும் அவனுடைய பகுதியிலேயே, பிராணிகள் 'நல்ல மனிதனைக்' கூட பயமுறுத்தலாம், விரட்டலாம், கடிக்கலாம், சாகடிக்கலாம் அதில் ஒன்றும் தப்பில்லை. ஆனால் மனிதனுக்குத் தொல்லை தரும் பிராணிகளை ஒன்றும் செய்யக்கூடாதாம். இதென்ன வேடிக்கை?

அப்படியானால் மனிதன் உணவாக உண்ணும் ஆடு, மாடு, பன்றி, கோழி, மீன் வகைகள் எண்ணற்ற கடல் உயிரினங்கள், புழு, பூச்சிகள், ஆகியவைகளும் பிராணிகளே. அவைகளைக் கொன்றுதானே உண்ண முடியும்! அதோடு தெருநாயைப் போல் இன்னொரு வகையில் கொடும் துன்பங்கள் தரும் ஈ, கொசு, விஷ வண்டுகள், பூச்சிகளைக் கொல்லக் கூடாதா?. அது குற்றமில்லையா? சிங்கம், புலி, யானை போன்ற ஒரு சில காட்டு விலங்குகளைத் தவிர உலகத்தின் அனைத்துப் பிராணிகளுமே நாய் உட்பட பரவலாகப் பல பகுதிகளிலும் உணவாகிக் கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

## தெருநாய் சட்டப்படி குற்றவாளி

ஆகவே தெருநாய் வளர்ப்பதைச் சட்டப்படிக் குற்றமாக்க வேண்டும். வளர்ப்பவருக்குத் தண்டனை தருவதோடு, தக்கமுறையில் அந்நாய்களை வளர்த்தவரே அவற்றை அப்புறப்படுத்தமுடிந்தால் அதைச் செய்ய வேண்டும். இல்லையேல் வளர்த்தவரே ஆடு, கோழிகளை உணவுக்காகக் கொல்வதைப்போல் நாயையும் எம்முறையிலாவது கொன்று ஆழப்புதைக்க, சட்டமும் சமுதாயமும் கட்டாயப்படுத்தி, அனுமதிக்க வேண்டும். இது ஒன்றும் பாதகமான செயலாகி விடாது. எந்த ஒரு நிகழ்வுமே பழக்கத்திலும் வழக்கத்திலும் வரும் வரையில்தான் கடினமாக, எதிரானதாக இருக்கும். பிறகு சர்வசாதாரணமான வாழ்க்கை நடைமுறையாகிவிடும்.

அவ்வாறு இல்லையெனில் சிறிது காலம் முன்பு வரை உள்ளாட்சி நிர்வாகத்தினர் தெரு நாய் ஒழிப்பில் செம்மையாக செயல்பட்டு தக்க நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்து வந்தது போல தொடர்ந்து செய்ய வேண்டியதுதான், இதில் எந்தத் தவறும் இல்லை. மனித சமுதாயத்தில் மனிதனுக்குத்தான் முதலிடம் தரவேண்டும். நாய், பாம்பு, கரடி, சிலந்தி, கரப்பான்பூச்சி இவைகளுக்கான முக்கியத்துவத்தினை பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

# மனித பிணம்

உயிர் + இனம் = உயிரினம். இவைகளுக்கு அந்த வார்த்தையின் முதலில் வந்த உயிர் இருக்கும் வரைதான் அனைத்தும் சொந்தம். அந்த உயிர் போய்விட்டால் எல்லாமும் போய் விடுகிறது. அதிலும் குறிப்பாக ஆறறிவு உள்ள மனிதன் ஆடிய ஆட்டமெல்லாம் முடிந்து விரைவாக சில பல தினங்களிலேயே அவனைப்பற்றிய உண்மையான நினைவும், பாதிப்பும் காணாமல் போய்விடுகிறது. உற்றார் உறவினர், நண்பர்கள் மற்றும் தன் குடும்பத்தினர் எனப் பலரிடமும் அவனின் நினைவுகள் மறைந்துதான் போகிறது, அப்படித்தான் போகும் என்பதும் போக வேண்டுமென்பதும்கூட நியாயமானது என்பதை வாதிடவும் முடியும்.

**வயதானவர்களின் இறப்பு மகிழ்ச்சிக்குரியது**

‘வந்தவரெல்லாம் தங்கி விட்டால் இந்த மண்ணில் நமக்கே இடமேது’ என்ற கண்ணதாசனின் மெருகுபடுத்தப்பட்ட வரி நினைவுக்கு வருகிறது. இறப்பு ஒன்று இல்லையென்றால் இந்தப் பூமி என்னவாகியிருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே திகிலாக இருக்கிறது. ஆகவே பிறப்பைப் போல் இறப்பையும் மனதார ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். அதிலும் வயதானவர்கள் இறப்பை பல மதங்களிலும் மகிழ்ச்சியோடு கொண்டாடப்படும் கொள்கை இலைமறை காயாக எழுதப்படாத செயலாக நடைமுறையில் இருந்து வருவதையும் அதன் அவசியத்தையும் கூட உணர்ந்து பார்க்க வேண்டும்.

சிறு, நடு வயதில் அகால மரணமடைபவர்களுக்கு மட்டும்தான் நாம் வருந்த வேண்டுமேயொழிய உலகத்தில் இறக்கும் அனைவருக்காகவும் வருந்தி மடிவது முட்டாள்தனமாகத் தோன்றுகிறது.

நாம் அனைவருமே என்றாவது ஒரு நாள் ஒருமுறை இறக்கத்தான் போகிறோம் என்பதை நன்றாக மனதார உணர்ந்து புரிந்து கொண்டு வாழ வேண்டும். மனிதர்கள் உயிரோடு வாழும்போது இந்த உலகுக்கு நன்மையோ, தீமையோ அல்லது இரண்டையும் வெவ்வேறு விகிதங்களில் கலந்தோ செய்து விட்டுப் போகட்டும்.

## இறந்த பிறகும் சமுதாயத்தொல்லை

ஆனால் இறந்த பிறகு இந்தச் சமுதாயத்திற்கு நன்மை தராவிட்டாலும், சிறிதும் துன்பம் தராமல் இருக்க வேண்டும். இந்துக்கள் ஒட்டுமொத்தமாக ஒன்றிணைந்து எவ்விதப் பாகுபாடும் வேற்றுமையுமில்லாமல் கருத்து பேதமில்லாமல் நிதானத்துடன் சிந்தித்து சில நியாயங்களை ஏற்றுக் கொள்ளுதல் அவசியமாகிறது. அறிவுபூர்வமாக ஒரு சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது இக்கட்டத்தில் சம்பந்தப்பட்டவர்களிடம் முக்கியமாக இந்து மதத்தலைவர்களிடம் மிகத்தாழ்மையுடன் வைக்கப்படும் வேண்டுகோள்.

இங்கே மற்ற மதத்தினரை ஒதுக்கி இந்துக்களை மட்டும் குறிப்பிட்டதற்குக் காரணம் இருக்கிறது. உலகத்தின் பெரும்பான்மையான மதங்களில் இறந்தவர்களை புதைக்கும் வழக்கத்தையே கொண்டுள்ளார்கள். இந்துக்களில் மட்டும்தான் இறந்தவர்களைப் புதைப்பதோடு எரிக்கவும் செய்கிறார்கள்.

இந்த வகையில் இறந்தவர்களை எரித்துச் சாம்பலாக்கும் நிகழ்வினைப் பற்றியும் அதன் சமுதாயத் தீமைகளைப் பற்றியும் குறிப்பிடுவதற்காகவே இங்கே இந்துக்களிடம் மட்டும் கேட்கப்பட்டுள்ளது.

இந்துசமயச் சம்பிரதாயங்களின்படி இறந்தவர்களை எரியூட்டி சாம்பலாக்குவதே தர்மமாகவும் மோட்ச நிலையை அடையும் வழியாகவும் இன்னும் பல சிறப்பம்சங்கள் கொண்டதாகவும் ஏற்கப்பட்டுள்ளது. அச்சம்பவங்களினால் இன்றைய சமூகத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகளை தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஒரு காலத்தில் இந்தியாவில் குறைந்த மக்களே வாழ்ந்து வந்ததாலும், இந்தளவுக்குத் தொழிற்சாலைகள், வாகனங்கள் பெருகி சுற்றுச்சூழல் கெட்டு சீர்கேடாக ஆகாத நிலையிலும் மனிதர்கள் வாழ்ந்தார்கள். அவ்வாறு வாழ்ந்தபோது பிணத்தை எரியூட்டி சாம்பலாக்கும் சமயச் சடங்கு பெரும் பாதிப்பைத் தந்திருக்க வாய்ப்பில்லை. காரணம் என்னவெனில், அப்போது இறந்தவர்களை குடியிருப்புப் பகுதியிலிருந்து வெகுதூரத்திற்கு எடுத்துச்சென்று மனித நடமாட்டமில்லாத மிகவும் ஒதுக்குப்புறமானக் காடுகளிலும், காட்டுப் பகுதிகளிலும் எரித்து வந்தார்கள், எரிக்காமல் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் உணவாக கூட கொடுத்து வந்தார்கள் எனவும் அறிய முடிகிறது.

ஆனால் இன்றைக்கு மக்கள் தொகை பன்மடங்கு பெருகி தொழிற்சாலைகள், வாகனங்கள், வீடுகள், மக்கள் வாழுமிடங்கள் அதிகமாகி விட்டன. வாழ்க்கை முறைகளும் மிக நவீன நாகரீகமாகி பலவித மாற்றங்களையும் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்நிலையில் மனித சமுதாயம் பிணத்தை

எரிப்பதற்குப் பதிலாகப் புதைப்பதே இக்காலக் கட்டத்தில் மிக உகந்ததாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

**பிண நாற்றம்**

மனிதன் இறந்துவிட்டபிறகு அந்த நொடியிலிருந்து 'பிணம்' என்றழைக்கப்படுகிறான். என்றழைக்கப்படுகிறான் என்பதைவிட 'என்றழைக்கப்படுகிறது' என்பதே உண்மை, சரியானதும் கூட. இந்தப் பிணத்தை எரிப்பதால் இன்றைய மனிதனுக்கும் அவன் சமுதாயத்திற்கும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிற முக்கியமான சமூகப் பிரச்சினை ஒன்றை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

இன்றைக்கு அநேகமாக சுடுகாடுகள் அனைத்தும் அது கிராமமாக இருந்தாலும் சரி, நகரமாக இருந்தாலும் சரி, மனிதக் குடியிருப்புகளுக்கு, மனித நடமாட்டம் மற்றும் போக்குவரத்து வழிகளுக்கு வெகுஅருகிலேயே பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன அல்லது அமைந்துள்ளன. இம்மாதிரியானச் சூழ்நிலையில் அச்சுடுகாடுகளில் பிணங்கள் எரிக்கப்படும்போது பிணத்தின் பச்சைக்கறி, காய்ந்த, உலர்ந்த, இரத்தம் மற்றும் எலும்புகளின் எரிப்பினால் உண்டாகும் 'அந்த' துர்நாற்றத்தை நம்மில் பலர் சுவாசித்திருப்போம்.

அக்கொடுமையின் மனநிலையில் இருந்து மீள, இக்கட்டான அனுபவத்துடன் மூக்கைப் பிடித்துக் கொள்ளுதல், சுவாசத்தை இயன்ற நேரம் அடக்கிக் கொள்ளுதல் என ஒருவித சங்கடத்தை அவ்வப்போது உணர்ந்த சம்பவங்கள் ஏற்பட்டிருக்கும். சுவாச நோய் உள்ளவர்களுக்கு இந்த வாடை பெரும் துன்பம் கொடுக்கக்

கூடியது. இதைத்தான் 'பிணவாடை' என்று மோசமாகச் சொல்வார்கள். வேறு ஏதேனும் காரணங்களால் எங்கேயாவது மிக மோசமான ஒரு துர்நாற்றம் அடித்தால் கூட, அதற்கு இந்தப் பிண நாற்றத்தைத்தான் உவமையாகச் சொல்லி 'பிண நாற்றமடிக்கிறது' என அசிங்கமாக அருவருப்பாக விமர்சனம் செய்வார்கள்.

இவ்விடத்தில் நிதானமாக ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டியது நம் அனைவரின் கடமை. இந்த மாதிரியாக வாழ்ந்து முடிந்த ஒரு மனிதனின் உடலும் அவனது இறப்பிற்குப் பிந்திய நிலையும் சமூகத்தால், பிற மனிதர்களால் இவ்வளவு அருவருப்பாக எண்ணப்பட வேண்டுமா? கேவலமாகக் கருதப்பட வேண்டுமா என்பதில் ஒரு முடிவுக்கு வர வேண்டியது அறிவு செறிந்த காலத்தின் கட்டாயமாக்கப்படுதல் வேண்டும்.

**பிண எரிப்புக்குப் பதிலாக புதைப்பது சிறப்பு**

உலக மக்கட்தொகையில் சுமார் பத்து சதவீதத்திற்குக் குறைவாகவே உள்ள இந்து மதத்தில் பல்வேறு வகைப்பட்ட மதச்சடங்குகள், சம்பிரதாயங்கள். கடவுள் வழிபாட்டு முறைகள், திருவிழாக்கள், பலவிதத் திருமணங்கள் என நடக்கின்றன. இவைகள் இடத்திற்கு இடம் பகுதிக்குப் பகுதி மாநிலத்திற்கு மாநிலம் பலவித வித்தியாசங்களுடன் வேறுபட்டு நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இவைகளில் ஒரு குறிப்பிட்ட நிலை இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. மக்களின் வசதிக்கு, விருப்பத்திற்கு ஏற்ற முறையில் நடத்திக்கொள்ளும் உரிமைகளைக் கொடுத்து ஓர் சகிப்புத்தன்மையையும்

உயர்ந்த நிலையையும் கொண்டுள்ளது இந்து மதம். இந்தப் பிண எரிப்பு வழக்கத்தையும் இன்றைய சமுதாய நலன்களுக்காகக் கட்டாயமில்லாமல் செய்து, பிணங்களைப் புதைப்பதற்கு மதரீதியாக தக்க அறிவுரைகள் வழங்க வேண்டப்படுகிறது.

இந்து மதத்தைச் சேர்ந்த ஒவ்வொரு மனிதனும் தான் இறந்தபிறகு பிறருக்குத் துன்பம் தராமல் மற்ற மதத்தில் உள்ளது போல் புதைக்க வேண்டுமென விரும்ப வேண்டும். வாழும் இறுதிக் காலத்தில் அவ்விருப்பத்தைத் தெரிவித்து, அதைச் செய்யக் கடமைப்பட்டவர்கள் அதன்படி இறந்த மனிதனின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இந்துமதக் கொள்கைகளான சமத்துவம், சகிப்புத் தன்மை, ஏற்றுக் கொள்ளுதல், அடக்குமுறை மற்றும் கட்டாயத் தன்மையில்லாதது போன்ற உயர்ந்த கோட்பாடுகள் உலகில் மிகச் சிறந்தவை. அவைகள் இதன் மூலம் அர்த்தமுள்ளதாக்கப்படுவதோடு இந்த உலக சமுதாயம் இந்துக்களையும், இந்தியாவையும் மிகுந்த மரியாதையோடு போற்றி நடக்கும். இந்தியாவின் அனைத்து மக்களும் இந்தவிதத் தொந்தரவு இன்றி நிம்மதியாக மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள். அன்றி எரித்தே ஆகவேண்டுமெனில் இந்தியா முழுவதும் இலட்சக்கணக்கான பிண எரிப்பான்களை அமைத்துக்கொள்ளுங்கள். அப்படியாவது பிண நாற்றத்தை தவிர்ப்போம்.

# சாதி, மதம்

## மதங்களினால் மக்கட்குறைப்பு வேண்டாம்

மதச் சண்டைகள், சாதிச் சண்டைகள் மிகுந்த நாடுகளுள் இந்தியாவும் ஒன்று. ஒரு பக்கம் மதங்களுக்கு இடையில் பிணக்குகள் ஏற்பட்டு மண்டை உடைகிறது. மறுபக்கம் **இந்து** மதத்திற்குள்ளேயே போட்டித் தகராறுகள், கலவரங்கள் ஏற்பட்டு அடிக்கடி இரத்தக்களரியாகி அவ்வப்போது சிறிய அளவில் மக்கட்தொகையும் குறைக்கப்பட்டு வருகிறது. மக்கட்குறைப்பு இந்நாட்டிற்கு மிகத் தேவை என்றாலும், இவ்வகையான ஆட்குறைப்பு மனசாட்சியுடைய எவராலும் ஏற்றுக்கொள்ள இயலாதது.

மதவாதிகள், சாதியவாதிகள் இந்திய அரசியலில் மிகுந்து அவர்களின் ஆதிக்கமே அங்கு அதிகம் செல்லுபடியாகிக் கொண்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட மதம், எப்பொழுதும் தன் பக்கம் மக்களை கூடுதலாக்கும் முயற்சியில் எல்லாவகையானச் செயல்பாடுகளையும் செய்துவருகிறது. இன்னொரு மதம் மற்ற மதத்தினரை குண்டுவெடிப்புகள் செய்து கொன்றுவருகிறது. அடுத்த ஒரு மதம் தானும் போட்டியில் வல்லுக்கு நின்று, தேவையான அளவிற்கு குண்டு, துப்பாக்கி தர ஆளில்லாமல் கத்தி, வாள், வீசுகிறது. கத்தி வைத்திருக்க அனுமதிக்கப்பட்ட ஒரு மதம் சிறிது நாட்களாக சிறிது அமைதி காத்து வருகிறது.

மதங்கள் உருவாக்கப்பட்டது மனிதர்களை நாகரீகமாக்கி மேன்மைப் படுத்துவதற்குதானே ஒழிய காட்டுமிராண்டிகளாய் மாற்றுவதற்கல்ல. இந்த மதக்குழப்பங்களைத் தாண்டி இன்று ஒரு மதத்தின் பல உட்பிரிவுகளானச் சாதிகளில் யார் உயர்ந்தவர்கள்,

வலுவானவர்கள், அதிகாரம் பெற்றவர்கள் என்ற மனிதர்களின் முட்டாள்தன போட்டியில் இந்தியாவை முடமாக்கிப்போட்டிருக்கிறார்கள்.

இங்கு, எங்கே, எப்பொழுது, என்ன நடக்கும்? என எவருக்கும் தெரியாது. திடீரெனக் கலவரம் வெடிக்கும். மனிதத் தலைகள் உருளும், துப்பாக்கிகள் வெடிக்கும், குழப்பங்கள் கூத்தடிக்கும். சில நாட்கள் இதைப்பற்றியச் செய்திகள் மேலிருந்து கீழ்வரை இருக்கும். பின்னர் மறந்து போகும். திரும்ப சில காலத்திற்குப் பிறகு இது கட்டாயம் நடக்கும். இச்சமயங்களில் பல பெரியவர்கள் ஏதேதோ பேசி, கடைசியில் கமிஷன் வைத்து காலம் போகும்.

## சிக்கல்கள் நிறைந்த இந்தியா

இவற்றிற்கு நிரந்தரமானத் தீர்வு என்பது இல்லாத ஒன்றாகவே போய்விட்டது. உலகிலேயே மிகச் சிக்கல் நிறைந்த நாடு இந்தியா என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. இதற்கு ஆதாரமாக இந்த மத, சாதி சிக்கில்களே போதுமானது. இதைத் தவிர பல மாநிலங்களில் தீவிரவாத இயக்கங்கள், நக்சலைட்டுகள், பழைய வீரப்பன் மாதிரியான ஆட்கள், பூலான்தேவி மாதிரியான தொல்லைகள் போன்றவைகளும் பாடாய் படுத்திவருகின்றன.

பல மாநிலங்களுக்கு இடையிலான இருக்கும் பல்வேறு பிணக்குகள், தண்ணீர் தகராறுகள், வேற்று மாநிலத்தவர் அரசுப்பணிபுரிய தடைகள், தகராறுகள் என உள்நாட்டு குழப்பங்களுக்குப் பஞ்சமில்லை. இருப்பினும் பிறந்தவர்கள் இயற்கை அல்லது செயற்கையாக இறக்கும்வரை இருந்தாக வேண்டும். எப்படியாவது நிம்மதியாக வாழவேண்டும் என்பதில் அனைவருக்கும் ஆவல் இருக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க இயலாது. இதற்கு என்ன செய்யலாம்? தனிமனிதர்கள், அக்கம்பக்கத்தில் வாழும், பணிபுரியும், தொழில்செய்யும் அண்டை அயலார்களுடன் எவ்வித

பாரபட்சமுமின்றி அன்புடன் ஒற்றுமையாக வாழும் பட்சத்தில் ஓரளவில் தனிமனித, குடும்பச் சூழ்நிலையை சமாளித்துக்கொள்ளலாம்.

இந்த சாதி, மதப் பிரச்சினைகளுக்கு, பிரிவினைகளுக்கு தீபமேற்றி, தூபம் போடுவது அரசியல்வாதிகள் மற்றும் மதவாதிகள் என்பது அனைவரும் அறிந்தது. இவர்களை நாம் ஒன்றும் செய்ய இயலாது. அவர்களாகவும் திருந்தமாட்டார்கள், ஆக நிரந்தரத் தீர்வு கிட்டாது! இறுதிவரைக்கும் இப்படித்தான் இருக்கும் என்பதில் உறுதியாகிவிட்டதுபோல் தெரிகிறது. ஆனால் வருங்காலத்தில் இன்றைய ஓரளவிற்காவதுத் தாக்குபிடிக்கும் அளவிற்குகூட இருக்காது போல் நடக்கிறது. அப்போது இதைவிட பலமடங்கு பரிமாணம் பெற்று விஷ்வரூபத்துடன் இந்தியா சின்னாபின்னமாக்கப் படப்போவது ஒருநாள் நடந்தேறலாம். அதற்குள் மேலே போகிறவர்கள் போய்கொள்வோம். அந்நேரத்து மானிடர்கள் மண்டை உடைத்துக் கொள்ளட்டும், வேறு வழி தெரியவில்லை!

## கிராமங்களுள் சாதிகள்

பல கிராமங்களில் பெரும்பாலும் மக்கள் சாதி வாரியாகத் தனித்தனிக் குழுக்களாக வாழ்நதுவருகிறார்கள். இதில் எவ்வளவு நன்மைகள் உண்டோ அவ்வளவு தீமைகளும் உண்டு. முதலாவதாகத் தீமைகளைப் பார்த்துவிட்டு பிறகு நன்மைகளைப் பார்ப்போம்.

ஒரு சாதியினர் ஓரிடத்தில் கூட்டமாக வாழும்போது ஒருவர் தன்இன மற்றவர்களை எந்நேரமும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பார். இது மனரீதியாக, செயல்ரீதியாக பல எதிர் விளைவுகளை உண்டுபண்ணுகின்றது. அருகில் இருக்கும் உறவுக்காரர் ஒருவர் முன்னேறும்போது அது மற்றவர்களுக்கு பொறுக்க இயலாது. மிகுந்த பொறாமைக்கொண்டு மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ வேற்றுமை பாராட்டுவார்கள். அதுவே தெரியாதவர்கள், எங்கேயோ உள்ளவர்கள், சம்மந்தமில்லாதவர்கள்

உயருகிறார்கள் எனும்போது எவரும் சட்டைசெய்யமாட்டார்கள். இதனால் முன்னேறுவதற்கு முயற்சிக்கிற மனிதர்கள் பலர் மனம் பாதிப்படைந்து, மனச்சோர்வு அடைகிறார்கள். இது மனித மனங்களில் உள்ளூர வாழ்ந்துகொண்டிருக்கும் பொறாமை என்னும் கொடுந்தீயால் ஏற்படும் மனித விளைவுகள்.

மற்றபடி ஒன்றாக்கூடி வாழும்போது பல நன்மைகளைப் பெறுகிறார்கள். உறவினர்கள் அக்கம்பக்கத்திலேயே இருப்பதால் உறவு, பாசம், அன்பு, ஒருவருக்கு ஒருவர் உதவிக்கொள்வது, பாதுகாப்பு போன்றவை கிடைக்கின்றன.

வெவ்வேறு சாதிகள் தனித்தனிக் கூட்டமாக வாழும் நிலையில் வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. சில இடங்களில் திடீர் திடீரென சாதிக்குழுக்களுக்குள் சண்டைகள் ஏற்பட்டு அமைதிபோய் ஒருவித மனஅழுத்த மனநிலைகளுக்கு மனிதர்கள் தள்ளப்படுகிறார்கள். மேலும் உயர்ந்த சாதிகள், தாழ்ந்த சாதிகள் என்ற பிரிவினையுடன் அரசுகள் முதல் மக்கள் வரை பின்பற்றி காரியங்கள் செய்து வருகிறார்கள். இதனால் இவர்களுக்குள், சில மாநிலங்கள், மாவட்டங்களில் அடிக்கடி அடிதடிகள் நடப்பது ஆண்டு திருவிழாக்கள் மாதிரி ஆகிவிட்டிருக்கிறது.

## தீண்டாமையைப் பயன்படுத்துபவர்கள்

இதில் தீண்டாமை எனும் பழையக் கொடுமையை, சில இடங்களில் இன்னமும் இரு சாராரும் போற்றி வளர்த்து வருகிறார்கள். உயர்ந்த சாதிக்காரர்களைவிட தாழ்த்தப்பட்ட மக்கள் இதை அதிகம் எடுத்து கையாளுகிறார்களோ? என்ற சந்தேகம் அவ்வப்போது வருகிறது. ஏனெனில் இன்றைய நிலையில் எல்லா மேல் சாதியினருக்கும் தீண்டாமை சட்டங்களின் விளைவாகக் கிடைக்கும் தண்டனைகளைப் பற்றி நன்கு தெரியும். இந்நிலையில் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களை சாதி பெயரைச்சொல்லித் திட்டவோ,

கேவலப்படுத்தவோ முயற்சி செய்வது தற்கொலைக்கு ஒப்பான செயல் என்பது புரியும். ஒருவேளை ஒருசில கோபக்கார முட்டாள்களுக்கு அவசரத்தில் இது புரியாமல் இருக்கலாம். ஆனால், மற்றவர்கள் இவ்விஷயத்தில் எல்லா வாழும் இடங்களிலும் உஷாராகவே உள்ளனர்.

## பயத்தில் வாழும் மனிதர்கள்

இருப்பினும் சில சமயங்களில் ஆங்காங்கே தீண்டாமை வழக்குகள் போடப்படுகின்றன. இது எப்படி சாத்தியமாகிறது? எனப் பார்க்கவேண்டியுள்ளது. சில வழக்குகள் உண்மையானப் பாதிப்புகளால் போடப்பட்டிருக்கும் பட்சத்தில், பல வழக்குகள் பழிவாங்குதலுக்காகவும் பின்னப்படுகின்றன. இத்தீண்டாமை சட்டம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு ஏற்பட்டதே ஒழிய, மற்றவர்களை இதைக்கொண்டு பயமுறுத்தி கொடுமைப்படுத்துவதற்கல்ல!

நடைமுறையில் பணி இடங்களில், ஊழியர்களுக்கு இடையில் வரும் பலவகையானப் பிணக்குகளில் அவ்வப்போது இப்படியான வழக்குகள் இன்னமும் போடப்படுவது மிகுந்த கவலைக்கொள்ள செய்கிறது. அலுவலக பணியிடங்களில் தங்களுக்குக் கீழே பணியுரியும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த ஊழியர்களிடம் எப்போதும் ஒரு பயந்த மன சூழ்நிலையில், மேல்நிலை பணிகளில் உள்ள மற்ற சாதியினர் பலர் இருப்பதாக அறிய முடிகிறது. இதனால் சரிவர வேலை வாங்கவோ, தவறுகளைத் தட்டிக்கேட்கவோ இயலாமல் போவதால் பணியின் திறன் பரவலாகக் குறைந்துகிடைக்கும் நிலையில், முழுப்பயன் சமுதாயத்திற்குக் கிட்டுவதில்லை. எனவே, இவற்றைத் தவறான உபயோகத்திற்கு உட்படுத்தாமல் முறைப்படுத்தப்படுவது அச்சமூக முக்கியஸ்தர்களிடமும் அரசிடமும் உள்ளது. தேவையான நல்ல மாற்றங்கள் வருவதே, சமுதாயத்தை சிறப்படையச் செய்யும்.

# பதவி உயர்வில் இட ஒதுக்கீடு

## முந்தைய மக்களுக்குள் பிரிவுகள் ஏற்பட்ட விதம்

இந்நாட்டில் அரசு வேலைகளுக்கு ஆட்கள் எடுப்பதில் பல இடங்களில் பல முறைகள் கையாளப்படுகின்றன. ஆனால், பல ஆண்டுகளாக மாறாத ஒன்று உண்டு, அது இட ஒதுக்கீடு கொள்கையாகும். பழையகாலத்து இந்தியர்கள் பல காரணங்களினால் பல பிரிவுகளாக இருந்து வாழ்ந்திருக்கின்றனர். அவர்களில் எப்பொழுதும்போலவே உடலால், அறிவால், அந்த இரண்டிலுமாய் உழைத்தவர்கள், தரம் பிரிந்துகொண்டவர்கள், உணவு முறைகள், தூய்மை, பழக்கவழக்கங்கள் போன்றவற்றால் மேலும் பிரிந்தவர்கள் ஆயினர். அவ்வாறாக மேலிடப் பிரிவுகள், இடையினம், கீழினம் என்ற வகைகள் உருவாகி, பின்னர் அவற்றின் உட்பிரிவுகள் மூலமாக எண்ணற்ற சாதிகள் உண்டாகி இப்போது அவற்றின் சங்கங்கள் எல்லாம் வந்தன.

மேலின மக்கள் இடையின, கீழின மக்களையும், இடையின மக்கள் தங்கள் பங்கிற்கு கீழின மக்களையும் ஆரம்பத்தில் அடிமைகளாக நடத்தியுள்ளனர். பின்னர் படிப்படியாக மாற்றம் பெற்று தீண்டத்தகாதவர்கள் என்ற நிலை கீழ் இனத்திற்கு கிடைத்தது. மேற்படி முன்னர் நடந்தவைகள் நியாயமானதா அல்லது அநியாயமானதா என்ற விவாதம் தற்போதைக்குத் தேவையில்லை. எப்படி இருப்பினும் ஒரு பெருங்கூட்டம் எல்லாவற்றிலும் பின்தங்கிப்போனது.

### இட ஒதுக்கீட்டு வாக்குகள்

மக்கள் நாகரீக மேற்பார்வை கொண்டபோது சில மாற்றங்கள் வந்தன. இவர்கள் பெருந்தொகையில் இருந்ததால், அவர்களின் வாக்குகளை ஒட்டுமொத்தமாகப் பெறும்வகையில் சில செயல்கள்

நடந்ததாகச் செய்திகள் சொல்லப்பட்டன. எது எப்படியாயினும் கீழ்நிலை மக்களின், அனைத்திலும், முக்கியமாகப் பொருளாதார நிலைகளில் தூக்கிவிடப்படவேண்டிய நிலையை எவரும் குறைகூற மாட்டார்கள்.

இதற்காக மத்திய, மாநில அரசுப் பணியிடங்களை, தனியாக சில அளவு சதவீதங்களில் இட ஒதுக்கீடு செய்து அவர்களைப் பணியமர்த்திச் செயல்பட்டுவருகிறது. இவ்வாய்ப்பினை முதலில் ஒரு குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு உச்சநீதிமன்றம் அனுமதித்திருந்தது. பின்னர் அவ்வப்போது இவ்ஒதுக்கீட்டு முறை பாராளுமன்றத்தால் நீட்டிக்கப்பட்டு வருகிறது.

இந்த இட ஒதுக்கீடு தொடர்பான, சமுதாயத்தில் நிலவிவரும் பல சாதக பாதகங்கள் எவை என்று இந்நேரம் பார்க்க அவசியம் ஏற்பட்டுள்ளது. எப்படியாவது கீழிருக்கும் மக்களை மேலேற்றுவது அரசின் கடமையாக இருப்பினும், அதனுள் இருக்கும் நன்மை தீமைகளையும் மனதிற்கொண்டு செயல்படுவதே செங்கோள் தவறாமையாகும்.

### தாழ்த்தப்பட்ட மக்களுக்குள் பொருளாதாரப் பிரிவினர்கள்

தாழ்த்தப்பட்ட , பின்தங்கிய மக்கட்தொகை பெருமளவிலானது. அதிலும்குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களிடம் இனப்பெருக்க விகிதாச்சாரம் அதிக அளவில் இருந்துவருகிறது. இன்றைக்கும் அவர்கள் அதிகமாக வாழும் கிராமப்பகுதிகளில், பெரும்பான்மையான குடும்பங்களில் குழந்தைகளின் எண்ணிக்கை சராசரியாக அதிகமாக உள்ளது. இதனால் இவர்களின் மக்கட்பெருக்கத்தொகை அரசின் கொள்கைகளுக்குச் சம்மந்தமில்லாமல் போய்கொண்டிருப்பதை சம்பந்தப்பட்ட அனைவரும் அறிய வேண்டியது மிக அவசியமாகிறது.

இந்நிலையில் இவர்களுக்கு கொடுக்கப்பட்ட இட ஒதுக்கீடு எவ்வகைகளில் போய் சேருகிறது எனப் பார்க்கவேண்டி உள்ளது.

ஏற்கெனவே அதன் பயன் கிடைத்து அரசு அலுவலில் உள்ளவர்களின் குடும்பத்து வாரிசுகளே பெரும்பகுதி வாய்ப்புகளை தொடர்ந்து ஆண்டாண்டுகாலமாக அடைந்து வருகின்றனர். இவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குள்ளேயே **பிரிக்கப்பட்ட ஒரு பிரிவாக** இருந்து அப்பிரிவினர்களுக்குள் உறவுகளை ஏற்படுத்திக்கொண்டு தனியாகச் சிறந்து, வேலைநிமித்தத்தின் காரணமாக அதிக அளவில் நகரங்களில் வாழ்ந்து வருகிறவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால், தாழ்த்தப்பட்டப் பிரிவினரின் பெரும்பகுதி மக்கள் கிராமப்புறத்தில் இருப்பதும், இவர்களில் ஒருசிலரைத் தவிர, மற்றவர்களுக்கு இச்சலுகைகளில் ஒரு துகள்கூட போய் சேராமல், இன்றளவும் இவர்கள் குடும்பத்துடன் கூலிதொழில் செய்து ஏழ்மைநிலையில் வாழ்ந்துவருகின்றனர் என்பதும் குறிப்பிடத் தகுந் தது. இந்த ஒரு பிரிவுக்குள்ளேயே உள்ள ஏற்றத்தாழ்வு சமாச்சாரங்களைப் பற்றி அதன் அரசியல், சமூகத்தலைவர்கள் கவலைப்படுபவர்களாகத் தெரியவில்லை.

வருங்காலங்களில், ஏற்கெனவே அரசு வேலையில் உள்ள குடும்பத்தினர்களுக்கு இட ஒதுக்கீடு சலுகைகளின் மூலம் வாய்ப்பளிப்பதை நிறுத்தினால், இதுவரை அவ்வாய்ப்பின் சிறு சுவையைக்கூடச் சுவைக்காத அப்பிரிவின் மற்றைய மக்களுக்கு அது போய்சேரும் ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படும். இதுபோலவே பின்தங்கிய வகுப்பினர்களுக் குள்ளும் பின்பற்றப்பட வேண்டியது அவசியம்.

### அயல்நாட்டுப் பிரச்சினை போன்றதொன்று !

மேற்கூறியது ஒரு வகையான உள்நாட்டுப் பிரச்சினை போன்றது. அதேவேளை இதில் வெளிநாட்டுப் பிரச்சினைப் போன்ற ஒன்றும் உள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பல ஆண்டு காலமாக **இடஒதுக்கீட்டு முறையில் அரசு வேலைகளில் பணி உயர்வு** கொடுக்கப்பட்டு வருவதால் சில சமுதாயப் பிணக்குகள் தோன்றுகின்றன.

வேலைவாய்ப்புப் பெற்று பல்வேறுநிலை பணிகளில், மிக உயர்ந்தபதவிகளில் இருந்து கடைநிலைகள் வரை பணியாற்றி முன்னிலையில் இருக்கும் பல தாழ்த்தப்பட்ட மக்களைவிட பல மடங்கு பொருளாதாரப் பின்னிலையில் பல தாழ்த்தப்படாத மக்கள் இருக்கின்றனர். இவர்களைப் பற்றி அரசுகள் இதுவரையில் சரிவரக் கண்டுகொள்ளாதது போதாத காலமே...

மேலும் பெரும்பாலும் குறைந்த மதிப்பெண்களிலேயே முதல் வகுப்பு முதல் கடைசி வகுப்பு வரை வாங்கப்பெற்றவர்களால், முக்கியப் பணிகளில் சில சிரமம் இருக்கின்றது. அறுவை சிகிச்சை மருத்துவர்கள், முக்கியப் பொறியாளர்கள் மற்றும் உயர் தொழில்நுட்பப் பிரிவினர் போன்ற துறைகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று திறமையுடன் இருந்தால்தான் சிறப்புடன் சோபிக்க முடியும்.

**இயற்கை முறையின் நியாயப்படி பொருந்தாதது**

மேலும் பல சலுகைகள் மூலமாக ஒருவர் பணியில் சேரும்போது அவருடைய இளமைப்பருவ கல்வி, இதர அறிவுத் திறமைகளைப்பற்றி முன்னமே எதுவும் தெரியாமல் இருப்பதால், சலுகைப்பெறாத சகஊழியர்கள், சலுகையினால் அடைந்த அவர்களின் இப்பயனைப் பற்றிப் பெரிதாக அதிகம் எடுத்துக்கொள்வதில்லை. அதன்பிறகுதான் முக்கிய பிரச்சினை ஒன்று உருவாகிறது. அவர்களைவிட வயது, கல்வி, அடிப்படைக் கல்வித்தகுதிகளில் குறைவான மதிப்பெண்கள், பணி அனுபவம், பணிமூப்பு, திறமை போன்றவற்றில் குறைவாக இருப்பவர்களுக்கு பதவி உயர்விலும் இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்படுகிறது. இவர்கள் வேறு சிறப்புத் தேர்வுகள் எழுதாமலே கிடுகிடுவென கீழ்நிலைப்பணியிலிருந்து தங்களுக்கு மேல் உள்ளவர்கள் மற்றும் பணி அனுபவ மூத்தவர்களைக் காட்டிலும் மேலேபோய் சில ஆண்டுகளிலேயே அவர்களுடைய அதிகாரிகளாக ஆகும்போது இயற்கை மனநிலை அதை அமைதியுடன் ஏற்றுக்கொள்ள

அடியோடு மறுக்கிறது. பாதிக்கப்பட்டவர்கள் மனம்புலம்புகிறார்கள். இதனால் இவர்களுக்கு பணிகளில் கவனம், ஈடுபாடு செலுத்துவது இயற்கையாகக் குறைவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. யாரிடமும் சொல்லிப் புலம்பமுடியாதக் கொடுமையில் மனம் தத்தளித்துத் தடுமாறுகிறது.

**நிச்சயமான எதிர்விளைவுகள்**

இதனால் உற்பத்தி, பணித்திறமை, தொழில்நுட்ப மேன்மை, நம்பிக்கை, நாணயம், உண்மைத்தன்மை இவையெல்லாம் குறைந்துபோகின்றன. கடனே… என ஒருவிதப் பணி வெறுப்புடன், அலுப்புத்தட்டலுடன் பலர் பணிபுரிந்து வாழ்க்கை நடத்துகிறார்கள். இவர்களின் மனநிலைகளில் ஏற்படும் எதிர்மாற்றங்களுக்கு யார் காரணம்? இதனால்தான் இராணுவத்தில், பாதுகாப்பு பணிகளில் எக்காரணம் கொண்டும் தொய்வு ஏற்படாமல் இருக்க, ஆள் தேர்வு செய்து பணியமர்த்தும் சமயத்தில்கூட இடஒதுக்கீடு பின்பற்றப்படவில்லை.

பதவி உயர்வுகளிலும் இட ஒதுக்கீடு அவசியமா? என அதிகாரத்தில் உள்ள அனைவரும் திரும்பவும் சிந்தித்து ஏதேனும் ஆக்கப்பூர்வமான முடிவுகள் எடுக்கலாமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் . இந்த மனித உணர்வுகளினால் உண்டாகும் பாதிப்புகளைப் பற்றி சர்வ வல்லமைப்பெற்ற பெரியோர்கள் பலர் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. அனைவரும் ஓட்டு வங்கிகளுக்காகக் காய் நகர்த்தல்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். மேலும் உயிருடன் இருக்கும்வரை, அதிகாரத்தில், பெரும்செல்வத்தில், தாங்கள், தங்கள் குடும்பம் மற்றும் பலதலைமுறை வாரிசுகள் நிலைக்க வேண்டும் என்பதே இவர்களில் பலரது குறியாக இருக்கிறது. அனைத்திற்கும் காலம்தான் பதில் சொல்லவேண்டும்…

# பிச்சைக்காரர்கள்

‘தனியொரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்’ என்றான் பாரதி.மற்ற உயிரினங்களுக்கு உணவு மட்டும் போதுமானது; இருப்பிடம் என்பது தற்காலிகமானது, அவைகளை பலதரப்பட்டச் சூழ்நிலைகள் இடங்களில் அமைத்துக்கொள்ளும் அல்லது அவ்விடங்களில் அடங்கிக்கொள்ளும். அவைகளுக்கு ஆடையைப்பற்றி, பேசும் மேடையைப் பற்றித் தெரியாது. ஆனால் மானிடஉயிரினத்திற்கு அடிப்படைத் தேவையாக முதலில் உணவு, இரண்டாவதாக உடை மூன்றாவதாக இருப்பிடம் என அக்காலத்திலேயே அறியப்பட்டு பகரப்பட்டுள்ளது.

இந்த மூன்றிலும் மிக முக்கியமானதும் தவிர்க்கமுடியாததும் உணவுதான். மனிதனின் இயற்கைப் பசிகளெனக் கட்டயமாகிய உணவும், காமமும், கட்டாயமில்லாத அறிவுப் பசியும் ஒதுக்க முடியாதவைகள். உணவை உண்டால்தான் காமமும், அறிவு, தேடலும் ஏற்பட முடியும்.

**பசியும் வாழ்க்கையும்**

ஒரு கற்பனைக்காக ஒரு குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு பசி என்ற ஒன்று இல்லாததாக இருந்திருந்தால் இந்த உலகில் எந்த மனிதனுக்கும் காமம், காதல், அறிவு, தேடுதல் ஏற்பட்டிருக்காது. அதனால் எவரும் உழைக்க

வேண்டிய அவசியமுமில்லாமல் போயிருக்கும். பிறகு ஆடை அணிய வேண்டியதுமில்லாமல் நிர்வாணமாகவே வாழ்ந்து வந்திருப்பான். அவரவர்களுக்கு இயற்கையால் நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் எங்கெங்கோ சுற்றித் திரிந்து படுத்துறங்கி மிருகத்தை விட கேவலமாகப் போயிருப்பான். பில்கேட்சு, அம்பானி, ஆபிரகாம் லிங்கன், அப்துல் கலாம், அத்வானி, ஜார்ஜ் புஷ்கள், மர்லின் மன்றோ, அன்னை தெரசா வந்திருக்க மாட்டார்கள்.

'எல்லாமே வயிற்றுக்குத்தாண்டா', 'பசி வந்தால் பத்தும் பறக்கும்' என்றனர் முன்னோர்கள். உலகின் மிகப்பெரிய கோடீஸ்வரனாக இருந்தாலும், உணவும் உணவின் ஒரு பகுதியானத் தண்ணீரும் கிடைக்க இயலாதச் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டால் அங்கே கிடைக்கும் எதையும் சாப்பிடுவான். இறந்து கிடக்கும் எந்தக் காட்டுவிலங்கு மாமிசத்தை பச்சையாகவும், மரத்தை, இலையையும் சாப்பிடுவா. அவைகளும் கிடைக்காவிட்டால் மிருகங்களின் மலத்தையும் தின்று, கொடும் நாற்றமடிக்கும் சாக்கடைத் தண்ணீரையும் கூடக் குடித்து விடுவான்; வேறு வழியில்லை, அவைகளைச் செய்து தான் ஆகவேண்டும். யாருக்கும், உயிரை, அதிலும் பசியாயிருக்கும்போது மாய்த்துக் கொள்ள மனமே வராது; எப்படியும் வாழ்ந்து விடவே துடிப்பான்!

அதேபோல எந்தப் பிச்சைக்காரனுக்கும் பைத்தியத்திற்கும் அளவுக்குமேல் உணவு தின்னக் கொடுத்தால் போதுமென்று திட்டவட்டமாகச் சொல்லி, விரைவில் கெட்டுப்போகும் உணவு வகையாயிருந்தால் கெட்டபிறகு தூக்கியெறியவும் தயங்க மாட்டான்.

**பிச்சைக்காரர்களுள் பல ரகங்கள்**

இம்மாதிரிதான் இந்த மகத்துவமான உணவு உலகம் முழுக்க இயற்கையால், படைக்கப்பட்டுள்ளது. இந்த உணவுக்காகத்தான் சில மனிதர்கள், பிச்சைக்காரர்கள் என்னும் பெயரில் பிச்சை எடுத்து உண்டு வாழ்ந்துத் திரிகிறார்கள். இந்தப் பிச்சைக்காரர்கள் மற்றும் பைத்தியங்கள் யார், இதில் எத்தனை பிரிவினர் உள்ளனர்? என்று ஆராய்ந்துப் பார்த்தால் பல திடுக்கிடும் உண்மைகள் வெளிப்படும்.

முதலில் பிச்சைக்காரர்களை எடுத்துக் கொண்டோமேயானால் அதில் அனாதைகள், முதியவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், உழைப்பில் ஆர்வமில்லாதச் சோம்பேறிகள், பெரும் நோயாளிகள், மனநிலை சரியில்லாதப் பைத்தியங்கள், வீட்டை விட்டுக் கோபத்தில் வெளியேறிய பேதைகள் எனப்பலருண்டு.

பிச்சைக்காரன் வேடம், சில போலீஸ், தனியார் துப்பறிபவர்களுக்குத் தேவைப்படுவது போலவே திருடர்கள், கடத்தல்காரர்கள், குற்றவாளிகள், கொலையாளிகள், தீய தொழில் புரிவோர் எனப் பலருக்கும் பயன்பட்டு வருகிறது. இதில் காவி வேடம்போட்ட சாமியார் வேடமும் அதற்குள் குற்றவாளிகளும் எனப் பரந்து விரிந்து கொண்டே போகிறது.

பிச்சை எடுப்பது சரியா, தவறா? என்ற கேள்வியை விட பிச்சை போடுவது சரியா, தவறா? என்ற கேள்வி எழுமானால், இன்றைய காலகட்டத்தில் கட்டாயமாக உறுதியாகத் தவறு என்று தான் பதில் கூற வேண்டியிருக்கிறது. காரணம் இன்றைக்கு தனிமனிதனுக்கு

உணவு என்பது பெரிய பிரச்சினையே அல்ல. எல்லோருக்கும் எளிதாக ஓரளவுக்காவது உண்ணும் உணவு கிடைக்கும் காலமிது; அரசும் இதில் தனிக்கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

**எது சரியான தர்மம்?**

அன்னதானம், தர்மம் என்று அவ்வப்போதும், தொடர்ந்தும், பல காலத்திலும் இருந்து வருகிறது. 'தானத்தில் சிறந்தது அன்னதானம்', 'தருமம் தலை காக்கும்' என்றெல்லாம் கூட கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இதெல்லாம் ஒரு காலக்கட்டம் வரைதான் பொருந்தலாம். உணவு உற்பத்தி மிகக்குறைவாக இருந்து, வேறு தொழில்கள், அறிவு வளர்ச்சி இல்லாமல் வருமான வழிமுறைகளும் இல்லாதிருந்த காலத்தில், மன்னராட்சியில் பிச்சையெடுப்பது சரியாக இருந்திருக்கலாம். ஒரு நாட்டில் ஒரேயொரு மிகப் பெரிய அரண்மனையும், ஆயிரமாயிரம் சிறு குடிசைகளும் அதில் வறிய எளியவர்களும் வாழ்ந்த காலத்திற்கு இதுமிகப் பொருந்தியிருக்கலாம். அந்த மன்னர்கள், மக்கள் அவர்களுடைய ஒண்டு குடிசைகள் இருந்த இடம் தெரியாமல் போய் இன்றைக்கு அந்தப் பிரமாண்ட அரண்மனைகள் மட்டும்தான் இடிந்தும், இடியாமலும் அங்கங்கே இருந்து வருகின்றன.

இப்பவும் தினசரி அன்னதானங்கள், தர்மங்கள் பல இடங்களில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சிறப்பாக என்றால், தினமும் ஒருவேளை அல்லது இரண்டு வேளை தொடர்ச்சியாக ஆண்டாண்டு காலமாக அந்தந்த இடங்களிலேயே நடைபெற்று வருகின்றன. பெரும்பாலும் குறிப்பிட்ட அளவில், அங்கு நிரந்தரமாகத் தங்கும்

ஆதரவற்ற, கவனிப்பாரற்ற, அனாதை மனிதர்களுக்கு இது வழங்கப்படுகிறது.

ஒரே இடத்தில் ஒரே எல்லைக்குள் வைத்து, தினசரி குறிப்பிட்ட அந்த மனிதர்களுக்கு உணவு படைப்பதை எல்லோருமே வரவேற்கலாம். பூர்வீகச் சொத்து, செல்வங்களுடைய வழிபாட்டுத்தலங்கள், மதத்தலங்கள், மடங்கள், சமூக நிறுவனங்கள் போன்றவை சொந்த பலத்திலும் மற்றும் பொது மக்கள், அரசு மற்றும் தனியார் ஸ்தாபனங்களிடம் நன்கொடையை பெற்றும் இவ்வகை தினசரி அன்னதான இயக்கங்களைத் தொய்வில்லாமல் செயல்படுத்தி வருகின்றன.

உயர்ந்த கொள்கையான தர்மம் செய்யும் மனநிலையிலுள்ள புண்ணியசீலர்கள் இவ்வகை அன்னதான சேவை மையங்களுக்கு, அனாதை, முதியோர், ஊனமுற்றோர் நலவாழ்வு மையங்களுக்கு ஆண்டிற்கு ஓரிருமுறை அல்லது அவரவர் விருப்பப்படி உதவிகள் செய்யலாம். இதற்காக உண்டியல் வைத்து சில்லறைக் காசுகளாகச் சேர்த்து மொத்தமாக அனுப்பி வைக்கலாம்.

இதை விடுத்து தெரு, சாலை, கோயில் வாசல்கள், பஸ் ஸ்டாண்ட், பஸ், ரயில், கடைத்தெரு என்று கண்டகண்ட இடத்தில் பிச்சையெடுப்பவர்களுக்கு சில்லறைக் காசுகளைக் கொடுத்துதவினால், இந்தத் தொல்லை எந்தக் காலத்திலும் ஒழியாது. இவ்வகைப் பிச்சைக்காரர்கள் தினந்தோறும் நல்ல வருவாய்களைப் பார்ப்பதுடன், அந்தப் பணத்தை பாங்கில் சேமிப்பதற்கு, போதைப் பொருட்கள் குறிப்பாக தினந்தோறும் ‘தண்ணி’ அடிப்பதற்கு நன்றாகவே பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

**வசதிமிகு பிச்சைக்காரர்கள்**

கூலி வேலை செய்யும் ஒரு மனிதன் காலையிலிருந்து மாலைவரை நூறு ரூபாய்க்குக் கடுமையாக உழைக்க வேண்டிய சூழலில், பல பிச்சைக்காரர்களில் தலா ஒருவருக்கு தினசரி நல்ல வருமானமாக ரூபாய் நூறிலிருந்து ஆயிரம் வரை கிடைப்பதாகத் தெரிகிறது. பிச்சையெடுப்பதிலும் சிலர் கில்லாடிகளாக இருந்து, பல வித்தைகள், தந்திரங்கள், திறமைகளைப் பயன்படுத்தி மிகச்சுறுசுறுப்பாகச் செயல்பட்டு 'நல்ல கண்டு முதல் அறுவடை' செய்து வருகிறார்கள். பொய் கந்தல் ஏமாற்று தோற்றத்தில் இருக்கும் பல பிச்சைக்காரர்கள் சில பிச்சை போடுபவர்களை விட வசதியானவர்கள் என்ற உண்மை பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

இன்னும் சில பிச்சைக்காரர்கள் பல வீட்டுச்சாப்பாடு என்ற முடிவில் தினசரி அசைவ உணவு, பிரியாணியும் சாப்பிட்டு உண்டு கொழுத்தவர்கள். இவர்களை, நீங்கள் என்ன சம்பளம் கொடுத்து வேலை செய்யச் சொல்லி அழைத்தாலும் வரமாட்டார்கள்.

இந்தப் பிச்சைக்காரர்களின் ஏமாற்றுதலைப் பற்றி விளக்கமாகச் சொல்ல வேண்டுமானல் குறைந்தது ஓர் ஆயிரம் பக்கமாவது எழுத வேண்டியிருக்கும். ஆகவே இந்நேரத்தை அதற்கு வீணடிக்காமல் இந்தப் பிரச்சினையை எப்படியெல்லாம் கையாளலாம் என்பதைச் சற்றே பார்ப்போம்.

**பிச்சைக்காரர்களை சிறப்பாக கையாளுதல்**

முன்பு கூட 'பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்' என்ற ஒன்று செயல்பட்டு வந்தது நினைவிருக்கிறது.

இப்போது அதன் செயல்பாடு பற்றி சரியாகத் தெரியவில்லை. மாவட்டந்தோறும் அரசு, பெரிய தனியார் நிறுவனங்கள், சேவை நிறுவனங்கள், பெரிய புண்ணியத்தலங்கள், போன்றவை தனியாகவோ, கூட்டாகவோ, பிச்சைக்காரர்களுள், பைத்தியங்களுக்கு அவர்கள் அடிக்கடி வெளியில் செல்லாதவாறு ஒரேஇடத்தில் தங்கவைப்பதற்கு மறுவாழ்வு மையங்கள் ஏற்படுத்தலாம். அவர்களை பலதரப்பட்ட பொது துப்புரவுப் பணிகளுக்குப் பயன்படுத்தலாம். தரிசு நில மேம்பாடு, மையங்களிலுள்ள மனநோயளிகளான பைத்தியங்கள், ஊனமுற்றவர்கள், கொடும் நோயாளிகள், மிக வயதானோர் ஆகியோரை, உழைக்க முடிந்த பிச்சைக்காரர்களைக் கொண்டு பராமரிக்கச் செய்து ஒரே கல்லில் இரண்டு, மூன்று மாங்காய்கள் அடிக்க முடியும்.

இம்முறைகள் வந்தால் இதற்காக பயந்து கொண்டு பொய்யான பிச்சைக்காரர்கள் உருவாக மாட்டார்கள். அவர்களைப் பயன்படுத்தி ஏதேனும் தொழிற்கூடங்கள், அவ்வப்போது வெளி நிகழ்ச்சிகளுக்கு இசைக் கச்சேரிகள் போன்றவைகள் கூட நடத்த முடியும். பிச்சைக்காரர்களில் பலதரப்பட்ட நிலையில் இசை ஆர்வமும், அதில் திறமையுள்ளவர்களும் இருக்கிறார்கள். அதைப் பயன்படுத்தியே பல இடங்களில் அவர்களின் பிச்சையெடுப்பு நடைபெறுகிறது.

அவர்களின் சர்வசாதாரணமான அகில இந்திய இலவச போக்குவரத்துக்கு மற்றும் பிச்சையெடுப்பதற்குப் பயன்படும் ரயில்கள், பிச்சையெடுத்தலின் முக்கியக் கேந்திரங்களாக விளங்கும் பேருந்து நிலையங்கள்,

நிறுத்தங்கள், சிக்னல் பகுதிகள் மற்றும் புண்ணியத்தலங்களின் வாயில்களில் இவர்கள் அதிகம் இருப்பார்கள். அவ்விடங்களில் இவர்களை காவல்துறை கண்டிப்புடன் அடித்து விரட்டி பிச்சைக்காரர்கள் உருவாவதையும், வளர்வதையும், அறியாமல் சில பொதுமக்கள் தரும் ஆதரவைக் கிடைக்காமல் செய்தும் இந்தச் சமூகத்திற்குப் பேருதவி செய்ய முடியும்.

பிச்சைக்காரர்கள் என்பவர்கள் இந்த நாட்டிற்கு சமூகத்திற்கு தொடர்ந்து தீங்கு செய்யும் வகையில் பிச்சைக்காரக் குழந்தைகளை உற்பத்தி செய்து வருபவர்களாவர். விபச்சாரம், போதைப் பொருட்கள் விற்பனை, கடத்தல், தீய தொழில் போன்றவைகளைத் தொடர்ந்து செய்துவர, அதற்குரிய வாரிசுகளை உற்பத்தி செய்து கொடியத் தொற்று நோய்களைப் பரப்பிக்கொண்டு இருக்கிறார்கள். அசிங்கமான, கேவலமான சுற்றுப்புறத் தோற்றத்தை ஏற்படுத்தி இந்த நாட்டு மதிப்பை உலக அரங்கில் அவலப்படுத்தும் கேவலச் செயல்களைச் செய்து வருகிறார்கள். அவைகளை இனியும் அனுமதிக்காமல் பொது இடங்களில் பிச்சைக்காரர்கள் என்னும் 'மனித அவல நோயின் நடமாட்டம்' முற்றிலுமாக ஒழிக்கப்படும் நாள் விரைவில் வர வேண்டுமென எல்லோரும் பிரார்த்திப்போம்.

# சுவர் தாவரங்கள்

## அறியாத் தவறுகள்

இங்கே வேண்டுமென்றே, மற்றவர்களுக்கு எப்பொழுதும் தீங்கு செய்வதற்கு வழிகளைத் தேடிக் கொண்டிருக்கும் இரண்டு கால் பிராணிகளாகிய மனிதர்களைப் போல் நிச்சயமாகவே இல்லாமல் இன்னொரு இரண்டு கால் ஜீவன்களாகிய பறவைகள் எனும் பவிசுகள், அவைகளை அறியாமலே மனிதர்களுக்குச் சில தீங்கிழைத்துக் கொண்டிருக்கின்றன.

முதலாவதாக, அவைகளின் வயிற்றுப் பசியைப் போக்கி உயிர் வாழ்விற்கு அவசியமான முக்கிய உணவுகளாகிய பழங்கள், தானியங்கள், பருப்புகள், புழு, பூச்சிகள் போன்றவற்றை காடுகளிலிருந்து, புறம்போக்குகளிலிருந்து பெற்று வருகின்றன. மனிதனுக்குச் சொந்தமான தோட்டங்கள், வயல்கள் மற்றும் வீட்டு முற்றங்களில் காய வைக்கப் பட்டிருக்கும் இடத்திலிருந்தும் கொத்தி, கடித்து, பறித்து, பொறுக்கித் தின்று வருகின்றன. இந்த வகைப் பணிகளைச் செய்வதற்காகவே அப்பறவைகள் என்னும் அழகுகளுக்கு இயற்கை இறக்கைகளைக் கொடுத்துள்ளதோ என்னவோ! அப்படித்தான் இருக்க வேண்டும்.

## பறவைகளைப்போல் மனிதன் ஆனால்

பறவைகள் எங்கே வேண்டுமானாலும் சர்வ சுதந்திரத்துடன் தன் விருப்பத்திற்குச் செல்வதற்கு அந்த

இறக்கைகளைப் பயன்படுத்தி பறந்து சென்று உணவுகளைச் செலவில்லாமல் பெற்று வருகின்றன. நல்லவேளையாக மனிதர்களுக்கு இம்மாதிரியான இறக்கைகள் இருக்கவில்லை; இருந்திருந்தால் தீயவர்கள் என்னென்னவெல்லாமோ செய்திருப்பார்கள், நல்லவர்கள் தப்பித்தோம் என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

ஆனாலும் பாழாய்ப்போன சில விஞ்ஞானிகள் சும்மா இருப்பதே இல்லை! அதற்கும் வேட்டு வைத்த மாதிரி தனிமனிதனும் இடத்திற்கு இடம் பறந்து செல்லும் வகையில் இயந்திர மின் மோட்டார்களைக் கொண்டு ஹெலிகாப்டர் தத்துவத்தில் சிறிய அளவில் ஒரு கருவியைச் செய்து பறந்து காட்டி மாதிரி வெள்ளோட்டம் விடப்பட்டதை சமீபத்தில் ஒருநாள் டிஸ்கவரி சேனலில் பார்த்ததும் அதிர்ச்சியாகி விட்டது. ஆனால் இந்தச் சாதனம் கண்டுபிடிக்கப்பட்டுக் கொண்டிருப்பது நல்ல நோக்கத்திற்காகவும், பயனுக்குமாகத்தான் இருக்க வேண்டும். இருப்பினும் தீயவர்களே நடைமுறையில் அதிகம் பயன்படுத்தும் சூழலுள்ளது.

### மனிதக் கொடுமைகள்

இந்த மனித இனம் அந்தப் பறவை இனத்தின் மேல் அலாதி பிரியம் கொண்டது. சிலர் அவைகளில் சிலவற்றை உணவுக்காக வேட்டையாடுவதும், சிலர் வளர்க்கிறேன் என்று சொல்லி இயற்கைக்கு மாறாக கூண்டுகளில் போட்டு அடைத்து அவைகளின் சுதந்திரத்தைப் பறித்துக் கொடுமைப்படுத்துவதும், உலகெங்கும் எல்லாக் காலத்திலும் நடந்து வருவதுதான். இதற்கெல்லாம் தீர்வுகள் வரலாம் அல்லது வராமல் போகலாம், அது போகட்டும்

## சுவர்களில் தாவரங்கள் வளர்ப்பது

இங்கே சிறிது நேரத்திற்கு முன்பு சொல்லப்பட்டிருந்ததைப் போல் பறவைகள் அறியாமல் மனிதனுக்கு இழைக்கும் தீங்கில் பலரும் பெரிதுபடுத்திக் கொள்ளாத ஒன்றைச் சொல்ல வேண்டும். அதுதான் பறவைகள் தங்கள் கழிவுகளான மல எச்சங்களைச் சுவர்களில் குறிப்பாக அவற்றின் இடுக்குகளில் விட்டுச் செல்வதாகும். இவ்வாறு பறவைகளால் விடப்பட்டுப்போன அதன் கழிவு எச்சத்தில் பறவைகள் சாப்பிட்ட பழம், தானியம் இவற்றின் செரிக்காத தாவர விதைகள் இருந்து எச்சத்தினால் நன்கு வீரியமாக்கப்படுகிறது. அவ்விதைகள் எந்தச் சிறு சுவர் இடுக்கிலும் தன் வேரைச் செலுத்திவிடும் ஆற்றலோடு உலகில் வெளிப்பட்டு நன்றாக வளர்கின்றன.

இந்த வகையாக வளரும் தாவரங்களில் பெரும் மரங்களாக வளரக்கூடிய அரசமரம், ஆலமரம், வேப்பமரம் போன்றவைகள் முக்கிய இடம் வகிக்கின்றன. இந்தச் செடிகள் கட்டிடச் சுவர்களுக்குள் கால் ஊன்றி விட்டதைக் கவனிக்காமல் விட்டுவிட்டால், அப்புறம் அவ்வளவுதான்! சுவருக்குள் மிகச் சிரமப்பட்டே வேர்களைச் செலுத்தி வளர வேண்டியிருப்பதாலோ என்னவோ இவ்வகை சுவர்களில் வளரும் அரச, ஆல மரங்கள், வெளியில் வளரும் அதன் இனங்களை விட இங்கு மிக முரடாக வலிமையாக இருப்பதாகத் தோன்றுகிறது. இது உண்மையாக இல்லாமல் கூட இருக்கலாம்; ஆனாலும அதன் வளர்ச்சியைக் கவனித்து சுவர் மட்டத்திற்குப் பலமுறை வெட்டி விட்டாலும் அவை வேர்களின் ஆதாரத்தைக் கொண்டு மீண்டும் மீண்டும் வளருவதாகத்தான் இருக்கும். ‘இந்த உலகினில் அவைகளுக்கு அவ்வளவு ஆசைகள்’.

எப்படி இருப்பினும் நாம் தாவரங்களை பூமியின் மேற்பரப்பில் மண்ணில்தான் வளர்க்க விரும்புவோமே தவிர, இப்படிக் கட்டிடச் சுவர் இடுக்குகளில் வளரவிட்டு மரங்கள் பெரிதாக ஆக விரும்ப மாட்டோம். அவ்வாறு விட்டால் சுவர்களில் பெரிய தெறிப்புகள் ஏற்பட்டு கடைசியில் ‘கட்டிடமே காலாவதியாகி’விடும். இம்மாதிரி பல இடங்களில் சுவர் செடி, மரங்களினால் கட்டிடங்கள் வீணாகி அந்தக் குறிப்பிட்ட பகுதியோ அல்லது மொத்தக் கட்டிடமோ இடிக்கப்பட்டு மீண்டும் கட்டப்பட்டு வருவதும் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

அதிலும் தனியார் கட்டிடங்களை விட அரசு கட்டிடங்களே இவ்வகைத் தாக்குதலுக்கு, பாதிப்புக்கு அதிகம் உள்ளாகிக் கொண்டிருக்கின்றன எனலாம். சில அரசுக் கட்டிடங்களின் சுவர்களில் வேண்டுமென்றே செடி, மரங்களை வளர்த்து வருகிறார்களோ! என்னும் அளவுக்கு நிலைமைகள் உள்ளன. இன்னும் சொல்லப்போனால் மிக முக்கியத்துவம் வாய்ந்த நீதிமன்றக் கட்டிடங்கள், அரசு உயரதிகாரிகளின் அலுவலகக் கட்டிடங்கள், அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் அரசுக் குடியிருப்புகள் போன்ற இடங்களில் எல்லாம் கேட்பாரற்று, கவனிப்பாரற்று இந்த சுவர் மர, செடி, கொடிகள் கட்டிடங்களை நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக பதம் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

### தகுந்த நடவடிக்கைகள்

இவ்வகைத் தாவரங்களைக் காலம் தாழ்த்தாமல் அவ்வப்போது அழித்து ஒழித்து வராவிட்டால், அரசு

சொத்துக்கள் பலவும் அழிந்து போகும். குறிப்பாக, சரித்திரப் பழம்பெருமை வாய்ந்த கட்டிடங்கள் விரைவாகவே இந்த உலகை விட்டுப் போய்விடும். எனவே சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள், ஊழியர்கள் இவ்விஷயத்தில் தனிக்கவனம் செலுத்த வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. தனியாரும் தங்கள் கட்டிடங்களில் செடி, கொடி, மரங்கள் சுவர் இடுக்குகளில் இருந்தால் அவைகளை அப்புறப்படுத்துவதை உடனடியாக மேற்கொள்ளுங்கள், தாமதியாதீர்.

# அழுக்கு உணவகங்கள்

## பாண்டைகள்

இந்த தேசம் முழுவதும் வியாபித்துக் கிடக்கிற பல நிலையிலான உணவகங்களின் நிலையை உயர்த்துவதற்கு, அவற்றை நிர்வகிப்பவர்களாயினும் அல்லது கண்காணித்து செயல்படுத்து வதற்கான அதிகாரம் பெற்றவர்களாயினும் எவரும் கவலைப்படுவ தில்லை. இந்தியா முழுதும் மூலைக்கு மூலை இயங்கிக் கொண்டிருக்கும் டீக்கடைகள் முதல் சைவ, அசைவ உணவகங்கள் என இவைகளின் தொண்ணூற்று ஐந்து சதவீதத்திற்கு மேலானவை அழுக்குப் பாண்டைகளாக சேவைசெய்து வருகின்றன.

இதற்கு கிராமம், நகரம், பெருநகரம் என்ற வித்தியாச பேதமில்லை. அவைகளின் மோசமான வெளிப்புறத் தோற்றம், சுற்றுப்புறத்தின் அவலநிலைகள், பணிபுரிபவர்களின் அழுக்கு ஆடைகள், நீண்ட நகங்களுடன் கூடிய அழுக்கு கைகள் என எல்லாமே நோய் பரப்பும் சங்கதிகளாக இருக்கின்றன. சுற்றுப்புறத்தில், ஓட முடியாமல் முடமாகிப்போன சாக்கடைகளில், மேற்படி கடைகளின் மிச்ச எச்சங்கள், கழுவிய நீர் போன்றவை எப்பொழுதும் சங்கமித்துக் கொண்டிருக்கின்றன.

## பொது வெளியிடங்களிலுள்ள குடிநீரை தவிருங்கள்

சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் சாதாரணமாகிப்போன இன்றைய நிலையில், இன்றைக்கும் என்றென்றைக்கும் அங்கு கிருமி அழுக்குகளுடன் கூடிய தண்ணீர் உபயோகிக்கப்படுகின்றது. அவை

வைக்கப்பட்டிருக்கும் பெரிய பாத்திரங்கள் முதல் பரிமாறப் பயன்படும் டம்ளர்கள் வரை எல்லாமே சுகாதாரமற்றவை, நாகரீகமற்றவை. இன்னமும் பல இடங்களில், பல ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கப்பட்ட பிளாஸ்டிக், அலுமினிய, ஓட்டை எவர்சில்வர் டம்ளர்கள் புழக்கத்தில் இருப்பது மகாவேதனை.

என்ன செய்வது! மேற்படி கடைகளை நடத்துபவர்களை மட்டும் குறைகூற முடியாது. நல்ல புதிய டம்ளர்கள் போட்டால், திருடிப்போவதற்கு இன்னமும் மக்கள் இங்கு இறைந்து கிடக்கிறார்களே! இவர்கள் திருந்தினால்தானே அவர்கள் திருத்திக்கொள்ள இயலும். இல்லாவிடில் ஐந்து ரூபாய் பெருமானமுள்ள ஒரு எவர்சில்வர் டம்ளருக்கு, பத்து / இருபது ரூபாய் விலையில் ஒரு செயின் மாட்டி தண்ணீர் பாத்திரத்துடன் இணைக்கப்பட்டிருப்பது இந்த யுகம் உள்ளவரையிலும் தொடர்ந்துவரும் நிலையில் இருக்கிறது. நம்மிலும் சிலபலர் கட்டிப்போடப்பட்ட நாய்கள் உணவு சாப்பிடுவதுபோல, பொது இடங்களில் இவ்வாறு கட்டப்பட்டிருக்கும் டம்ளர்களில் அழுக்குத் தண்ணீர் குடித்து வாழ்ந்துகொண்டிருக்கிறோம். பல பொது இடங்களில் இவ்வாறு வைக்கப்பட்டிருக்கும் தண்ணீர் பாத்திரங்கள் சட்டதிட்டங்களுக்கு கட்டாயப்பட்டு பெயருக்காகத்தான் வைக்கப்பட்டிருக்கின்றன.

சினிமா கொட்டகைகள், பேருந்துநிலைய கடைகள், சில அலுவலகங்கள் போன்ற வற்றில் உள்ள பாத்திரங்களில் என்றைக்கு தண்ணீர் ஊற்றினர், தினசரி தண்ணீர் மாற்றுகிறார்களா, பாத்திரங்களை நன்றாக சுத்தம் செய்கிறார்களா? என்பவை எவரும் கண்டுபிடிக்க இயலாதவை. எனவே, இது முதற்கொண்டு **மனிதர்கள் யாரும்** மேற்படி இடங்களில் தண்ணீர் அருந்துவது தவிர்க்கப்பட வேண்டும். இது கொஞ்சமாக விஷம் சாப்பிடுவதற்கு ஒப்பானது என்பதை உணருங்கள். இல்லாவிடில் அதிலிருக்கும் கிருமிகள் மனிதவயிற்றுக்குள் வாழ்க்கை நடத்தி, வாழ ஆரம்பித்த ஒரு

சில நாட்கள் கழித்து டாக்டரிடம் போய், நாம் கொட்டி அழுதுதீர்க்க வேண்டிவரும்.

## தூய்மைக்கு யோசியுங்கள்

ஒருவர் விடாமல், மிகச்சிறியது முதல் பெரியது வரையிலான அனைத்து உணவுக்கடை முதலாளிகளுக்கும் வணக்கத்துடன் ஒரு வேண்டுகோள் வைக்கப்படுகிறது. இது முதற்கொண்டாவது ஒவ்வொரு நாளும் உங்கள் கடைகளின் தரத்தை, தூய்மையை உயர்த்துவதற்கு அனுதினமும் யோசித்து இம்மக்களுக்கு நன்மை செய்திடுங்கள் - நீங்கள் கொடுக்கும் அயிட்டங்களுக்கு நியாயமான ! பணத்தையும் வழக்கம்போல் பெற்றுக்கொண்டு.

## தூய்மையே செல்வம்

ஏனெனில், வெளிப்புறம் ஓரவிற்கு அழகாக, சுத்தமாக இருக்கும் உணவகங்களில்கூட அவைகளின் சமையல் மற்றும் இதர வேலைகள் செய்யப்படும் பின்புறமானது பேருந்துநிலைய பொதுக் கழிவறைகளுக்கு அடுத்த நிலையில் இருப்பதை பலர் பார்த்திருப்பீர்கள். எனவே இவர்களும் இச்சமுதாயத்தில் உதவினால்தான் நாகரீக மேன்மையின் உண்மை நிலையை ஒன்றுசேர்ந்து எட்டமுடியும். சுத்தமான நிர்வாகம் இருந்தால் உங்கள் அகமும், புறமும் சுத்தமாகிவிடும். இதன்மூலம் முதலாவதாக நீங்கள் மகிழ்ச்சி, நிம்மதி. பெருமை கொள்வதுடன் சமுதாயத்தாலும் போற்றப்படும்போது மற்ற துறைகளும் மாறுவதற்கு மறைமுகமாக உதவியவராகிறீர்கள்.

**"செய்யும் தொழிலே தெய்வம், அதில் தூய்மைதான் நமது செல்வம்"**

# வேறுபாடான சமையலும் உணவும்

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'. இது சிறு பிள்ளைகளும் ஆரம்பப் பள்ளியிலிருந்தே கட்டுரை எழுத ஆரம்பிக்க பயன்படுத்தும் பழமொழி. ஆனால் இதன் அருமை பெருமையை, அவசியம், உண்மையை யாருமே அறிந்ததாகத் தெரியவில்லை. தமிழ், ஆங்கில மொழிகளில் மட்டுமல்லாமல், உலகின் பெரும்பாலான மொழிகளிலும் இந்த வாசகத்தை நிச்சயமாகக் கூறியிருக்க வேண்டும். ஏனெனில் 'வாழ்க்கைத் தத்துவம்' என்பது எல்லா மொழிகளுக்கும் எல்லா நாட்டினருக்கும் பொதுவானது.

## உடலைப் பேணுவதே முதல் முக்கியம்

'குறைவற்ற செல்வமென' நோயற்ற வாழ்வைத்தான் சொல்லியிருக்கிறார்களே தவிர தங்கம், வைரம், பெரும்பணம், காடுகள், கட்டிடங்கள், அழகு, அறிவு என்று எதையும் சொல்லவில்லை. ஏனெனில் அதுதான் அப்பட்டமான உண்மை. ஆனால் இன்றைய மனிதனுக்குத்தான் அதைப்பற்றிய அறிவும் ஞானோதயமும் இல்லை. எப்படியாவது பணம் சம்பாதிப்பது, பொய் சொல்வது, நாடகமாடுது, பிறரை ஏமாற்றுவது என இவற்றில் குடியாய், குறியாய், ஆவலாய் இருக்கிறான் மாமனிதன். ஆனால் தன்னுடலைச் சரியான முறையில் பேணாமல் நடிப்புடை போர்த்தியப் பொய்யுடம்புக்காரனாக, போலி மனிதனாகத் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளுகிறவனாகத்தான் திரிகிறான்.

எந்த உயிரினத்திற்கும், உயிர்தான் ஜீவநாடி; ஒப்பிடமுடியா மாபெரும் பொக்கிஷம். உயிர் போய்விட்டால் எல்லாமும் முடிந்துவிட்டது. அது நம் அனைவருக்கும் தெரிந்ததுதான். அப்பேற்ப்பட்ட உயிருக்கு, அதை முடிந்தவரை குறையில்லாமல் நீட்டிப்பதற்கு, உயிரின் ஆதாரமான நல் உடலைக் பேணிக்காப்பது, நம் அனைவரின் தலையாய கடமையல்லவா!.

## உயிரின் ஆதாரம் நல்ல உணவு

அவ்வுடலைப் பேணிக்காக்கும் 'மூல மந்திரங்களானவை', சரியான, சத்தான உணவுகள், உடலுழைப்பு மற்றும் முறையான வாழ்க்கை முறை ஆகும். இவைகளில் முதன்மையானது, முக்கியமானது உணவுதான். உண்ணுவதற்காக வாழ்கிறோமா அல்லது வாழ்வதற்காக உண்ணுகிறோமா? என்பது தனிமனித சுதந்திர சமாச்சாரம். இருப்பினும் 'வாழ்வதற்காக உண்ணுவதே' சிறப்பானது!

அப்படியான உணவைப்பற்றி, அது சமைக்கப்படும் விதங்களைப் பற்றி பலரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. பெரும்பாலும் வழிவழியாக வந்த சமையல் முறைகளை, துரதிஷ்டவசமாக அவற்றிலும் ஒருசில நன்மையான விஷயங்களை மட்டும் நீக்கிவிட்டு அப்படியே தொடர்ந்து கொண்டிருக்கிறோம். இதில் நன்மைகளும், தீமைகளும் கலந்தேதான் இருக்கின்றன. இப்போது பாஸ்ட்-புட் என்னும் அவசர உணவுகள் வந்துவிட்டன. இவைகளை அவசரஅவசரமாக உண்டு அந்த உணவகங்களைவிட்டு அவசரமாக வெளிவந்து, இந்த உலகை விட்டும் அவசரமாகச் சென்று விட வேண்டுமோ, என்னவோ? இந்த

பாஸ்ட்-புட் அயிட்டங்கள் பெரும்பாலும் பலவித எண்ணை, மசாலாக்களில் பொரியல் செய்யும் உணவு வகைகளாகத்தான் செய்யப்படுகின்றன.

### எண்ணிலடங்கா உணவு வகைகள்

இதைத் தவிர தினந்தோறும் ஆண்டாண்டு காலமாக எந்தத் தொலைக்காட்சியை பார்த்தாலும், ஏதாவதொரு நேரத்தில் ‘சமையல் செய்வதற்கு மிகவும் அவசியமான’ ஒன்றைப்போல பெரிய உயரமான வெள்ளைக் குல்லாய் போட்டவர்களும், குல்லாய் போடாதவர்களும் ஏதேதோ வகைவகையாய் சமையல் செய்து காண்பித்துக் கொண்டிருப்பார்கள்.

நீண்ட வெள்ளை நிறக் குல்லாய், சமையல் செய்வதற்கு மிக அவசியமோ? ஒரு வகையில் அது அங்கே சற்று இடைஞ்சலாகத்தான் இருக்கமுடியும்! எந்த நாட்டுக் கலாச்சாரமோ! வித்தியாசப்படுத்திக் கொள்வதற்காக அதை நிரந்தரமாக்கி விட்டார்கள். தலைமுடிகள் பறக்காமலிருப்ப தற்கும், தலை அழுக்கு, வியர்வை வெளியே வராமலிருப்ப தற்கும் வேறுவகைச் சிறிய குல்லாய் ரகத்தைத் தேர்ந் தெடுத்திருந்தால் அங்கே மிக வசதியாக இருந்திருக்கு மென்றே தோன்றுகிறது, இப்படியும் பின்னொரு காலத்தில் வரலாம்.

இதைச் சில வீடுகளில் உள்ளவர்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு, குறிப்பெடுத்து எழுதிக் கொண்டு வியந்து பார்த்துக்கொண்டிருப்பார்கள். ஆனால் இதைப் பார்ப்பவர்கள், எழுதிக் கொண்டவர்களில் எத்தனை சதவீதம் பேர் அவ்வுணவுகளை ஒரு முறையாவது சமைத்துப்

பார்த்திருப்பார்கள்? அப்படியே ஒருசிலர் ஒருமுறை சமைத்துப் பார்த்திருந்தாலும் அவைகளைத் திரும்பவும் சமைத்துக் கொண்டிருக்கிறார்களா? என்றால் பரவலாக இல்லையென்றுதான சொல்ல முடிகிறது.

ஓர் உண்மையைச் சொல்லப்போனால், அங்கங்கே சமைத்துக் காண்பித்தவர்கள் பலர் செய்ததும், இங்கே சொல்லப்போவதும் கிட்டத்தட்ட ஒன்றுதான். நன்றாக உன்னிப்பாக ஒரு விஷயத்தைக் கவனித்தோமேயானால் அதில் உள்ள 'சூட்சமம்' புரிந்துவிடும். பலவிதமான, ருசிருசியான, கலர்கலரான சமையல் வகைகள் எங்கிருந்து எப்படி வருகிறது? எவ்வகைகளில் ஆயிரமாயிரம் உணவுகள் தயாரிக்கப்படுகின்றன? என்பதில் பெரிய அதிசயமெதுவுமில்லை! இது எப்படி சாத்தியம்.

சமையலில் இருக்கும் வெளிப்படையானத் தத்துவம் என்னவெனில் சர்க்கரையை எதில் போட்டாலும் இனிக்கும், மிளகாயை எதில் போட்டாலும் உரைக்கும், புளியை எதில்போட்டாலும் புளிக்கும்; அதுபோலவே உணவுக்காக, உணவின் சமையலுக்காகப் பயன்படக்கூடிய காய்கறிகள், பழங்கள், பருப்பு வகைகள், தானியங்கள், மளிகைச் சாமான்கள், வாசனைப் பொருட்கள், எண்ணெய், நெய் வகைகள் இவைகளில் சிலவற்றை, பலவற்றை வெவ்வேறு விதமான அளவுகளில் சமைப்பதற்கு எடுத்துக்கொண்டு அவித்தல், வறுத்தல், பொரித்தல், வேகவைத்தல், சுடுதல், பொசுக்குதல் எனச் சில பல முறைகளில் பலப்பல உணவு வகைகள் செய்யப்படுகின்றன.

ஒன்றையோ, ஒன்றுக்கு மேற்பட்ட சமையல்

முறைகளையோ மேற்கொண்டு ஒரு உணவு சமைப்பதும் செய்வதும், அதைப் போலவே பலவிகிதாச்சார வித்தியாசக் கலவைகளில் மேற்கூறிய சமையல் பொருள்களைச் சேர்த்து அந்தந்த பதம் தாண்டாமல், உதாரணமாக அதிகம் அடுப்பில் வைத்து கருக்கிவிடாமல் எப்படிச் சமைத்தாலும் ஏதேனும் புதுப்புது வகையான அயிட்டங்களைத் தயார் செய்து கொண்டே இருக்கலாம். அதற்கு நம் இஷ்டம் போலப் பெயர்களையும் வைத்துக் கொள்ளலாம். இதில் எந்தத் தவறுமில்லை, இது யாரையும் குறை சொல்லுவதற்காகவும் சொல்லப்படவில்லை.

இந்த முறைகளில் ஒவ்வொருநாளும் புதுப்புது அயிட்டங்கள் செய்து பார்த்ததும், அவற்றை எங்கேயும் செய்து காண்பித்து நிரூபிக்கக் கூடியதாகும் என்கிற நிலையிலுமே குறிப்பிடப்படுகிறது. உதாரணமாக இட்லி, தோசை மாவிலே எதை வேண்டுமானாலும் கலந்து சுட்டுப் பாருங்கள். குறைந்தபட்சம் ஒரு நூறு வகை இட்லிகளை, தோசைகளைக் கண்டெடுக்கலாம்.

இந்த வகையிலேயே சில சமையல் வகைகள், பல காலகட்டங்களில் பலருக்குப் பிடித்துப்போய் அவை நிரந்தரமாகி, தொடர்ச்சியாகப் பெரிய மாற்றமேதும் இல்லாமல் இருந்து வருகின்றன. நமது சாம்பார், வற்றல் குழம்பு, ரசங்கள், மீன் குழம்பு, கறிக்குழம்பு வகைகள், காய்கறி பொரியல்கள், மீன், கறி வறுவல் வகைகள் எனவும் இப்போது வந்து வீற்றிருக்கும் பீஸ்ஸா, மாஸா போன்றவைகளும் இன்னும் ப்ரைடு அயிட்டங்களும், வெறு ஏதேனும் உணவு வகைகளும் இப்படித்தான் இருந்து வருகின்றன.

இப்போதிருக்கும் இவைகள்தான் சரி, மாற்ற முடியாதது, மாறக்கூடாதது என்பதற்கில்லை. உண்மையில் பலருக்கு இந்த அவசர உலகத்தில் அதற்கு நேரமில்லை, சிந்தனையில்லை, இயலவில்லை, அவசியமுமில்லை! என்றுதான் கூறத்தோன்றுகிறது.

**வேண்டாத உணவுகள்**

ஒரு அனுபவ மொழியொன்றைச் சொல்வார்கள். ஒரு உணவில் 'ருசி எவ்வளவு அதிகமோ அந்தளவுக்கு அது ஆபத்தானது' எனவும், ருசி குறைவாக ஆக அது பாதுகாப்பானதுமாகுமாம்! ஆக மிகவும் ருசிக்கிற உணவு அதிகமானத் தீமையைத் தருவதாகத்தானிருக்கும்.

சாக்லேட்டுகள், ஐஸ்கிரீம்கள், அதிக எண்ணெயில் சமைத்த உணவுகள், இனிப்பு, உரைப்பு, புளிப்பு, உப்பு சுவைகளின் கூடுதல் உள்ள உணவு வகைகள், பெரும்பகுதி சத்துப்போன வற்றல் வகைகள், அதிக அரிசிச்சாதம் போன்றவை நிச்சயமாகத் தீங்கிழைக்கும் தன்மை கொண்டவைகள். எல்லோருக்கும் தெரிந்ததுமாதிரி கசப்பு உணவும், சுவையும் உணவிற்கு மிகவும் அவசியம். அது நல்லது என்றாலும் யார் விருப்பத்துடன் ஏற்றுக் கொள்கிறார்கள். வயதாக ஆக சர்க்கரை நோய் வந்தபிறகுதான் கசப்பு உணவிற்குக் கட்டாயமாக ஓட்டிவிடப்படுகிறார்கள்.

அவரவர் வயது, உடல் அளவு, உடலுழைப்புக கேற்றாற்போல் உணவின் அளவு இருக்க வேண்டும். எந்த ஒரு வேலையைச் செய்யாமலும், வயதாகிக் கொண்டே

இருக்கும் போதும் சதா பெருந்தீனி தின்று கொண்டிருந்தால் எப்போதும் நோய்களுடன் உறவாடி 'விரைவாகவே டிக்கட்' வாங்கிக்கொள்ள வேண்டியதுதான்.

## பற்களுக்கு வேலை அவசியம்

உணவுகளை ரசித்து, ருசித்து, பசித்துப் புசிக்க வேண்டும். பரபரப்புடன் பறந்து கொண்டு சாப்பிடுவதைத் தவிர்க்கவும்; பாஸ்ட் டெல்லாம் கூடாது. ஓரளவுக்கு மெதுவான வேகத்தில் நன்றாகக் கடித்து, மென்று தின்னும் வகையில்தான் உணவுகள் இருக்க வேண்டும். குழைந்து போய், பசை போல் பற்கள் படைக்கப்பட்டக் காரணத்திற்கும், பற்களுக்கும் வேலையில்லாமல் போனால், பற்களும் விரைவாகவே போய்விடும்! அதுவும் இளமைப் பருவத்தில் இது மிகவும் அவசியம்.

எவ்வளவுக்கெவ்வளவு கடித்து உண்ணுகிறோமோ அவ்வளவுக்கு 'பற்களுக்குப் பயிற்சி' கொடுத்து வலுவுள்ளதாகும். 'நொறுங்கத் தின்றால் நூறு வயது' என்னும் பழமொழி கூட அதைத்தான் அடித்துச் சொல்கிறது. நன்றாகக் கடித்துத் தின்னும் உணவுகளைச் சாப்பிடுபவர்களுக்கு சாப்பிடும்போது தாடைகளின் அசுர அசைவினால் முகத்திற்கு நல்ல பயிறிசி கிடைக்கும்; முகமும் சுறுசுறுப்பாகத் தெரியும்.

## தவறான அரிசிக் கருத்து

இந்த நேரத்தில் தென்னிந்தியாவில் மிகப்பரவலாக உணவாகக் கொள்ளப்படும் அரிசிச் சமையலைப் பற்றிக் குறிப்பிட்டேயாக வேண்டும். இங்கே பல தவறுகள் உள்ளன.

முதலாவதாக தமிழ்நாடு, ஆந்திரா போன்ற பகுதிகளில் அரிசிச்சாதம் 'தூய வெள்ளை' நிறத்தில் இருப்பதுதான் சிறப்பு, கௌரவம் என்றொரு தவறான, ஆனால் வலிமையான கருத்து நிலவுகிறது. அரிசி வகைகைளின் நிறம் தூய வெள்ளை என்று யார் சொல்லிக் கொடுத்தது? எனத்தெரியவில்லை, வேண்டுமானால் சில வகைகள் அவ்வகையில் இருக்கலாம்.

அவற்றை வெள்ளை நிறமாக்குவதற்கு பாலீஸ் பிடிப்பது, சுண்ணாம்புக் கலவை சேர்ப்பது, வேறு என்னென்னவோ செய்வது எனப் பலதவறுகள் நடந்தேறி வருகின்றன. அதன் பிறகு ஒவ்வொரு அரிசியிலும் 'யாரோ தனி முயற்சி எடுத்து ஏதோ அழுக்கைத் தடவிவிட்டது' போல் அதைப் போட்டு நீண்ட நேரம் ஊறவைத்து தண்ணீரில் கழுவி, முக்கியச் சத்துக்களைப் போகவைப்பது என மூடத்தனமானக் காரியங்கள் நடந்து வருகின்றன. அதோடு மட்டுமல்லாமல் நன்றாகக் குழைத்து, பாவப்பட்டப் பற்களுக்குக் கொஞ்சம்கூட வேலையில்லாமல், நேராக வயிற்றுக்குள் தள்ளிக் கொள்கிறார்கள். நன்றாக கடித்து மென்று உமிழ்நீருடன் கலந்து தின்பதே 'செரித்தலை இலகுவாக்கும்' என்பதைப் புரியாமல் நடந்து வருகிறார்கள்.

ஒரு சரியான உண்மையைச் சொல்லப் போனால் அரிசியில் எந்த அழுக்குமில்லை, கழுவினால் மேலே தவிடு மாதிரி உள்ள சத்துக்கள்தான் போகும். அரிசிச்சாதம் ஓரளவுக்காவது பழுப்பு நிறமாகத்தான் இருக்க வேண்டும். அதுவும் நன்றாக மென்று தின்னும் பக்குவத்தில்தான் சமைக்க வேண்டும். இந்த வகையில் கேரள மாநிலத்தவர்

ஓரளவுக்குப் பரவாயில்லை எனலாம். மற்ற பல்வேறு உணவுகள் பலப்பல நிறத்தில் இருந்து, அவற்றைச் சாப்பிட்டு நாமனைவரும் உயிரோடிக்கும்போது, இந்தத் தவறான வெள்ளை அரிசிச்சாதத்திற்குப் பதிலாக பழுப்புநிற அரிசிச் சோற்றைச் சாப்பிட்டால் உயிர் ஒன்றும் போய்விடாது. மாறாகக் கூடுதல் சத்தும் அதன் பயனும்தான் கிடைக்கும். அதேபோல காய்கறிகளை நறுக்கியபின் கழுவாமல் கழுவிய பிறகே பெரிய துண்டுகளாக்கிச் சமைக்க வேண்டும்.

**மருத்துவமனை போவதை குறைக்கவேண்டும்.**

இன்றைய மனிதர்களின் நோய்களுக்கான முதல் முக்கியக் காரணங்கள் எவையெனில் தவறான உணவுகளும், சமையல் முறைகளும் ஆகும். அந்தந்த காலக்கட்டங்களில் மலிவாகக் கிடைக்கும் பழங்கள், காய்கறிகள், கீரை உணவுகளை அதிகம் சாப்பிட்டு வர வேண்டும். இவையெல்லாம் நீண்ட ஆயுளைத் தருவதோடு, இளமைப்பருவம் விரைவாகக் கடப்பதை இயன்ற அளவுக்கு இழுத்துப் பிடித்துத் தடுக்கும்.

இல்லையெனில் மருத்துவர்களிடமும், மருத்துவமனைக்கும் படையெடுத்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான். அதுவும் இன்றைக்கு ஒருசில இடங்களில் நடைபெற்று வரும் மருத்துவத் தொழில், அது மிக உயர்ந்தது, புனிதமானது என்பதை மறந்த நிலையில் அத்துறையிலுள்ளோர் பல தவறுகளைச் செய்வதாய் செய்திகள் வருகின்றன. உடல் பாகங்கள் கழற்றி விற்கப்படுவதாகவும், எந்த நோய்க்கும் ஏழை பணக்காரன்,

நடுத்தர மக்கள் என்ற பாகுபாடில்லாமல் பெரும்பணம் வசூலிக்கப்படுவதாகவும் தெரிகிறது.

மருத்துவர்கள் தங்கள் தொழில் போட்டி பெருமையை நிலைநாட்ட பல லட்சம், கோடியில் வாங்கி வைத்திருக்கும், பெரும்பாலும் அந்நிய நாட்டு மருத்துவச் சாதனங்களை, அவைகள் தொடர்ந்த உபயோகத்தில் இல்லையென்றால் கெட்டுப் போய்விடும் என்ற காரணத்தினாலோ என்னவோ? அவற்றைப் பல நோயாளிகளுக்கு பயன்படுத்தி வருகின்றனர். அதிகச் செலவு பிடிக்கும் அனைத்து டெஸ்டுகளை, பலரையும் எடுக்கச் சொல்லி ஒரு பகையான மனிதநேயமற்ற கொடுமைக்கு உள்ளாக்குவதாகக் கூறப்படுகிறது. தேவையே இல்லாமல் தனியார் மருத்துமனைகளில் பல நாட்கள் தங்கவைத்து, ரூம் வாடகை அது இது எனப் பணம் பிடுங்கப்படுகிறதாம்!

இந்த ஏழை, கீழ்நிலை நடுத்தர மக்கள் தங்கள் வாழ்க்கையில் எவ்வளவு சிரமப்படுகிறார்கள் என்பதை சற்றாவது இந்த வகை மருத்துவர்கள் கொஞ்சமாவது சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் இதற்காக மிகமிக சிரமப்பட்டுக் கொண்டு வந்து கொடுத்த பணத்தில், தாங்கள் மட்டும் ஆடம்பரமாக வாழ நினைப்பது எங்ஙனம் நியாயமாகும், தர்மமாகும்? இது பலரும் பணக்காரர்களாக வாழும் அரேபிய, அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் இல்லை. ஏழை மக்களின் வளரும் இந்தியா என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். இம்மாதிரி மருத்துவமனைகளில் இருப்பதைவிட ஜெயிலில் இருப்பதுகூட மேல் என்று எண்ணத்தோன்றுகிறது.

பல அரசு ஆஸ்பத்திரிகளின் நிலவரமோ வேறு மாதிரியில் 'பயங்கரமானது'. லஞ்சமும் ஈவு இரக்கமற்ற செயல்களும், சமூக விரோதிகளின் தொல்லைகளுமோ சொல்லி மாள முடியாதவை!

ஆகவே இவ்வகைக் கொடுமைகளுக்கும், துன்பங்களுக்கும் உள்ளாகாமல் இருப்பதற்கு, சமையல் முறைகளைத் தக்க வகையில் திருத்திக் கொண்டு வாழ வேண்டும். சுகாதாரமான, தொந்தரவுத் தராத, தேவையானச் சத்துக்கள் உள்ள பலவித உணவுகளை சுழற்சி முறையில் சத்துப் போகாமல் சமைத்து சந்தோஷமாக உண்டு நோயற்ற வாழ்வை வாழ்வோம்.

# ட, காபி கலாச்சாரம்

## சத்துள்ள, சத்தில்லாத உணவுமுறைகள்

மனிதர்கள் நன்றாக உயிர் வாழ்வதற்கு நல்ல சத்துள்ள உணவுப் பொருட்களும், 'ஓரளவுக்கு உயிர் வாழ்வதற்கு' சுமாரான சத்துக் குறைவாக உள்ள உணவுப் பொருட்களே போதும் என்ற மனநிலையில் லாபத்தை மட்டும் கணக்கில் கொண்டு உணவுப்பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இப்போதெல்லாம் அபரிமிதமான இரசாயன உரங்கள், ஊக்கமருந்துகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்றவற்றைப் பயன்படுத்தி இயந்திரகதியில் உணவுப் பொருட்கள், தானியங்கள், காய்கறிகள், பழங்கள் உற்பத்திச் செய்யப்படுகின்றன.

இதனால் அவற்றின் அளவு பெரியதாக, கவர்ச்சியாக இருக்குமேயன்றி அதன் இயற்கையான மருத்துவக் குணங்களும் சத்துக்களும் குன்றியதோடு சமயங்களில் சில பக்கவிளைவுகளையும் உண்டு பண்ணுவதாக அவ்வப்போதுக் கேள்விப்பட முடிகிறது. நமக்கு இப்போது கிடைத்துக் கொண்டிருப்பதெல்லாம் இந்த இரண்டாம்ரக அயிட்டங்கள்தான். அதற்குமேல், சமைக்கும் தாய்மார்கள், தந்தைமார்கள் முடிந்த அளவுக்கு அதிலுள்ள குறைவானச் சத்துக்களைக்கூட எப்படியும் அழித்தே தீருவது! என்ற தீர்மானத்தில் சமையல் செய்யும் கலையில் நிபுணத்துவம் பெற்று விளங்குகிறார்கள்.

இதெல்லாமும்தான் இன்றைய மனிதனின் பலவித நோய்த்தன்மைக்கும் நோஞ்சான் உடம்புக்கும் காரணங்கள் என தைரியமாகச் சொல்லலாம். சாப்பிடும் உணவு வகைகள் அநேகமாக திடம், திரவம் என்று இரண்டு வகைகளில் அடங்கி விடும். இயற்கை வாயு உணவான ஆக்ஸிஜனைத் தவிர வேறு வாயு உணவுகள் இல்லை என்று கூறலாம். ஆனால் தீங்கிழைக்கும் வாயுக்களைத் தரக்கூடியதானப் புகையிலை, கஞ்சா, பிரவுன் சுகர் போன்றவைகளும் இந்த உலகத்தில் மனிதனோடு உலவிக் கொண்டுதான் உள்ளன.

## திரவ உணவுகள்

இங்கு நாம் திரவ உணவுகளைப் பற்றி பார்த்தால் பால், தயிர், மோர், பழச்சாறுகள், சூப்புகள், மென் குளிர்பானங்கள், சூடான பானங்கள் என பல வகைகள் இருக்கின்றன. இருந்த போதிலும் சுடுபானங்களில் பெரும் அங்கம் வகிக்கும் டீ, காபி என்னும் ‘இரு அண்ணன் தம்பிகளின் ஆட்சிதான்’ உலகம் முழுக்க இன்றைக்கு வியாபித்து கோலோட்சிக் கொண்டிருக்கிறது.

உண்மையிலேயே அவையிரண்டும் அவ்வளவு முக்கியமா? இந்த அளவுக்குத் தேவையா? ஒருவேளை அவையிரண்டும் இல்லையெனில் இந்த மனித சமுதாயம் ஒரு நிமிடத்திலோ ஒரு நாளிலோ அல்லது குறிப்பிட்டச் சில காலத்திற்குப் பிறகோ அழிந்து விடுமா? என்று ஆராய்ந்தால் மொத்தமாகவே அவையிரண்டும் தேவையுமில்லை, இந்த மனித சமுதாயம் அழிந்தும் போகாது என்பதுதான் தெரிய வரும்.

முன்பு ஆரம்பப்பள்ளி பாடங்களில் டீயில் 'டீயின்' என்னும் நச்சுப் பொருளும் காபியில் 'கா.:.பீன்' என்னும் நச்சுப் பொருளும் அடங்கியிருப்பதாகப் படித்தது ஞாபகத்திற்கு வருகிறது. பிறகு அவ்வப்போது இவையிரண்டையும் ஆராய்ச்சி செய்து, சிலர் சிலப்பல, கொஞ்சம், அதிகம் நன்மை இருப்பதாகவும், சிலர் இதே ரகத்தில் தீமையிருப்பதாகவும், இன்னும் சிலர் இந்த வகை அளவுகோளிலேயே நன்மையும் தீமையும் கலந்திருப்பதாகவும் அறிக்கைகள், கட்டுரைகள் வெளியிடுவார்கள்.

அந்த ஆராய்ச்சியில் காபியைவிட டீ சிறந்தது என்றும், டீயை அளவாகக் குடிக்கலாம் அதில் இரும்புச் சத்துள்ளது, இதயத்திற்கு நன்மை தருகிறது எனவும் சொல்லப்படுகிறது. மேலும் டீயை பாலோடுக் கலந்து குடித்தால் அவ்வளவு நல்லதல்ல என்றும் அப்போதுச் சிறிய அளவில் நச்சுத் தன்மை உண்டாகும் நிலையை அடைகிறது எனவும் குறிப்பிடப்படுகிறது. மேலும் டீ எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம் ஒன்றும் ஆபத்தில்லை என்று கூறும் ஆராய்ச்சியாளர்களும் உள்ளார்கள்.

காப்பியை பற்றிக் கூறும்போது தூக்கத்தைப்போக்கி சுறுசுறுப்பைத் தருவதுடன் மனதுக்கு அமைதியைத் தருகிறது என்றும், தலைவலி நேரத்தில் இதமாக இருக்கும் எனவும், காபியில் சேர்க்கப்படுகிற 'சிக்கரி' என்னும் கிழங்கின் பவுடர் ஆஸ்துமா நோய்க்கு நல்லது என்றும் கூறப்படுகிறது.

பொதுமக்களிடம் இவைகளின் உபயோகத்தைப் பற்றி பலவிதமான கருத்துக்கள் உள்ளன. டீ அதிகம் குடித்து வந்தால் விரைவாகத் தலை நரை உண்டாகும் என்றும்,

பசி குறைகிறது, சுறுசுறுப்புத் தருகிறது, தூக்கத்தைக் கலைக்கிறது போன்றத் தகவல்களும் தரப்படுகின்றன.

டீ, காபியை ஒரு நாளைக்கு ஓரிரு முறைகள் சாப்பிடலாம். அதில் எவ்விதத் தவறுமில்லை. அதில் நன்மை அதிகமா, தீமை அதிகமா என்பதல்லாமல், நாம் வாழும் காலத்தில் உள்ள இவ்வகை திரவ உணவு தயாரிப்புகளின் முக்கிய மூலப் பொருள்களான டீ, காபி பயிர்கள் பயிரிடப்பட்டு புழக்கத்திலும் உள்ளதால் நிச்சயமாக அவைகளைப் பருகலாம், பருகத்தான் வேண்டும்; ஆனால் அதற்கு ஓர் அளவு இருக்க வேண்டும்.

அதற்காக எப்போதும் வேறு வேலை இல்லாமல் டீ, காபி சாப்பிட்டுக் கொண்டிருப்பது தேவைதானா. நல்லதா? என்பதை சற்றே சிந்தித்துச் செயலாற்றுவோம். வேலை மிகக் குறைவாக உள்ளோர், அதிகமாக உள்ளோர் என இரண்டு வகையினரும் இந்த டீ, காபி அதிகமாக சாப்பிடும் மனிதர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். டீ, காபி குடிக்கிறவர்களைப் போல டீ, காபியே குடிக்காதவர்களும் நன்றாகவே நம்முடன் வாழ்ந்து கொண்டிருப்பதைப் பரவலாக காணக் கூடியதாகத்தான் இருக்கிறது. இவ்வாறு இருக்கிற சூழலில் டீ, காபி குடிக்காவிட்டாலும் ஏதும் நடந்து விடாது, இது ஒரு நூறாண்டு காலத்தில் ஏற்பட்ட பழக்கம்தான் என்பதையும் மறுப்பதற்கில்லை.

## டீ, காபியின் தாக்கம்

அநேகமாக சுமார் ஐம்பது வருட இந்தியாவில்தான் இந்த டீ, காபி கலாச்சாரம் விசுவரூபம் எடுத்துத் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது என்றால் அது

மிகையன்று. அதற்கு முன்னால் ஆயிரமாயிரம் ஆண்டுகள் வாழ்ந்த, 'உண்மையில்' நம்மைவிட புத்திசாலி மனிதர்கள் இதற்கு அடிமைப்பட்டிருக்கவில்லை. நம்மவர்கள் ஒரு பழக்கத்தை தெரிந்தோ, தெரியாமலோ, அறிந்தோ அறியாமலோ, புரிந்தோ புரியாமலோ ஏற்றுக்கொள்ளத் தொடங்கிவிட்டால் அதற்கு எல்லையே இல்லாமல் போய்க் கொண்டேயிருக்கும். அந்த மாதிரிதான் நேற்று மதுப்பழக்கமும் மிக லேசாக ஆரம்பமாகி, இன்று வலுவான நிலையில் மனித வாழ்க்கையில் பின்னிப்பிணைந்து விட்டது. இதற்கெல்லாம் ஒரு மாற்றமே கிடையாதா, கூடாதா? என்பதுதான் புரியாத புதிராக உள்ளது.

'அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு' என்பது போல டீ, காபி கடைகள் நாளுக்கு நாள், இன்னொரு இனமான பெட்டிக்கடைகள் போல புற்றீசல்களாகப் பெருகுவதும், மனிதர்கள் அவற்றை அதிகமாகப் பருகுவதும் நிச்சயமாக நல்லதல்ல என்பதை நிரூபணம் செய்ய வேண்டிய அவசியமேற்பட்டுள்ளது.

சிகரெட், பீடி புகைக்கும்போது உண்டாகும் இனம்புரியாத ஒரு புத்துணர்ச்சியை அம்மனிதர்கள் உணருவது போலவே, டீ, காபி குடிக்கும்போதும் ஒரு இன்பமான மன நிறைவு, சுறுசுறுப்பு வயிறு நிரம்பல், கொஞ்சம் தெம்பு போன்றவை ஏற்படத்தான் செய்கிறது என்பதை ஒத்துக் கொள்வோமே! இருப்பினும் பல தடவைகள் இவற்றைப் பருகுவதால் உண்டாகக் கூடிய வாய்ப்புகள் உள்ள பசி மறத்தல், பிறகு குறைதல், அதனால் சத்துணவு செல்லாமல் நாளடைவில் தொடர்ந்த இப்பழக்கத்தினால் உடலின் உட்புற இயக்கங்களில்

முறையற்ற மாற்றங்கள் உருவாகி உடலில் புரிந்து கொள்ள முடியாத பலவீனம், இளைப்பு தோல் பொலிவிழப்பது, மலச்சிக்கல் இன்னும் பிற சங்கதிகளும் பலருக்கு ஏற்படுவதை இவர்களும் மற்றவர்களைபோல் உன்னிப்பாக கவனிக்கத் தெரியாத நிலையில் வாழ்கிறார்கள் என்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

இந்த டீ, காபிதான் இன்றைக்கு நட்பு மற்றும் உறவு பாராட்டுவதில், கொண்டாடுவதில் முக்கிய கதாநாயக நாயகியாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இவைகள் வீடுகளில் பரிமாறப்படாவிட்டாலோ, அலுவலகங்கள், தொழில்கள், மற்றும் வியாபார நிறுவனங்களில் வாங்கிக் கொடுக்காவிட்டாலோ எல்லாம் கெட்டுக் குட்டிச்சுவராகி விடும் அளவுக்கு அதன் அங்கீகாரம் மேலோங்கி முக்கியத்துவம் பெற்றுள்ளது. இவைகளை வழங்காவிட்டால் கஞ்சனாகவும் சிறிய குற்றமிழைத்தவராகவும்கூட தாழ்த்தப்படும் கலாச்சாரம் கிராமம், நகரம், பெருநகரம் என வித்தியாச பேதமில்லாமல் விளங்கிக் கொண்டிருக்கிறது.

எங்கேயும் போலித்தனம், கலப்படம் இருப்பது போல இந்த டீ, காபி பவுடர்கள் தயாரிப்பிலும் மோசக்காரர்களின் சதியும் அதன் பொருட்டு கொள்ளை லாபம் ஈட்டும் நயவஞ்சகச் செயல் எப்போதும் நடப்பதும், அவ்வப்போது அம்மாதிரி ஒரு சில தொழிலகங்கள் மற்றும் அதன் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டனைகள் கிடைப்பதும், கிடைக்காததும் என எல்லாமே இங்கேயுமுண்டு. புளியங்கொட்டை, மரத்தூள், உபயோகித்த டீ, காபி தூள், முந்திரி தோல், இரசாயன சாயங்கள் போன்றவைகள் கலப்படத்திற்குப் பயன்படுத்தப்படுவதாக

அறிய முடிகிறது. இதற்கெல்லாம் சேர்த்துத்தான் காசு கொடுத்து பலவித உபத்திரவங்களை மனிதன் பெற்றுக் கொள்வதில் துடியாய்த் துடிக்கிறான்.

டீ, காபி கடைகள் நடத்துவோர் நிறையபேர் தெரிந்தே! அதிகலாபம் சம்பாதிப்பதற்காக, இந்த கலப்பட பவுடர்களை உபயோகிக்கின்றனர் என்பதை, மறைமுகக் கண்காணிப்பில் கண்டுகொள்ள முடிகிறது. போலி வியாபாரிகளிடம் வாங்குவதையும் அதை நல்ல தூளுடன் கலப்பதையும் கண்டுபிடித்து பல இடங்களில் உறுதி செய்யப் பட்டுள்ளதாகத் தெரிகிறது. அதோடு மெய் 'பாலுக்கும்' எப்படியோ பஞ்சமாக ஆக்கப்பட்டு இரசாயன 'பொய்பால்' நல்ல ஆடம்பர அமர்க்கள விளம்பரத்துடனும் சந்தையில் வியாபாரம் செய்யப்படும் நிலை நிலவுகிறது. அந்த போலிப்பால்களே பெரும்பாலும் இன்றைக்கு பல இடங்களில், டீ, காபி தயாரிப்பில் பயன்படுத்தப்படுவதால் தொல்லை இரட்டிப்பாக்கப்பட்டுள்ளதை நமது நண்பர்கள் உணரத்தான் வேண்டும்.

## வேடிக்கை உலகம்

நண்பர்கள், உறவினர்கள் கூடும்போது அந்நிலைக்கு ஒருவித இணைப்புப்பாலமாக இணைப்புத் திரவமாக கருதப்பட்டு, பலர் விரும்பியும், சிலர் அவ்வளவாக விரும்பாமல் ஒரு வகையான கட்டாயத்திலும் டீ, காபி சாப்பிடும் கலாச்சாரம் பரவலாக இருப்பது உலகறிந்தது. நண்பர்கள், உறவினர்கள், கடை, ஹோட்டல்களில் கூட்டாக இவைகளைச் சாப்பிட்டுவிட்டு, 'காசு' கொடுப்பதில் பல இடங்களில் அம்மனிதர்களிடம் உள்ள மனத்தயக்கத்துடன் உண்மை, பொய் மற்றும் இரண்டும் கலந்து யார் காசு

கொடுப்பது? என்பதில் உள்மனப்போட்டி, தவிர்த்தல், தவிப்பு நிலவுவதை மனநாடி பிடித்து ஆய்ந்தறியக் கூடியதாக உள்ளது.

இதே மனநிலை, உண்மை, பொய் போட்டி தியேட்டர் மற்றும் பஸ் டிக்கட் வாங்கும் சமயங்களிலும் சிலபல நண்பர்கள் உறவினர்களுக்கிடையே காணக்கூடியதாக அமைந்திருக்கிறது. இச்சூழ்நிலைகளில் இனிமேலாவது பொய்போட்டிகள், உள்தயக்கம், விருப்பமின்மை, தவிர்க்கும் ஐடியா போன்றவை ஏற்படாமல் நட்பு, உறவுகளைப் பேணுவதே நலம். அதற்குத் தகுந்த வாழ்க்கை முறையைக் கையாளலாம். மது, போதை பழக்கங்களுக்கு அடிமையானவர்கள் இருப்பது போல இந்த டீ, காபிக்கும் எண்ணற்ற மனிதர்கள் ஒவ்வொரு நாளும் அடிமையாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை விட பிறராலும், சூழ்நிலைக் கட்டாயத்தாலும் அடிமையாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அதில் ஒன்றும் ரகசியமில்லை.

குளிர் நாடுகளில் வாழும் வெள்ளைக்கார மனிதர்களுக்கு வேண்டுமானால் குளிருக்கு மது தேவைப்படுவது போல, இந்த டீ, காபியும், அதுவும் அவர்களில் பெரும்பாலும் பால் சேர்க்காமல் சாப்பிடும் நிலையில் சற்று அதிகமாகத் தேவைப்படலாம். நம்மவர்களுக்கு நம் பெரியசைஸ் உணவு பழக்கங்களுக்கு மத்தியில் ஒரு நாளைக்கு ஒன்றிரண்டு முறை சாப்பிடுவதுதான் பொருத்தமாக இருக்கலாம்.

## அதிக பயன்தரும் மாற்று திரவ உணவுகள்

டீயில் கொஞ்சம் இரும்புச்சத்தும், காபியில் அதில் சேர்க்கப்படும் துளியூண்டு பாலில் உள்ள அதே அளவு

சத்தை விட வேறு எதுவும் சத்துப்பொருள் இருப்பதாகப் படவில்லை. நட்பு, உறவு பேணும் பானமாக, டீ, காபியுடனேயே மற்றவகை சத்துமிகுந்த பலதரப்பட்ட நன்மை பயக்கக்கூடிய சுடுபானங்களான காய்கறி, கீரை, காளான், சோயா சூப்புகள், பழச்சாறுகள், கோதுமை, சோளம், கேழ்வரகு இவற்றினால் செய்யப்பட்டத் தானியப்பால்கள், கோழி, ஆட்டுக்கால் மற்றும் பலவகைச் சத்துள்ள சுடுபானங்கள் ஆகியவற்றை டீ, காபிக்கு ஆகும் கட்டுப்படியான செலவிலேயே வாங்கி, பகிர்ந்துண்ணும் முறையைப் பயன்படுத்தி குறைவான அளவுகளிலேயே அடிக்கடி சாப்பிட்டு வரலாம். எந்தத் தொல்லைகளும் கொடுப்பதற்குப் பதிலாக நல்ல ஆரோக்கியமான வலிமையான உடல் திறனைப் பெறலாம்.

இவ்வகைத் திரவ சுடுபானங்களின் விற்பனை அதிகமாக அதிகமாக டீ, காபி அளவிற்கு விலை குறைப்புகளுக்கு வாய்ப்புகள் ஏற்படும். நல்லதொரு புதிய கலாச்சார மாற்றமும் நிகழ்ந்தது போல் ஆகும். நல்லவைகள் தவிர வேறு எதுவும் காலகாலத்திற்கு நிரந்தரமாக நிலைத்து நிற்க முடியாது. நல்ல மாற்றங்களும் வரவேண்டும், ஏற்படுத்தப்பட வேண்டும், ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். அதுதான் மனித நாகரீகத்தின் படிப்படியான தொடர் வளர்ச்சிக்கு அறிகுறியாக அமையும்.

# இனிப்பு + காரம் = கோரம்

## இனிப்பு

அறுசுவைகளை அறிந்து கொண்ட மனிதர்கள் அச்சுவைகளைத் தனித்தனியாகவும் ஒன்றிணைத்தும் விரும்பி உண்டுவருகின்றனர். அதற்கென எண்ணிலடங்கா சமையல் முறையினை அன்றிலிருந்து இன்றுவரை உருவாக்கி வருகின்றனர்.

### இயற்கை இனிப்புகள்

இச்சுவைகளுக்குள் சுவைகளின் ராணியான இனிப்பு சுவையை இயற்கை மற்றச் சுவைகளைவிட அபரிமிதமாக வழங்கியுள்ளது. உலகின் அனைத்து பகுதிகளிலும் இடத்திற்கு இடம் வெவ்வேறு தினுசுகளில் ஆயிரக்கணக்கிலானப் பழவகைகள் பல்வேறு வகை இனிப்புச் சுவைகளுடன் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இயற்கை மற்றும் செயற்கை முறைகளில் ஒரு இனத்திலேயே பலசுவை ரகங்கள், உதாரணமாக எண்ணற்ற மா மற்றும் ஆப்பிள் வகைகள் போன்று பல பழங்களின் ரகங்களில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட சுவைகளில் கிடைக்கின்றன.

### செயற்கை இனிப்புகள்

இயற்கையாக இவ்வளவு இனிப்பு சுவைகள் இருந்தும் மனிதர்கள் ஏனோ செயற்கையான இனிப்பைத் தேடிப்போனார்கள். இயற்கையாகப் பலவிதச் சத்துக்கள், சுவைகள், மருத்துவகுணங்கள், செரிமானசக்தி, ஆரோக்கிய உடல், இளமைப் பராமரிப்பு ஆகிய வற்றைத் தரும் பழங்களைக் குறைத்துக்கொண்டு, அனேகமாகப் பலர்

பழங்களிலிருந்து பலகாலம் ஒதுங்கிக்கொண்டு செயற்கை இனிப்பைக் கொண்டாடி வருகின்றனர். இயற்கை இனிப்புகளைவிட பலமடங்குக் கூடுதலாக செயற்கை இனிப்புகளை உலகம் முழுவதும் உள்ள மக்கள் மிகுதியாக உட்கொண்டுவருகின்றனர்.

பழங்கள் நீங்கலாக சில கிழங்கு வகைகள், காரட், பீட்ரூட் போன்றவை போக பனைமரத்திலிருந்து கிடைக்கும் பதனீர், பனை வெல்லம், கருப்பட்டி மற்றும் கரும்பிலிருந்துத் தயாரிக்கப்படும் ஒருவிதப் பழுப்புமஞ்சள் நிற சர்க்கரை ஆகியவற்றை அளவாகப் பயன்படுத்தும் நிலையில் நன்மை தரத்தக்கவையாக உள்ளன; என்றபோதிலும் இவைகளில் பலவற்றின் பயன்பாடு குறைவாகவே உள்ளது.

## வெள்ளைச் சர்க்கரையின் ஆக்கிரமிப்பு

ஆனால் செயற்கை இனிப்புகளின் முழுமைக்கும் அடிப்படைக் காரணியாகிய வெள்ளைச்சர்க்கரை எனும் **சீனி** உலகமனித இனத்தை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. உண்மையில் இது இல்லாமல் இருந்திருந்தால் இந்த மனிதர்கள் இப்போதிருப்பதைவிட இன்னும் அதிக ஆரோக்கியத்துடன் அருமையாக வாழ்ந்திருக்க முடியும்; முன்னர் அப்படி வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் இன்றைய மனிதர்கள் இதற்கு அடிமையாகிக் கிடக்கிறார்கள்.

இந்த வெள்ளைச்சர்க்கரையைத் தீமைகளின் கண்டெடுப்புகளுள் ஒன்றெனக் கூறுவது சரியானதாகவே இருக்கும். ஏனெனில் இதனால் மனிதகுலத்திற்கு நன்மைகளைவிடத் தீமைகளே அதிகம். இருப்பினும் இன்றைய மனிதக்கூட்டங்கள் இதைப் புரிந்துகொள்ளும் மனநிலையில் இல்லை. மனிதர்களின் பலவித நோய்களுக்கு இதுவும் அடிப்படையில் ஒரு காரணமாகிறது என்பதில் ஒரு அரையளவு மெய்யாவது இருக்கும். குழந்தை பிறந்த நாளிலிருந்து

இந்தச் செயற்கை இனிப்புச் சுவைக்குப் பழக்கப்படுத்தப்பட்டு இறக்கும்வரை அச்சுவையின் போதையில் கட்டுண்டுக் கிடக்குமாறு ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவ்வெள்ளைச் சர்க்கரையைச் சேர்த்து எண்ணிலடங்கா உணவுகள் தயாரிக்கப்படுகின்றன. குறிப்பாக குழந்தைகள் சாக்லெட் எனும் இனிப்பு வில்லைகளுக்கு அடிமையாகி அவர்களது காலமெல்லாம் செயற்கை இனிப்புகளிலேயே கரைந்து கொண்டிருக்கிறது. இந்த இனிப்பு ருசியின் அதீதத் தூண்டுதலால் அளவுக்கு அதிகமான உணவுகள் உடலுக்குள் சென்று, அதனால் பல தற்காலிக மற்றும் நிரந்தர உடல் உபாதைகள் உண்டாகி இறுதியில் அழியாநோயாளிகள் ஆக்கப்படுகின்றார்கள் நம் மனிதர்கள். பற்சிதைவுகள், உடல் குண்டாகுதல், இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், மாரடைப்பு, வயிற்றுப்போக்கு, வயிற்றுப்புண், மூலம், அதிக சூடு, விரைவான முதுமை போன்றவை ஏற்படுகின்றன.

திரவ உணவுகளான பழச்சாறுகள், டீ, காபி, போன்றவைகளில் சர்வசாதாரணமாக வெள்ளைச் சர்க்கரை சேர்க்கும் வழக்கத்தை நாம் கொண்டுள்ளோம். ஆனால், இவைகளை அவ்வாறு செய்யாமல் தனியாக அருந்துவதே சாலச்சிறந்தது. தண்ணீர் கலக்காதப் பழச்சாறுகள், பால் போன்றவைகளுக்கு வெள்ளைச் சர்க்கரை கூடுதலாகத் தேவைப்படாது. மேற்கத்தியர்களில் பலர் டீ, காபி, போன்றவைகளுக்குச் சர்க்கரை மட்டுமல்லாமல் பால்கூடக் கலக்காமல் இயற்கையாக அருந்தி ருசிக்கும் பழக்கம் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு மட்டும் இது எப்படிச் சாத்தியமாகிறது; எல்லாம் நடைமுறையில் வந்த அனுபவங்கள்தான். இங்கேயும் பல ஆண்டுகாலம் நிறைய சர்க்கரை சேர்த்து டீ, காபி, மற்ற பானங்கள் குடித்தவர்கள் சிலர் திடீரென ஒருநாளிலிருந்து மொத்தமாக சர்க்கரை

சேர்க்காமல் அவற்றை அருந்த ஆரம்பிப்பது எப்படி? அதுதான் சர்க்கரை நோயின் வரப்பிரசாதம்; அப்போது இது இயலவில்லையா!

இவ்வாறு செய்ய ஆரம்பித்த பின்னர்தான் சர்க்கரை நோயினால் வேகமாகக் குறைந்துக் கொண்டிருந்த அவர்களின் நாட்கள் சற்று கூடுதலாகக் காரணமாகிறது. இப்போது இவர்கள் செயற்கை மட்டும் அல்லாமல் இயற்கை இனிப்பையும் கைவிட வேண்டியதாகிறது. ஆக செயற்கை இனிப்பு என்பது மனிதர்கள் உயிர்வாழவதற்கு இன்றியமையாத ஒன்றன்று.

வெள்ளைச் சர்க்கரையை குறைந்த அளவுகளில் மட்டுமே சேர்த்து பலவகைப் பலகாரங்கள் உலகம் முழுவதும் தயாரிக்கப்பட்டு உண்ணப்படுகின்றன. இவற்றால் அதிகஅளவு தொல்லைகள் ஏற்பட வாப்புகள் இல்லை. இவ்வகையிலான பிரட், பிஸ்கட், கேக் போன்றவற்றை வேண்டிய அளவிற்கு ஏற்றுக்கொள்கிற நிலையில் , முழுக்கமுழுக்க செயற்கை இனிப்பு வெள்ளைச் சர்க்கரையிலேயே செய்யப்படும் உணவுகள் எதற்காக இவ்வுலகில் இருந்து வருகின்றன என்பதை உணர்வுப் பூர்வமாகப் பார்க்க வேண்டியுள்ளது. அதிலும் குறிப்பாக இந்தியா மற்றும் வளைகுடா நாடுகள் போன்றவற்றில் இந்தவகை அதிகளவு வெள்ளைச் சர்க்கரையால் செய்யப்பட்ட உணவுகளின் வியாபாரங்கள், உண்ணுதல்கள் கொடிகட்டிப் பறக்கின்றன. இது மிகத்தவறான உணவுமுறை என்பதை எந்த மருத்துவர் தவறு எனக்கூறுவார், காண்பியுங்கள்!

இந்த அதிபுத்திசாலிகள் பல நன்மைகள் தரும் இயற்கை இனிப்புகளாக ஆயிரமாயிரம் பழ வகைகள் இருக்க அவற்றை அதிகம் கண்டுகொள்வதில்லை. மாறாக செயற்க்கைச் சங்கதியான தீங்குதரும் வெள்ளைச் சர்க்கரையைத் தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டு தலைகால் புரியாமல் கூத்தாடுகிறார்கள். மனிதர்கள் அறிந்தோ அறியாமலோ செய்துவரும் தவறுகளில் இதுவும் ஒன்றோ!. இவ்வுலக

வாழ்வியலில் தீமைகளே உடன் மிக இனிக்கும் என்பதற்கு மிகச்சரியான உதாரணமாக இச்செயற்கை இனிப்பு வகைகளைக் குறிப்பிட்டால் அது மிகையில்லை.

சாக்லெட், ஐஸ்கிரீம், கேக் வகைகள் கூடுதல் இனிப்புள்ள பிஸ்கட்டுகள் மற்றும் தனி இனிப்புப் பலகாரங்கள் ஆகிய அனைத்தும் முழுவதும் வெள்ளைச் சர்க்கரையால் செய்யப்பட்ட கடும் இனிப்பு வகைகளாக இப்பூமியில் வலம் வந்துக்கொண்டிருக்கின்றன. இத்தீவிரவாத இனிப்புக் கூட்டம் மக்களின் தேக ஆரோக்கியத்தை மெல்ல மெல்ல அழித்து இறுதியில் அவர்களின் செயலாற்றல் திறனைக் குறைத்துத் தொல்லைகள் புரிந்து வருகின்றன.

இதில் உள்ள உண்மைகளை உள்ளுணர்ந்து துள்ளியமாக எண்ணுகையில் இந்த வெள்ளைச் சர்க்கரை கண்டுப்பிடிக்கப்படாமல் இருந்திருந்தால், இன்னும் அதிக வலுவான கூடுதல் சக்தியுள்ள மனிதர்கள் நேற்றும் இன்றும் நாளையும் இருக்கச் சாத்தியக்கூறுகள் கூடுதலாக உள்ளது என்பதை அறிவுள்ளவர்கள் அங்கீகரிக்கத்தான் வேண்டும். ஏனெனில், இவைகள் வராமலிருந்திருந்தால் இவைகளுக்குப் பதிலாக இயற்கை இனிப்புச் செல்வங்களாகிய பலவகையானப் பழங்கள் அதிகமாக உணவாகுவதை கைக்கொண்டிருக்கக் கூடிய வாய்ப்புகள் இருந்திருக்கும்.

## காரம்

இனிப்புக்கு அடுத்த நிலையிலிருக்கும் ஆகிரமிப்புச் சுவையென்றால் அது காரம் எனும் உரைப்பு என்பது நாம் அனைவரும் அறிந்தது. நம்முடைய சிறப்பு உணவுகளில் ஒன்றாகக் கருதப்படும் இனிப்பு – காரம் – காப்பி என்ற வரிசைக்கிரமம் விருந்தோம்பல் மற்றும் நட்பு பாராட்டுவதற்கு உபயோகிக்கப்பட்டு வருகிறது. இனிப்பை ஒப்பிடும்போது காரங்களின் இயற்கை வகைகள் குறைவாகவே

உள்ளன. மிளகு, மிளகாய், தனியா, இஞ்சி, பூண்டு, ஓமம், முல்லங்கி, வெற்றிலை, புகையிலை போன்றவை இயற்கையாகக் காரசுவை கொண்டவை என்பது யாவரும் அறிந்ததே.

இவைகளில் புகையிலை மற்றும் அதிகமான உரைப்புச் சுவையுடைய மிளகாயைத் தவிர மற்ற அனைத்தும் மருத்துவ குணம் கொண்ட மகத்துவங்கள். என்றபோதிலும் மற்ற அனைத்தையும் விட பல மடங்கு கூடுதல் கொள்ளளவில் மிளகாய் காரம் இந்தியா போன்ற நாடுகளில் உணவாக ஏற்கப்படுகிறது. இது பலவிதத் தொதல்லைகளைத் தரும் என்பதை பலர் அறிந்தும், பலர் அறியாமலும் இருக்கிறார்கள்.

தயார்நிலை கார உணவுகளாகப் பல அதிவேக உணவுகள் பலவகையில் தயாரிக்கப்படுன்றன. முக்கியமாக இவ்வகையான உணவுபொருட்கள் மிளகாய் தூள் அதிகமாகச் சேர்க்கப்பட்டு எண்ணைகொண்டு சமைத்துத் தயாரிக்கப்படுகின்றன. இவை நிச்சயமாக ஆபத்தான உணவுகளின் வகைகளே. இருப்பினும் கார வகைகள் பல தினுசுகளில் பவனி வந்து இம்மக்களின் கார நாசுவை அரும்புகளை தன் ஆளுகைக்குள் வைத்துள்ளன. இது கொழுப்புக் கூடுதலான உணவு என்பதால் இரத்தக்கொதிப்பு, குடல் அலற்சி, குடல் புண், ஆசனவாய் எரிச்சல், மூலம் போன்றவைகளை சிறிய அளவில் ஏற்படுத்தி பின்னர் பேனைப் பெருமாளாக்கியக் கதையாகிவிடும்.

மிளகாயில் குறைந்த விலையில் அதிகக் காரம் கிடைப்பதால் ஏழை நடுத்தர மக்களின் மிக முக்கிய சுவையூட்டுக் கேந்திரமாக இது விளங்கிவருகிறது. மிளகாய்தூள் சேர்த்துச் செய்யப்படும் வறுவல் வகையறாக்கள் மனிதர்களை வறுத்துக்கொண்டிருப்பதை உணரும் காலம் வெகுவிரைவில் வரலாம். இங்கிலாந்து பள்ளிகளில் 2006 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து பள்ளிக்குழந்தைகள் உணவில் வறுவல்

வகைகள் கொண்டுவருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அவர்களால் பல ஆண்டுகாலம் போற்றி.. போற்றி.. கொண்டாடப்பட்ட இவ்வகையான உணவுவகைகள் குழந்தைகளின் உடல் பருமனுக்குக் காரணமாகிறது என்பதை இப்போது கண்டுபிடிக்கப்பட்டு தற்போது நடவடிக்கை ஆரம்பமானது. மேலும், ஐரோப்பிய நாடுகளில் பல ஆண்டுகளாக மிக அதிகஅளவில் இருந்த புகைப்பழக்கத்திற்கு தற்போது அங்கு பொதுஇடங்களில் தடை கொண்டுவரப்பட்டுள்ளது. இப்போதுதான் அவர்களுக்கே மெல்லமெல்ல புத்திவர ஆரம்பித்துள்ளது. இருப்பினும் இப்போதாவது வந்ததே பரவாயில்லை என வரவேற்போம். நாமும் இதை இங்கேயும் எங்கேயும் பின்பற்றுவோம்.

## விலங்குகளின் உயர் புத்திநிலை

கீழ் நிலையிலுள்ள பல விலங்குகளுக்கு இருக்கும் சில சிறப்பு அறிவுகுணங்கள் உயர்நிலையிலுள்ள மனிதர்களுக்கு இருப்பதில்லை என்பது யாரும் மறுக்கமுடியாதது. இதற்கு பல உதாரணங்களை , செயல்களை, சவாலாகக் கூறமுடியும். அது இங்கு பல பக்கங்களை அடைத்துக்கொள்ள நேருமென்பதால் அதை விட்டுவிடுவோம். பொதுவாக நம் மனிதர்கள் நன்மைகளைவிடத் தீமைகளை எளிதாக ஏற்றுக்கொள்வதற்கு, அதை தொடர்ந்து செயல்படுத்தி வருவதற்கு மிகுந்த விருப்பம் உள்ளவர்கள். அதனால்தான் வீட்டு விலங்குகள் மற்றும் மனிதர்களிடம் அகப்பட்டுக் கொண்ட காட்டு விலங்குகளைவிட, சுதந்திரமாகக் காடுகளில் வாழும் காட்டுவிலங்குகள் அதிக வலு, வேகம், அழகு, கம்பீரம் கொண்டதாக விளங்குகின்றன. அவைகள் இந்த சாக்லெட்டுகள், செயற்கை இனிப்பு மற்றும் கார உணவு வகைகளை உண்ணுவதில்லை. இயற்கை உணவுகளை இயற்கையாக உண்டு வருகின்றன.

அதற்காக இன்றைய மனிதர்களை, விலங்குகளைப் போல எல்லா நிலைகளிலும் இருக்க யாரும் கூறவில்லை, நன்றாகச் சமைத்து சாப்பிடுங்கள். தேவைப்பட்டதை, தேவைப்படுவதை அறிவுபூர்வமாக உணர்ந்து அதன் அடிப்படையில் மாற்றி அமைத்து வாழ்வதே வலிமை. கோடானகோடி மக்கள் கொண்டாடுகின்றனர் என்பதற்காக எல்லாம் சரியாகிவிடாது. தெளிவாகச் சொல்லப்போனால் மனிதர்களின் பல வழக்கங்கள் தவறானவை, தேவையற்றவை, அவர்களுக்கே தீங்கு விளைவித்துக்கொண்டிருப்பவை. ஆனால் இதைப்பற்றியெல்லாம் அதிவேகமாக, பேய்த்தனமாகப் போய்க்கொண்டிருக்கும் இன்றைய மனிதக் கூட்டங்களுக்கு எண்ணிப் பாாத்துச் செயல்பட நேரமேது!

## தொன்றுதொட்டு வரும் தொல்லை

நாம் சில பழக்கங்களுக்குப் பரம்பரையாக அடிமைப்பட்டுக் கிடப்பதால் அவைகளிலிருந்து சட்டென விலகிட இயலாது, அப்படி விலகவும் கூடாது. ஏனெனில் அது ஒருவகை ஆபத்தானது கூட. எனவே எங்ஙனம் மற்றசில சமாச்சாரங்களான மது, சூது, திருட்டு, லஞ்சம், விபச்சாரம், பயங்கர பொழுதுபோக்குகள், புகை, புரளி, இதர குற்றங்கள் போன்றவற்றை முழுவதுமாக விட்டுவிடாமல் சிலவற்றில் சில அளவு குறைத்துக்கொண்டு வாழ்வைதைப்போல இந்த செயற்கை இனிப்பு மற்றும் காரத்தையும் முழுவதுமாக விட்டுவிட முடியாவிட்டாலும் அளவுடன் கைகொள்வதில் தவறில்லை. நாளைய மனிதர்கள் நம்மைவிட வீரியமானவர்களாகலாம். இங்கு சற்று சிலேடையாகச் சொல்லப்பட்டவைகளை அப்படியே எடுத்துக்கொள்ளாமல் அவரவர்களுக்குத் தீமை என எதையாவது மனம் நினைத்துவிட்டால் அதை எவ்வளவு அதிகம் எவ்வளவு விரைவாக விட்டுவிட இயலுமோ அதற்கு முயற்சி மேற்கொண்டு அதை கடைபிடித்து வெற்றிக் காணுங்கள்; எவ்வெற்றியும் ஒரு செல்வமே.

# கொத்து புரோட்டா - கத்தும் புரோட்டா

இடத்திற்கு இடம் நாட்டுக்குநாடு என உலகம் முழுவதும் பலதரப்பட்ட மக்களால் எண்ணற்ற பல உணவுவகைகள் தயாரிக்கப்பட்டு உண்ணப்பட்டுவருகின்றன. அவைகளில் பல உணவுகள் தேவையற்ற சில கூடுதல் கலவைகளுடன் இருப்பதால், செரிமானம், உடல்நலத்திற்கு எதிராகச் செயல்படுகின்றன. இது ஒருபுறம் இருக்க அவைகளைத் தயாரிப்பதில் பல முறைகள் இருக்கின்றன. அநேகமாக உலகில் மற்ற அனைத்து உணவு வகைகளுக்கும் இங்கேவரும் ஒரு உணவிற்கும் ஒரு பெரும் வித்தியாசம் உண்டு.

## புரோட்டா செய்வது உண்ணுவது

நம் நாட்டிலும் மற்ற சில இஸ்லாமிய நாடுகளிலும் மைதா மாவைக்கொண்டு செய்யப்படும் பலகார உணவில் **புரோட்டா** என்பது முக்கியமானது. ஒரு குறிப்பிட்ட அளவு மைதா மாவை தண்ணீர், உப்புச்சுவை, சீனி கலந்து பிசைந்து, சந்து நேரத்திற்குப்பிறகு எடுத்து ஒரு தனிக்கலைநயத்தோடு கால் முதல் அரை மீட்டர் அளவு விட்டம்கொண்ட வட்ட வடிவில் துணிபோலாக்குகின்றனர், பின்னர் அதை சிறு வட்டமாகச் சுறுக்கி, சமதள சுடும்கல்லில் எண்ணைய் சிறிது ஊற்றி சுட்டெடுத்து செய்யப்படும் இது பலருக்குப் பிடித்த சுவையான உணவு.

இது இஸ்லாமியர்களின் முக்கிய உணவாகவும், மற்றவர்களில் குறிப்பாகத் தென்னிந்திய ஆண்கள் சிலபலரின் போதை நேர இரவு உணவாகவும் இருந்துவருகின்றது. நல்ல ருசியான குருமா சேர்த்துச்

சாப்பிடும்போது அதன் சுவையே அலாதிதான்! இதன்மேல் நம்மில் பலருக்கு மிகுந்த பிரியம் உண்டு என்பதும், இந்தவகை அபிமானிகளின் கூட்டம் நாளுக்குநாள் அதிகரிக்கிறது என்பதும் மறுப்பதற்கு இல்லை. என்றபோதிலும் இங்கே ஒரு முக்கியப் பிரச்சினை இருந்து வருவதை எவரும் கண்டுகொள்ளவில்லை. இப்படியானப் புரோட்டாக்களை பலர் உணவாகக்கொள்ளும் முறை ஒருபுறமிருக்க, கொத்து புரோட்டா என்றொரு அயிட்டத்தை சிலர் அவ்வப்போது அல்லது அடிக்கடிக்கூட விரும்பி உண்டு வருகின்றனர்.

## தற்போதைய கொத்து புரோட்டா தயாரிப்புமுறை

இந்த வகையான கொத்து புரோட்டாவைச் செய்யும் வகையை சற்று பார்ப்போம். சாதாரண புரோட்டாக்களை சுட்டெடுத்தப்பின் அவற்றைச் சூடாகவோ, ஆறியபிறகோ சிறுசிறு துண்டுகளாகப் பிரித்து சூட்டுக்கல்லில் போடப்படுகிறது. அதனுடன் நறுக்கிய வெங்காயம், தக்காளி, முட்டை, மிளகாய்த்தூள், உப்பு, எண்ணெய் போன்றவை சேர்க்கப்படுகின்றன. இக்கடைகளில் வெளிப்புறத்தில் சாலைகளின் ஒரமாக அடுப்பு வைத்து செய்யப்படுவதால் இவைகளுடன் சாலை குப்பைத் தூசுகளும் சேர்க்கப்படுகின்றன.

அதைத் தயாரிக்கும் பணியாளர் ஒரு இசைக்கலைஞர்போல் மாறிவிடுகிறார். இரண்டு பெரிய இரும்பு தோசைக்கரண்டிகளை வைத்துக்கொண்டு இரும்பு சுடுகல்லில் இருக்கும் மேற்படி அனைத்துச் சமாச்சாரங்களையும் போட்டு **குத்தோ குத்து என்று குத்துவார்**. ஒருவர் நடுத்தரமாகச் சாப்பிடும் அளவிற்குத் தேவைப்படுவதை தயாரிக்க சுமார் ஐந்து நிமிட நேரம்வரை தோசைத்திருப்பிகளால் போட்டுத் துவைத்து எடுப்பார். உலகில் வேறு எந்த உணவு அயிட்டம் செய்வதற்கும் இவ்வளவு **டெசிபல் சப்தம்** வருமா எனில், உறுதியாக இறுதியாக, இல்லையென எவரும் கூறுங்கள்.

நகரங்களில் குறிப்பாக பேரூந்துநிலையப் பகுதிகளில் வரிசையாக இப்படியானச் சில கடைகள் இருந்துவிட்டால் அவ்வளவுதான்! புரோட்டா மாஸ்டர்களுக்குள் புஜபராக்கிரம இசைப்போட்டி ஏற்பட்டு, மேலக்கச்சேரி மாதிரியான ஒன்று மகா உலோக சப்தத்தில் இலவசமாக ஒலித்துக்கொண்டிருக்கும். தோசைத்திருப்பிகளால் ஆன இந்த இசைப்பு செய்து முடிவுபெற்றபின், நல்லுணவின் நிலையறியா வாடிக்கையாளரின் வாய்ருசிக்கு கொத்துபுரோட்டா எனப்படுவது வழங்கப்படும். இந்த அயிட்டத்தை சரக்கு உள்ளே போனபிறகு சாப்பிடுபவர்கள் அதிகம்.

அதிக எண்ணைய் போட்டு வறுத்தெடுத்து இவ்வுணவு செய்யப்படுவதால், கொழுப்பு மிகுந்து ஆரோக்கியமில்லாமல் ஆனதுடன் எளிதில் செரிமானிக்கக்கூடியதும் அல்ல. பின்வரும் வாழ்நாளில் வயது கூடும்போது பல வியாதிகளுக்கு வைத்தியக் கணக்குப்போடுவதற்கு வழிவகுத்து வகைசெய்யும். மேலும் உலகில் வேறு எந்த உணவு செய்வதற்கும் இவ்வளவு நரக ஒலி வருவதில்லை. பெரும் இரும்பு தொழில் பட்டறைகளில் வரும் ஒலிகளைவிடக் கூடுதலாக வந்து சுற்றுப்புறத்தில் ஒலி மாசுப்பாட்டை உண்டாக்குகிறது; இதுப்பற்றி எவரும் கவலைப்படாதது நம் துரதிஷ்டம். மனிதர்களும் ஆடுமாடுகள் மாதிரி எதையும் சட்டை செய்யாமல் இறைச்சலுக்குப் பழகிவிட்டனர். ஒரு மனிதன் ஒருவேலை சாப்பிடும் சாதாரண உணவிற்கு, பட்டறைகளில் ஆயிரம் கிலோ இரும்பு வேலைகளில் ஏற்படும் அளவிற்கு பயங்கரமாக உலோங்கள் மோதிக்கொள்ளும் அலறல் ஒலி உண்டாக்கப்படுகிறது. இந்த மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் என்ன செய்துகொண்டிருக்கிறது? இதற்கு நடவடிக்கை எடுப்பதில் தவறில்லை.

## புதிய முறையில் தயாரிப்பது

இதற்காக இந்தவகைக் கொத்து புரோட்டாக்களைச் சாப்பிடுவது, விற்பது ஆகியவை நிறுத்தப்படவேண்டியதில்லை. ஆனால் இந்த

கொத்துபுரோட்டாக்களை இம்முறையில்தான் செய்ய இயலுமா, ஓசையில்லாமல் செய்ய இயலாதா? என்ற வினாவிற்கு நல்ல பதில் காத்திருக்கிறது. நிச்சயமாக இந்த கொத்துபுரோட்டாக்களை அதே சுவையில் ஒருவேளை கூடுதல் சுவையோடு கூட சப்தம் இல்லாமல் செய்ய இயலும். அதற்கு பின்வருமாறு செய்யவேண்டும்.

வழக்கம்போல புரோட்டாக்களைச் சுட்டெடுத்தப்பிறகு அவற்றை சிறுசிறுத் துண்டுகளாகப் பிய்த்தெடுத்துக்கொள்ளவேண்டும். அதன்பிறகுதான் செய்முறையில் மாற்றம் வருகிறது. புரோட்டாக்களின் சிறு துண்டுகளை கனம், அழுத்தமுள்ள, குழிவானப் பாத்திரம் ஒன்றில் போட்டு சுத்தமாக்கப்பட்ட சிறு மரம் அல்லது இரும்பு உலக்கையின் தலைப்பகுதியால் தேவைப்படும் அளவிற்கு நன்கு குத்தவேண்டும்; இப்படி செய்யும்போது ஒலிகள், ஏற்படாது. மேலும் இப்போது புரோட்டாத் துண்டுகள் முன்னைய முறையில் இருந்ததைவிட மிக மிருதுவாகிவிடும்.

இவற்றை எடுத்து சுடுகல்லில் போட்டு சேர்க்கவேண்டியப் பொருட்களைச் சேர்த்து ஒன்றாக வேகவிட்டு எடுத்து சாப்பிட்டுப்பாருங்கள். பழையமுறை கொத்துபுரோட்டாக்களைவிடக் கூடுதல் சுவையாக இருக்கும். இது அனுபவத்தில் கண்ட நடைமுறை உண்மை. இங்கே ஒரே ஒரு தோசைக்கரண்டி சப்தமில்லாமல் கிண்டிவிடுவதற்கு மட்டுமே தேவைப்படுகிறது!

இம்முறையில் செய்வதை இச்சமுதாயத்தால் ஏற்கப்படுமானால் அது அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்பதில் யாதொரு சந்தேகமும் வேண்டாம். கால மாற்றத்தில் தேவைப்படும் **மேன்முறைகளை மேற்கொள்வதே மேன்மக்களாகிக் கொண்டிருக்கும் இம்மக்களுக்கு மேன்மை.**

இதில் இன்னொரு பயனும் இருக்கிறது; முன்னர் அதிக நேரம் கடைவாயிற் கூட்டுக்கல்லில் இது இருக்கக்கடவதால் வாகனத்தூசிகள், புழுதி குப்பைகளின் துகள்கள், வாகன விஷப்புகைகளின் கலவைகள், காற்றின் வேக ஓட்டத்தின்போது எச்சில் - சளி - மல - சாணிகளின் அணுக்கள் எல்லாம் அதிகமாக கலக்கும் வாய்ப்பு இருக்கிறது. இவைகளோடு செரிமானிக்க இயலாதக் கொழுப்புக்கேடும் சேரும்போது ஆயுட்காலத்தின் ஒரு கணிசமானப் பகுதியை வேண்டி விரும்பிக் குறைத்துக்கொள்ளச் சித்தமாய் இருந்தோம். இப்போது அத்தகையக் கெடுவாய்ப்பு சற்றுக் கெட்டுப்போய், மனிதன் நன்மைகளடையும் நல்வாய்ப்பு படர்ந்துவருகிறது; சிந்திக்க வேண்டுகிறோம்!

# பயணங்களில்

## பேரூந்து வாந்தி

இங்கே மூன்றே செய்தியோடு நிறுத்திக் கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒன்று பேரூந்துகளில் பயணம் செய்யும்போது வாந்தி எடுக்கும் பழக்கமுள்ளவர்கள் தயவுசெய்து இரண்டொரு வலிமையான பாலிதீன் பைகளைக் கூடவே எடுத்துச் செல்வதை இது முதற்கொண்டு வழக்கமாக்கிக் கொள்ளவும். வரும் வாந்தியை அப்பைகளில் பிடித்துக் கீழே கொட்டி விடாத வகையில் நன்றாக முடிச்சுப்போட்டு வைத்துக் கொண்டு, பேரூந்திலிருந்து இறங்கிய பிறகு குப்பைகளில் போட்டுச் செல்லுங்கள்.

இனிமேலும் பேரூந்துகளில் உள்ளே வெளியே மிக அசிங்கமாக வாந்தி எடுத்து, பேரூந்தின் உள்ளே துர்நாற்றத்தை உண்டாக்கி சகப்பயணிகளுக்குத் தர்மசங்கடத்தைக் கொடுக்காதீர்கள். அதேபோல் பேரூந்து ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டி வாந்தி எடுத்து உங்கள் தலைக்கு, சகப்பயணிகளின் பயணத்திற்கு 'வேட்டு, வெட்டு வைக்காமல்' பின்னால் உட்கார்ந்து இருப்பவர்களுக்கு 'வாந்தி அபிஷேகம்' செய்யாமல், பேரூந்தின் உள்ளே உட்கார்ந்து இருப்பவர்கள் மீது அக்கறை கொள்ளுங்கள் என அறிவுறுத்தப்படுகிறது.

## மீதி சில்லறை

அதோடு பேரூந்துப் பயணத்தின் இன்னொரு தொல்லையான, நடத்துனரிடம் மீதிக் காசு வாங்கும்

கதையைச் சிறிது பார்க்கலாம். சில நடத்துனர்கள் மீதிச் சில்லறை அவர்களிடம் இருந்தாலும் உடனே கொடுத்துவிட மாட்டார்கள். அப்படியும் கேட்டால் சில நடத்துனர்கள் கோபத்துடன் எரிந்து விழுவார்கள். ஐம்பது பைசாக்களெல்லாம் அங்கே சிலரிடம் மதிப்பிழந்து போய் விட்டனவோ! அது ஒரு பக்கம் கிடக்கட்டும்,

மீதிச் சில்லறைப் பாக்கி உடனே கொடுக்கப்படாத சூழ்நிலையில் பயணிகள் மற்றதையெல்லாம், முக்கியமான விஷயங்களைக்கூட மறந்து பயணம் முடியும் வரை பலமணி நேரம் இந்த சில்லரை விஷயத்தையே ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டு விடும். சில பயணிகள் எப்படியும் சில்லரையை மறந்தே தீர்வதென மறந்துவிட்டு போய், பிறகு மனம் நொந்து போவார்கள். அதில் சிலர், பேருந்து அலுவலகத்திற்கு சென்றோ அல்லது திரும்ப அடுத்த முறை பேருந்து அவ்விடத்திற்கு வரும் வரை காத்திருந்து பேருந்தை மடக்கிப்பிடித்தோ, வசூல் செய்தவர்களும், வசூல் செய்யாதவர்களும் என நம்மிடையே பலருண்டு.

ஒருநாள் கணக்கில், சில நடத்துனர்களுக்கு இந்த விடுபட்டுப்போன சில்லறைப் பாக்கியே பெருந்தொகையாகச் சேர்ந்து விடுமென்றுகூடப் பேசிக்கொள்கிறார்கள்!

இந்தச் சில்லறைப் பாக்கிக் கதையைச் சொல்லிக் கொண்டே போனால் இன்னும் பல பரிணாமங்களில் போய் பல பக்கங்களை விழுங்கி விடும்; எனவே அதை இத்தோடு நிறுத்திக் கொள்வோம்.

இதற்கெல்லாம் பொதுமக்கள் மற்றவர்களைக் குறை சொல்லுவதைக் காட்டிலும் பேருந்துப் பயணம் என்று வந்து

விட்டால், சரியான சில்லறையைக் கொண்டு வர வேண்டியதும், நடத்துனரிடம் கொடுக்க வேண்டியதும்தான் அவர்களின் கடமை, பொறுப்பு மற்றும் சரியான வாழ்க்கை முறையும் கூட. இனிமேல் பிறர் தவறு செய்தால் கூட அவர்களைக் குற்றம் சொல்லுவது ஏற்கப்படாது என்பதை அறிய வேண்டியது இந்தத் தருணத்தில் அவசியமாகிறது.

**மற்றவர்களுக்கு சுகம் தரமுடியாது**

அடுத்தபடியாக முன் பதிவு செய்யப்படாத பேருந்து, ரயில் பயணங்களில் மனித இரக்கமற்ற செயல்கள் பலவற்றை பார்க்கலாம். மிக வசதியாக உட்கார்ந்திருப்பவர்கள் சிறிதளவு கூட நகர்ந்து மற்றவர்களுக்கு உட்கார இடம் கொடுக்க மாட்டார்கள். மேலும் தொடர்வண்டிகளில் மற்றவர்கள் நின்று கொண்டிருக்கும் போது இரக்கமற்றவர்கள் படுத்துக் கொண்டிருப்பார்கள். அப்போது பலரும் பொய்யாக உடல் நலம் சரியில்லை என்று சொல்வதுமுண்டு. அத்துடன் மற்றவர்களின் பொருட்களை வைக்கக்கூட இடம் தரமாட்டார்கள்.

நிற்பவர்களில் கர்ப்பிணி, கைக்குழந்தைத் தாய்மார்கள், நோயாளிகள், ஊனமுற்றோர்கள், வயதானவர்கள் என எவராயிருந்தாலும் ஒரு சிலரைத் தவிர பெரும்பான்மையான மனிதர்கள் கண்டுகொள்வதில்லை! அனுசரித்து இடம் கொடுக்கும், இரக்கங்காட்டும் பழக்கமுமில்லை.

இதில் வேடிக்கையான கொடுமை என்னவென்றால், உட்கார்ந்திருப்பவர்களில் பலர் நீண்ட நேரம் உட்கார்ந்து வந்திருப்பதோடு, அவ்வாறு தொடர்ந்து உட்கார்ந்ததின் விளைவாக ஒரு அலுப்பு, வெறுப்பு மற்றும் உட்கார்ந்த வலி ஏற்பட்டு சற்று நின்றால் பரவாயில்லை என்றிருந்தால்

கூட எழுந்தரிக்க மாட்டார்கள். அவ்வளவு தூய உள்ளம் இம்மனிதர்களுக்கு! எல்லாம், காலத்தின் கொடுமை என நினைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இப்படித் தொடர்ந்து உட்கார்ந்திருப்பவர்களில் நல்ல திடகாத்திரமான இளைஞர்கள், இளைஞிகள் நடுத்தர வயது ஆண், பெண்கள் கூட இருப்பார்கள்; இருந்தாலும் நகர்ந்து கொடுக்க மாட்டார்கள்.

தாங்களும் தங்கள் குடும்பத்து நபர்கள், உறவினர்கள், நண்பர்கள் மட்டும்தான் மகிழ்ச்சியாக, சகல சௌகரியங்களுடன் பயணம் செய்ய வேண்டுமென்பதில் மிகக் கவனமாகச் செயல்படுவார்கள். அதற்காக அடித்துப் பிடித்துக் கொண்டு இடம் போடுவதே ஒரு தனிக்கலை!

எப்படியெல்லாம் மற்றவர்களுக்கு இடம் கொடுக்காமல் தவிர்க்கமுடியுமோ அப்படியெல்லாம் செய்து விடுவார்கள். உட்காருமிடத்தில் சாமான்களை வைத்து, பொய்யாக, ஆட்கள் வெளியே போயிருக்கிறார்கள், நிற்கிறார்கள் என்று சொல்லி விரட்டி விடுவார்கள், அல்லது குழந்தையையாவது படுக்க வைத்து விடுவார்கள். ஒருவேளை, பணம் கொடுத்து பேருந்து மற்றும் ரயிலை வாங்கி விட்டதாக எண்ணிக் கொள்கிறார்களோ என்னவோ! இவையெல்லாம் மாற வேண்டுமென்பதே பயணம் செய்யும் பொதுமக்களிடம் வைக்கும் வேண்டுகோள்.

மற்றவர்களையும் நேசியுங்கள். பணச் செலவில்லாமல் பிறருக்கு உதவி செய்யும் நல்ல வாய்ப்பு இங்கே இருக்கிறது! இயன்றவரை மற்றவர்களுக்கும் பிரயாணத்தின் போது இடம் கொடுக்கும் இந்தத் தர்மத்தைச் செய்யுங்கள், தர்மம் தலை காக்கும்.

# பேருந்துப் போட்டிகள்

## சுற்றுப்புறத்தின் அதிகளவு இரைச்சல்

உலகிலேயே அதிகநேரம் அதிகமாகப் பேசுகிற மக்களைக் கொண்டிருக்கிற நாடாக இந்தியா இருந்துவருகிறது. எங்கே பார்த்தாலும் மக்கள் கூட்டம், வாகன இரைச்சல் அதிலும் கரடுமுரடு சாலைகளில் செல்வதால் பன்மடங்கு கூடுதல் இரைச்சல் ஏற்படுகிறது. அத்துடன் மக்கள் எப்பொழுதும் பேசிக்கொண்டிருப்பதுடன், நகரங்களின் முக்கிய மையப்பகுதிகளிலேயே அதன் பன்முக உலோகவேலை செய்கிற பட்டறைகள் ஆகியவற்றின் கூட்டுத்தொகை ஒலிகளால் எப்போதும் ஒரு திருவிழா நடப்பதுபோன்ற பிரமையை ஏற்படுத்துகின்றது. இதனால் மற்றவர்கள் பேசுவதற்கு இந்த இரைச்சல்களைக் கடந்து அதிகசப்தச் சிரத்தை தேவைப்படுகிறது. இதன்மூலம் மென்மேலும் ஒலி அளவு கூடிக்கொண்டே போகிறது.

## நேரத்தை வீணாக்குதல்

இவற்றிற்கான முக்கியக் காரணங்களில் ஒன்று, இங்கு உழைப்பவர்கள் சதவீதமும் மற்றும் உழைப்புக் கிடைத்தும் அதில் அவர்கள் உழைக்கும் காலஅளவும் மிகக்குறைவே. பெரும்பான்மையான நேரங்களில் பேசுவது, பேசிக்கொண்டே இருப்பதுதான் முதலும் இறுதியுமான இச்சோம்பேறிகளின் பணியாகும். இப்படிப்பட்டவர்கள் பெரும்பாலும் மற்றவர்களைப் பற்றியும் அவர்களின் குறைகளைப்பற்றியும் பேசி மகிழ்வார்கள். இதில் யாதொரு பயனும், இல்லையென்றபோதிலும் நேரத்தை வீணாக்கிக்கொள்கின்றனர் என்பதை எப்போது உணரப்போகிறார்கள். இலாபமில்லாத வேலைகளுக்காக இப்படிப் பேசிபேசி உழைப்பது ஒரு விந்தையே–இவர்கள் விந்தை மனிதர்களல்லவா!

## ஒட்டை வாகனங்கள், கெட்ட சாலைகள்

மக்களின் பேச்சு இரைச்சலைத் தாண்டி சாலைகளில் வாகனச்சப்தம் வேறு இருக்கிறது. இவைகளில் மற்ற வாகனங்களைவிட கனரகவாகனங்களில் பாதிக்குமேல் மிக பழசானவைகளாக உள்ளன. இவ்வாகனங்கள் சாலைகளில் உள்ள குண்டுகுழிகள், வளைவு நெளிவுகள், குறுகளும் குள்ளமுமானச் சாலைகளில் போக்குவரத்து நெரிசல்களின் விளிம்பில் சர்க்கஸ் வாகனங்கள் மாதிரி செலுத்தப்படும்போது வரும் கரும்புகைகள், கடும்ஒலிகள், அப்படியே இதுதான் நரகம் எனக் கோடிட்டுக்காட்டுகிறது. இந்தச் சிரமமான ஓட்டுதல்களில் சரியான ஓய்வில்லாமல் வேலைசெய்யும் வாகனஓட்டிகள் சமயத்தில் நிலை தடுமாறி விபத்துக்கள் உண்டாக்குவது வாடிக்கை.

## வாகனப்போட்டிகளும் – பயணிகளின் இரசிப்பும்

இதைத்தவிர்த்து இத்தணூன்டு சிறுசாலைகளில் தினசரி வாகனப்போட்டிகள் பரிசுகள் எதுவும் இல்லாமல் இலவசமாக நடத்தப்பட்டுவருகின்றன. அதிலும் குறிப்பாக பேரூந்துகளுக்குள் நடக்கும் போட்டிகள் சுவாரஸ்யமானவை. பெரும்பாலும் அரசுப்பேரூந்துகளைத் தனியார்பேரூந்துகள் முந்திச்செல்ல நடக்கும் பேரூந்து வேகஓட்ட ஓட்டிப்போட்டிகள் சாலைகளில் நிற்பவர்களுக்கு வேண்டுமானால் பார்ப்பதற்கு சற்று பயமளிக்கக்கூடியதாக இருக்கலாம். ஆனால் தனியார் பேரூந்துகளில் பயணிக்கும் பயணிகள், குழந்தைகள் முதல் முதியவர் வரை ஆண்களில் இருந்து பெண்கள் அனைவரும் ஒருவிதப் போட்டி உணர்ச்சிப்பொங்க முந்துதலை ஆவலுடன் ரசிக்கின்றனர். அவர்கள் அனைவரது இதயங்களும் நரம்புகளும் அந்நேரங்களில் அதிகப்பட்ச உழைப்புக்கு உட்படுத்தப்பட்டு நன்றாக உழைக்கின்றன. நடத்துனர்கள் இயன்றளவிற்கு ஓட்டுனர்களை ஊக்குவித்து முந்துதலுக்குத் தங்கள் விசில் சீட்டிகள் வழியாகக் கடுமையாகப் பாடுபடுவர்.

## பேரூந்துகளின் வேறுபாடு

அதே நேரத்தில் அரசுப்பேரூந்துகளில் பயணம் செய்யும் பயணிகளுக்கு மனதிற்குள் ஒருவித வருத்தம் ஏற்பட்டு வேறுவழியின்றி அடக்கிக்கொள்வார்கள். இந்த அரசுப்பேருந்து ஓட்டுனர்கள் நடத்துனர்கள் இவற்றைப்பற்றி பெரிதாக எடுத்துக்கொள்வதாகத் தெரியவில்லை. பேரூந்துகளின் பழுதுகளை அவ்வப்போது தினசரி சரிசெய்து நன்றாக தரம் இருந்தால்தானே அவர்கள் அதைப்பற்றி எண்ண, செயல்பட இயலும். பேரூந்துகளின் அழகுத்தோற்றம், பராமரிப்பு, உயர்ந்த நிலையில் இசைவழங்கும் சாதனங்கள் போன்றவற்றிற்க்காகவும் மக்கள் தனியார் பேரூந்துகளை விரும்புகின்றனர்.

## பேரூந்துகளில் இசை வழங்குதல்

இது அரசுப்போக்குவரத்துக் கழகத்தினருக்கும் தெரிந்ததுதான். சில அரசுபேரூந்துகளில், போட்டியில் ஏனோதானோ என இசை வழங்கப்படுகின்றன. இந்த இசை வழங்குதல்களில் எங்கேயும் பரவலாகக் கூடுதல் **சில்லிங்** என்கிற வகையினில் காதுகளின் செவிப்பறைகளைக் குத்தித் துளைக்கும் இணைப்புகளுடன் பாடல்கள் வழங்கப்பட்டு ரசிக்கப்படுகின்றன, குறிப்பாக இளையோர்களால். பாடல்களை இயற்றும் இசையமைப்பாளர்களுக்கு, தங்களின் பாடல்களுக்கு இவ்வாறு கூடுதல் சில்லிங் சேர்க்கப்படுபடுவது தெரியுமா என்பது தெரியவில்லை. உலகெங்கும் **பேஸ்** ஒலிக்கு கூடுதலாக விருப்பம் இருக்கும்பொழுது இங்குள்ளவர்கள் மட்டுமே வித்தியாசமாக சில்லிங் இணைப்பை கூடுதலாகக் கேட்க விருப்பமுள்ளவர்களாக உள்ளனர்.

இவ்வாறு பலவித ஒலிகள் இரைச்சல்கள் ஒன்று சேர்ந்து தினசரித் திருவிழாக்கள் நடத்திக்கொண்டிருக்கின்றன.

# காப்பி அடிப்பு படிப்பு

நல்லவர்களையும், கெட்டிக்காரர்களையும் ஓரங்கட்டி வல்லவர்களை வாழ்வின் மேல் நிலைக்குக் கொண்டு செல்வது தேர்வுகளில் காப்பி அடிக்கும் இந்த கலாச்சாரம். பல மாணவர்கள் சில மாணவிகள் ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிப் பருவத்திலிருந்தே இந்தக் காப்பியடிக்கும் கலையில் ஈடுபட ஆரம்பித்து விடுகிறார்கள். அதில் படிப்படியாக நல்ல பயிற்சியும், அனுபவமும் பெற்று நிபுணத்துவம் பெற்று வருகிறார்கள். இதன் மூலம் சிலருக்கு இருந்த கொஞ்சநஞ்ச பயமும் போய் மிகுந்த தைரியத்துடன் செயல்படுகிறார்கள்.

## காப்பி அடிக்கும் வகையினர், வகைகள்

குறிப்பாக கிராமப்பகுதி மாணவர்களில் பலரும் காப்பி அடிப்பதில் மிக ஈடுபாடு உள்ளவர்களாகவும் வல்லவர்களாகவும் விளங்குகிறார்கள் என்பதாகத் தெரிகிறது. தேர்வு என்று வந்து விட்டால் காப்பி அடிக்கும் பழக்கமுள்ளவர்கள் அதற்காகப் படிப்பதைவிட மிக நுண்ணியதாக எழுதி வைத்துக் கொள்ளும் 'பிட்' தயாரிப்பதிலும், புத்தகங்களின் முக்கிய விடைப் பகுதிகளைக் கிழித்து வகைப்படுத்துவதிலும்தான் முயற்சி மேற்கொள்வார்கள். அதோடு தேர்வு அறையில் சுற்றிய நான்கு புறங்களிலும் தேர்வு எழுதும் மாணவ மாணவிகளிடம் அவர்களில் ஒரு சிலரின் உடன்பாட்டுடனோ அல்லது அது இல்லாமலோகூட அவர்கள் எழுதுவதை

இவர்களும் இவர்களுடைய விடைத் தாளில் எழுதிவிடும் திறமை பெற்ற அசகாய சூரர்கள்.

இதைத்தான் ஈயடிச்சான் காப்பி எனக் கிண்டலாகச் சொல்வதுண்டு. அதாவது உண்மையாகத் தேர்வு எழுதின ஒருவரின் விடைத்தாளில் உட்கார்ந்த ஈயை கையால் ஓட்டி விரட்டியபோது எதேச்சையாக விடைத்தாளிலேயே , அடிபட்டுப் போக அந்த மாணவரைப் பார்த்துக் காப்பி அடித்துக் கொண்டிருந்தவரும் ஒரு ஈயை தேடிப்பார்த்து அடித்துக்கொண்டு வந்து விடைத்தாளில் எந்த இடத்தில் முன்னவருக்கு ஈ அடிபட்டதோ அதே இடத்தில் இம்மாணவனும் அந்த ஈயை வைத்தானாம். இது ஒரு நகைச்சுவை உதாரணம் தான். நடைமுறையில் இப்படி இல்லாவிட்டாலும் அந்த அளவுக்கு முக்கியமாக முன்னால் உள்ள மாணவனைப் பார்த்து அப்படியே எழுதிவிடும் பழக்கத்தைக் குறிப்பிடத்தான் இந்த 'ஈ' கதையை உவமையாக நம் முன்னவர்கள் பலரும் சொன்னதுண்டு.

இப்போது இதையெல்லாம் தாண்டிப் பல நவீனங்களுடன் அதற்கு என உள்ள எலக்ட்ரானிக் கருவிகள், கல்விக்கூட நிர்வாகம் மற்றும் ஆசிரியர்கள் உதவியுடன் படு ஜோராகக் 'காப்பி' அடிப்புகள் பரவலாக நடந்து கொண்டிருக்கின்றன. இதற்கெல்லாம் பல காரணங்கள் இருக்கின்றன. கல்வி நல்ல வியாபாரமாக்கப்பட்டதை முதலாவதாகச் சொல்லலாம்.

**கல்விக்கூடங்களின் உடந்தை**

ஒவ்வொரு பள்ளியும் பொதுத் தேர்வுகளில் அதிக மாணாக்கர்களை அதிக மதிப்பெண்களோடு தேர்ச்சி

பெறச்செய்து வெளியே அனுப்பினால்தான் அதன் கௌரவமும் அந்தஸ்தும் மேல்நிலை அடையும் என்ற எண்ணம் உள்ளது. இதன் மூலம் அடுத்தடுத்த ஆண்டுகளில் நிறைய மாணவர்களைப் பெற்றோர்கள் அப்பள்ளியில் சேர்ப்பார்கள் என்பதில் சம்பந்தப்பட்டவர்களால் இதில் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது எனலாம். அப்போதுதான் சென்ற ஆண்டைவிட கூடுதல் பள்ளிக் கட்டணமும் நல்ல அளவுக்கு நன்கொடைத் தொகையும் வசூலிக்க முடியும். இதற்கெல்லாம் ஒரு முடிவே கிடையாதா, ஏற்படாதா, பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டுமோ என்னவோ!

உலகத்தில் உள்ள எல்லா மாணவ மாணவிகளையும் ஒரே அளவு அறிவு நிலைக்குக் கொண்டுவர இயலாது என்பது பலருக்குத் தெரிந்ததுதான். அதுதான் சரியான இயற்கைக் கோட்பாடாக இருக்க முடியும். ஏனெனில் எல்லா மாணவர்களுமே ஒரே அளவு புத்திசாலிகளாக இருந்து ஒரே அளவில் நல்ல மதிப்பெண்கள் வாங்கி விட முடியுமா? அனைவருமே கலெக்டர்கள், டாக்டர்கள், என்ஜினியர்கள் பெரிய அதிகாரிகள், விஞ்ஞானிகள் ஆகிவிட்டால் பின்னர் உலகத்திலுள்ள எண்ணிலடங்கா கீழ்நிலை மற்றும் நடுநிலை வேலைகளைச் செய்ய யாரை எங்கே போய் தேடுவது?

கீழ், நடுத்தர மற்றும் மேல் நிலையில் உள்ள பலதரப்பட்ட, பல்வேறுபட்ட மனித சக்தி உலகம் முழுவதும் எப்போதும் தேவைப்படுகிறது. மனிதர்களை அவ்விதம் பகிர்ந்தளிக்கும்படியாகத்தான் இயற்கை அமைத்திருக்கிறது. இல்லையெனில் எல்லோருமே ஒரே உயர, அகல, எடை, தோற்றம், அழகு, அறிவு, வேகம், செல்வம், பலம் உடையவர்களாகப் படைக்கப்பட்டிருப்பார்கள்.

ஆகவே, எல்லோருமே இன்னும் அழுத்தமாகச் சொல்லப்போனால் பெரும்பாலான மாணவர்களால் அந்தந்த காலகட்ட பாட, அறிவு நிலையில் மிக அதிக பட்ச மதிப்பெண்களை என்ன செய்தாலும் பெற முடியாது. பெறவும் கூடாது. அப்படித்தான் இயற்கைத் தத்துவம் கூறுகிறது. ஆனால் இதற்கு மாறாக மனிதன் பொய்த்தனமாகச் செயல்பட்டுக்கொண்டு, பொய்களை குறிப்பாக இங்கே இந்தத் தேர்வுகளில் சம்பந்தப்பட்ட அனைவருமே உடந்தையாக இருந்து செய்து வருகிறார்கள்.

இவர்கள் இப்படிப் போலித்தனமாகத் தேர்வுகள் நடத்தி மாணவர்களில் பெரும்பாலானவர்களுக்கு நல்ல மார்க்குகள் வாங்கிக் கொடுப்பதின் மூலம் அவர்களின் எதிர்கால வாழ்வை, அதற்குத் தேவையான வளத்தை உறுதி செய்து விடுவார்களா? அவர்களனைவருக்கும் நல்ல சம்பளத்தில் நிரந்தர வேலைகளையோ, சொந்தத் தொழில்கள், வாணிப நிறுவனங்களையோ உண்டாக்கித் தரப்போகிறார்களா? நிச்சயமாக இல்லை. பெரும்பாலோருக்கு எதிர்காலமே கேள்விக்குறியாக இருக்கப்போகிறதோ என்னவோ! எதற்காக இந்தக் கல்வி வியாபாரப் போட்டி நடத்தப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள இயலவில்லை. ஒருவகையில் சுயநலமும் முக்கியக் காரணமாக இருக்க வேண்டும். எங்கேயும் தரம், தருமம் இல்லாத மனிதர்கள் மலிந்து விட்டார்கள்.

இதையெல்லாம் சிறிது நேரத்திற்கு மறந்து பள்ளிக் கூடங்களும், தேர்வுகளும் எப்படி நடத்தப்பட வேண்டும் என்பதைப் பேசிக்கொள்வோம். தேவைப்படும் அந்தந்தக்கால அறிவு வளர்ச்சி நிலைக்கேற்ற வகையில் மாணவர்களின் தரப்பிரிவுகளை அறிந்து ஆசிரியர்கள் முழு ஈடுபாட்டுடன்

கடுமையாக உழைத்து நல் மாணாக்கர்களை உருவாக்குதல் வேண்டும்.

**காப்பி அடிப்பதின் எதிர்விளைவுகள்**

தேர்வுகளில் காப்பிஅடிக்க விடாமல் அவரவர் திறமை, அறிவு, உழைப்பு, முயற்சி இவைகளுக்கேற்றாற்போல் மதிப்பெண்கள் பெறும் வகையில் உண்மைத் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும். தேர்வுகளில் நிர்வாகமும், ஆசிரியருமே எல்லோருக்கும் எல்லா விடைகளையும் வழங்கிவிட்டால் பின்னர் முதல் நிலையில் உள்ள கடினமாக உழைத்த மாணவர்களின் கதி என்னாவது?

மேலும் நன்கு படித்திருக்கும் மாணவர்கள், படித்து வராத மாணவர்களுக்குப் பார்த்து எழுத அனுமதிக்கக் கூடாது. அது உங்கள் தலையில் நீங்களே மண்ணை வாரிப் போட்டுக் கொண்டதற்குச் சமமாகும். ஏனெனில் அநேக சமயங்களில் பார்த்து எழுதிய மாணவர்கள் மற்றவர்களை விட மிக அதிக மதிப்பெண்கள் பெற்று வாழ்வில் மிக நல்ல நிலைமைக்குச் சென்று விடுகிறார்கள். இதனால்தான் சமுதாயத்தில் தரமில்லாத் தன்மை இருக்கிறது போலும். அவ்வாறு இப்போதும் பல்லாயிரமாயிரம் பேர் பொதுவாழ்வில் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதும் உண்மை. இவ்வாறு காப்பி அடிப்பவர்கள் அதிக மதிப்பெண் வாங்குவது எப்படியெனில் இவர்கள் தங்களுக்குத் தெரிந்ததையும் எழுதி, மற்றவர்கள் எழுதினவைகளையும் எழுதி விடுவதால்தான்.

இம்மாதிரி காப்பி அடிக்க அனுமதித்த பலர் வாழ்வில் வீணாகிப் போனதும் நிறைய உண்டு. எனவே உங்கள்

வாழ்வுதான் உங்களுக்கு முக்கியமாக இருக்க வேண்டும் என்பதை உணாந்து செயல்படுங்கள்.

## ஆசிரியர்களின் தகாத செயல்கள்

பள்ளிக்கூடங்களில் சில ஆசிரியர்கள் பாடம் நடத்துவதை விட சொந்தத் தொழில், சிட்பண்டு, விவசாயம், சங்கம் போன்றவைகள் நடத்துவதில்தான் மிக ஆர்வமாக இருக்கிறார்கள் எனக் கூறப்படுகிறது.

மேலும் ஒரு வருத்தமான செய்தியையும் இங்கே சொல்ல வேண்டியிருக்கிறது. தினசரிகளில் அடிக்கடி ஆண் ஆசிரியர்கள் மாணவிகளிடம் தகாத முறையில் நடந்து கொண்ட பல செய்திகள் அவ்வப்போது வந்து கொண்டிருக்கின்றன. இதில் சிறு சம்பவம் முதல் கற்பழிப்பு, கொலை, தற்கொலை வரை அடக்கம். பொதுமக்களில் பலரோ, செய்தித்தாள்களில் வருவது ஒரு சில சம்பவங்கள் மட்டும்தான் எனக் கூறுகின்றனர். ஆனால் பல பள்ளிகளில் அங்கு அவர்களுக்குள்ளச் சூழ்நிலை வலிமை மற்றும் அதிகாரத்தின் ஆதார வீரியத்தைத் தவறாக உட்படுத்தி வரம்பு மீறி நடந்து கொள்வதாகவும், கெட்ட காம எண்ணத்துடன் செயல்படுவதாகவும் அவ்வப்போது பேசிக் கொள்வதைக் கேட்க முடிகிறது.

ஒருவேளை துரதிஷ்டவசமாக இப்படியான நிலைகள் இருக்குமானால் அவைகள் மாற வேண்டும், மாற்றப்பட வேண்டும். ஆசிரியத் தொழில் மிகப் புனிதமான உயர்வான தொழில். ஆசிரியர்களை முழுமையாக நம்பித்தான் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் கல்விக் கூடங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். எனவே அது போன்ற பழக்க

வழக்கங்கள், விருப்பங்கள், மனநிலைகள் உள்ள ஆசிரியர்கள் தயவுசெய்து நன்நிலைக்கு மாறிக் கொள்ளுங்கள். அதுதான் இந்தச் சமுதாயத்திற்கு நீங்கள் செய்யும் பேருதவியாக இருக்கும்.

**விரும்பப்படும் நடைமுறை**

இறுதியாகக் கல்விக்கூடங்களில் எல்லாத் தீமைகளும் ஒழிந்து உழைப்பு, அறிவு, நேர்மை, திறமை இவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். பொய், ஏமாற்று, பித்தலாட்டங்கள் கொளுத்தப்பட்டு தேர்வுகள் எழுதும் மாணவர்களில் அவரவருக்குப் பொருத்தமான ஏற்புடைய மதிப்பெண்கள் பெறுவதற்கு மட்டுமே வழிவகை செய்ய வேண்டும்.

பொய்ப் பெருமைகளுக்கானப் போட்டிகளைத் தவிர்த்து நியாயமான முறையில் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும். கல்விக்கூடங்களுக்குக் கூடுதல் தேர்ச்சி சதவீதம் முக்கியமல்ல. நேர்மையான ஒழுக்கமான செயல்பாடுகளே முக்கியம். அரசும் இந்த வகைச் செயல்பாடுகளை நெறிமுறைப்படுத்த ஆவண செய்தால் மிகவும் புண்ணியமாக இருக்கும்.

# தேவையற்ற பொருட்கள்

பறவைகள் பலவிதம், ஒவ்வொன்றும் ஒருவிதம் என்றும் பாடல்போல, பொருட்கள் பலவிதம், ஒவ்வொன்றும் ஒருவிதம், ஆசைகள் பலவிதம், ஒவ்வொன்றும் ஒருவிதம் - என்று பாட வேண்டும் போல் இருக்கிறது.

உலகத்தில் உள்ள வகைவகையானப் பொருட்களில், வீட்டு சமையல், இதர உபயோக சாமான்கள், மேஜை, நாற்காலி இனப் பொருட்கள், வீட்டு இயந்திரங்கள், மின்சார, மின்னணுச் சாதனங்கள், உலோக ஆபரணங்கள், அழகுப் பொருட்கள், கல்விக்கான பொருட்கள் மற்றும் இதர எண்ணிலடங்கா வகைகளில் உள்ளன. இன்னும் பல துறை, இன வகைகளில் ஆயிரமாயிரம், கோடான கோடிப் பொருட்கள் உலகம் முழுவதும் வியாபித்திருப்பதோடு வரப்போகிற ஒவ்வொரு நொடியிலும் உலகத்திற்குப் பல புதிய பொருட்கள் வந்த வண்ணம் இருக்கும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

### சாமான்கள் குவியல்

இவற்றில் மனிதன் எதை வாங்குவது, உபயோகிப்பது என்பதில் ஒருவருக்கும் உடன்பாடு ஒன்று ஏற்பட்டதாகத் தெரியவில்லை. கண்ணில் பட்டதை, வழியில் வந்ததை, வரும் போகுமிடத்தில் விற்பதை, அகப்பட்டதை, முடிந்தவனும் முடியாதவனும் கூட எப்படியோ வாங்கிக் குவித்துக் கொள்வதில் மிகவும் விருப்பமுள்ளவனாய்த் தெரிகிறான்.

ஒவ்வொரு மனிதனும் தன் வாங்கும் சக்தியை மறந்து, பொருள் வாங்குவதில், அதை சொந்தத்திற்காக உற்பத்தி செய்வதில் அதிக ஈடுபாடு காட்டுகிறான். இவர்கள் செய்வதெல்லாம் சரிதானா, இவர்களுக்கு இதெல்லாம் சரிப்பட்டு வருமா, மிக அவசியமா? என்று யோசித்தால் சிரிப்புத்தான் வருகிறது!

பொருட்கள் என்பது மனிதனுக்குத்தானேயொழிய, பொருட்களுக்காக மனிதன் என்றாகி விடக் கூடாது! மக்களின் தொடர்ந்தத் தேவைகளுக்கான பொருட்களையே இவர்கள் வாங்க வேண்டும் எனலாம். இங்கே வசதியுள்ள மேல்தட்டு மக்களின் எல்லையை நிர்ணயிக்கும் யோக்கியதை நமக்கில்லை என்பதால் இத்தலைப்பில் வரும் கருத்துகள் அவர்களுக்கானவை இல்லை! ஒருவேளை அவர்களும் விருப்பமிருந்தால், இக்கருத்தினால் ஏதேனும் பயனிருந்தால் அதைப் பயன்படுத்திக் கொள்ள எவ்விதத் தடையையும் யாரும் வகிப்பதற்கு அதிகாரமுமில்லை. எனவே இக்கருத்துகளைப் பொதுவாகவே வைப்போம்.

### பொருட்கள் அனுபவிப்பதற்கு மட்டும்

எந்தப் பொருளாக இருப்பினும் கண்ணால் பார்த்து மகிழ்வது, உபயோகித்து மகிழ்வது, மின்சார, மின்னணு சாதனங்களின் செயல்கள், பலன்களை உணர்ந்து, அனுபவித்து, ரசித்து ஆனந்தமடைவது போன்ற நிகழ்வுகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். மனிதர்கள், குடும்பத்தினர்கள் அடிக்கடி என்று இல்லாவிட்டாலும், வாரம், மாதம் அல்லது வருடத்திற்கு ஒரு முறையாவது கூட பார்த்து, தொட்டு, உபயோகித்து அனுபவித்து வரும் நிலையிலாவது சொந்தப் பொருட்கள் இருக்க வேண்டும்.

ஆனால் பல இடங்களில் நிலைமை தலைகீழாக இருக்கிறது. நிறைய வீடுகளில் பல பொருட்களை, குடும்பத்தில் உள்ள ஒருவரோ, பலருமோ அல்லது அனைவருமோ கூட அடிக்கடி பார்த்திருக்க மாட்டார்கள். வீட்டின் பரம்பரைப் பொருட்களை வாங்கிய பொருட்களுடன் கூட அதைப் பல ஆண்டுகளுக்கு அல்லது சாகும் வரையிலோ எடுத்துக்கூடப் பார்க்க முடியாத, தேவையுமில்லாத நிலையில் பலர் இருக்கிறார்கள். பல பொருட்கள் பல குடும்பங்களில் இருப்பதை அவர்களே உணரும் வகையில் தெரிந்திருக்கக் கூட வாய்ப்பில்லாத நிலை இங்கே காணப்படுகிறது. இந்த வகையான செயல்பாடுகள் முறையா, சரிதானா என்பதை நாமனைவருமே சற்றாவது சிந்திக்க வேண்டும்.

வாழ்க்கையை வாழ்வதற்கு அடிப்படையான தவிர்க்க முடியாதச் சில பொருட்கள் உண்டு. ஆனால் நிறையப் பொருட்கள் நமக்கு, அதுவும் நம்மில் வசதி குறைந்தவர்களுக்குத் தேவையில்லை என்பதை உறுதியாகக் கூறிவிட முடியும்.

உண்மையில் பல வீடுகளில் இம்மாதிரி தேவையற்ற பொருட்களின் குவியல்களை அடைத்து வைப்பதற்குப் போதுமான இடவசதி கூட கிடையாது. இருப்பினும் அம்மாதிரி பொருட்களைச் சிலர் வாங்குவதையே தொழிலாக்கிக் கொண்டுள்ளனர். குறிப்பாக வீட்டு அலங்காரப் பொருட்கள், எளிதில் உடையக்கூடிய கண்ணாடி, பீங்கான் சாமான்கள், தேவையற்ற தடித்த உலோகத்தில் செய்யப்பட்டதும் பராமரிக்க கடினமானதும், பராமரிக்கா விட்டால் அசிங்கமாகிப் போகக் கூடியதுமான பித்தளை, செம்புப் பாத்திரங்கள்

போன்றவைகளை இனிமேல் வாங்குவதற்கு முன்பாக ஒரு முறைக்குப் பலமுறை யோசியுங்கள்.

## பொருட்களும் தொல்லைகளும்

பித்தளை, செம்புப் பாத்திரக் கலாச்சாரமெல்லாம் எப்போதோ மலையேறி விட்டது. அதற்கு அற்புதமான மாற்றுகளாகிய எவர்சில்வர், அலுமினியம், வலுவான பிளாஸ்டிக் பாத்திரங்கள், எடைகுறைந்த கலபபு உலோக பொருட்கள் வந்து வாழ்க்கை முறையை வசதியாக்கி, வேலையைக் குறைத்து, எளிமையாக்கி நளினமாக்கி விட்டன. மக்கள் குறிப்பாக சிலப் பிரிவினர் அதிலும் குறிப்பாக கல்வி அறிவு குறைவாக உள்ள பிரிவு மக்கள் அதிகமானப் பொருட்களை வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். மேற்கூறிய முரட்டுப் பித்தளை, செம்புப் பாத்திரங்கள் பயனில்லா, பயன்படுத்தப்படாதச் சூழ்நிலையிலும், பராமரிப்பது கடினம் என்ற நிலை தெரிந்திருந்தும் இவற்றை வாங்கி அடுக்கி, குவித்து வைப்பதில் பெருமை கொள்பவர்களாக இருப்பது முன்னர் வேண்டுமானால் ஏற்கப்பட்டிருக்கலாம்.

ஆனால் வளர்ந்து வரும் மனித நாகரீகத்திற்குச் சற்றும் ஏற்புடையதன்று. சம்பந்தப்பட்டவர்கள் சிறிதாயினும் யோசித்து நிச்சயமாக அவசியமென்றால் மட்டுமே அவற்றை வாங்குங்கள். ஏனெனில் சிலருக்குச் சில காரணங்களால் அவ்வகைப் பித்தளைப் பாத்திரங்கள் அவர்களின் கடினமான உபயோகத்திற்கு மிக அவசியமாகத் தேவைப்படுகின்றன.

நம்மில் பலர் பலப்பல பொருட்களை வாங்கி, சிறிதோ, அதிகமோ உபயோகித்து விட்டு, அவைகள் சில உடைந்து,

கெட்டுப் போன நிலையில் அதைத் தூக்கிக்கொண்டு சரி செய்ய அலைகிறார்கள். அதற்குப் பணம், நேரம், உழைப்பு ஆகியவற்றைச் செலவு செய்தும் சரி செய்ய முடியாதது உண்டு., சிலருக்கு இதற்குத் தேவைப்படும் போதிய பணம், நேரம், உழைப்பு, பொறுமை இவை இல்லாமல், தரமுடியாமல் பலருக்கு பல்வேறு மாறுபட்ட சூழ்நிலைகள் இந்த மனித சமுதாயத்தில் நிலவி வருகின்றன.

## போட்டிப்பெருமையில் வாங்குதல்

பெரும்பாலானவர்களுக்கு அடுத்தவர் ஒரு பொருளை வாங்கிவிட்டால், தாமும் அதே மாதிரி வாங்கி விடவேண்டுமென பேராசை, ஆர்வ மிகுதி ஏற்பட்டு விடுகிறது. அந்தப் பொருள் தமக்கு மிகவும் தேவைதானா, அதற்கு இப்போது பணம் செலவு செய்ய முடியுமா, வீட்டில் வைத்து உபயோகிப்பதற்குப் போதுமான இடவசதி உள்ளதா என்பதை யோசிப்பதில்லை. மேலும், மேற்படி பொருளை பாதுகாப்பாக உபயோகித்து பராமரித்து வரமுடியுமா, அதற்கு நேரத்தையும் உழைப்பையும் ஒதுக்க முடியுமா என்றெல்லாம் எண்ணிப்பார்ப்பதில்லை. பெரிய அளவுகளிலுள்ளப் பொருட்களைக் கூட சிரமத்துடனேயே வாங்கி வைப்பதோடு சரி; அதில் குப்பை, பூச்சிகள் வருடக்கணக்கில் அடைந்து, அபிவிருத்தி செய்து சுகாதாரத்திற்கு கேடு விளைவிப்பதுடன் பொருள் இடத்தையும் அடைத்துக் கொண்டு கேடு விளைவித்துக் கொண்டிருப்பதைப் பலா் அறிவதாகத் தெரியவில்லை.

பொருட்களை வாங்க எத்தனிக்கும்போது அது அப்போதைக்கு அவசியமா, அவசியமில்லாததா? என்பதை

முடிவு செய்து கொள்ளவும்; அவசியமென்றால் மிக அவசியத்தை உடனேயும், சாதாரண அவசியமென்றால் சற்றுத் தாமதித்தும் வாங்கிக் கொள்ளலாம். அவ்வாறு வாங்கும்பொழுது நல்ல குறையில்லாத தரமுள்ளப் பொருட்களை வாங்குவதே அறிவுப்பூர்வமானது.

இனிமேலாவது தேவையற்றப் பொருட்களை வாங்கிக் குவிப்பதை, அடுத்தவர்களுக்காகப் போட்டி போட்டுக் கொண்டு பெருமைக்காகப் பொருள் வாங்குவதை நிறுத்திக் கொள்ளுங்கள். வரவுக்கேற்ற செலவு என்னும் முறையில் தேவையானவைகளை மட்டும் வாங்கி அதை எப்போதெல்லாம் உபயோகிக்க முடியுமோ அவ்வகையில் அடிக்கடி உபயோகம் செய்து நாமனைவரும் மகிழ்ச்சியுடன் வாழவேண்டுமென்பதே இப்போதையத் தேவை.

# தற்காலிகங்கள் நிரந்தரங்கள்

## சக்தி, பணம், நேரம், உழைப்பு கரியாகுதல்

ஒருநாள், ஒரு மணிநேர ஒருசில நிமிடக் கூத்துகளுக்கு, அப்போதோடு ஓய்ந்து விடப் போகிறவைகளுக்கு, பலர், பல இடங்களில், பல நாட்கள், வாரங்கள் உழைத்து பெரும் பணம், நேரம், பல மனித உழைப்புகள், இரவு பகல் பாராமல் தண்ணீராய் செலவழிக்கப்படுகிறது.

வான வேடிக்கைகள், மேளதாளங்கள், கச்சேரிகள், அதன் இணைப்புச் சங்கதிகள், ஆட்டம், பாட்டம், வேடங்கள், கோஷங்கள், காவடியாட்டங்கள், நூற்றுக் கணக்கான ஆயிரக்கணக்கான வாகனங்கள், ஊர்வலங்கள் இதில் அடங்கும். மேலும், திடீர் மாபெரும் அலங்கார வளைவுகள், ஒளிரும் கண் சிமிட்டும் வர்ண ஜால மின் விளக்கு அலங்கரிப்புகள், கொடி, தோரணங்கள், விளம்பரம் ஒலி பெருக்கிகளின் பயங்கர சத்தம் என ஊரே அல்லோல கல்லோல படுத்தப்பட்டுவிடும். இவற்றைச் சில வசதியற்றவர்களும் சூழ்நிலைக் கட்டாயத்தினால், திமிரினால், பெருமைக்கு, போட்டிக்குச் செய்துவிட்டுப் பின்னர் திண்டாடுகின்றனர்.

இவைகள் அரசியல் நிகழ்ச்சிகள், திருவிழாக்கள், சமய, குடும்ப, இன்னபிற நிகழ்ச்சிகளில் இட வித்தியாசமின்றி நாட்டின் எல்லா மனிதர் வாழும் இடங்களிலும் போட்டிபோட்டுக் கொண்டு நடத்தப்படுகின்றன. ஒருவரை

ஒருவர் மிஞ்சும் வகையில் நாளுக்கு நாள் அதன் பரிணாமமும், பரிமாணமும், வீரியமும் பெரிதாகி வருகின்றன. இன்றைக்கு வாழ்வின் தவிர்க்க முடியாத அங்கங்களாக அவைகள் மாறி விட்டன என்பதற்கு எவரும் எதுவும் சொல்ல இயலாது; முக்கியமாக அரசியல் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் கேட்க ஆளில்லாத அனாதைச் சாலைகளைக் கண்ட இடத்திலும் விருப்பம்போல் தோண்டி, தற்காலிக அலங்கார வளைவுகள் போன்றவற்றை அமைத்து வருகிறார்கள்.

பின்னர் பிரித்தெடுத்து விட்டு அக்குழிகளை அப்படியே போட்டு, நாளடைவில் அந்த இடங்கள் உடைந்து வீணாகிப் பெருங்குழிகளாக ஆகும் நிலையை ஏற்படுத்தி விடுகிறார்கள். அத்துடன் அவ்வளைவுகளை அமைப்பதற்கும் அன்றே அவிழ்ப்பதற்கும் பெரும் மனித பொருள் சக்தியை பயன்படுத்தி வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அலங்கார வளைவுகளை ஏற்படுத்துவதற்கு உடனடி மேடை இருந்து அமைக்கப்படுவது போல உடனடி அலங்கார வளைவுகளை மிகச் சிறிதளவே சாலைகளில் குழிபோட்டு எப்படி வேண்டுமானாலும் மாற்றி மாற்றி அமைத்துக் கொள்ள முடியும். இதன் மூலம் கால விரயம், மனித உழைப்பு குறைக்கப்படுகிறது. தோற்றமும் பழைய முறையை விட சிறப்பானதாக அமையும். இதை நிறுவுவதும், பிரிப்பதும் மிகச் சுலபமாகும்.

**புரியாத கும்மாளங்கள்**

மானிட வாழ்க்கையில் இதுபோன்ற எண்ணற்ற மிகத் தற்காலிக சங்கதிகள் நடந்து கொண்டுதான் வருகின்றன. சுற்றுலா, புண்ணியத்தலங்களுக்கு வாகனம் மற்றும் கால்

நடையாகச் செல்வது, வேறு வகையான கூத்து, கும்மாளம் போடுவது எனப்பல உண்டு. இவைகளுக்குச் சிலர் போதிய பணமில்லாமல் வட்டிக்குக் கடன் வாங்கிச் செலவு செய்து விடுகின்றனர். பின்னர் அசலையும் வட்டியுயையும் கட்ட முடியாமல் திண்டாடித் தெருவில் நிற்பதுமானவைகளும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

**நிரந்தர பயனுடைய சில சாதாரணங்கள்**

இவற்றையெல்லாம் இப்படியெல்லாம் செய்கிற இந்த மனிதர்கள், தனக்கு, தன் குடும்பத்தினருக்கு, தன் சூழ்நிலைக்குத் தேவையானவைகளைச் செய்து கொள்வதில்லை. மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிற, நிரந்தரமான, நல்ல பின் பலன்களைத் தரக்கூடிய யாரேனும் செய்யமாட்டார்களா எனக் காத்துக்கிடக்கும் செயல்களை ஒருபோதும் சாமான்யமாகச் செய்வதில்லை என்பதுதான் பொதுவான கருத்து.

தன்னுடைய வீடுகள், வீடுகளிலுள்ள கதவுகள், ஜன்னல்கள் இவைகளில் உள்ள குறைகளைப் பழுது பார்த்து சரி செய்தல், வேலிகளைச் சீராக்குதல், கிழிந்த துணிகளைத் தைத்தல், சுத்தப்படுத்தப்பட வேண்டிய அனைத்தையும் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் அவ்வப்போது சுத்தம் செய்து வருவது போன்றவைகள் அவசியமானதாகும். அதோடு குடும்பத்துக்கு அவ்வப்போது கட்டாயமாகச் செய்யப்பட வேண்டிய வேலைகளைச் செய்தல், செடிகள் நட்டு மரம் வளர்ப்பது போன்ற அவசியமான அவரவர்களாலேயே செய்யப்பட வேண்டிய வேலைகளைக் கட்டாயம் அவ்வப்போது செய்து வருதல் மிகவும் நல்லது.

பொது சேவையாக தனி மற்றும் கூட்டு முயற்சியில் மக்கள் வசிக்கும் பகுதி மற்றும் அருகிலுள்ள தெரு, சாலை, சாக்கடைகளைச் சுத்தம் செய்து பழுதுகளைச் சீரமைக்கலாம். இவைகளுக்கு எப்போதும் அரசையே எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அப்பகுதி மக்களே இயன்ற வரையில் சமூக சேவையாக இம்மாதிரி நல்ல காரியங்களைச் செய்து வரலாம். ஏனெனில் சம்பளத்துக்கு வேலை செய்பவர்களை விட, சம்பந்தப்பட்டவர்கள் செய்தால், மிகுந்த ஈடுபாட்டுடன் செய்யப்படும்போது மிகச் சிறப்பாக அமையப் பெறும்.

இறுதியாக இங்கே வலியுறுத்தப்படப்போது என்னவெனில் தனிமனிதனுக்கு, குடும்பத்திற்கு எவ்வித தொடர்ந்த பயனும்தராத, தற்காலிக, ஆடம்பர நிகழ்ச்சிகளுக்கு உழைப்பதை முடிந்த அளவிற்குக் குறைத்துக் கொள்ளுங்கள். மனிதன் முதலாவதாக அவனுக்கு, அவனது உற்ற சுற்றத்திற்கு நிரந்தரமாகத் தொடர்ந்து பயன்தரும் காரியங்களை அவ்வப்போது நிறைவேற்றுவதில் மிகுந்த ஈடுபாடு கொள்ள வேண்டும் என்பதுதான்.

# மஞ்சள் நீராட்டு

## இயற்கை உடலமைப்பு

விலங்கினத்திலேயே மனித இனத்திற்கென சில சிறப்பான இயற்கை உடற்கூறு முறைகள் வழங்கப்பட்டுள்ளன. அதிலொன்று, பெண்கள் பருவ வயதில் பூப்படைந்து கிட்டத்தட்ட மாதமொருமுறை கருவுறும் வரையிலும் மற்றும் இதற்கான வயது தாண்டும் வரையிலும் மாதவிடாய் எனும் இயற்கை நிகழ்வு நடப்பது மிக இன்றியமையாதது. மற்ற விலங்கினங்களில் இப்படியான நிகழ்வு இருக்கிறதா என விலங்கினத்துறை நிபுனர்களை கேட்டறியலாம். இருப்பினும் மனிதர்களின் கடைசி விலங்கின மூதாதையரானக் குரங்குவகைகள் சிலவற்றில் இப்படி ஒரு நிலை மிகக்குறைந்த வீரியத்தில் இருப்பது தெரியவந்தது. ஆனால் அவைகளிடத்தில் அந்நேரத்திய அந்தளவு இரத்தப்போக்கு இல்லை.

இம்முறையானது, மிகமிகச் சிலரைத்தவிர அனைத்துப் பெண்களுக்கும் பருவவயதில் பூப்படைந்து மாதவிடாய் ஏற்படுவது இயல்பான ஒன்று. இன்றைய வாழ்வுமுறையில் உள்ள கோளாறுகளானத் தவறான, நேரந்தவறிய உணவுகள், உழைப்பின்மை, தேவையற்றச் செயல்கள், டென்சன் எனும் நரம்புமண்டல பாதிப்பு, அதிகக் கொழுப்புணவினால் கூடுதலாலான இரத்தக்கொதிப்பின் முன்னேற்பாடுகள், கார்போஹைட்ரேட் கூடுதலாலான சர்க்கரை நோயின் முன்னேற்பாடுகள், இரும்புச் சத்துக் குறைவிலாலான இரத்தச்சோகை, கால்சியம் சத்துமிகுந்த காய்கறி-கீரை குறைவிலாலான எழும்பு வலுவின்மை, பொறாமை,

சினம் ஆகியவற்றால் ஏற்படும் நரம்புத்தூண்டுதல்கள், பின் அவற்றை அடக்கிக்கொள்ளும் கடுமை போன்ற எண்ணற்ற காரணங்களின் ஒருசில அல்லது பலவற்றின் சேர்க்கைகளினால் உடலுக்கு வரும் கோளாறுகள் பல உண்டு. அவற்றில் ஒன்று பெண்களுக்கு வரும் சிலவிதமான மாதவிடாய் கோளாறுகளும் அப்போது ஏற்படும் கடும் வயிற்றுவலிகள் போன்றவைகளுமாகும்.

## பூப்படைதல்

இந்த நிலைகளுக்கு முன்னர் பெண்களின் வாழ்வில் ஒருமுறை நிகழும் நிகழ்வான பூப்படைதல் என்பது ஒரு பெண்ணின் பருவகாலத்தில் சுமார் பத்து முதல் பதினைந்து வயதிற்குள் இயல்பாக இயற்கையாக வருவதென்பது அனைவருக்கும் தெரியும். இருப்பினும் இந்நிகழ்வை பல வீடுகளில் பெரியளவு விழாவாகக் கொண்டாடப் படுவது இன்றுவரை நடந்துவருகிறது. இது சென்றகாலங்களில் நடந்துவந்ததற்குப் பல நியாயமான, அவசியமானக் காரணங்கள் இருந்தன.

அன்றைய நிலையில் வயதிற்கு வந்த பெண்கள் அதாவது பருவமடைந்தபிறகு மற்றவர்கள் பார்க்கும்படியாக வெளியில் வரமாட்டார்கள். எனவே எந்தெந்த வீடுகளில் பருவம் அடைந்த பெண்கள் உள்ளனர் என்பது பலருக்குத் தெரியாது. மேலும் பருவமடையும் முன்னரும், பருவம் அடைந்த சில நாட்களில் இருந்து சில மாதங்களுக்குள்ளும் திருமணம் செய்து வைக்கும் வழக்கமும் இருந்து வந்துள்ளது.

எனவே பெண்கள் வயதுக்கு வந்தவுடன் அதை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு, மாப்பிள்ளை வீட்டார்களைப் பெண்பார்க்க அழைப்பதற்கு சில செயல்களைச் செய்யவேண்டியிருந்தது, அவ்வாறே செய்து வந்தனர். வீடுகளில் பலர்

கூட்டமாகப்பாடுவது, கும்மி கொட்டுவது, நடனமாடுவது, நாட்டுப்புறக்கலைகள் சிலவற்றை நடத்துவது, விருந்து நடத்துவது என நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வந்தன. இப்போதும் இவைகள் இடத்திற்குத் தகுந்தார்போல் மாறுபாடு அடைந்து சில நவீனங்கள் உட்புகுத்தப்பட்டு மஞ்சள் நீராட்டு விழா எனக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

## இன்றையப் பெண்களின் நிலை

என்றபோதிலும் இப்படியானக் கொண்டாட்டங்களுக்கு முன்னர் இருந்த தேவை இப்போதும் இருக்கிறதா என எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது. நிச்சயமாக அப்படியானத் தேவைகளில் ஒரு சதவிகிதம் கூட இப்போது இல்லை என்பது நிதர்சனமானக் கூற்று. கிராமம், நகரம், பெருநகரம் என்ற பாகுபாடு பேதமில்லாமல் அனைத்து இடங்களிலும் வயதுக்குவந்த பெண்கள் கல்வி கற்க வேலைகளுக்குப் போக வீடுகளைவிட்டு வெகுதூரம் சென்று வருகிறார்கள். மேலும் வயதிற்கு வந்ததிலிருந்து பல ஆண்டுகள் கழித்தே திருமணம் நடத்திக் கொள்கின்றனர்.

இடைப்பட்டக் காலத்தில் நிறைய அன்னிய பெண்கள் மற்றும் ஆண்களுடன் பேசிப்பழகும் வாய்ப்புகள் சர்வசாதாரணமாகச் சந்தை நிலவரமாகியிருக்கிறது. பிறகு எதற்காக இந்த மஞ்சள் நீராட்டு விழாக்கள் மிகப் பிரமாண்டமாகக் கொண்டாடப்படவேண்டும். இதன் அடிப்படையான, பெண்கள் பருவமடைந்த விபரத்தை உறவினர், சுற்றத்தினருக்குத் தெரிவித்து திருமணத்திற்கு அழைப்பது போன்ற கட்டாயநிலை இப்போது நிலவுகிறதா. முன்பு உறவுகளுக்குள்ளே அதிகபட்சத் திருமணங்கள் நடத்துவதுபோன்று தற்போது உறவுகளுக்குள் நடைபெறும் திருமணங்களின் சதவிகிதம் எவ்வளவு?

## மஞ்சள் நீராட்டு விழாக்கள்

பலர் பலவிதக் காரணங்களுக்காக இவ்விழாக்களைக் கொண்டாடி வருகிறார்கள். சூழ்நிலை வாய்ப்புகளைக் கணக்கிற்கொண்டு பெரும் வசூல் செய்வதற்காகக்கூட சிலர் இவ்விழாக்களை நடத்திவருகின்றனர். பலர் தொன்றுதொட்டு வரும் வழக்கமாக எவ்விதச் சிந்தனையுமின்றி நடத்திக்கொண்டு இருக்கின்றனர். பகிரங்க பிரமாண்ட மஞ்சள் நீராட்டுவிழா நடத்தப்பெற்றப் பல பெண்களுக்கு ஓரிரு பத்தாண்டுகளுக்குப் பிறகே திருமணங்கள் நடந்தேறுகின்றன. ஆக அடிப்படைக்கொள்கை அர்த்தமற்றதாகிப்போனது. மஞ்கள் நீராட்டுவிழா நடத்தினால், அதை அறிவிப்பாகக் கருதி விரைவானத் திருமணம் செய்யப்படுதல் வேண்டும். இது நடக்கப்போவதில்லை, அதற்கு சட்டத்திலும் அதன் இடுக்குகளிலும்கூட இடமில்லை.

எனவே இதைப்பற்றிச் சற்று சிந்திக்க வேண்டியுள்ளது. ஒன்றில் மாற்றுக்கருத்து இருக்கவேண்டியதில்லை. இந்தியா போன்ற நாடுகளில் பெண்களின் பூப்படைதலை அவரவர் நெருங்கிய மற்றும் நண்பர்களின் குடும்பங்களுக்குத் தெரிவித்து ஆசிர்வதிக்க அழைத்து இது குடும்ப நிகழ்ச்சியாக வீடுகளுக்குள் எளிமையான முறையில் மஞ்சள்நீரில் குளிப்பாட்டிக்கொள்வதும் இதர சடங்குகள் செய்வதும் அவசியம் என்பதை ஆமோதித்துக்கொள்வோம். ஆனால் ஊரறிய உலகறிய ஒலிபெருக்கிகளில் பாட்டுகள் என்றபெயரில் படுபயங்கர இசைக்கொடுமைகளைக் கத்தவிட்டு வருபவர்களிடம் வசூல் செய்து பண, பரிசு அறுவடைவிழா போல நடத்தித்தான் கொண்டாட வேண்டுமா. மேலும் அதில் சூதாட்டம், குடியாட்டம், பெருமைப்போட்டிகள், அடிதடி சண்டைகளுடன் வெட்டு – குத்து – கொலை போன்றவைகளும் அவ்வப்போது நடக்கவேண்டுமா எனச் சிந்தித்துப்பாருங்கள்.

நகரங்கள், பெருநகரங்களில் பல வீடுகளில் இப்படியான நிகழ்ச்சிகள் நடத்தப்பெறாத வீட்டுப்பெண்களுக்கு திருமணங்கள் நடந்துகொண்டிருக்கவில்லையா. இன்றும் அனைத்துப் பகுதிகளில் உள்ள பல ஏழைவீடுகளில் எளிமையாகக் கொண்டாடப்பட்டப் பெண்களுக்கும் திருமணங்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. எனவே சம்மந்தப்பட்ட அனைவரும் சிந்திக்கவேண்டியது காலமாற்றத்தின் தேவை. உலகம் முழுக்க பெண்கள் என்றால் இந்த உடல் மாற்றம் நிச்சயம் உண்டு. இதில் புதுமையோ, அதிசயமோ, தனித்தன்மையோ ஏதுமில்லை. பெண்களை இயல்பாகச் சுதந்திரமாக இருக்கவிடலாம். இவ்வாறானக் கூடுதல் பரிமாண விழாக்கள் அப்பெண்களை விரைவான காதல் மற்றும் உடற்சேர்க்கை எண்ணத்திற்கு ஈர்த்துசெல்லும் மனநிலையை எளிதாகப் பெறும் சூழ்நிலையைத்தான் தரும். மேலும் குறிப்பாக மஞ்சள் நீராட்டுவிழா நடத்தப்படுவது அப்பெண்களைவிட அவர்களைச் சுற்றியுள்ள வாலிபர்கள் மற்றும் இதர ஆண்களுக்குத்தான் கொண்டாட்டம்.

## சமுதாய நிலைப்பாடுகள்

பெண்கள் பல வெளியிடங்களுக்குச் சென்று நிறைய கல்வி கற்கவேண்டியக் கட்டாயத்தில் உள்ளனர், காதல் செய்கின்றனர். ஒருவரே பல காதல் செய்கிறார். வாழ்க்கை உறவுகளுக்குள் ஒழுக்கம் குறைந்துகொண்டு வருகிறது. முன்பு ஒரு ஆணுக்கு இரண்டு மூன்று பெண்டாட்டிகளை சமுதாயத்தில் அங்கீகரித்து வைத்திருந்தார்கள். இப்போது சட்டம் தட்டிக்கேட்குமாதலால் வெளிப்படையாக அல்லாமல் ஒன்றிற்கு மேற்பட்ட மனைவிகளை மறைமுகமாக்கி சிலர் கொண்டிருக்கின்றனர்.

பெண்களிலும் சிலர் ஒன்றுக்கு மேற்பட்டக் கணவன்மார்களைக் கொண்டு கும்மாளமிடுவது இந்நாட்களில் கூடிக்கொண்டு வருகிறது.

சட்டப்படியாக ஒருவர் போக தற்காலிகமாகவோ, ஒரு குறிப்பிட்டக்கால நிரந்தரத்திலோ கூடுதல் கள்ளக்காதலர்களை, அதிலும் சிலர் தங்களைவிட குறைந்த வயதுள்ள ஆண்களை மிகவும் விரும்பும் நிலை காணப்படுகிறது. வீட்டிலிருக்கும் பெண்களைவிட வெளியில் செல்லும் பெண்கள் பலர் இந்த லிஸ்ட்டில் இருக்கும் காலம் தெரிகிறது. இந்தநிலை வருங்காலங்களில் இன்னும் கூடும் வாய்ப்பு நன்றாகவே இருக்கிறது.

## எதிர்காலத்தேவை

எனவே இனிவரும் காலங்களில் மஞ்சள் நீராட்டுவிழாவை, வாழ்க்கையின் அத்தியாவசியமானத் திருமணவிழாக்களின் பிரமாண்ட அளவிற்கு கொண்டாடவேண்டிய அவசியமில்லை எனக் கருதப்படுகிறது. எனினும் விருப்பப்பட்டவர்கள் விருப்பப்பட்ட விதங்களில் விழா நடத்திக்கொள்ளுங்கள், எவரும் தடுக்கப் போவதில்லை. சமுதாயமேன்மை அவசியத்தைக் கருதிப்பார்க்கும் எண்ணம் உள்ளவர்கள் இதன் அவசியத்தையும் எண்ணிப்பார்த்துச் செயல்படுங்கள். இதைப்பற்றியே சினிமாக்காட்சிகள், சினிமாப் பாடல்கள் இயக்குவதை நம் சினிமாத்துறையினர் மற்றும் இயக்குனர்கள் கொஞ்சமல்ல அதிகமாகவே குறைத்துக்கொள்ளலாம்.

# உபரி சேர்க்கைகள்

## காப்பு அணிகலன் – அலங்காரம்

மெல்லமெல்ல மனிதர்களின் சிந்தனை சக்தி செயல்பட ஆரம்பித்து மனித வாழ்க்கையின் தேடல்கள் ஒவ்வொன்றாக வந்தன. தேடல்களின் தீர்வுகளாகப் பல புதுமைகள் வரத் தொடங்கின. ஒவ்வொரு காலகட்டத்தில், தேவைபட்டவைகளுக்காக அப்போதிருந்த மனிதர்களுக்கு மனதில் தோன்றியதைச் செயல்படுத்தி வந்தனர். சிலவற்றிற்கு தொடர்ந்த அவசியமும் மற்ற சிலவற்றிற்கு அவசியமில்லாமலும் ஆகிப்போனது. இதில் சிலசமயம் அவசியமானவைகள் சில தொடர்ந்து வராமலும், அவசியமற்றவைகள் சில தொடர்ந்தும் வருகின்றன. இவற்றில் எவ்விதப் பாகுபாடுமின்றி அவசியமானவைகள், அவசியமற்றவைகள் ஆகிய இரண்டிற்கும் சிலபல தேவையான, தேவையற்றக் கூடுதல் மற்றும் குறைவான மாற்றங்கள் செய்து செயல்படுத்தி வருவதையும் வாழ்க்கை முறையாக்கிக் கொண்டனர்.

அப்படியாக மனிதர்களின் ஆண் பெண் இருபாலரில் ஆணின் உடல் வலு ஆதிக்கத்தால் பெண்களைக் கட்டுப்படுத்தி அடக்கி ஆண்டுவந்தார்கள். அதிர்ஷ்டவசமாகவோ அல்லது துரதிர்ஷ்டவசமாகவோ இப்போது ஆண்கள் அடக்கி ஆள்வது முடிந்து, பெண்கள் ஆண்களை அடக்கி ஆளும் சூழ்நிலைகளும், சட்டமும் சகஜமாக வந்துவிட்டன.

இப்படியாக முன்னர் ஆண்கள் பெண்களை அடக்கிவந்த காலங்களில், பெண்கள் உடற்கூறின் பாதுகாப்பின்மைக் காரணமாக

சில உபாயங்களை மேற்கொண்டிருந்தனர். பூப்படைந்த பெண்கள் எந்தஒரு ஆணின் தகாத உடலுறவின் மூலமாக உடனடிக் கருவுறுதல் என்னும் அபாயம் இருந்ததினால், இப்போதும் இருப்பதுபோல, அப்போதிருந்த மனிதர்கள் அதிக ஆண்களிடமிருந்து பெண்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் இருந்திருக்கவேண்டும். அன்றைய காலத்தில் இன்றைய நிலையிலுள்ள **நல்ல காவல்காக்கும்** காவல்துறை, அரசுத்துறை, சட்டத்துறை இருந்திருக்க நியாயமில்லை. எனவே மனிதர்கள் தங்களுக்குத் தாங்களே பல உபாயங்கள், தந்திரங்கள் மேற்கொண்டு தங்கள் மக்களைப் பாதுகாக்க வேண்டியது இருந்திருக்கும்.

பெண்களின் உடல்உறுப்பு பாலியல் தூண்டுதலினால் ஏற்படும் நடமாட்டங்கள், செயல்பாடுகள், அவர்களுக்கு அவர்களின் விருப்பம் இல்லாமலேயே பிறரால் ஏற்படும் தொல்லைகள் ஆகியவற்றைக் கண்காணித்து ஒரு முறைபடுத்த சில யோசனைகளை வடிவமாக்கிச் செயல்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது. பெண்களுக்கு கால்கள் கைகளில் அணியும் சப்தம் தரும் கொலுசு, கண்ணாடி வளையல்கள் போன்ற அணிகலன்கள் சில நாடுகளிலும், சில நாடுகளில் உதட்டில் சாயம் பூசுதலும், மாதவிடாய் நாட்களில் தொடுவது தகாதது என்றும் பெண்களை உடல் ரீதியாகப் பல தடுப்புச் செயல்கள், பல வண்ணங்கள் பூசி பாதுகாப்பு முறைகள் என நடைமுறை படுத்தியுள்ளனர்.

## கொழுசுகள்

கை, கால்களில் அணிவிக்கப்பட்ட ஓசை தரும் சலங்கைக் கொழுசு போன்ற அணிகலன்கள் பெண்களின் நடமாட்டத்தை அறிவித்துக் கொண்டிருப்பதற்காகச் செயல்பட்டிருக்க வேண்டும் என முன்னர் பார்த்தோம், இந்த ஓசைகளின் மூலமாக பெண் எந்த இடத்தில் இருக்கிறாள் என்பதை அவளின் சம்பந்தப்பட்டவர்கள் இருக்கு மிடத்திலிருந்தே அறிய உதவி செய்வதற்குக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு

பொருளாகவே இது ஆரம்ப காலத்தில் இருந்திருக்க வேண்டும்; பின்னர் இன்றைய நிலையில் இதுஒரு அலங்கார ஆபரணமாகி இருக்கலாம்.

அன்றைக்கு அலங்காரத்துடன் பாதுகாப்பு அறிவிப்பிற்காகவும் தயார் செய்யப்பட்டது, இன்றைக்கு சப்தம் தரும் கொழுசுகள் போக சப்தம் தராதவைகளும் உள்ளன. மக்கள் அந்தந்த நேரகாலங்களுக்கேற்ப இவற்றில் ஏதாவது ஒருவகையை அணிகிறார்கள். இருப்பினும் சப்தம் எழுப்பும் கொழுசுகளே அவர்தம் குடும்பத்தினருக்கு உகந்தது. ஏனெனில் அணிபவருக்கு ஏதேனும் ஆபத்துகள் வந்துவிட்டால் உடனே தெரிந்துவிடும்.

## உதட்டுச்சாயம்

இதையடுத்து பெண்களின் உதட்டுச்சாயம் சம்பந்தமாகச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. உதடு என்பது ஆண் பெண் இருபாலருக்கும் இருக்கிறதென்பது உலகமறிந்தது. இதில் பெண்களின் உதட்டில் மட்டும் எதற்காக தற்காலிக வண்ணம் தீட்டப்படுகிறது? அன்றைய நிலையில் அன்னியர்கள் பெண்களுக்கு முத்தம் கொடுப்பதையோ அல்லது அதற்கு மேலும் பலவிதமாக நடந்துகொள்வதையோ, நடந்துகொண்டதையோ தெரிந்து கொள்வதற்காகவும் மற்றும் அதைத் தடுப்பதற்காகவும் என பல உபயோகங்களுக்காக உதட்டுச்சாயப் பூச்சு ஆரம்பக்காலத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்க வேண்டும். உதடுகளில் தீட்டப்பட்டிருந்த சாயம் குறைந்து, கலைந்து இருந்தாலோ அல்லது மற்றைய ஆண் பெண்களின் மீது அது ஒட்டிக்கொண்டிருந்தாலோ அங்கு நடந்திருந்த கசமுசா என்ன என்பது புலப்பட்டுவிடும்.

மற்றபடி அந்த இடத்தில் மட்டும் வகை வகையான சாயம் பூசி, உதட்டு இயற்கை ஈரத்தன்மையை அழித்து, உதடுகளின் மென்மையை முரடாக்கி இயற்கை அழகைக் கெடுத்துக்கொள்வதுடன், அச்சாயத்தில்

உள்ள இரசாயனங்களின் மூலமாக உடல்நலத்தைக் கெடுத்துக் கொள்ளும் இன்றைய அவசியம்தான் என்ன? ஒரு ரகசியம் சொல்லவேண்டுமெனில் அப்போதையக் கூடுதல் கவர்ச்சிக்காக முகப்பகுதிகளில் எவ்வளவுக்கெவ்வளவு செயற்கைப் பொருட்களை உபயோகிக்கிறோமோ, அந்தளவுக்கு விரைவாக வயோதிகத்தன்மை வருகிறதென்பது உண்மை.

ஏதேனும் ஒரு பழக்கம் இருந்தால் அதன் அவசியம், உண்மைத் தன்மை, சாதக–பாதகங்கள் அறியாமல் அல்லது மறந்து அதை மென்மேலும் பலவிதங்களில் வளர்த்துக்கொள்வது எங்ஙனம் நியாயமாகும். அதிலும் இன்றைய அறிவில் உயர்ந்து விளங்கும் மாதர் கூட்டம் இவற்றை அறியாமல் இருப்பது பெரும் விந்தையாயிருக்கிறது. நன்றாகச் சிந்தித்துப் பார்க்கும் வேளையில், ஒருவகையினில் அதிகப்படியான உதட்டுச்சாயம் பெண்களின் அழகுத்தோற்றத்தை குறைத்துக் காண்பிக்கிறதோ என எண்ணவைக்கிறது. மாறுவேடப்போட்டிகள், நாடகங்கள் போன்றவைகளில் பலவித உடல் சாயங்கள் பூசிக்கொள்வதுபோல இதை ஆழ்ந்து யோசிக்கும்போது அதையே எண்ணத்தோன்றுகிறது. அதிலும் மிக அதிகமாக உதட்டுச்சாயம் போட்டிருக்கும் பெண்கள் சிலரைப் பார்க்கும்போது அவர்களின்பால் ஈர்ப்பு ஏற்படுவதற்குப் பதிலாக ஒருவிதக் கார்ப்பு ஏற்படுகிறது. இதையெல்லாம் பல பெண்களும் ஆண்களும் யோசிப்பதற்கு நேரம், சூழ்நிலை, அறிவு நிலை இல்லாமையினால் இது தொடர்ந்து கொண்டிருக்கிறதோ என ஐயப்படவைக்கிறது.

மேல்நாட்டு மக்கள் அங்கீகரித்து நடைமுறையில் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக எல்லாமும் சரியாகிவிடாது. உண்மையில் அவர்களிடம் இந்தியர்களைவிட அதிக மூடத்தனங்களை பல இனங்களில் காணமுடிகிறது. இவ்வுலகின் நற்கலாச்சாரங்களைக்

குப்பைக்கு அனுப்பிக் கொண்டிருப்பதில் முதலாவது முக்கியஸ்தர்கள் அவர்களே. எனவே எது சரி, எது தவறு, தேவையானது, தேவையற்றது என்பதை அறியும் ஞானம் நம்மவர்களிடமிருந்து வருமானால், அதை அவர்கள் விரும்பினால் பின்பற்றட்டும், இல்லையெனில் நமக்குக் கவலையில்லை. ஆனால் நாம் அவசியமான, அறிவான, அழகான வாழ்வு வாழ்வோம். பின்னாளில் உலகம் நம்மைப் பார்த்து மாறும் காலம் வரும்.

## குதிகால் செருப்புகள்

மனித வளர்ச்சியின் தேவையின்பால் கண்டுபிடிக்கப்பட்டவை காலணிகள். கரடு முரடு முட்பாதைகள், கடும் வெப்பம், கடும் குளிர் இவற்றில் நடக்க, வாழ அவசியம் வந்தபோது அதற்கான உபாயத்தை மெல்ல மெல்ல உருவாக்கி வடிவமைக்கப்பட்டதில் முதலாவது வந்தவை மரம், மரப்பட்டை, இலைகள், நார்களில் ஆன காலணிகள். காலமாற்றத்தில் பல வளச்சிகளைக்கண்டு, விலங்குத் தோல்களைப் பதப்படுத்தி அவற்றைக் கொண்டு செய்த காலணிகள் உருவாக்கப்பட்டன. பிறகு நாளுக்கு நாள் அதன் வடிவம், தரம், வகைகள் மாறி வளர்ந்துகொண்டே இருக்கின்றன.

இக்காலணிகளின் அடிப்பகுதி கிட்டத்தட்ட முக்கால் பாகம்வரை ஒரே அளவிலான வகையிலும், குதிகால் பகுதி சற்று கூடுதல் உயரத்திலும் தயாரிக்கப்பட்டன. அதன்பிறகு குதிகால் பகுதி உயரத்தை கன்னாபின்னாவென்று உயர்த்தி காலணிகள் செய்யப்படுகின்றன. குறிப்பாக பெண்களுக்கானக் காலணிகள் இவ்வாறு செய்யப்படுவது விசேடம். இக்காலணிக் குதிகால்களின் பல்வேறு வடிவங்கள் பயமுறுத்துபவைகளாக உள்ளன. சில காலணிகளில் குதிகால் அடிப்பகுதி ஊசிமுனை அளவுக்குக் குறைக்கப்பட்டு நடப்பவர்கள் ஒருவித கவனம் மற்றும் ஆபத்திலேயே போகிறவர்களாக

இருக்கின்றனர். குதிகால் உயரங்கள் அரையடி, முக்காலடி அளவு உயரத்திற்கு கூட இருக்கின்றன. ஒருநாள், ஓரடி உயரம் கூட வரலாம். இதெல்லாம் என்னக் கொடுமை !

இதன் அவசியம் என்ன, நன்மையா, தீமையா இவைகளை எண்ணிப்பார்க்க இங்கே பலருக்கும் பிரக்ஞை இல்லை. யாரோ, எப்படியோ வடிவமைத்துத் தயாரிக்கின்றனர் என்றால் அதன் நன்மை தீமை அறியாமல் வாங்கி அணிந்துவிட வேண்டுமா. நிஜத்தில் இக்குதிகால் செருப்புகளினால் உடலின் பொது ஆரோக்கியமும், தண்டுவடத்தின் பலமும் பாதிக்கப்படுவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். மேலும் கூறானக் குதிகால் காலணியை அணிபவர்கள் இலகுவாக, சர்வ சாதாரணமாக நடக்க வாய்ப்பில்லாமையினால் ஒருவித மனக்கவனத்துடனே பலர் நடப்பதைக் காணமுடிகிறது; வேகமாக நடக்கவோ, ஓடவோ இவர்களுக்கு இயலாது.

இப்போது குட்டைப்பெண்கள் உயரக்கூடுதலாகக் காட்டிக்கொள்வதற்கு இதை வரப்பிரசாதமாகக் கருதுகின்றனர். இது ஒரு வகையில் நியாயம் என்பதால் அவர்கள் அணிந்துகொள்ளட்டும் பரவாயில்லை. இந்த நெட்டைப்பெண்கள் எதற்காக அணிகிறார்கள், மேலும் நெட்டையாக தோற்றமளிக்கவா! ஒருவேளை அவர்களுக்கெல்லாம் புரிந்து நம்மைப் போன்றவர்களுக்குத்தான் எதுவும் புரியவில்லையோ! மொத்தத்தில் ஏதும் விளங்கவில்லை. எல்லாம் காலத்தின் கோலம், அறிவை நீட்டிக்கொள்ள முயற்ச்சிக்காமல் ஆயுதங்களையும் அவசியமற்றதையும் நீட்டி, உபயோகித்துக் கொண்டுத் திரிகின்றனர் இந்த மானுடக் கூட்டங்கள். குறிப்பாக இப்பெண்கள் நிரம்ப மாற வேண்டியுள்ளது. அப்போதுதான் அவர்களின் பெரும் சதவீதத்தினர் பெருமைக்குறியவர்களாவர். அதுவரையில் அவர்கள் காமத்தீர்வுக்கான ஒரு பொருளாகவே அதிகபட்ச ஆடவர்களால் கருதப்படுவார்கள்.

அதிஉயரக் குதிகால் காலணி அணிந்து பெண்கள் நடக்கும்போது பின்பகுதி மிக அதிகமாக ஆடி, அதனால் பின்னால் வரும் ஆடவர்கள் அதைவிட அதிகமாக ஆடிப்போவது மட்டும் மெய்யானது. பெண்கள் ஆண்களைத் தங்கள் முன் மற்றும் பின் புறங்களால் ஆட்டி அடக்குவதைவிட அறிவு மேன்மையால் அடக்குவதே பெண்ணினத்திற்கு நிரந்தரமான உணர்வுப்பூர்வமானப் பெருமை தரும். ஏன்? எதற்கு? என்ற கேள்விகளை யாரும் கேட்டுப்பார்த்துப் பழகவில்லை. அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு என்பது இங்கேயும் நன்றாகப் பொருந்தும்.

## கூடுதல் நகங்கள்

### பெண்களின் அழகுக் கேந்திரங்கள்

ஒரு பெண்ணைப்பற்றி எண்ணுவதற்கு, எடைபோடுவதற்கு, அவளுடைய முக்கியத்துவத்திற்கு அழகு, அறிவு, செல்வம், குணம், குலம் என்ற பல்வேறு காரணங்களுள் முக்கியமானதாக முகத்தழகை, உடலழகை முதலாவதாகச் சொல்பவர்கள்தான் உலகம் முழுவதும் அதிகம் உள்ளார்கள்.

'அகத்தின் அழகு முகத்தில் தெரியுமென்பார்கள்'. மொத்த அழகிலும் முகத்தழகுதான் பிரதானமானது. தலைமுடி, அதன் அலங்காரம், அழகான கண்கள், புருவம், நெற்றி, காதுகள், மூக்கு, வாய், உதடுகள், பற்கள், தாடை, கன்னம், கழுத்து, மார்பு, இடுப்பு, புட்டங்கள், கால், கைகள், வனப்பு, உள்ளங்கை, பாதங்கள் ஆகியவைகளின் அழகு மற்றும் உயரம், உடல் வலிமை போன்றவைகளும் அழகை நிர்ணயம் செய்யும் அளவுகோல்களாக விளங்குகின்றன.

மேலும், நடை, பேசும்பாவனை போன்றவைகளோடு அழகிய எடுப்பான, சிறப்பான உடைகளும் தோற்றப் பொலிவிற்கு மிகவும் தேவையான ஒன்றாக விளங்குகின்றன. ஆடைகள், அழகிய செருப்புகள், அணிகலன்கள், கைப்பைகளுடன் அழகு சாதனங்களையும் இவ்வினத்திற்காகச் சேர்த்துக் கொள்வோம்.

**கூடுதல் நகங்களின் பாதகங்கள்**

அதே நேரத்தில் பெண்கள் வைத்திருக்கும் கூடுதல் (கைவிரல்) நகங்களிலிருந்து எந்த வகையான அழகு கிடைக்கிறது என்பதுதான் தெரியவில்லை. உண்மையில் அங்கிருந்து அழகு ஏதாவது புறப்பட்டு ஊர்வலம் சென்று பெரும்பயன் தருகிறதா அல்லது இடைஞ்சலும் துன்பமும் தருகிறதா என்பதைச் சற்றுச் சிந்திப்போமே.

நாம் செய்யும், செய்து கொண்டிருக்கும், செய்யப்போகும் அனைத்துச் செயல்களுமே சரி என்றாகிவிடாது. அந்தவகையில் இந்த கூடுதல் நகங்களும், அதன் தேவையற்ற அலங்காரமும் அடங்கும்.

விரல்களில் அதன் முனை எல்லை வரையில் தோலோடு ஒட்டிக் கொண்டிருப்பதுதான் இயற்கையான தேவையான உயிர் நகங்கள். அதற்கு மேல் நீண்டு வளரும் நகங்கள், வெட்டி அப்புறப்படுத்தப்பட வேண்டிய இறந்த வெள்ளையணுக்கள், செல்கள் போன்றவைகளின் கழிவுகளாகும்.

பெண்கள் இந்தக் கழிவு நகங்களை ஓரளவு நீளம் வரை விட்டு ஏதேதோ வகையில் வெட்டி அதற்கு மேல் பல வண்ணப்பூச்சுகளைப் போட்டுக்கொள்கிறார்கள். இதற்கு

அவ்வப்போது போதுமான நேரம், ஈடுபாடு, உழைப்பு போன்றவைகளைச் செலவு செய்கிறார்கள். இதைக் குற்றமெனக் கூறவில்லை.

இந்த அலங்கார வண்ணப்பாலீஷ் பூச்சுகளை இயற்கையாகத் தேவைப்படும் நீளம் வரைக்குமான நகங்களுக்கு மட்டுமே செய்து கொண்டால் அழகு தராதா? இயற்கையோடு ஒட்டி வாழாமல் ஒரு அரை சென்டிமீட்டர் கூடுதலாக இறந்த செல்களைக் கொண்ட எக்ஸ்ட்ரா நகங்களை வைத்துக்கொண்டு செயற்கைத் தன்மையோடு தான் வாழ வேண்டுமா? அப்படி வாழ்ந்தால்தான் மானம், கௌரவம், அறிவு இவற்றோடு உயிரும் நிலைக்குமோ!

இந்தத் தேவையற்ற இயற்கையின் அளவுக்கு அதிகமாக, மூடத்தனத்திற்கு எடுத்துக்காட்டாக நீண்டிருக்கும் விரல் நகங்களைப் பற்றி ஆயிரம் குறைகளைச் சொல்ல முடியும். ஆனால் மாறாக நன்மை என்று எதுவும் சொல்லிவிட முடியாது.

நன்மையாகச் சிலர் சொல்வது என்னவென்றால் அது ஒரு பெண் பாதுகாப்புச் சாதனமாம்! சிலரிடம் உள்ள கூராக்கப்பட்டுள்ள விரல் நகத்தால் எதிரியை முக்கியமாக அவர்களிடம் தவறாக நடக்கும் ஆண்களை பயமுறுத்தி, காயப்படுத்தி விரட்டி விடுவார்களாம். இந்த மாபெரும் கண்டுபிடிப்பை ஆரம்பகாலத்தில் வெள்ளைக்காரி ஒருத்தி கூறியிருந்தாளாம். இதையெல்லாம் இவர்கள் நம்பிக் கொண்டிருப்பதுதான் வேதனை.

இதற்கெல்லாம் வம்பு செய்யும் அந்த முரட்டு ஆண்கள் அடங்கி மடங்கி விடுவார்கள் என்பதும்

நிச்சயமில்லை. எத்தனையோ வகை வகையான சிறியது முதல் பெரியது வரையிலான ஆயுதங்கள் தற்காப்புக் கலைகள் பயிற்சிகள் உள்ளன. அதற்கு இவைகளைப் பயன்படுத்தினால்தான் ஓரளவுக்காவது பயனிருக்கும்.

ஒவ்வொரு பழக்க வழக்கமும் நல்லதோ கெட்டதோ மெதுவாக மெல்லியதாக ஆரம்பித்து பிறகு விசுவரூபம் எடுத்து ஆல்போல் வளர்ந்து எங்கும் வியாபித்து முக்கியமான வாழ்க்கை நடைமுறை நாகரீகமாகி விடுகிறது. அதன் தீமைகளிலிருந்து மீளமுடியாமல் தொடர்ந்து அதன் சூழ்ச்சியில் வளர்ச்சியில் சிக்கிக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது. அவ்வகையில் இந்த நகம் வளர்ப்பு, அதன் பராமரிப்பு வகைகள், பாதுகாக்கும் தன்மை அதற்காகச் செலவு செய்யும் பழக்கம் பெண்களை அடிமைப்படுத்தியிருக்கின்றன. வாழ்க்கையின் மிக முக்கியமான வேறு நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்த முடிந்த தனிமனித கால நேரங்கள் இதற்காக வீணாவது மிகுந்த வருத்தமளிக்கக்கூடிய, வேதனை தரும் செயலாகும்.

கால் விரல்களில் இவ்வகை நகம் வளர்ந்து பராமரித்து, பாதுகாத்து, ஆயுதமாகப் பயன்படுத்தும் கலாச்சாரம் சிலரைத் தவிர அதிர்ஷ்டவசமாக இன்னும் பலருக்குப் பரப்பிவிடப்படவில்லை. இன்று வரை ஓரளவுக்குத் தப்பிப் பிழைத்தோம். ஒருவேளை அப்படி இருந்திருந்தால் அவ்வகைக் கால் விரல்களில் நகம் வளர்க்கும் நபர்கள் நடக்கும் தொழிலையே விட்டு விடுவார்கள். ஏனெனில் அப்படி நடக்கும் போது கால்விரல் நகங்கள் இடிபட்டு உடைந்து போய், அப்பகுதியில் மிகுந்த வலியை ஏற்படுத்தி

சமயத்தில் காயத்தையும் ஏற்படுத்தித் துன்பத்தைக் கொடுத்துவடும்.

கைவிரல் கூடுதல் நகங்களுக்காக கைகளை அதிகம் அசைக்காமலும், அப்படி அசைக்கும்போது அதன்மீது மிகுந்த கவனம் வைத்தும், அந்த கைகளுக்கு அதிக வேலைப்பளு கொடுக்காமலும் இருப்பது போல் இந்தக் கால்களை நடப்பதற்குப் பயன்படுத்தாமல் விட்டு வைக்க முடியாது.

### பெரும்பகுதி பெண்களுக்குத் தேவையற்றது

சிலவகைப் பணக்காரப் பெண்கள் பணம் நிறைய இருப்பதால் எந்த வீட்டு வேலையையும் எதற்காகவும் செய்ய வேண்டிய நிலையில் இருக்கமாட்டார்கள். அவர்கள் இம்மாதிரி தேவையில்லாத செயல்களைச் செய்ய ஆரம்பித்துத் தொடர்ந்து கொண்டிருப்பார்கள்.

மேலே உள்ளவர்கள், வசதி படைத்தவர்கள் எதைச் செய்தாலும் கீழே உள்ள மக்கள் அதை அப்படியே காப்பியடித்துக் கொள்வதென்பது வாழ்க்கையின் நியதி ஆகிவிட்டது. ஏன்? எதற்கு? என்று யோசிப்பதில்லை, கேட்பதுமில்லை. அவ்வகை மேல்தட்டுப் பெண்கள் அதில் நேரம் போக்கியும் காலத்தைப் போக்கியும் செய்தால்கூட, அவர்களிடம் இருக்கும் பணத்தினாலும் அவர்களிடம் இருக்கும் கல்வியினாலும் சுகாதாரமான பழக்க வழக்கத்தினைக் கொண்டிருப்பார்கள். நக இடுக்குகளை அவ்வப்போது சுத்தப்படுத்தி கண்ணுக்குத் தெரிந்த அழுக்கை நீக்கிச் சுத்தமாக வைத்துக் கொள்வார்கள்.

ஆனால் போதிய வசதியின்மையினால் வீட்டு வேலைகளை, வேறு வேலைகளை செய்ய வேண்டியக் கட்டாயத்திலுள்ளனர் நடுத்தர, ஏழைப் பெண்கள். இவர்களுக்கு இந்த எக்ஸ்ட்ரா நக நீளத்தினால் ஏற்படும் நக இடுக்கு அழுக்குகளை அந்தளவுக்குச் சுத்தப்படுத்தி பராமரிக்க முடிவதில்லை, முடியவும் முடியாது, அதற்கு நேரமுமில்லை. எதற்காக இந்தக் கொடுமையும், அறிவின்மையும் என்று புரிந்து கொள்ளவே முடியவில்லை. திரும்பத் திரும்பச் சொல்வதெல்லாம் நாம் ஒவ்வொரு காலகட்டத்திலும் செய்து கொண்டிருக்கும் அனைத்துமே சரியென்று உறுதியாக நம்பி விடாதீர்கள். நக இடுக்கில் உள்ள அழுக்குகளை சாதாரண மைக்ரோஸ்கோப்பில் வைத்துப் பார்த்திருந்தால்கூட ஒரு நாளைக்குச் சாப்பிடவே மாட்டீர்கள். அந்த அளவுக்கு அது பயங்கரமான பாக்டீரியாக்கள், நுண்ணுயிரிகளைக் கொண்டிருக்கும். இதெல்லாம் எப்படி ஏற்படுகிறது என்பதைப் பார்ப்போம்.

நாம் சாப்பிட்டுக் கை, கழுவும்போது சுத்தமாகக் கழுவுகிறோம் என்று நீங்கள் நினைத்தால், அது மிகப்பெரிய தவறு. அங்கே உணவு மிச்சங்கள் நிச்சயமாகத் தங்கி நேரம் ஆகஆகக் கெட்டு அது எவ்வகையிலாவது வாய்க்குள் சென்றால் நோய் பரப்பும் தன்மையை அடைந்துவிடும். அதேபோலத்தான் வேறு வேலைகளைச் செய்யும்போதும் அந்தந்தக் கழிவுகள், மிச்ச சொச்சங்கள், தூசிகள் தங்கி இந்த மாதிரிக் கெடுதலை உண்டாக்கும்.

இந்த வகைக் கொடுமைகளுக்கெல்லாம் தலையாயது மலமிருந்துவிட்டு இந்திய முறையில் சுத்தம் செய்யும்போது நக இடுக்குகளில் தங்கும் மல அழுக்குதான் என்று அடித்துச்

சொல்லலாம். இந்தியப் பெண்கள் அதிக நகம் வைத்திருக்கும் தங்களது இடது கையினால் சுத்தம் செய்த பிறகு விரலிடுக்கில் நிச்சயமாகத் தங்கிவிடும் மலமிச்சங்களினால் ஏற்படும் அபரிமிதமான தீமைகளால் அடையும் துன்பம் அதிகம். இதே மாதிரி உடலைச் சொரிந்து அப்போது ஒட்டிக் கொள்ளும் அழுக்கும் இந்த வகைத் துன்பத்தைக் கொடுக்கும்.

இம்மாதிரி அதிக நகம் வைத்திருப்பதால் சொரிந்து புண்ணாக்கிக் கொள்ளும் தூக்கத்தில் நாம் அறியாமலேயே நடக்கும் ‘அந்த நல்ல’ வேலையைத் தவிர வேறு எதுவும் கிடையாது. அவசரத்தில் நகத்தில் அடிபட்டுவிட்டால் வலி உயிர்போவது போல் இருக்கும். நகமும் கன்னாபின்னா என உடைந்து உயிர் நகத்திலும் உடைப்பு, தெறிப்பு வந்து பாதிப்புகள் வந்துவிடும்.

### முடிகளுடன் சம்மந்தமில்லை

சிலர் தலைமுடி வளர்ப்புப் பராமரிப்போடு அதிக நகவளர்ப்பு பராமரிப்பை சம்பந்தப்படுத்தி அதிகப்படியான நகங்களுக்கு முக்கியத்துவத்தைத் தரவும் சப்பைக்கட்டுக் கட்டவும் முயற்சிக்கிறார்கள். தலைமுடியின் நாகரீகம் வேறுபட்டது.

உலக ஆண்களில் பெரும்பகுதியனர் ஓரளவு நீளத்திற்கு மிகாமல் அவ்வப்போது தலைமுடியை வெட்டி, முக முடியான மீசை, தாடியைச் சுத்தமாக மழித்து அல்லது தேவையான நீளத்திற்கு வெட்டிப் பராமரித்து பார்த்துக் கொள்கிறார்கள். நல்லவேளையாக புருவத்தை ஷேவிங்

செய்யும் கலாச்சாரம் இன்னும் உலகினில் வரவில்லை. பிற்காலத்தில் அப்படியொன்று வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வளர்ந்த பெண்களும் ஆண்களும் கமுக்கட்டை, பாலுறுப்புப் பகுதிகளில் உள்ள முடிகளை அவ்வப்போது சுத்தமாக நீக்கிக் கொள்கிறார்கள். இது ஒரு சுகாதாரத்திற்கும், சௌகரியத்திற்குமான முறையாகக் கூடக் கொள்ளலாம். முடிகளுக்கு அடிபட்டால் மனிதனுக்கு ஒன்றும் ஏற்படாது.

அதிகமாக நகத்தை வைத்துக் கொள்வது அறிவுப்பூர்வமாகாது. உலகத்தின் சில பகுதிகளில் சிலர் அதன் நீளத்தில் சாதனைகள் கூடச் செய்து கொண்டிருக்கிறார்களாம். பாவம் அவர்கள் போகட்டும். சில கோமாளி ஆண்களும் பெண்களுக்கு சமமாக, போட்டியாக கூடுதல் நகம் வளர்த்து அதற்கு வேண்டிய சங்கதிகளை செய்து வருவது வேதனையளிக்கிறது.

**சமீப காலத்தில் வந்தப் பழக்கம்**

இந்த அதிக நகவளர்ப்பு வழக்கம் ஆதிநாளிலிருந்து இல்லை, சுமார் ஒரு இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் ஏற்பட்ட பழக்கம்தான். ஆகவே நல்ல, சந்தோஷமான, ஆரோக்கியமான, எளிதான, இயற்கையான வாழ்க்கைக்கு ஊறு செய்யும் அதிக நகங்களை ஆண்களோ, பெண்களோ அவ்வப்போது வெட்டிச் சுத்தப்படுத்தி முறையான வாழ்வு வாழ வேண்டும்.

இந்தவகை அதிக நகம் வைத்திருக்கும் பெண்களில் பலரிடம் சகஜ நிலையில்லாமல் வினோதமான இனம்புரியாத ஒருவிதக் குழப்பமான மனநிலை இருப்பதாக ஒரு முறை

எங்கேயோ படித்த ஞாபகம் வருகிறது. இதே மாதிரிதான் நடைமுறை வாழ்க்கையில் யாருமே அணிய முடியாத பெரும்பாலான மாடல் உடைகளை அங்கங்கே ஓட்டைகள், திறப்புகள் வைத்து பா.ஃ.ஷன் பரேடு நடத்துவதுமாகும்.

**நகங்களின் அபாயம்**

இந்தவகை அதிக நகங்களால் சமயங்களில் அதன் உரிமையாளருக்கே காயம் ஏற்படுவதோடு பிறருக்கும் குறிப்பாக இவர்களால் கையாளப்படும் குழந்தைகளுக்கும் காயம் ஏற்படும் ஆபத்து உள்ளது. குறிப்பாகக் கண்கள் நகங்களுக்கு மிகவும் பிடித்த பாகமாக விளங்குகிறது. இரவுநேர இல்லற வாழ்க்கையில்கூட இந்த நகங்கள் கொடும் காட்டு மிருகங்களாக சிலரை காயப்படுத்தி யிருக்கின்றன என்பதைக் கேள்விப்பட முடிகிறது. அங்கே அது ஒரு மென்மையை, வசந்தத்தைத் தராமல் கடுமையையும், வன்மையையும் தரத்தான் செய்யும்.

டாக்டர்கள், சமையல்காரர்கள் வேறு சில பணிகள் செய்பவர்கள் சட்டப்படி தொல்லைதரும் அதிக நகங்கள் வைத்துக் கொள்ளக்கூடாது என விதியே உண்டு.

எக்ஸ்ட்ரா நக வளர்ப்பையும், ஆண்களுக்குத் தேவையான பெண்களை ஆண்கள் எக்காலமும் வர்ணனை செய்வதையும் கவிபாடுவதையும், பெண்கள் ரசித்துக் கொண்டு அவைகளுக்கு அடிமையாகி வாழாதீர்கள். இனிமேல் இதைப்போன்றப் பேதைப் பெண்களாக இருப்பதை விடுத்து புத்திசாலி, அறிவாளிப் பெண்களாக வாழ்வை விரும்புவது நல்லது.

## அறிவுப்பெண்கள்

புடவைகள், ஆடை அணிகலன்கள், நகைகள், சமையல், குடும்பத்தினர், சுற்றத்தினர் பெருமைகள் ஆகியவைகளைப் பற்றிப் பேசும் வெட்டிப் பேச்சுக்கள், டாம்பீக பேச்சுக்களைக் குறைத்து நிறுத்தி முழு மாறுதலை ஏற்றுக் கொண்டு வாழுங்கள். அறிவை, ஆளுமையை வளர்த்து பெண்களும் உலகத்தில் உயர வேண்டும்.

பெண்களில் தலைசிறந்த விஞ்ஞானிகள், மேதைகள், எழுத்தாளர்கள், ஓவியர்கள், சிற்பிகள், இசை ஞானிகள், சமூக ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் தோன்றுவது ஒரு சில உதாரணப் பெண்களோடு மட்டுமே நில்லாமல் அதிகமாதல் வேண்டும். இவ்வகைப் பெண்கள் இவ்வுலகில் எண்ணற்ற எண்ணிக்கையில் தோன்றி ஆண்களை நிஜமாகவே மிஞ்சும் வகையில் புதிய சமுதாயம் படைத்து இந்தத் தலைமுறையிலிருந்தாவது ஒரு புதிய அர்த்தத்தைக் கொடுப்பீர்களாக!